1362
98

# 26-3-1997

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 151-192 |
| **2. அறிவிப்பு—** | |
| மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளை உறுப்பினர்களுக்கு உரிய காலத்தில் வழங்குதல் | 192 |
| **3. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 193 |
| **4. அறிக்கை அளித்தல்** | |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 193-194 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—** | |
| (அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1997 | 194-195 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 194-195 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1997 | 196-197 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 196-197 |
| **6. மானியக் கோரிக்கைகள், 1997—98, விவாதமும் வாக்கெடுப்பும்.** | |
| (அ) கோரிக்கை எண் 23 - கூட்டுறவு<br>(ஆ) கோரிக்கை எண் 34 - நுகர்பொருள் வழங்கல் | 197-357 |


53/107—1

| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. கே.என். நேரு | 197-198 |
| | 201 |
| | 203-204 |
| | 218-219 |
| | 221-222 |
| | 224-225 |
| | 226-227 |
| | 229-230 |
| | 262-263 |
| | 265-266 |
| | 326-354 |
| *டாக்டர் பத்மா | 204-210 |
| *திரு. கோ. மோகனதாசன் | 211-214 |
| *திரு. கே. சுப்பராயன் | 225, 227-228 |
| *திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் | 230-239 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 240-247 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 247-251 |
| திரு. பே.வே.. ஸ்ரீவெங்கடேசன் | 251-256 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 256-268 |
| *திரு. ஆ. நடராசன் | 268-275 |
| *திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் | 275-281 |
| திரு. ம. சண்முகம் | 282-286 |
| *திரு. டி. நடராஜன் | 287-292 |
| *திரு. எல். சந்தானம் | 293-298 |
| *திரு. டி. மணி | 298-304 |
| *திரு. சுப. தங்கவேலன் | 304-312 |
| *திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 312-322 |
| *திரு. ந. கருப்பண்ண உடையார் | 322-326 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 357-358 |


216824

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 13, தாது - திருவள்ளுவர் ஆண்டு 2028**

**1997 மார்ச் 26, புதன்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள".*

*தனக்குக் கிடைத்ததை மறைக்காமல் தனது சுற்றத்தைக் கூவி அழைத்துக் காக்கை உண்ணும். அந்தக் குணம் உடையவர்களுக்கு மட்டுமே உலகில் உயர்வு உண்டு.*

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 341, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

**341—**

**உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்**

*** 543—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

*மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேல்மலையனூர் தொகுதி, தேவனூர், தேவதானம்பேட்டை மற்றும் கணக்கன்குப்பத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படுமா?*

[1997 மார்ச் 26

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்ட பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் எதுவும் பெறப்படவில்லை. இதுபற்றிய உரிய கருத்துருக்கள் பெறப்படின் உயர்மட்டக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை எடுக்க இயலும்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் நிறைந்த பகுதி. கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை குறைந்த பகுதி. இந்த நிதி ஆண்டில் 75 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படும் என்பதால் 30 ஆண்டு காலமாக உயர்நிலைப் பள்ளியாகவே இயங்கி வரும் தேவனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு அரசு பரிசீலனை செய்ய ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு உயர்த்தப்பட இருக்கிற அந்த உயர்நிலைப் பள்ளிகள் ஏற்கனவே மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்டு உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக்குரியதாக இருக்கிறது. அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பள்ளிக்கூடத்திற்கு மாவட்டக் கல்வி அலுவலரால் கருத்துரு அனுப்பப்பட்டு இருக்குமானால் மேல் மட்டக் குழுவில் ஆய்வு செய்யப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் ஏற்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குத்தாலம் தொகுதி கோமலில் ஒரு உயர்நிலைப் பள்ளியிருக்கிறது. 1965-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது வருகை தந்து பார்வையாளர்கள் குறிப்பில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட வேண்டிய பள்ளி என்று குறிப்பு எழுதினார்கள். அதன் அடிப்படையில் 1968-ஆம் ஆண்டில் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. மேல்நிலைப் பள்ளியாக்குவதற்கு கருத்துருக்கள் இப்போது முறையாக அனுபபப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பள்ளிக்கு முன்னுரிமை அளித்து மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.



1997 மார்ச் 26]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்து குறிப்புரை எழுதிய காரணத்தால் அது உயர்த்தப்பட்டது என்று தெரிகிறது. இப்போது கலைஞர் வந்து குறிப்புரை எழுதினால் உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் கிராமம் என்ற சிற்றூரில் ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. பல ஆண்டுகளாக இதை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டும் என்ற காரணத்திற்காக 18-5-1987-ஆம் நாளில் அரசுக்குச் செலுத்த வேண்டிய 25 ஆயிரம் ரூபாயும், 30-12-1991-ஆம் நாளில் 75 ஆயிரம் ரூபாயும் செலுத்தியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் 10 ஆம் வகுப்பில் 112 மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். கிட்டத்தட்ட அதைச் சுற்றிலும் 15 கிலோ மீட்டருக்கு வேறு மேல்நிலைப் பள்ளி இல்லை. ஆகவே, அங்கு ஒரு மேல்நிலைப் பள்ளி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா; அதற்கு முன்னுரிமை தருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து அரசாங்கத்தினுடைய பரிவுக்கு உரியது. இருந்தாலும்கூட அது தனிக் கேள்வியாக எழுப்பப்பட வேண்டியது ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டம், கமுதி தாலுக்கா, புதுக்கோட்டை கிராமத்தில் ஒரு நடுநிலைப் பள்ளியிருக்கிறது. அது என்னுடைய சொந்த ஊராகும். அதிலே சுமார் 400 மாணவர்கள் பயிலுகிறார்கள். அதை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும்? எவ்வளவு இடம் வேண்டும்? எவ்வளவு பணம் கட்ட வேண்டும் என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடுநிலைப் பள்ளி, முதலில் உரிய அளவு

எண்ணிக்கையிலே மாணவர்கள் இருப்பார்களேயானால் உயர்நிலைப் பள்ளியாக்கப்பட வேண்டும். உயர்நிலைப் பள்ளியாகி, சில ஆண்டுகள் கழித்து மாணவர் எண்ணிக்கை அதிகமாகுமானால், அதற்குரிய தொகையையும் செலுத்தி, இடமும் காட்டப்பட்டு, கட்டிடம் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்குமானால், அதற்குப் பின்னர்தான் மேல்நிலைப் பள்ளியாகும். சில முறைகளை வைத்துத்தான், பலபேருடைய விருப்பங்களை நிறைவேற்ற முடியுமே தவிர, முறைகள் இல்லாமல், இன்னாருடைய சொந்த ஊர் என்றோ, அல்லது எதிர்க்கட்சித் தலைவருடைய சொந்த ஊர் என்றோ கருதுவது இயலாத காரியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொ. முருகேசன்.

**திரு. பொ. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியான காஞ்சிபுரத்தில் பிள்ளையார்பாளையம் பகுதியில் சேர்மன் சாமிநாத முதலியார் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த உயர்நிலைப்பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டும் என்பதற்காக மாவட்டக் கல்வி அலுவலரும் கருத்துரு அனுப்பியிருக்கிறார்கள். அதற்குண்டான 1 இலட்சம் ரூபாயும் கட்டப்பட்டிருக்கிறது. எனவே, நடப்பாண்டில் அந்தப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக ஆக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற வேண்டுகோள்கள், மேல் மட்டக் குழுவின் ஆய்வில் உள்ளது. அதனுடைய பரிந்துரை கிடைத்து, அதற்குப் பின்னர் அரசு அறிவிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்திருப்பதாகவும், 75 மேல்நிலைப்பள்ளிகளில் எவையெவை என்பதை அக்குழு முடிவு செய்யும் என்ற ஒரு கருத்தினை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்த உயர் மட்டக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கின்றார்கள்? சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலே யாராவது அங்கம் வகிக்கின்றார்களா? இது ஒன்று. இன்னொன்று, நீங்கள், மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய கிராமங்கள் அல்லது சுற்றுப்





பக்கங்கள் - காரணம், சில நேரத்தில் உயர் மட்டக் குழுவைப் போட்டு கூட, அதிகமான எண்ணிக்கை உள்ள சில பள்ளிகளுக்குக் கொடுத்து விடலாம் என்ற ஒரு முடிவை நாம் எடுத்து விடுவோம் என்று சொன்னால், சில கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகள் மிகவும் பாதிக்கப்படும். ஆகவே, வெள்ளக்குட்டை - அதாவது வாணியம்பாடி - என்னுடைய வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் வெள்ளக்குட்டை கிராமம் - நான் படித்த பள்ளி என்று நான் சொல்ல வரவில்லை, - வெள்ளக்குட்டை என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அது மலைப் பகுதி. அதுபோன்ற மலைப் பகுதிக்கு நீங்கள் முன்னுரிமை அளித்து - அதுபோன்ற பள்ளிகளை உயர் மட்டக் குழுவிலே நீங்கள் முன்னுரிமை அளித்து, மாண்புமிகு முதல்வரவர்கள் வாயிலாக உடனடியாக அறிவிப்பதற்கு - இன்னும் கொஞ்சம் கூட்டிக்கூடக் கொடுக்கலாம் - 75 பள்ளிகள் என்பதைக்கூட நீங்கள் 125 பள்ளிகளாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கருத்துச் சொல்கிற நேரம் இல்லை இது. ஒரு துணை வினாவோடு நிற்காமல் மூன்று வினாக்கள் கேட்கிறீர்கள், உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** வாங்கித் தர மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே ஆவன...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அரசு அலுவலர்கள் சில முறைகளுக்காக அந்தக் குழு மூலமாக ஆய்வு நடத்துகிறார்கள். மாணவர்களுடைய எண்ணிக்கை, அடுத்த பள்ளிக் கூடத்தினுடைய தொலைவு, இருக்கிற கட்டிட வசதி, மேல் வகுப்புக்கு வரக்கூடிய மாணவர் எண்ணிக்கை, மாணவிகளுக்கு அந்தப் பள்ளிக் கூடம் ஒன்றுதான் வாய்ப்பாக இருக்கிறதா என்ற அந்தக் கேள்விக்கு விடை, இப்படிப் பல அடிப்படைகளில் ஆய்வு நடத்தப்படுகிறது: மலைப் பகுதி, காட்டுப் பகுதி. இராஜேந்திரன் பகுதிக்கெல்லாம் தனிக் கவனம் செலுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப. தங்கவேலன்.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில், மேல்நிலைப் பள்ளி

ஆவதற்குரிய தகுதிகள் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளுக்கு இருந்தும், 1 இலட்சம் ரூபாய் நிதியைச் செலுத்த இயலாத காரணத்தினால், அந்தத் தகுதியை இழந்து, மாணவர்கள் தொலைதூரத்திற்குச் சென்று கல்வி கற்று வருகின்றார்கள். எனவே, 1 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை, 50,000 ரூபாய் செலுத்தினால் போதும்; பாக்கியுள்ள 50,000 ரூபாயை மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பொது நிவாரண நிதியிலிருந்தோ, தமிழக அரசு பரிசுச் சீட்டு நிதியிலிருந்தோ, 50 சதவீதமான 50,000 ரூபாயை ஈடு செய்து, மேல்நிலைப்பள்ளிகள் துவங்குவதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேல்நிலைப்பள்ளிகள் தலையான உரிமை என்ற அடிப்படையில், எந்தப் பகுதிக்கு இன்றியமையாத தேவை இருக்கிறதோ அந்தப் பகுதிக்குத்தான் கருதப்படுகிறது. ஆனால், பலயிடங்கள் அந்த முன்னுரிமைக்கு உரியவையாக இருக்கிற காரணத்தால் அவர்களுக்கிடையில் நிதி செலுத்தி ஊர் மக்களுடைய முழு ஒத்துழைப்பு இருக்கிற இடங்களுக்கு முன்னுரிமை தர வேண்டியிருக்கிறது. நிதி செலுத்துவது மட்டுமே விதிமுறை அல்ல. ஆனால் நிதி செலுத்துவதும் சேர்த்து முன்னுரிமைக்கு கருதப்படுவதற்கு சில நியாயங்கள் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தியதற்குப் பின்னர், அரசுத் தரப்பிலிருந்து செய்து முடிக்கப்பட வேண்டிய கடமை பொறுப்புகள் அனைத்தையும், உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குச் செய்து முடித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதனால்தான் அதிகமாக உயர்த்த அஞ்சுகிறோம். உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குச் செய்ய வேண்டிய எல்லா வசதிகளையும் செய்ய இரண்டாண்டு, மூன்றாண்டுக் காலம் ஆகிவிடுகிறது. அந்தக் குறைபாடுகளையும் சேர்த்துக் கருதும்போது மேலும் பள்ளிகளை உயர்த்துவானேன் என்ற காரணத்தாலேதான் உயர்த்தும் எண்ணிக்கை குறைவாக இருப்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 342, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**342—**

## நிலக்கோட்டையில் பெண்கள் கல்லூரி

*** 2240—திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டையில் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

முற்பகல் 9-40

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெண்கள் கல்லூரி வேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் கோரிக்கை. நிலக்கோட்டை பகுதியிலே 4, 5 பெண்கள் மேல்நிலைப் பள்ளிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே படித்து வெளியிலே வரக்கூடிய பிளஸ் 2 படித்து பாஸ் பண்ணிவிட்டு வெளியிலே வரக்கூடிய குழந்தைகளுக்கு சீக்கிரம் திருமணம் கூட ஆவதில்லை. காரணம் என்னவென்று கேட்டால் அந்தப் பெண் கிராஜுவேட் ஆகியிருக்கிறதா என்று கேட்கிறார்கள் வரக்கூடிய மாப்பிள்ளைகள். பிறகு கல்லூரியிலே சேர்ப்பதற்கு அழைத்துச் சென்றால் அங்கேயும் இடம் இல்லை என்று சொல்கிறார்கள். இப்படிப் பட்ட ஒரு கொடூரமான நிலைமையிலே என் தொகுதியிலே இருக்கக் கூடிய குழந்தைகள் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் தயவு செய்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டும். நான் இடம் கொடுக்கிறேன். 10 ஏக்கர் நிலம் கொடுக்கிறேன் உங்களுக்கு. கட்டிடம் வேண்டும் என்றால்கூட 4 பெரியவர்களைப் பிடித்து, எங்கேயாவது இருக்கிறவர்களைப் பிடித்து 4,5 கட்டிடங்களை இனாமாகக் கட்டிக் கொடுக்கச் சொல்கிறேன்.

இதன் பிறகாவது நீங்கள் மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் அடிக்கடி நிலக்கோட்டை, வத்தலகுண்டு இந்தப் பகுதிகளுக்குச் சிறப்பான கவனம் செலுத்த வேண்டும் என்றும், அதற்கான கல்லூரிகள் தேவை என்றும் அடிக்கடி வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். அப்படி கேட்ட ஒரு சமயத்தில் சுயநிதிக் கல்லூரி தொடங்கப்படுமானால் அதற்கு நிச்சயமாக அரசு ஆவன செய்யும் என்று நான் விடையளித்தேன். அம்மையார் அவர்களும் விரைவிலே சுயநிதிக் கல்லூரி துவங்கக்கூடிய ஒரு முகமையை அரசுக்கு விண்ணப்பம் அனுப்பச் செய்வதாகச் சொன்னார்கள். அதிலே அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணத்துக்கடவு தொகுதியிலே ஒரு கல்லூரிகூட இல்லாத சூழ்நிலையில் அங்கே தனியார் அறக்கட்டளை ஒன்று கல்லூரி அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து இயக்குநர் அலுவலகத்தின் மூலமாக அங்கே இன்ஸ்பெக்சன் செய்யப்பட்டு இன்றையதினம் அது மற்ற ஆய்வுப் பணிகள் எல்லாம் முடிந்த நிலையிலே இருக்கிறது. அந்தக் கல்லூரியை வரும் ஆண்டில் தொடங்குவதற்கு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய விதிமுறைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்பதை ஆய்வு செய்து அரசுக்குத் தெரிவிப்பார்கள். அந்த அடிப்படையிலேதான் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி மக்கள் மாத்திரம் அல்ல; இந்த மாநிலத்து முதலமைச்சர் அவர்கள்கூட 'அக்கா சொன்னால் செய்வார்கள்', என்று சொல்லி ஒரு பிரமை ஏற்பட்டுவிட்டது. அதுதான் இப்போது எனக்கிருக்கிற கஷ்டம். (சிரிப்பு) ஆக நடக்கவில்லை என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும் இல்லையா? முதல்வர் அவர்களிடம்



பொன்னம்மாள் சொன்னால் சில காரியங்கள் நடைபெறவில்லை என்பது மக்களுக்குத் தெரியவேண்டும். ஒருமுறை அவர்கள் கூட்டம் போட்டிருந்தார்கள். நான் சென்றிருந்தேன். என்ன அக்கா முதல்வரிடம் சொல்லுங்கள்; கல்லூரி கொடுத்து விடுவார் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு அபிப்ராயம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் நான் கஷ்டப்படுகிறேன். ஆகையினால் எங்களுக்கு பணம் கொடுப்பதற்கு ஆள் கிடையாது. ஏனென்றால் எங்கள் தொகுதி ஏழை தொகுதி. வேறு ஒரு வழியும் இல்லை. நீங்கள் நடத்தாவிட்டாலும் போங்கள்; இதோடு எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னம்மாள் அக்கா சொன்னால் எல்லாம் நடக்கும் என்ற ஒரு தவறான பிரச்சாரம் நடைபெறுவதாக அம்மையார் சொன்னார்கள். இப்போது இங்கேயே நான் பிரகடனப்படுத்துகிறேன். பொன்னம்மாள் அக்கா சொன்னால் எதுவும் நடக்காது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 343. திரு. செ. மதிவாணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**343—**

**பொது மருத்துவமனை ஏற்படுத்துதல்**

*** 3012—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சரப்பாக்கம் தொகுதியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) அச்சரப்பாக்கம் தொகுதியில் அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் எதுவும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1997 மார்ச் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவங்க இருப்பதாக அரசினுடைய செயற்குறிப்பில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மட்டும் அல்ல; எந்த ஆண்டிற்கும் இப்போதுள்ள சூழ்நிலையில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கக்கூடிய உத்தேசம் அரசுக்கு இல்லை.

(முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப் பித்தன்.

**திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியின், தலைநகரமான கீரனூரில் அரசு மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அங்கே 4 மருத்துவர்கள் பணியாற்ற வேண்டிய தேவையிருக்கின்ற நிலையில், ஒரே ஒரு மருத்துவர்தான் பணியாற்றுகிறார். துரதிர்ஷ்டவசமாக அந்த டாக்டர் ஒரு நிரந்தர நோயாளியாக இருக்கின்ற காரணத்தால், தொடர்ந்து அவர் அடிக்கடி விடுப்பில் போய் விடுகிறார். எனவே, நோயாளிகள் அவதியுறுகிற நிலைமை கவனத்தில் வைத்து போதிய மருத்துவர்கள் நிரப்பப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட நான் பதில் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு தாலுக்கா மருத்துவமனையிலும் குறைந்தபட்சம் 4 டாக்டர்கள் இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய ஆணை. ஆனால், போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால்தான், இன்றைய நிலையிலே மருத்துவர்களை நியமிக்க முடியவில்லை. தேர்வாணையம் அடுத்த மாதத்திற்குள்ளாக தேர்ந்தெடுத்து அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அனுப்புகின்ற நேரத்தில், திடகாத்திரமான, நோயே இல்லாத, நல்ல டாக்டர்கள் அந்த மருத்துவமனையிலே நியமிக்கப்படுவதற்கு அரசு முயற்சிக்கும்.



1997 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் சாலை ஓரத்தில் மருத்துவமனை இருக்கிறது. மதுராந்தகத்தில் இருக்கிறது. ஆனால், திண்டிவனத்தில் சாலை ஓரத்தில் மருத்துவமனை இல்லை. உள்ளே 1½ கிலோ மீட்டர் சென்றாக வேண்டும். திண்டிவனம் பகுதி விபத்துக்கள் நிறைந்த பகுதியாக இருக்கிறது. எனவே, நெடுஞ்சாலையில் ஒரு கேசுவாலிடி வார்டு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல, விழுப்புரத்தில் இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையில் அப்படிப்பட்ட வசதிகள் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதியிலே மேச்சூர் பேரூராட்சியிலே 12 ஆயிரம் மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதை முழுநேர மருத்துவமனையாக ஆக்கி அந்த மக்கள் மருத்துவ வசதி பெறும் வகையிலே அரசு இந்த நிதியாண்டிலே செய்து கொடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 250 மருத்துவமனைகளை 24 மணிநேர மருத்துவமனைகளாக ஆக்குவதற்கு முதல்வர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள். அதுபற்றி பரிசீலிக்கும்போது மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான உளுந்தூர்பேட்டை அதிக விபத்துக்கள் ஏற்படுகின்ற பகுதியிலே அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, அந்தப் பகுதிக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு வழங்கியிருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அந்தப் பகுதியிலே ஒரு பல் மருத்துவப் பகுதி தொடங்கப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்னரே அதற்குத் தேவையான உபகரணங்கள் எல்லாம் தருவித்ததோடு பார்ட் 2 ஸ்கீமிலே தொடங்கப்பட்ட அந்தப் பல்

மருத்துவப் பகுதி இதுவரையிலே செயல்படாததை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதோடு, அந்தப் பகுதியை செயல்படுத்துவதற்கு, பல் மருத்துவர், ஹைஜீனிஸ்ட் மற்றும் ஸ்டாப் நர்ஸ் போன்றவர்களை உடனடியாக நியமித்து, அந்தப் பகுதி சிறப்புற நடைபெறுவதற்கு உதவிபுரிவாரா என்று தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல உளுந்தூர்ப் பேட்டையில்—அந்தப் பகுதியிலே—பல் மருத்துவப் பிரிவு தொடங்குவது என்று அரசாங்கம் ஏற்கெனவே முடிவு எடுத்துவிட்டது.

**டாக்டர் அ. மணி:** உளுந்தூர்பேட்டை.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உளுந்தூர்பேட்டையில் அங்கே போதுமான டாக்டர்கள் பல் மருத்துவத் துறையிலே இல்லாத காரணத்தால் தேர்வாணையத்திடம் கேட்டிருக்கிறோம். இந்த ஆண்டு 50 பல் மருத்துவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பட்டியல் வந்தவுடனே உளுந்தூர்பேட்டையிலும் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்திலே, இந்த ஆண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாக ஆரம்பிப்பதற்கு அரசிடத்திலே திட்டம் இல்லையென்று சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே, பல ஆண்டுகளுக்கு முன்னால் 10 ஆயிரம் ரூபாய் அரசுக்குச் செலுத்தி, உரிய இடங்களைப் பெற்று இருக்கிற,-அந்தப் பகுதியிலே மக்கள் தொகை அதிகமாக இருக்கிறது - ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியும் எனகிற ஒப்புதல் அளிக்கப்பட்ட, மாநிலத்திலே ஒரு சில இடங்களுக்காவது ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மத்திய அரசாங்கம் வகுத்த கொள்கைப்படி, 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு இடத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க



வேண்டுமென்ற அந்த அடிப்படையில் இப்போது 1419 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதை உயர்த்துவதற்கு மத்திய அரசாங்கமும் ஒப்புதல் தரவில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கைகளும் மாறவில்லை. அப்படி 20,000 மக்களுக்கு ஒரு மருத்துவமனை என்று மத்திய அரசாங்கம் முடிவு எடுத்தால் அப்பொழுதுதான் பரிசீலிக்கமுடியுமே தவிர, இப்போது 30,000 மக்கட்தொகை கொண்ட ஒரு பகுதிக்குத்தான் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று ஆணை இருக்கின்ற நேரத்திலே, புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குவதற்கான வாய்ப்பு இல்லை.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிமடம் தொகுதியில் செந்துறையானது இப்போது வட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனை அரசுப் பொது மருத்துவமனையாக சகல வசதிகளோடு மேம்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியை ஒரு புதிய வட்டம் என்று அறிவித்ததற்குப் பிறகு, அங்கு இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயமாக வட்டார மருத்துவமனையாக உயர்த்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 344, திரு. ஆ.மு. முனிரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**344—**

## காவேரிப்பாக்கத்தில் மருத்துவமனை அமைத்தல்

***3152—திரு. ஆ.மு. முனிரத்தினம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1997 மார்ச் 26

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கத்தில் அரசு மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோளிங்கர் தொகுதி, காவேரிப்பாக்கத்தில் தற்போது உள்ள ஆரம்ப சுகாதார நிலையமே போதுமானதாக உள்ளது. எனவே புதிய அரசு மருத்துவமனை அமைக்க அவசியமில்லை.

**திரு.ஆ.மு. முனிரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவேரிப்பாக்கத்தில் ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது என்று சொன்னார்கள். அது சரிவர செயல்படவில்லை. அது ஊராட்சியினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற காரணத்தாலே சரிவர பராமரிக்கப்படவில்லை. காவேரிப்பாக்கம் ஹைவேயிலே இருக்கின்ற காரணத்தாலே விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே வாலாஜாவிற்குச் சென்றுதான் விபத்திலே காயமடைந்தவர்களுக்கு முதலுதவி செய்ய வேண்டும் என்ற காரணத்தாலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் - காவேரிப்பாக்கத்திலே ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. - இரண்டையும் சேர்த்து காவேரிப்பாக்கத்திலே அமைக்க மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கத்திலே அரசாங்க மருத்துவமனை இருப்பதாக நான் சொல்லவில்லை. ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது இயங்கிக்கொண்டிருக்கிறது. காவேரிப்பாக்கம் ஒன்றியத்தினுடைய மக்கட்தொகை ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து இருபத்தியொன்று. பாணாவரம், காவேரிப்பாக்கம், மின்னல், குருராஜப்பேட்டை, புதுப்பட்டு, பாராஞ்சி ஆகிய ஆறு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அங்கே விபத்துக்கள் நடக்கின்றன. எனவே விபத்துப் பிரிவு வேண்டும் என்று கேட்டார்கள். பத்தாவது கிலோ மீட்டரிலே வாலாஜாவிலே அப்படி ஒரு விபத்துப் பிரிவு இந்த ஆண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. எனவே காவேரிப்பாக்கத்திற்குத் தனியாக அந்தப் பிரிவைத் தொடங்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ந.பூ. இராமஜெயம்.



1997 மார்ச் 26]

**திரு. ந.பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் சில மகப்பேறு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. சில நேரங்களில் மின்தடங்கல் ஏற்படுவதால், அப்படிப்பட்ட மருத்துவமனைகளில்—ஜெனரேட்டர்கள் இல்லாத மருத்துவமனைகளில் ஜெனரேட்டர்கள்—வாங்கித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே எங்கெங்கே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டு மின்தடங்கல் ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் ஜெனரேட்டர்கள் வாங்கி வைக்கும்படி ஏற்கனவே அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு.பெ. ஆசையன்.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30,000 மக்கட்தொகையைக் கொண்டிருக்கிற பகுதிக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். 50,000 வரை மக்கட்தொகை இருக்கிற, மலைப் பகுதிகள் நிறைந்திருக்கிற பகுதியில் ஒரு ஆரம்ப சுகாதாரநிலையம் இருக்கிறது. இது போன்ற இடங்களில், மலைப் பகுதிகளில், 50,000 மக்கட்தொகையைக் கணக்கிட்டு ஏற்கெனவே இயங்கி வருகிற ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தி, அதை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக—Upgraded P.H.C.-ஆக மாற்றித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரெ. செல்வம்.

**திரு. ரெ. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியிலே, தோகைமலை ஒன்றியத்திலே 75,000-க்கும் மேல் மக்கள் வசிக்கிறார்கள். அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அதை அரசு மருத்துவமனையாக்க அரசிடம் இந்த ஆண்டு ஏதாவது திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனை என்பது ஒவ்வொரு தாலுக்காவினுடைய Head quarters என்று சொல்லப்படுகின்ற அந்தப்

[1997 மார்ச் 26

பகுதிகளிலேதான் அமைக்கப்படுமே தவிர, மக்கட்தொகை அடிப்படையிலே வட்டார மருத்துவமனைகள் தொடங்கப்படுவது இல்லை. ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் அங்கே இயங்க முடியும். அப்படிப்பட்ட இடங்களில் தேவைப்பட்டால் அதை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன்.

*முற்பகல் 9-55*

**திரு. ஆ.ஜெ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவலூர் ஒன்றியத்தில், சேந்தநாடு பகுதியில் 1989-90-ஆம் ஆண்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பகுதி மக்கள் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10, ஆயிரம் ரூபாய் செலுத்திவிட்டாலே ஆரம்ப சுகாதார நிலையம் வந்துவிடும் என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் இதுபோன்று பணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் கேட்டு அவர்கள் 10 ஆயிரம் ரூபாயைச் செலுத்தவில்லை. அவர்களாகவே முன்வந்து பணத்தைச் செலுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களுக்கெல்லாம் இப்போது ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது, 'ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டுமானால், 30 ஆயிரம் மக்கள் தொகை இருக்கவேண்டும்' என்று கூறினார்கள். அதற்கு மைய அரசு அனுமதி கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, 30 ஆயிரம் பேருக்குக் கீழே, 20 அல்லது 25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கலாமா என்று மத்திய அரசை வற்புறுத்தி கடிதம் எழுதப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு அப்படி எந்தக் கடிதமும் எழுதவில்லை. ஏனென்றால், 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு



1997 மார்ச் 26]

ஆரம்ப சுகாதார நிலையம் என்பதே பெரிய செய்தியாகும். அதுமட்டுமல்ல. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கீழே துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் சில இடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மகப்பேறு மருத்துவமனைகளும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. மேலும், 5,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பகுதிக்கு Basic Health Worker என்று ஒருவரை நியமிக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்து, ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் அதை அமல்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது. எனவே, 30 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதியில் ஆறு பேர் Basic Health Worker-களாக வேலை செய்ய வாய்ப்பு கிடைக்கும். எங்கேயாவது மருத்துவ உதவி தேவைப்பட்டால், அந்த ஊழியர்கள் உடனடியாக வேண்டிய வசதிகளைச் செய்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராதாபுரம் தொகுதியின் தலைநகரான இராதாபுரத்தில் 1995-ஆம் ஆண்டு 32 படுக்கை வசதிகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டி முடிக்கப்பட்டு இன்னும் அது செயல்படாமல் இருக்கின்றது. இரண்டே இரண்டு மருத்துவர்கள்தான் அங்கே இருக்கிறார்கள். செவிலியர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. கடந்த பிப்ரவரி மாதம் மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தபோது திறப்பதாக கூறினார்கள். எனவே, அந்த மருத்துவமனை விரைவாகத் திறக்கப்பட்டு மக்கள் பயனடைய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. துரைசாமி.

**திரு. பா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் விபத்துக்கள் அதிகமாக நடப்பதால், நடமாடும் மருத்துவமனைகளை அமைத்து, விபத்துக்குள்ளான நபர்களுக்கு மருத்துவ உதவி அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கட்டமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டவுடன், 100 கி.மீ. தூரத்திற்கு

நெடுஞ்சாலைகளில் ஒரு விபத்துப் பிரிவு ஆரம்பிக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மக்கள் நல்வாழ்வுத்துறை நடவடிக்கையை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, நடமாடும் மருத்துவமனை அமைக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் 25 இலட்சம் ரூபாய் நிதியுதவி கேட்டு, நெடுஞ்சாலைகளுக்கு அந்த வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த நிதி வந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகர்களில் அரசு மருத்துவமனை அமைக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். 18 ஆண்டுகளாக பெருந்துறை, வட்டத் தலைநகராக இருந்து வருகிறது. அங்கே செயல்படக் கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தித் தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்போது நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். அச்சடித்துக் கொடுக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும் குறிப்பிட்டிருக்கிறேன். எங்கெங்கு வட்டத் தலைநகரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றதோ அவைகள் எல்லாம் அரசு மருத்துவமனைகளாக உயர்த்தப்படும். தமிழ்நாட்டில் 20 வட்டங்களில் அரசு மருத்துவமனைகள் ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப்பட்டு ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகரிலுள்ள பெருந்தலைவர் காமராசர் அரசு பொது மருத்துவமனை அறுவை சிகிச்சைப் பிரிவில் இரண்டு குளிர்சாதன வசதியுடைய யூனிட்டுகள் உள்ளன. அதில் ஒரு யூனிட் கடந்த 6 மாத காலமாக செயல்படவில்லை. மற்றொரு யூனிட்டும் இப்போது ஒரு மாத காலமாக செயல்படவில்லை. அவர்கள் பல முறை புகார்கள் அனுப்பியும்கூட இதுவரை அவை சரிசெய்யப்படவில்லை. எனவே இந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நடைபெறாமல், கடலூருக்கு மாற்றம் செய்கிறார்கள். இவ்வளவு காலதாமதத்திற்குக் காரணம் என்ன?





துறை இவ்வளவு விரைவாகச் செயல்பட்டும்கூட, 6 மாத காலமாக குளிர்சாதன வசதி செய்ய இயலவில்லையென்றால், மருத்துவத் துறை அதிகாரிகள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கூடக் கொடுத்திருக்கிறார்கள். அவர் அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினைக் கொடுத்தவுடனே, அதிகாரிகளோடு கலந்து பேசிய போது, ஏற்கெனவே இதற்கு முன்னால் அப்படிப்பட்ட குளிர்சாதன இயந்திரங்கள் வாங்குகின்ற நேரத்தில் 'கேரண்டி' பீரியட் குறிப்பிட்டு வாங்கவில்லை என்றும் இப்போது நாம் புதிதாக வாங்கக் கூடிய எந்த இயந்திரமாக இருந்தாலும் 'கேரண்டி பீரியடை' குறிப்பிடவேண்டுமென்றும் வலியுறுத்துகின்றோம் என்றும் தெரிவித்தனர். பழைய இயந்திரங்களுக்கு 'கேரண்டி பீரியட்' இல்லாத சூழ்நிலையில், அதை வலியுறுத்தமுடியாத நிலையில் இருப்பதால், தனியார்களிடம் இந்தக் கருவிகளைக் கொடுத்து 'ரிப்பேர்' செய்வதாகவும், உடனடியாக இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் துறை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாத இறுதிக்குள்ளாக அவைகளெல்லாம் பழுதுபார்க்கப்பட்டு, மறுபடியும் சிதம்பரத்திலே அறுவை சிகிச்சை செய்வதற்கான ஏற்பாடுகள் நிச்சயமாகச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்குடி ஒன்றியம், ஆயக்குடியில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரவு நேரங்களிலும், மற்ற நேரங்களிலும் மகப்பேறு மருத்துவர் இல்லாத காரணத்தால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பிள்ளைப் பேற்றுக்காக காட்டுமன்னார்குடிக்கு வரவேண்டியிருக்கிறது. அந்த மருத்துவமனையிலேயே தங்கி மகப்பேறு சிகிச்சை அளிக்க ஒரு மகப்பேறு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 1,419 ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயும் மகப்பேறு வசதி இல்லை. 384 இடங்களில்தான் அப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால்

[1997 மார்ச் 26

முதல்வர் அவர்கள் 24 மணி நேரம் இயங்கக்கூடிய 384 மருத்துவமனைகளை தமிழ்நாட்டிலே உண்டாக்கினால், அங்கே மகப்பேறு வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்து தரமுடியும் என்றும், அங்கே 6 படுக்கைகள் அமைப்பதற்கான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். அதில்தான் இந்த ஆண்டு 250 இடங்களில் புதிதாகத் தொடங்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்த இடமும், இதிலே இணைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 345, திரு. சொ. கருப்பசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**345—**

**வறட்சி நிவாரண வேலைகள் தொடங்குதல்**

***4634—திரு. சொ. கருப்பசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரநயினார் கோவில் தொகுதி. குருவிகுளம், கழுகுமலை, சங்கரநயினார் கோவில் ஆகிய மூன்று ஒன்றியப் பகுதிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால் மக்கள் பிழைப்புக்கு வழி தேடி கேரளா செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வறட்சி நிவாரண வேலைகள் தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வறட்சி நிவாரணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் 3 ஒன்றியப் பகுதிகள் இருந்து வருகின்றன. இதுவரையில் வறட்சி நிவாரணப் பணிகள் தொடங்கப்படவில்லை. ஆனால் வறட்சி நிலையைப் பார்வையிட மாண்புமிகு அமைச்சர்கள் வந்திருந்தார்கள். ஏதாவது ஒரு பகுதியில் வறட்சி நிவாரண வேலை நடப்பதைப் பார்த்ததாக இந்த அவைக்கு அவர்களால் சொல்ல முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



1997 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் வறட்சியைத்தான் பார்க்க வந்தார்கள். நிவாரணத்தைப் பார்க்க வரவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1995-96-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைக் காலங்களில் மழை பொய்த்ததன் காரணமாக, தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்டங்கள் முழுவதும் மற்றும் இதர 5 மாவட்டங்களில் 14 வட்டங்கள் முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன. திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள குருவிகுளம், சங்கரன்கோயில் ஆகிய கிராமங்களிலுள்ள மக்களில் சிலர், வறட்சி காரணமாக பிழைப்புக்கு வழி தேடி வெளி மாநிலங்களுக்குச் சென்றுள்ளார்கள்.

குருவிகுளம் ஒன்றியம், சங்கரன்கோவில் ஒன்றியம் மற்றும் கழுகுமலை பேரூராட்சி ஆகியவற்றில் தொடங்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளின் விவரம் வருமாறு:—

முற்பகல் 10-05

குருவிகுளம் ஒன்றியத்தில் 1995-96-ஆம் வருடம் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் பழங்கோட்டை கிராமத்தில் ரூ.60 ஆயிரம் மதிப்பீட்டில் குடிநீர்க் கிணறு ஆழப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு உத்தேசமாக 1,500 மனித வேலை நாட்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும், ஆழ்குழாய்க் கிணறுகளுக்கான பைப்புகள் ரூ.30 ஆயிரம் செலவில் வாங்கி பொருத்தப்பட்டன. இதன்மூலம் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. இது குருவிகுளம் ஒன்றியத்தைப் பொறுத்தது.

சங்கரன்கோவில் ஒன்றியத்தில் 1995-96-ஆம் வருடம் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் 2 கிணறுகள் ரூ.40 ஆயிரம் மதிப்பீட்டில் ஆழப்படுத்தப்பட்டன. ரூ.25 ஆயிரம் மதிப்பீட்டில் ஒரு மோட்டார் வாங்கி பொருத்தப்பட்டுள்ளது. ரூ.40 ஆயிரத்திற்கு கைப்பம்புகளுக்கான உதிரி பாகங்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளன. மேலும், ரூ.50 ஆயிரம் மதிப்பீட்டில் குழாய் நீட்டிப்புப் பணி நடைபெற்றுள்ளது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கழுகுமலையைப் பற்றிக் கேட்டார்கள். கழுகுமலை பேரூராட்சியின் மக்கள் தொகை 13,122 ஆகும். இப்பேரூராட்சி கோவில் நகரமாக உள்ளதால், நாள்தோறும் சுமார் ஆயிரம் மக்கள் வந்து செல்வார்கள். இப்பகுதியில் தீப்பெட்டி செய்வது முதன்மைத் தொழிலாகும். ஒரு மாத காலத்திற்கு, அதாவது 6/96-இல் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டது. இப்பேரூராட்சிப் பகுதியில்

[1997 மார்ச் 26

19 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. கடந்த மூன்று மாத காலமாக அவ்வப்போது மழை பொழிந்து, தற்போது குடிநீர்ப் பற்றாக்குறை இல்லை. மேலும், கழுகுமலை பேரூராட்சிப் பகுதி, ஆற்றுப் பாசனம் இல்லாத, மழையை நம்பி விவசாயம் மேற்கொள்ளும் நிலையில், வறண்ட பகுதியாக உள்ளது. 1996-97-ஆம் வருடத்திற்கு அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் கழுகுமலைக்குக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது;

சாலை வசதிக்கு ரூ.0.50 இலட்சம்; வடிகால் வசதிக்கு ரூ.0.50 இலட்சம். குடிநீர் வசதிக்கு ரூ.2.50 இலட்சம்;. தெருவிளக்கு வசதிக்கு ரூ.0.80 இலட்சம்; ஆகமொத்தம், ரூ.4 இலட்சத்து 30 ஆயிரம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதோடு, கேள்வி கேட்ட நண்பர் திருப்திபடுவார் என்ற நம்பிக்கையோடு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்ட மாண்புமிகு உறுப்பினர், வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட அமைச்சர்கள் நெல்லை மாவட்டத்தின் எந்தப் பகுதிக்கும் வரவில்லை என்று சொன்னார்கள். உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் நெல்லை மாவட்டத்தில் மானூர், பாளையங்கோட்டை, நாங்குனேரி, இராதாபுரம் ஆகிய வட்டங்களைச் சென்று பார்வையிட்டார்கள். எல்லோரையும் அழைத்து கருத்து கேட்டார்கள். அந்தக் கூட்டத்திற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்னது அந்தக் கருத்து அல்ல. மாண்புமிகு அமைச்சர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு, மாண்புமிகு முதலமைச்சருக்கு அறிக்கை கொடுப்பதற்காக வந்தார்கள். அப்படி வந்த அமைச்சர்கள் நிவாரணத்தை நேராகப் பார்த்தார்களா என்றுதான் உறுப்பினர் கேட்கிறார். நிவாரண வேலைகளைப் பார்த்திருக்க முடியாது. வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்ட பிறகுதானே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

வினா எண் 346, திரு.பா. வேல்துரை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1997 மார்ச் 26 ]

**346—**

## சேரன்மகாதேவி தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1753—திரு பா. வேல்துரை:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட காசிநாதபுரம், உடையாம்புளி, ஓடைமறிச்சான், அனந்தநாடார்பட்டி. கீழக்குத்தப்பாஞ்சான், மேலக்குத்தப்பாஞ்சான், கொல்லங்குளம், தாழையூத்து, இலந்தக்குளம், கானார்குளம், பனையன்குறிச்சி குமாரசாமிபுரம், கலியங்குளம், கானாத்திமடம், கீழப்பாப்பாக்குடி ஆகிய கிராமங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட (1) காசிநாதபுரம் (2) உடையாம்புளி (3) ஓடைமறிச்சான் (4) அனந்தநாடார்பட்டி (5) கீழக்குத்தப்பாஞ்சான் (6) மேலக்குத்தப்பாஞ்சான் (7) கொல்லங்குளம் (8) தாழையூத்து (9) இலந்தக்குளம் (10) கானார்குளம் (11) பனையன்குறிச்சி (12) குமாரசாமிபுரம் (13) கலியங்குளம் (14) கானாத்திமடம் மற்றும் (15) கீழப்பாப்பாக்குடி ஆகிய கிராமங்களுக்கு தனித்தனியாக விசைப்பம்பு திட்டங்கள் ஏற்கெனவே செயல்பட்டுத்தப்பட்டு, இயங்கி வருகிற காரணத்தினால் இக்கிராமங்களுக்கு கூடுதலாக நீர்தரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தறசமயம் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 10-10

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட காசிநாதபுரம், உடையாம்புளி, ஓடைமறிச்சான், அனந்தநாடார்ப்பட்டி, கீழக்குத்தப்பாஞ்சான், மேலக்குத்தப்பாஞ்சான், கொல்லங்குளம் தாழையூத்து. இலந்தக்குளம், கானார்குளம், பனையன்குறிச்சி, குமாரசாமிபுரம், கலியங்குளம், கானாத்திமடம், கீழப்பாப்பாக்குடி ஆகிய கிராமங்களிலும் மற்றும் அதற்குப் பக்கத்திலுள்ள கடையம் ஒன்றியத்தைச்

சார்ந்த கூடையத்திலேயுள்ள ஏ.பி. நாடானூர், மடத்தூர், தெற்கு மடத்தூர், ஐந்தாம் கட்டளை, வெங்கடாம்பட்டி ஆகிய ஊராட்சிமன்றங்களுக்குட்பட்ட சுமார் 53 கிராமங்களுக்கும் குழாய் மூலமாக தண்ணீர் கொடுத்தது உண்மைதான். ஆனால், தற்போது, ஆழ்குழாய்களில் தண்ணீர் முழுமையாக வற்றியுள்ளதை, நானும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் நேரடியாகவே அங்கு சென்று, அங்குள்ள மக்களைச் சந்தித்து, அங்கு அனைத்து ஆழ்குழாய்க் கிணறுகளுமே 'பெயில்யூர்' ஆகி, குடிக்க தண்ணீரே இல்லாத நிலைமையை அறிந்தோம். அதுவும் குறிப்பாக, கீழ்ப்பாப்பாக்குடியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம், அங்குள்ள ஆற்றிலேயிருந்து தண்ணீர் கொடுக்கப்படுகின்றது. அதிலேயும், ஓ. துலுக்கப்பட்டி என்ற ஊருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவைக் கேளுங்கள். துணை வினாவிற்கு வாருங்கள். வினா நேரத்தில் நீங்கள் உரை நிகழ்த்தக் கூடாது. உங்களுடைய துணை வினா என்ன? துணை வினா கேட்காமல், நீங்கள் இருக்கிற 15, 20 ஊர்களைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். வினாவிற்கு வாருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊர்களுக்கெல்லாம் ஆழ்குழாய்கள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. அவை 'பெயிலயூர்' ஆனதன் காரணமாக, கிணறுகளிலே தண்ணீர் இல்லை. அமைச்சர் அவர்களுக்கே தெரியும். அவர்களே நேரடியாக வந்து பார்த்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக ஆற்றிலேயிருந்து நான் சொன்ன அனைத்துப் பகுதிகளுக்கும், கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குப் போட்ட, தற்போது இருக்கிற 'டேங்கு' களில் பைப் மூலமாக தண்ணீர் ஏற்றி வழங்க, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் வினாவில் கேட்ட மூலக் கேள்வியில் 15 கிராமங்களை உள்ளடக்கி, அதன் பெயர்ப் பட்டியலையும் அறிவித்து. இந்தக் கேள்வியை 9-7-1996-இல் அனுமதிக்கப்படுகிற அளவுக்கு அனுப்பி வைத்திருந்தார். அப்போது அதுகுறித்து விசாரித்து அறிந்தபோது. 15 கிராமங்களில், ஒரே ஒரு கிராமம் மட்டும் 200 மக்கள் தொகைக்கு உட்பட்டு இருந்ததாகவும் அதிகப்படியான மக்கள் தொகை உள்ள கிராமம் 2,320 மக்களைக் கொண்டதாகவும் இருந்தது. இருப்பினும், அந்த பதினைந்து கிராமங்களுக்கும் --200 மக்கள் வாழ்கிற



பகுதியைத் தவிர—மற்ற அனைத்திற்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், விசைப் பம்புகளைக் கொண்டு தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. அந்த ஒரே ஒரு கிராமத்தில் மட்டும், பழைய ஜி.ஓ. பிரகாரம் 200 மக்கள் தொகை அங்கு வாழ்கிற காரணத்தால், 2 சாதாரண கைப் பம்புகள் மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. வேண்டுமானால், அந்த 2 பம்புகள் மட்டும் நீரற்றுப் போயிருக்கலாம் என்று கருதுகிறேன். எனக்குக் கிடைத்த தகவல், பாக்கியிருக்கிற அந்த விசைப் பம்புகள் பூராவிலும் தண்ணீர் வந்து கொண்டிருப்பதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவசரப்பட வேண்டாம். இந்தத் தகவலை இன்று இரவே நான் அங்கு தெரிவித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, மீண்டும் தண்ணீர் கொடுப்பதற்கான முயற்சியில் ஈடுபடுவேன் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 347 திரு. டி. நடராஜன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**347—**

## விழுப்புரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துதல்

***2820—திரு. டி. நடராஜன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விழுப்புரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த, விழுப்புரம் நகரம், பூந்தோட்டம் குளம், நகர நில அளவை எண் 15.3 மற்றும் 15.4 இல் உள்ள ஒரு ஹெக்டேர் 18 சென்ட் நிலத்தை, உரிமை மாற்றம் செய்யும்பொருட்டு, ஆண்டு நிலச் சந்தை மதிப்பில் ஒரு மடங்கு வசூலிக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனையில்பேரில், அரசு ஆணை எண் 226, வருவாய்த் துறை, நாள் 25-2-1997 -இல் விழுப்புரம் நகராட்சிக்கு நில

உரிமை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. டி. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் தற்போது மாவட்டத்தினுடைய தலைநகராக உள்ளது. அதனால் அடிக்கடி நெருக்கடி ஏற்பட்டு, 'டிராபிக் ஜாம்' ஏற்படுகிறது. அந்தப் பேருந்து நிலையம் நெருக்கத்தின் மத்தியிலும், சிறியதாகவும் உள்ளது. ஆகவே, அதனை விரிவுபடுத்துவதை உடனடியாகச் செய்தால், 'டிராபிக் ஜாமை'க் குறைப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடம் இரண்டு, மூன்று முறை பேசியிருக்கிறார். நிலமாற்றம் செய்வதில் சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. தற்போது நிலமாற்றமும் முடிவுற்றிருக்கிறது. அடுத்த பணிகள் விரைவாகத் தொடரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 348, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**348—**

**வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தேர்தல்**

***1879—திரு. பெ. சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்குத் தேர்தல் நடத்த உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இப்பொருள் குறித்து, அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு, உள்ளாட்சித் தேர்தல், அதுபோல் பல்வேறு கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி



முடித்திருக்கிறது. ஆனால், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு ஏறக்குறைய 30 ஆண்டுக் காலமாக தேர்தலே நடைபெறாமல் இருந்து வருகிறது. அதை விரைவுபடுத்தி எந்த முறையில் தேர்தல் நடத்த அரசு ஆலோசிக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1959-வது ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டம் இயற்றப்பட்டு தேர்தல் அப்போது நடைபெற்றது. பிறகு 1977-78-ஆம் ஆண்டு அந்தச் சட்டத்தின்கீழ் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுத்தபோது ஒவ்வொரு மாவட்ட விற்பனைக் குழுவுக்கும் 1978-லேயே 15 இலட்ச ரூபாய் தேர்தல் செலவு ஏற்படும் என்பதை அறிந்து இனி தேர்தல் நடத்தத் தேவையில்லை. அரசு நியமனத்தின் மூலமே அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றலாம் என்று 1987-லே அச்சட்டம் மீண்டும் மாற்றப்பட்டு அந்த அடிப்படையிலே 5-7-1989-ல் தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் அது வெளியிடப்பட்டது. இந்தப் புதிய சட்டப் பிரிவு 10-ன்படி விற்பனைக் குழுவுக்கு கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் அரசால் நியமனம் செய்யப்படலாம் என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது வேளாண் விளைபொருட்களை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் - இவர்களில் குறைந்தபட்சம் 3 பேர் சிறு விவசாயிகளாகவும், மற்றும் 3 பேர் மிகச் சிறு விவசாயிகளாகவும் இருந்தல் வேண்டும். முடிந்த வரை அறிவிக்கை செய்யப்பட்ட விளைபொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சம பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் இந்த நியமனம் இருக்க வேண்டும். விற்பனைக் குழு உரிமம் பெற்ற வியாபாரிகளில் 3 பேர் இதில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிந்துரையின்பேரில் நியமனம் செய்யப்படும் உற்பத்தியாளர்களில் ஒருவர், அரசுத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் அதாவது மாவட்ட பொறுப்பு வகிக்கும் வேளாண்மைத் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவர், கால்நடை, வனம், மீன்வளம், தோட்டக் கலை, பட்டுப்புழு வளர்ப்பு அல்லது எண்ணெய்வித்துத் துறை ஆகிய துறைகளில் ஏதாவது துறையைச் சார்ந்த 2 பேரும், விற்பனைக் குழுவின் பகுதி எல்லையாகக் கொண்ட உதவி வேளாண்மை இயக்குநர்

அலுவலக உறுப்பினர் ஒருவரும் இதிலே உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். இவர்களில் ஒருவரைத் தலைவராக நியமிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அந்த நிலையிலே இப்போது அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 349, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**349—**

## "சென்ட்" தொழிற்சாலை அமைத்தல்

***3525—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் விளையும் மல்லிகை மற்றும் சாமந்தி மலர்களைக் கொண்டு சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அந்தப் பகுதியிலே உள்ள மல்லிகை மலர்கள் துபாய் போன்ற அரபு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. ஆகவே இங்கேயே அந்தப் பொருளுக்கு ஒரு நல்ல விலை கிடைக்கக்கூடிய வகையிலே இந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலையைத் துவங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேலம் மாவட்டத்தில் ஓமலூர் உள்பட மொத்தம் 20 ஏக்கரில்தான் மல்லிகைப் பூ உற்பத்தியாகிறது. 20 ஏக்கரில் விளையக்கூடிய இந்த மல்லிகையைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை அரசாங்கத்தாலே நிறுவமுடியாது. அதை வைத்துக்கொண்டு ஒரு



தொழிற்சாலையை உருவாக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினரே அதற்கு முன்வந்தால் அரசாங்கம் வேண்டிய உதவியைச் செய்யத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கொ.வி. நன்னன்.

**திரு. கொ.வி. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. செங்கம் தொகுதியைச் சார்ந்த பெரியகுளம், ஆலத்தூர், செங்கப்பட்டு, மேல்படூர், கீழ்படூர் மற்றும் பல ஊர்களில் ஏராளமாக மல்லிகை மலர்கள் பயிரிடப்பட்டு தினந்தோறும் பெங்களூருக்கு அனுப்பப்படுகிறது. அதிகமாக மல்லிகை மலர்கள் உற்பத்தியாகும் அந்தப் பகுதியில் ஒரு சென்ட் தொழிற்சாலையோ அல்லது அங்கே மலர்களைப் பராமரிக்கும் குளிர்பதன கிடங்கோ அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டுமானால் அதற்கு மல்லிகைப்பூ அதிகம் தேவை. எந்த மாவட்டத்தில் மல்லிகைப்பூ அதிகமாக கிடைக்கிறதோ அங்கே இதுபோன்ற தொழிற்சாலையை அமைக்கலாம் என்று முன்வந்தபோது தமிழகத்திலே, மேட்டுப்பாளையத்தில் இந்த வாசனை தைலம் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அதுகூட இலாபகரமாக இல்லை என்ற கருத்து இருந்தாலும், அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்தத் தொழிற்சாலைக்குப் போதுமான மல்லிகைப் பூ கிடைக்கக்கூடிய அளவுக்கு கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், மதுரை மாவட்டம் போன்ற மாவட்டங்களிலிருந்து மல்லிகைப் பூ அந்தத் தொழிற்சாலைக்கு, மேட்டுப்பாளையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு அதன்மூலம் அந்தத் தொழிற்சாலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அதற்கான வாய்ப்பு இல்லை. அதுவும் அரசாங்கத்தின் மூலம் இப்படிப்பட்ட தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பத்மா.

**டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய நன்னிலம் தொகுதியில் மருத்துவம் படித்த ஒரு டாக்டர்

[1997 மார்ச் 26

புல்லிலிருந்து 'செண்ட்' எடுக்கும் தொழிற்சாலையை தனியாக வைத்து நடத்தி கொண்டிருக்கிறார். விவசாயத்தை நம்பியிருக்கின்ற எங்களுடைய மாவட்டத்தில் தண்ணீர் வரத்து அதிகம் இல்லாத காரணத்தை கருத்தில் கொண்டு, அந்தத் தொழிற்சாலையை அரசே எடுத்து நடத்த முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன். மேலும், அவ்வாறு தயாரிக்கப்படுகின்ற செண்ட் அங்கிருந்து கோயம்புத்தூருக்கு ஏற்றுமதியாகிறது. அங்கிருந்து துபாய், சௌதி போன்ற நாடுகளுக்கு சென்றுகொண்டிருக்கிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில்கொண்டு, எங்களுடைய தொகுதியில் அந்தத் தொழிற்சாலையை அரசின் மூலமாக எடுத்து நடத்த முன்வருவாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அந்தத் தொழிற்சாலைக்கு என்னை ஒருநாள் அழைத்தால், நானும் அதைப் பார்த்துவிட்டு, அது இலாபகரமாக இருக்குமா என்பதைப் பரிசீலித்த பிறகு முடிவு எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 350, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**350—**

### பேச்சிப்பாறை அணையின் கொள்ளளவை அதிகரித்தல்

***929—திரு. சி. வேலாயுதன் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம். பேச்சிப்பாறை அணையின் அருகில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர் வாரி அதன் கொள்ளளவை அதிகரிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

பேச்சிப்பாறை அணையில் தூர் வாருவது குறித்து ஆய்ந்து ஆவன செய்ய சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் பொதுப்பணித் துறை, வனத்துறை, வருவாய்த் துறை அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது.



1997 மார்ச் 26]

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கன்னியாகுமரி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதி பேச்சிப்பாறை அணையின் மூலம் பயனடைந்து வருகிறது. பேச்சிப்பாறை அணை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டதாகும். இதுவரை அந்த அணையில் தூர் எடுக்கப்படவில்லை. சுமார் 3-ல் ஒரு பங்கு அணை நிரப்பப்பட்டு வறட்சிக் காலங்களில், குடிநீருக்கும், விவசாயத்திற்கும் நீர் கிடைக்காமல் பொதுமக்கள் பெருந்துயர் அடைகிறார்கள். எனவே அரசு வெகுவிரைவில், இந்த வறட்சிக் காலத்தைப் பயன்படுத்தி, இந்த அணையை சுத்தப்படுத்தித் ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருவாங்கூர் சமஸ்தானத்திடம் அந்த அணை இருந்த காலத்திலிருந்தே இந்தப் பிரச்சினை எழுந்துகொண்டுதான் இருக்கிறது. தண்ணீர் கிடைக்கும் நீர் பிடிப்புப் பகுதிகள் வனத்துறைக்குச் சொந்தமானவை. அவர்களுடைய நிலங்களில் நாம் போவதற்கு வனத்துறை சுலபத்தில் ஒத்துக்கொள்வது இல்லை. அதற்காகத்தான், மாவட்ட ஆட்சித் தலைவர் வனத்துறையையும் அந்தக் குழுவிலே ஒரு உறுப்பினராகச் சேர்த்து அங்கே மண்ணை எடுக்கின்ற காரியத்திலே இப்போது இறங்கியிருக்கிறார். தமிழ்நாட்டிலே, முதல் முதலாக பரிட்சார்த்தமாக செயல்படுத்தப்படுவது இந்தப் பேச்சிப்பாறை அணையில்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 351, திரு. ஜி.எல். வெங்கடாசலம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**351—**

### இணைப்புக் கால்வாய்கள் வெட்டுதல்

***1162—திரு. ஜி.எல். வெங்கடாசலம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு தொகுதி, பஞ்சப்பட்டி, சின்னாறு நீர்த்தேக்கத்தில் மழைக் காலங்களில் கிடைக்கும் உபரித் தண்ணீரை புலிகரை, கடமடை, கரகதஅள்ளி ஏரிகளுக்குச் செல்லும் வகையில் இணைப்புக் கால்வாய் ஒன்று வெட்டவும் மற்றும் தென்பெண்ணை ஆற்று (மூத்தூர் அணை) கால்வாய் தட்டாஅள்ளி வழியாக திண்டல் கிராமத்தில் உள்ள திண்டல் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வெட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1997 மார்ச் 26

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பஞ்சப்பள்ளி சின்னார் நீர்த்தேக்கத்தில் இணைப்புக் கால்வாய் வெட்டவும் தென்பெண்ணையாற்று திண்டல் ஏரிக்கு இணைப்புக் கால்வாய் வெட்டவும் விரிவான திட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொண்டபின் சாத்தியக் கூறுகள் இருப்பின், அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி.எல். வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பகுதியில் புலிகரை, கடமடை, கரகதஅள்ளி போன்ற ஏரிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால், புலிகரை ஏரி கடந்த 10 ஆண்டுகளாக நிரம்பாமல் இருக்கின்ற காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய புலிகரை, தென்னம்பட்டி, நெக்கம்பட்டி, புதூர் போன்ற கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, மழைக்காலங்களில் கிடைக்கின்ற உபரி நீரை பயன்படுத்தி அந்த புலிகரை ஏரியை நிரப்பமுடியுமா என்று நான் அறிய விரும்புகிறேன். அதோடு, கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திலிருந்து பையூர் வரை வலது கால்வாய் வருகிறது. அந்த வலது கால்வாயை நீட்டித்து திண்டல் ஏரிவரை அதை நீட்டித்தால் அங்கே இருக்கின்ற கிராம மக்கள் பயன் அடைவார்கள். எனவே அந்தத் திட்டத்தின் பணிகளை விரைவாக செயல்படுத்துவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாறு அணையிலிருந்து இருமுறை பாசனத்திற்கு நாம் தண்ணீர் விட வேண்டும். சுமார் 871 ஏக்கர் பாசனப் பகுதி இருக்கிறது. இது போக, மழைக் காலத்திலே எவ்வளவு உபரித் தண்ணீர் வரும் என்பதற்கு அளவுகள் எடுக்க வேண்டும். அதற்கு என்று சில சட்ட விதி முறைகள் உண்டு. சுமார் ஐந்து ஆண்டு காலத்திற்கு அளவுகளை எடுத்தால்தான், எவ்வளவு உபரி நீர் வருகின்றது என்பது தெரியும். இப்போது அந்த அளவுகளை எடுக்கிற காரியத்திலே அரசு ஈடுபட்டிருக்கின்றது. ஆக, பாசனத்திற்குப்போக, மேலும் மிகை நீர் மழைக்காலத்திலே இருக்குமானால், அந்தச் செய்தி அரசுக்கு கிடைக்கும்பட்சத்தில், பிறகு, அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.



1997 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 352, திரு. இ. புகழேந்தி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**352—**

## சிங்காரத்தோப்பு பாலம் கட்டுதல்

***97—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூர் நகரில் 1989-ல் கருத்துரு உருவாக்கப்பட்டு சென்ற அரசால் கவனிக்கப்படாமல் விடப்பட்ட சிங்காரத்தோப்பு பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் தொகுதியிலே நீண்டகாலமாக கேட்கப்பட்டு வருகின்ற கோரிக்கைகளில் ஒன்றான சிங்காரத்தோப்பு பாலம், நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களாலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களாலும்—நேரடியாகத் தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டு—பார்வையிடப்பட்ட இடம் என்பது மட்டுமல்ல, மாண்புமிகு முதல்வர், தலைவர் அவர்களால் துவக்கப்படவிருந்த ஒரு திட்டமாகும். துறைமுக அபிவிருத்தி, சீர் பயணப் போக்குவரத்து, அனல் மின் நிலையங்களுக்கான நிலக்கரி இறக்குமதி, மற்றும் சிப்காட் வளாகத்திலே இருக்கக்கூடிய தொழில்களுக்கான அனைத்தும் வரவேண்டிய சூழ்நிலையில் கடலூர் தொகுதி இருப்பதால், சிங்காரத்தோப்பு பாலம் என்பது மிகவும் அவசியமானதாகவும், அத்தியாவசியமானதாகவும் இருக்கின்றது. மேலும் கடலூர் நகராட்சிப் பகுதி, தீவாக இருக்கக்கூடிய அந்த மூன்று பகுதியையும் இணைக்கக்கூடிய பாலமாகவும் அது பயன்படும். மேலும் மருத்துவ வசதி காரணமாக மற்ற இடங்களுக்கு வருவதற்குக் கூட அந்தப் பாலம் மிகவும் உபயோகமாக இருக்கும் என்பதாலும், இந்தத் திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயன்போடு, கருணை உள்ளத்தோடு, அன்பு நிறையோடு அதைப் பரிசீலித்து, நெடுஞ்சாலைத் துறையிலே தற்போதைய நிலையை

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னாலும், ஒரு சிறப்புத் திட்ட விதிகளின் அடிப்படையில், அரசின் நிலையாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துவிடுவார்களேயானால், நன்றாக இருக்கும். திறப்பு விழாவை பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே குறிப்பிட்டு அதனைச் செய்வதற்கான நிலை உண்டு. ஆகவே, தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவிப்பாரா என்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் நகரத்திலே உள்ள இந்தச் சிங்காரத் தோப்புப் பாலத்தை இன்று நேற்று அல்ல, கேள்வி எழுப்பிய திரு. புகழேந்தியினுடைய தந்தை இளம்வழுதி காலத்திலேயே என்னை அழைத்துச் சென்று, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். எனக்கு அக்கறையுள்ள பல்வேறு திட்டங்களில் சிங்காரத்தோப்பு பாலத் திட்டமும் ஒன்றுதான். அதை எடுத்த எடுப்பில் சாத்தியக்கூறே இல்லை என்று போக்குவரத்துத் துறை அமைச்சர், நிதிநிலை காரணமாகச் சொல்லிவிட்டார். நிதிநிலை எப்படி இருந்தாலும், நிதிச் செயலாளரோடு, நான் வாதாடி, அதை ஒரு சிறப்புத் திட்டமாக அறிவிப்பதற்கு முன் வருவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 353, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**353—**

### ஒட்டன்சத்திரத்தில் புறவழிச் சாலை அமைத்தல்

*** 3300—திரு. ஆர். சக்ரபாணி :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.



**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஒட்டன்சத்திரம் வளர்ந்து வரக்கூடிய நகரம். அதே போல ஒட்டன்சத்திரம் நகரத்தின் மத்தியில், தமிழ்நாட்டிலே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட் உள்ளது. அங்கு தினமும் நூற்றுக்கு மேலான லாரிகள் வந்து காய்கறிகளை ஏற்றிச் செல்கின்றன. அதே போல, மதுரை-கோயம்புத்தூர், மதுரை-திருப்பூர் போன்ற வழித்தடத்திலும் மற்றும் அருள்மிகு பழனி தேவஸ்தான திருக்கோவிலும் இருப்பதால், தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற நேரங்களிலே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, சில நேரங்களில் இரண்டு, மூன்று மணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பித்து விடுகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒட்டன்சத்திரத்தில் சுமார், ஒரு நாளைக்கு 1,195 வேகமாகச் செல்லும் வாகனங்களும், 1,100 மெதுவாகச் செல்லும் வாகனங்களும் செல்வதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு புறவழிச் சாலை உருவாவதற்கு இந்த அடர்வு போதுமானதாக இல்லை. வருங்காலங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகும் என்றாலும், நிதிநிலையைப் பொறுத்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 354, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**354—**

### தொழிற் பயிற்சித் தேர்வுகள்

*** 2485—திரு. ச. அழகுவேலு :**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற் பயிற்சித் தேர்வில் தவறிய மாணவர்கள் மீண்டும் தேர்வு (தனியாக) எழுத எத்தனை தடவை அரசு அனுமதிக்கிறது?

(ஆ) இதை இன்னும் இரண்டு தடவைகள் கூடுதலாக அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தொழிற் பயிற்சித் தேர்வில் முதல் முறை தவறிய மாணவர்கள் மீண்டும் தேர்வு (தனியாக) எழுத வருடத்தில் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் மூன்று ஆண்டுகளுக்குள் மொத்தம் 5 தடவைகள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இத்தேர்வுகள் மத்திய அரசால் அகில இந்திய அளவில் ஒருங்கே நடத்தப் பெறுவதால், தேர்வு எழுத அனுமதிப்பதை மேலும் இரண்டு தடவைகள் கூடுதலாக அதிகப்படுத்த இயலாது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. திரு. ச. அழகுவேலு,

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசால் நடத்தப்படுகின்ற தேர்வாக இருந்தாலும்கூட, அதை நடத்தித் தருபவர்கள் தமிழக அரசினுடைய அதிகாரிகள்தான். தேர்வில் தவறிய மாணவர்களுக்கு 'கிரேஸ்' அடிப்படையில், கருணை மார்க்குகளை அளித்து அவர்களை வாழ்விலே உயர்த்துவதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பயிற்சித் தேர்வுகள் அகில இந்திய அளவிலே மத்திய அரசால், மத்திய அரசின் வேலைவாய்ப்புத் துறையால், 'ஃநேஷனல் கவுன்சில் ஃபார் வொகேஷனல் டிரெயினிங்' மூலமாக நடத்தப்படுகின்றன. இது அகில இந்திய அளவிலே நடைபெறுகிற காரணத்தால் இதிலே மாற்றம் செய்ய முடியாது. இப்போது மூன்று ஆண்டுகளில் 5 முறை அந்தத் தேர்வுகளை எழுதலாம். மேலும் நீட்டிப்பது சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 355, திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**355—**

### நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

***3746—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



வேதாரண்யத்தில் தங்கல் நீதிமன்றத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

நாகை-காயிதே மில்லத் மாவட்டம் வேதாரண்யத்தில் உள்ள தங்கல் நீதிமன்றம் - கேம்ப் கோர்ட்- ஏற்கெனவே அரசு கட்டடத்தில்தான் செயல்பட்டு வருகிறது. எனவே, அங்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கான நேர்வு எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை.

வினா எண் 356, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.

**356—**

### கால்நடை கிளை மருந்தகங்களை மருந்தகங்களாக்குதல்

***3034—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, கள்ளிகுளம், செட்டிகுளம் கால்நடை கிளை மருந்தகங்களை கால்நடை மருந்தகங்களாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள கள்ளிகுளம், செட்டிகுளம் ஆகிய இடங்களில் கால்நடை கிளை மருந்தகங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. அவற்றை தற்போது கால்நடை மருந்தகங்களாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செட்டிகுளம், கள்ளிகுளம் ஆகிய பகுதிகளில் வாழ்கின்றவர்கள்

பெரும்பாலும் கால்நடைகளை நம்பித்தான் வாழ்கிறார்கள். ஆகவே, அந்த கால்நடை மருந்தகங்கள் மிக அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. நாங்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிலம் வேண்டுமென்றாலும் தரத் தயாராக இருக்கிறோம். அல்லது புதிய கட்டிடங்கள் கட்டும்வரை வாடகை இல்லாத கட்டிடங்கள் தருவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகவே, இந்த ஆண்டே இந்த இரண்டு கிளை மருந்தகங்களையும்—பகுதி நேர மருந்தகங்களை—முழு நேர மருந்தகங்களாக மாற்றித் தரும்படி கேட்டுக்கொள்வதோடு, இப்போது வறட்சி மிகவும் அதிகமாக இருப்பதால் கால்நடைகளுக்கான தீவனங்களை மானிய விலையிலோ அல்லது இலவசமாகவோ தருவதற்கு அரசு முடிவு செய்யுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் கால்நடைகள் பற்றி அடிக்கடி கேள்விகளைக் கேட்கிறார். ஆகவே, தமிழகத்தில் உள்ள கால்நடைகள் சார்பிலே அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு நிதி நிலைமைக்கேற்ப அவருடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பொங்கலூர் தொகுதியிலே 1975-ஆம் ஆண்டே பழனிச்சாமி என்பவரால் இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டு, அது கால்நடை மருத்துவமனைக்காகக் காத்திருக்கிறது. பொங்கலூரைத் தன்னுடைய பெயரிலே கொண்டிருக்கிற நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டாவது சிறப்பு கால்நடை மருத்துவமனையை தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையில், நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 357, திரு. சி. கோபு. மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்.





**357—**

## கால்நடை மருத்துவமனை தொடங்குதல்

*** 4860—திரு. சி. கோபு:**

மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பொய்கை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட ஆற்காடு—அம்பேத்கர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பொய்கை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம் தற்போது எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோபு, இருக்கையில் இல்லை.

வினா எண் 358, திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**358—**

## முதியோர் உதவித் தொகை

***2774—திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித் தொகை ஒருவர் பெறவேண்டுமானால் இன்னொரு முதியவர் இறந்தால்தான் என்ற நிலையை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு முன்பு எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. தற்போது மத்திய அரசின் தேசிய முதியோர் உதவித் தொகை திட்டத்திலும் அமுல்படுத்தப்படுவதால் தகுதி உள்ள எல்லா முதியோருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 359, திரு. அ. மாரிமுத்து. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**359—**

### சுற்றுலா மாளிகை அமைத்தல்

*** 1808—திரு. அ. மாரிமுத்து :**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதி, கூனிமேடு கடற்கரைப் பகுதியில் அரசு சுற்றுலா மாளிகை அமைக்க இந்நிதியாண்டில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், வானூர் தொகுதியில், கூனிமேடு கடற்கரைப் பகுதியில் அரசு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. ஜி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரத்தில் பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது. திரு. அ. மாரிமுத்து.

**திரு. அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வானூர் தொகுதியில், அரசுக்குச் சொந்தமான கடற்கரைப் பகுதிகள் அதிகமாக இருப்பதாலும், சிங்கப்பூர், மலேசியா, துபாய்த்





போன்ற நாடுகளில் உள்ள தொழிலதிபர்கள் அங்கு வசித்து வருவதாலும், அவர்கள் அடிக்கடி வெளிநாடு சென்று வருவதாலும், கூனிமேடு கடற்கரைப் பகுதியில் வி.ஜி.பி. கோல்டன் பீச்சைப்போல ஒரு சுற்றுலா மையத்தை அரசு அங்கு அமைத்தால், அரசுக்கு வருவாய் கிடைக்கும்; வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் வந்து சேருவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே இதை மறு பரிசீலனை செய்து, சுற்றுலா மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, வருங்காலங்களில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 360, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**360—**

### கதர்த் துணிகளுக்குத் தள்ளுபடி

***5381—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கதர்த் துணிகளுக்கு வருடந்தோறும் அரசு வழங்கும் தள்ளுபடியின் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒவ்வொரு ஆண்டும் கதர் மற்றும் பட்டு ரகங்களுக்கு சிறப்புத் தள்ளுபடி, பண்டிகைக் காலங்களிலும் முக்கிய தலைவர்கள் பிறந்த நாட்களை முன்னிட்டும் வருடத்தில் 90 நாட்களுக்கு தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசப் பிதா காந்தியினுடைய கொள்கைகளில் ஒன்றான கதர்—கதர்த் துறை அவருடைய ஞாபகமாக இருக்கின்றதே ஒழிய சிறப்பாக வளர்ந்து வருகிறது என்று சொல்ல முடியாது. அந்த அளவிற்கு நசிந்து போய் கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றியமைக்கக்கூடிய வகையில், கதர் நெசவுத் தொழிலாளர்களுக்கு மூலப்பொருள்களை மானியத்தில் கொடுப்பதற்கும், மூன்று மாதம்

என்பதை மாதம் வரை ரிபேட் நீட்டித்துக் கொடுப்பதற்கும், இந்திய அரசும், தமிழக அரசும் தமிழகத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு எந்த அளவிற்கு மானியம் கொடுக்கப்படும் என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கதர்த் துறை வாரியத்தில் தேவைக்கு அதிகமாக கொள்முதல் செய்ததாலும், மற்றும் தரம் இல்லாத பொருட்களை வாங்கியதாலும் கதர் வாரியம் நசிவு அடைந்தது உண்மைதான். தற்போது கலைஞர் அவர்கள் அரசு வந்ததற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனைப்படி மிக நல்ல முறையில் கதர் வாரியம் சீர்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: இந்த உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு

*மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளை உறுப்பினர்களுக்கு உரிய காலத்தில் வழங்குதல்*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்களுக்கு ஒரு வேண்டுகோள். மாண்புமிகு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் இங்கே விவாதத்திற்கு வருவதற்கு முன்னாலே கொள்கை விளக்கக் குறிப்பு (பாலிசி நோட்) மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உரிய காலத்தில் சேர வேண்டும். அது சில நேரங்களில் அவ்வாறு கிடைப்பது இல்லை. உதாரணமாக மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய மானியக் கோரிக்கை நாளை வருகிறது. இன்னும் கொள்கை விளக்கக் குறிப்பு மாண்புமிகு உறுப்பினர்கள் கைக்கு வரவில்லை. இதை மாண்புமிகு அமைச்சர்கள் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



## 3. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் மானியக் கோரிக்கை நாளை எடுக்கப்படவிருக்கிறது. ஏராளமான உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று விருப்பம் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, கேள்வி நேரத்தைத் தவிர்க்கலாம் என்று கருதி, அதற்கான தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களை முன்மொழியக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 27-3-1997, வியாழக்கிழமை அன்று தளர்த்தி அந்த நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 4. அறிக்கை அளித்தல்

### சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குழுவின் அறிக்கையை அளித்தல். சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. சண்முகம், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்

[1997 மார்ச் 26

***திரு. ம. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1996-97-ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 10-40

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 1997

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1997), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1997) ஆயவுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்பு, திருத்தங்கள் இல்லை.



1997 மார்ச் 26] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1997 மார்ச் 26

## (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 1997

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1997). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1997) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.*

*பிரிவு 2 மற்றும் இணைப்பு, திருத்தங்கள் இல்லை.*

*பிரிவு 2 மற்றும் இணைப்பு, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.*

*பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*



*1997 மார்ச் 26]* [பேரவைத் தலைவர்]

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/1997) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது*

*சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.*

## 6. மானியக் கோரிக்கைகள், 1997-98, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு

### (ஆ) கோரிக்கை எண் 34—நுகர்பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 1997-98ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[ திரு. கே. என். நேரு ] [1997 மார்ச் 26

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.47,03,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்க் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1170, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு - அம்பேத்கர் மாவட்ட விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 480, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற தற்காலிகப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 175, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை ஊழியர்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 178, திரு. நா. பெரியசாமி.



1997 மார்ச் 26 ]

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வீடு கட்ட வழங்கும் கடன் தொகையை உயர்த்த வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 930, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஆண்டிமடம் தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் ரத்து செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 928, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், மேலத்திருப்பாலக்குடியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டுவது பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 489, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், இடைப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் கூட்டுறவு முறையில் ஒரு பஞ்சு அரவை ஆலை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1568, திரு. **ஜி.கே மணி**, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 485, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புவனகிரி தொகுதி: சேத்தியாத்தோப்பில் கூட்டுறவு காகித ஆலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 926, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1276, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கன்னியாகுமரி மாவட்டம் அருமனை வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு புதிய கட்டிடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.47,03,80,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34-நுகர் பொருள் வழங்கல, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.10,19,83,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1171, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளத்தை Civil Supplies Corporation நியாய விலைக் கடை ஊழியர் சம்பளத்திற்கிணையாக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,19,83,24,000-ல் ரூ.100 குறைக வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 194, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,19,83,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 513, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,19,83,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 195, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'500 குடும்பப் பங்கீட்டு அட்டைக்கு ஒரு அங்காடி வீதம் அமைப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,83,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1149, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'திருவள்ளுவர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதியில் அழகாபுரம், புதுப்பாளையம் நியாயவிலைக் கடையைப் பிரித்து அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,83,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1118, திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், கோடிநாயக்கன்பட்டி பஞ்சாயத்து, மல்லிப்பாளையத்தில் ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1 1ன0,19,83,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 514, திரு. அ.வ. அப்துல் நாசர்.



**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், ராமநாதன்குப்பம் மற்றும் கொடிப்பள்ளத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,83,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1294, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக்கடை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,19,83,24,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 946, திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நுகர்பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,19,83,24,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை

பற்றிய அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, பேரவைமுன் மாண்புமிகு உறுப்பினர்களுடைய பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அதில், தமிழிலே அச்சடிக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாக ஏற்று, அவைப் பதிவேட்டில் பதிவு செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது தெரிவிக்கின்ற கருத்துக்களை ஏற்று, இறுதியில் என்னுடைய பதிலை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 16 மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே பேச இருக்கின்றார்கள். ஆகவே காலத்தின் அருமை கருதி அவர்கள் பேச்சை அமைத்துக்கொள்ள வேண்டுகிறேன். முதல் கட்டமாக, பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1-30 மணி வரையில் நடைபெறும். உணவு இடைவேளைக்குப் பிறகு மீண்டும் 2-15 மணிக்குப் பேரவை கூடும். முதலில் டாக்டர் பத்மா அவர்களை விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

***டாக்டர் பத்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் சார்ந்துள்ள தமிழ் மாநிலக் காங்கிரஸ் இயக்கத்தின் சார்பில், உணவு, நுகர்பொருள் வழங்கல், கூட்டுறவு பற்றிய மானியக் கோரிக்கைகளில் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்கின்ற வாய்ப்பை வழங்கியமைக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

ஒருகாலத்தில் கூட்டுறவு அமைப்பு என்பதை அன்றைக்கு ஆண்டவர்கள் ஒரு கூட்டு அமைப்பாக ஆக்கி ஆட்சி நடத்தினார்கள். கூட்டுறவுத் தேர்தல் என்பது மக்களுக்கு எட்டாத கனியாக இருந்ததை இன்றைக்கு எட்டிப்பறிக்காமல் தேர்தல் கனியாக நமக்களித்து உண்மையான கூட்டுறவு அமைப்பாக மாற்றி மக்கள் மனம் கவர்ந்த முதல்வர் அவர்களுக்கும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியை முதலில் காணிக்கையாக அளிக்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் பெறுகின்ற கடனைத் திருப்பிக் கட்டாத அளவுக்குக் கடந்த கால ஆட்சியாளர்கள் பெற்றுவிட்டு இன்றைக்கு மக்கள் பெரும் சுமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். எங்கள் பகுதியாகிய திருவாரூர் ஏ.டி.பன்னீர்செல்வம் மாவட்டம், நாகைகாயிதே மில்லத்

@ 359 முதல் 505 வரையிலான பக்கங்களில் இணைப்பு I மற்றும் II-ஆக அச்சிடப்பட்டுள்ளன.



மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் ஆண்டுக்காண்டு ஏதாவது ஒரு இயற்கை பாதிப்பால் பாழாகின்றது. 1993-ல் புயல் மற்றும் வெள்ளத்தால் பாழ்; 1994-ல் பூச்சியால் நெற் பயிர்கள் பாழ்; 1995-ல் வறட்சியால் பாழ்; 1996-ல் வெள்ளத்தால் பாழ். மற்றும் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியால் கூட எங்கள் மாவட்டம் அடிக்கடி பாழாகின்றது. இப்படி அடுத்தடுத்து அல்லல்பட்டு அவதிப்படும் பரிதாபத்திற்குரியவர்களாக எங்கள் மாவட்ட மக்கள் காட்சி தருகிறார்கள். நான் கனிவோடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்யுங்கள் என்று கேட்கவில்லை, அவர்களின் வட்டியைத் தள்ளுபடி செய்யுங்கள்; செய்து அவர்களின் கடன்சுமையைக் குறைக்கக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மைக் காப்புறுதித் திட்டங்களால், எளிமையாக இருப்பவர்கள், உண்மையிலேயே பாதிக்கப்பட்டோர் பயன்பெறும் அளவுக்கு அதன் திட்டங்களைச் செயல்படுத்த மைய அரசினை வலியுறுத்தி வழிகாண முதல்வர் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெல்ல விழைகின்றேன். கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாநில வங்கி, மைய வங்கி, கூட்டுறவு வங்கி என மூன்றடுக்கு முறையை மாற்றி, மாநில வங்கி, கூட்டுறவு வங்கி என்ற இரண்டடுக்கு முறையைக் கொண்டுவந்தால், விவசாயிகளுக்கு வட்டி குறையும், அதைப் பரிசீலிக்க வேண்டுகிறேன். கடந்த ஆட்சியில் பல ஆயிரம், பல லட்சம் என்ற அளவிலே கொள்ளையடித்த அதிகாரிகளும் அலுவலர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், இன்றைக்குக் கொல்லைப் புறமாக வேலைக்கு வந்துள்ளார்கள். வந்தவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட நாட்களுக்கும் ஊதியம் பெற்று அதைக் கையூட்டாக மேல் அதிகாரிகளுக்குக் கப்பம் கட்டியுள்ளார்கள். திருடர்களுக்குப் பணம் கூட்டுறவிலிருந்து வழங்கவேண்டுமா? அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். தவறு செய்தவர்களை பாதுகாத்த அதிகாரிகள் மீதும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுகிறேன். உணவுத் துறையால் வழங்கப்படும் அரிசியின் விலையை 1995-ல் சாதாரண அரிசியை கிலோ ரூ. 3.50-க்கு ஆக்கியவர்கள், சன்ன ரக அரிசியை ரூ4.75 ஆக ஆக்கிய அன்றைய ஆட்சியாளர்கள், எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பைத் தாங்க முடியாமலும், பொதுத் தேர்தல் நெருங்கியதை மனதில் கொண்டும் சாதாரண அரிசி கிலோ ரூ.2.50-க்கு ஆக்கி மீண்டும் அதை ரூ.2.00ஆக ஆக்கியுள்ளார்கள். அரிசி விலையை மத்திய அரசு ஏற்றினாலும், மாண்புமிகு முதலமைச்சரின்

அரசு அரிசி விலையை ஏற்றாமல் அதே விலைக்கு விற்பது பாராட்டுக்குரியது. ஆனால் யூனிட்டாகப் பிரித்து குடும்ப அட்டைக்கு அரிசியைக் குறைத்தது ஏழை மக்களை மிகவும் பாதிக்கிறது. குறைந்தபட்சம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 12 கிலோவும், அதிகமாக 20 கிலோ அரிசியும் வழங்க வகை செய்ய வேண்டுகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளை வைக்கிறேன். மாநிலத்தில் மதுவிலக்கு கொண்டுவராவிட்டாலும் சாராயத்தையும், கள்ளச்சாராயத்தையும் முழுமையாக ஒழித்துவிட்டு அரிசி விலையைக் கொஞ்சம் ஏற்றிக்கொள்ளுங்கள். தாய்மார்கள் விரும்பி உங்களுக்கு வாக்களித்தார்கள். அவர்களது நம்பிக்கையை ஏமாற்றி விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களது பகுதியில் சென்ற ஆண்டு 60 கிலோ நெல் சாதாரண ரகம் ரூ.310-க்கும் சன்ன ரகம் ரூ.350-லிருந்து ரூ.380-க்கும் விற்றார்கள். இந்த ஆண்டு கூலி மற்றும் இடு பொருள்களின் விலை எல்லாம் ஏறிய நிலையில் நெல்லை சென்ற ஆண்டைவிட ஒரு மூட்டைக்கு 50-லிருந்து 100-வரை குறைந்த விலையில் விற்கின்றார்கள். இது நியாயம் ஆகுமா? கோதுமைத்தவிடு கிலோ ரூபாய் 7-க்கு விற்கும்போது, நெல், கோதுமைத் தவிட்டு விலைக்காவது விற்க வேண்டாமா? இவற்றையெல்லாம் எண்ணி ஏழை விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவிட வேண்டுகிறேன்.

கூட்டுறவுத் துறையிலும், உணவு வழங்கல் துறையிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கான வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. அருள்கூர்ந்து இரண்டு துறைகளிலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு அளிக்க வேண்டுகிறேன்.

மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்கள், தேசிய வங்கிகளில் உள்ளவர்கள் எப்படி பணியாற்றுகிறார்களோ அதேபோல் செயல்பட்டு வங்கிகளை இலாபத்தில் நடத்தி வருகிறார்கள். எனவே, அவர்களுக்கு தேசிய வங்கி ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்க வேண்டுகிறேன்.

கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சமீபத்தில் தேர்தல் முடிவடைந்துவிட்டன. கடன்களை



வழங்கும்போது, வங்கிப் பொறுப்பிலுள்ள அதிகாரிகள், தலைவர்கள் கமிஷன் வாங்கி விவசாயிகளை வஞ்சிக்கின்றனர். கடன் தொகை முழுவதும் விவசாயிகளுக்கும் மற்றும் வீட்டுக் கடன் பெறுபவர்களுக்கும் சென்றடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

நியாய விலைக் கடைகளில் எல்லா ரேஷன் கார்டுகளுக்கும் பொருட்கள் எல்லாம் கிடைப்பதில்லை. 80 சதவீதம் உணவுப்பொருள்கள் அரசால் வழங்கப்படுவதாக கடையின் பொறுப்பாளிகள் கூறுகின்றார்கள். ஆனால் 20 சதவீதம்கூட கிடைப்பது கிடையாது. பொருள்கள் வழங்கப்படுவதில் எடை குறைவு. அளவு குறைவு என்ற புகார் எங்கும் உள்ளது. அப்பாவி மக்கள் பெரிதும் வஞ்சிக்கப்படுகின்றார்கள். நியாயவிலைக் கடை என்ற பெயரிலே அநியாயம் அதிகம் நடக்கிறது. இதைத் தடை செய்ய கேட்டுக்கொள்கிறேன். குறைவின்றி உணவுப் பொருள்கள் வழங்க அரசு உறுதி பூணவேண்டும்.

ரேஷன் கடைகளில் ஆயிரத்திலிருந்து ஆயிரத்தி நூறு ரேஷன் கார்டுகள் இருப்பதால், நல்ல கூட்டம் வருவதால் அடிதடி ஏற்படுகிறது. 500 அல்லது 600 கார்டுகளுக்கு ஒரு கடை என்று நியாயவிலைக் கடைகளைப் பிரித்து, பொது மக்களுக்கு வசதி செய்யவேண்டும்.

புதிதாக கடைகளைப் பிரிக்கும்போது பெண் விற்பனையாளர்களை நியமிக்க வேண்டுகிறேன்.

நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசி பல இடங்களில் மக்கிப்போன அரிசியாகவும், சமைத்தால் துர்நாற்றம் அடிக்கக்கூடிய அரிசியாகவும் உள்ளது. நல்ல தரமான அரிசியை வழங்கவேண்டும். பொதுவாக கிராமங்களுக்குக் கொடுக்கும் அரிசி அனைத்துமே மக்கிப் போன அரிசியாகவே இருக்கிறது.

தமிழக அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம், பல நியாய விலைக் கடைகளை நடத்துகின்றன. பல கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்தப்படுகின்றன. ஆனால் நுகர்பொருள் வாணிபக்கழகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் 3,000 ரூபாய் வரை சம்பளம் வாங்குகின்றார்கள். ஆனால் கூட்டுறவு நியாயவிலைக் கடை ஊழியர்களுக்குச் சம்பளம் என்னவோ ஆயிரம்தான். இரு தரப்பினரும் சமமாகப் பணிபுரிந்தும், கூட்டுறவுக் கடைப் பணியாளர்களுக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் சம்பளம் என்பது ஏற்கத்தக்கதல்ல. எனவே, அவர்களுக்கும் 3,000 சம்பளம் வழங்கவேண்டும்.

[ டாக்டர் பத்மா ] [1997 மார்ச் 26

கூட்டுறவுப் பயிற்சி முடிந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வேலையின்றித் தவிக்கின்றார்கள். அவர்களுக்கு நியாயவிலைக் கடைகளிலும் கூட்டுறவு வங்கிகளிலும் வேலையளிக்க வேண்டுகிறேன். சில மாவட்டங்களில் கூட்டுறவு வங்கிகளில் 'அட்ஹாக்' பணியோடு நூற்றுக்கணக்கானவர்கள் பதவி உயர்வின்றி, பணி நிரந்தரமின்றி, பல்லாண்டுகளாகப் பணி புரிபவர்களை நிரந்தரம் ஆக்க வேண்டும்.

மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் செயலர், உதவிச் செயலர், அக்கௌன்டன்ட் மற்றும் மேனேஜர்ஸ் போன்றவர்களையும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாற்றவேண்டும். தமிழகம் முழுவதிலும் அவர்களை மாற்றம் செய்து நிர்வாகச் சீர்திருத்தம் செய்து தர வேண்டும்.

கிராமங்களில் இயங்கும் கூட்டுறவு வங்கிகளுக்குப் பாதுகாப்பான போதிய வசதிகளுடன் கூடிய நிரந்தர ஆர்.சி.சி. கட்டிடம் கட்டித்தர அரசு முன்வரவேண்டும். நிர்வாகச் செலவுகள், சம்பளம் மற்றும் இதரச் செலவுகள் அதிகரித்துவிட்டதால், மத்திய வங்கிகள் எடுத்துக்கொள்ளும் 9 சதவீதத்தைக் குறைத்து 6 சதவீதம் விவசாயக் கடன் வழங்க வேண்டுகிறேன்.

கிராம வங்கிகளில் வசூல் செய்த தொகையை மத்திய வங்கியில் செலுத்தும்போது, அவர்களுக்குத் தேவைப்படும் தலைப்பில் வரவு செலவு வைத்துக்கொள்வதால், கிராம கூட்டுறவு வங்கிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

குறைந்த குடும்பக் கார்டுகள் உள்ள கிராமங்களில் மக்கள் நெடுந்தூரம் சென்று அத்தியாவசியமான பொருள்களை வாங்கவேண்டியிருப்பதால் கால விரயமும், சில நேரங்களில் அங்காடிக்குச் செல்ல முடியாமலும் இருப்பதால், குறைந்தது 1½ கிலோ மீட்டருக்கு மேல் உள்ள கிராமங்களில் அந்தந்த இடத்திலேயே அங்காடிகளைப் பகுதி நேர அங்காடிகளாகச் செயல்பட அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

கடந்த வெள்ளத்தின்போது கடன் பெற்ற விவசாயிகளின் கடன்கள் ஒத்தி வைப்பது, கிஸ்தி வசூல் ரத்து என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தது நடைமுறையில் இல்லாமல், கடன் வசூல், கிஸ்தி வசூல் கடுமையாக நடத்தப்படுகிறது. இது மக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நடைமுறையில் விவசாயக்



1997 மார்ச் 26 ] [ டாக்டர் பத்மா ]

கடன் வழங்குவதில் பயிர்ப்பாதுகாப்பு முறையில் மக்களுக்கு எந்தவித பயனும் கிட்டவில்லை. ஆகவே பயிர்ப்பாதுகாப்பு முறையை மாற்றி மக்களுக்கும் வாகனங்களுக்கு உள்ளதைப் போல பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தினால் கடலோரப் பகுதியில் உள்ள விவசாயிகள் மழை, வெள்ளம், புயல் மற்றும் வறட்சியால் பாதிக்கப்படுவதிலிருந்து பயன் பெறுவார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களை அறுவடைக் காலம் தொடங்க மூன்று மாதங்களுக்கு முன்பே தீர்மானிக்க வேண்டும். அதனால் உரிய காலத்தில் கொள்முதல் தொடங்க ஏதுவாக இருக்கும். கொள்முதலுக்கான உபகரணங்கள் டி.பி.சி. தொடங்கும்போதே கொள்முதல் நிலையங்களுக்கு வந்தடைய ஆவன செய்ய வேண்டும். கொள்முதல் நிலையங்களில் பணி புரியும் பில் கிளார்க், ஹெல்ப்பர், காவலர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருப்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும் கருணை உள்ளத்தோடு கவனித்து பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவாவது அரசு ஊதியம் வழங்க, பணிக் காலத்தில் பணி புரிந்தவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளிடையே மொபைல் ப்ரொக்யூர்மென்ட் தற்காலிகமாக நடைபெற்று வருகிறது. இதை ரெவின்யூ இலாக்காவில் நடத்துவதால் அதைமாற்றி டி.என்.சி.சி. அலுவலர்கள் மூலமே மொபைல் ப்ரொக்யூர்மென்ட் செய்வதோடு அந்தந்த டி.பி.சி. பணம் உடனடியாக வழங்கவேண்டும். இதனால் கூடுதல் நெல் மூட்டைகளை விற்கும் விவசாயிகள் டி.பி.சி.க்கு எடுத்து வரும் பொருள் செலவும், கால விரயமும் தவிர்க்கப்படும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் இரண்டு கோரிக்கைகளை வைக்க ஆசைப்படுகிறேன். ஒன்று, டி.என்.சி.சி.யில் பணிபுரியும் பல்வேறு அலுவலர்களுக்கு பல தொழிற்சங்கங்கள் இருந்து வருகின்றன. ஆனால் தமிழ் மாநிலக் காங்கிரஸில் ஐ.என்.டி.யூ.சி. சங்கத்தை அங்கீகரிக்காமல் இருப்பதை விரைவில் அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போராடுவதை விட கோரிக்கையைப் பெற விரும்புவதும், பரந்த நோக்கமும், கருணை உள்ளமும் கொண்ட முதலமைச்சர் அவர்கள் என்னுடைய பணிவான கோரிக்கையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்தக் கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு உள்ளது போல கூட்டுறவு இயக்கத் தொழிலாளர்களுக்கும் மற்றும் கூட்டுறவு இயக்கத்தில் 5 ஆண்டுகளாக இயக்குநர்களாகப் பணியாற்றியவர்களுக்கும் தனியாக ஒரு மருத்துவக் கல்லூரி, கூட்டுறவுக் கல்வி அறக்கட்டளை என்ற பெயரில் தொடங்கக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கல்லூரி, முதல்வர் அவர்களுடைய மாவட்டமாகிய திருவாரூரில் அமைய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பொது விநியோக முறையில் சில குறைபாடுகள் உள்ளதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. அதிலே மைய அரசு தமிழக அரசுக்கு மாதா மாதம் ஒதுக்கி வருகிற 1.65 லட்சம் டன் அரிசியை இந்திய உணவுக் கழகக் கிடங்கிலிருந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கிளைகளுக்கு எடுத்து வருவதிலிருந்து இறுதியாக ரேஷன் கடைகளுக்கு எடுத்து வரும் வரை 11 விதமான கமிஷன் கொடுக்க வேண்டிய நிலைமை இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, ரேஷன் கடை ஊழியர்கள் இதைக் கொண்டு தவறு செய்வதற்கான சூழ்நிலை அதிகரித்து வருகிறது. எனவே, கிடங்கிலிருந்து ரேஷன் கடை வரையில் லஞ்சம் கொடுக்க வேண்டிய நிலையுள்ளதை மாற்றியமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே அதிகமாக இலாபம் பெறுபவர்கள் வியாபாரிகளாக இருப்பதால், வியாபாரிகள் மீது சற்றுக் கவனம் செலுத்தி அவர்கள் எங்கே அரிசி கடத்திச் செல்கிறார்கள் என்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் குறைபாடுகள். அதிலே ஒரு லிட்டருக்கு 7 ரூபாய் என்ற வீதத்தில் விற்றுக்கொண்டு ஒரு நாளைக்கு ரூபாய் 500-லிருந்து 1,000 வரை சம்பாதிக்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுக்கு கூட ஒரு மாதத்திற்கு 15,000 ரூபாய் சம்பளம் கிடைப்பது அரிது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** உரையை ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**டாக்டர் பத்மா:** இன்னும் பேச நிறைய இருக்கிறது. இருந்தாலும் அம்மையார் அவர்கள் கூறுவதை ஏற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** தலைவர் என்று தான் சொல்ல வேண்டும். அம்மையார் என்று சொல்லக் கூடாது. அடுத்து, திரு. கோ. மோகனதாசன்.



***திரு. கோ. மோகனதாசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தல் நடைபெற்ற பிறகு கூட்டுறவு நிலவள வங்கிகள் மற்றும் நகர வங்கிகளுக்கு எல்லாம் ஒரு எம்.டி. என்று போட்டிருக்கிறார்கள். தேர்தல் நடைபெற்று ஜனநாயகம் பாதுகாக்கப்பட்ட பிறகு மேலும் ஒரு எம்.டி. போட்டுள்ளதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவுத் தேர்தலில் வெற்றி பெற்ற தலைவர் பொறுப்பு 3 வருடங்கள் என்று இருக்கிறது. அதை 5 வருடங்களாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கிகளில் பணியாற்றுகின்றவர்கள் நிரந்தரமாக 15 ஆண்டு, 20 ஆண்டுகளென்று அங்கு பணியாற்றுவதால் ஏராளமான முறைகேடுகள் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே அதில் பணியாற்றும் அலுவலர்களையும், பணியாளர்கள் அத்தனை பேரையும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை அதே தரத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு மாற்றம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அடுத்து, எல்லா நுகர்பொருள் அங்காடிகளில் அதாவது அமுதம் அங்காடியில் விற்பனை செய்கின்ற விற்பனையாளர்கள் சரியான முறையில் விற்பனை செய்யாமல் தவறு செய்வதையே தங்களுடைய நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். சில அங்காடிகளில் அரிசி விற்கின்றபோது நான் போய் நேரடியாக பரிசோதனை செய்த நேரத்தில் தாய்மார் ஒருவர் மூன்று கிலோ அரிசி வாங்கினார். அதை உடனே மீண்டும் எடையிட்டபோது 2,800 கிலோ கிராம்தான் இருந்தது. இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்தபோது அவர்கள் சொன்னார்கள். "அரிசி வருகின்றபோது மூட்டையிலே 10 கிலோ, 5 கிலோ குறைவதாகச்" சொன்னார்கள். அங்கே அப்போது அரிசியை இறக்கிக்கொண்டு இருந்தார்கள். ஒரு மூட்டை அரிசியை அந்த இடத்தில் எடையிட்டுப் பார்த்தபோது அரிசி குறையவில்லை. சரியாகத்தான் இருந்தது. இப்படிக் காரணம் காட்டி இப்படிப்பட்ட மோசடிகளை செய்து இந்த அரசுக்கு கெட்ட பெயர் வரவேண்டுமென்பதற்காக பல்வேறு இடங்களில் அவர்கள் இதுபோன்று பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்

எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அதற்கு தனியாக விரைவாகச் சென்று சோதனை செய்கின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்கித் தந்து இருக்கிறார்கள். அதன்மூலமாக, இந்த ஊழல்களையெல்லாம் களையவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் இன்றையதினம் நிலவள வங்கிகள் மூலமாக கடன் வழங்கப்படுகிறது. நிலவள வங்கிகள் மூலமாக வழங்கப்படுகின்ற கடன்கள் லாரி, மினி லாரி போன்றவைகளுக்கு வழங்கப்படுகின்றன. இதனை அம்பாசிடர் கார் போன்றவைகளுக்கும் வழங்குவதற்கான ஒரு நிலையை உருவாக்கித் தருவார்களேயானால் நிறைய கொடுப்பதற்கு வாய்ப்பு அமையும். அதேபோல் கிராமப்புறங்களில் உள்ள அங்காடிகள் காலை 9 மணிக்கு ஆரம்பித்து, மதியம் 12 மணி வரையில் செயல்படவும், அதற்குப்பிறகு மாலை 3 மணியிலிருந்து இரவு 8 மணி வரையிலும் அந்த அங்காடிகள் செயல்படுமேயானால் அங்கு இருக்கின்ற ஏழை எளிய மக்கள் அந்த கிராமப்புறங்களிலே இருப்பவர்கள் எல்லாம் பொருட்களை வாங்குவதற்கு வசதியாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் 28-ம் பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாவட்ட தலைநகரங்களுக்கு 10 லிட்டரும், நகராட்சிகளுக்கு 6 லிட்டரும், நகரியத்தின் பேரூராட்சிகளுக்கு 5 லிட்டரும், கிராமங்களுக்கு 3 லிட்டர் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலேதான் மண்ணெண்ணெய் அதிகமாகத் தேவைப்படும். நகரங்களிலே மின்விளக்கு இருக்கிறது. கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் மண்ணெண்ணெய் கிடைக்காமல் திண்டாடுகிற நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கும் 5 லிட்டராக ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அரிசி போன்றவைகளை நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே இன்றையதினம் விற்பனை செய்கின்றபோது அதற்கு ஒரு குழு அமைத்து அந்தக் குழுவை வைத்து கண்காணிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப்பற்றி ஒருசிலவற்றை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தரங்கம்பாடி தாலுக்கா அலுவலகம் இன்றையதினம் போதுமான இடவசதி இல்லாமல் துணைத்தாசில்தார் அலுவலகமாக இருந்த அதேநிலையில் நீடிப்பதால் அங்கே பொதுமக்கள் வந்து தங்களுடைய கோரிக்கையைக் கொடுப்பதற்கும், அதிகாரிகள் உட்கார்ந்து வேலை



பார்ப்பதற்கும் முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே அந்தத் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தை கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான பொறையாறில் இன்றைக்கு பேருந்து நிலையம் இல்லாமல் நடு ரோட்டிலேயே பேருந்துகள் எல்லாம் நின்றுக்கொண்டிருக்கின்றன. அங்கே பேருந்து கூடுகட்டும் தொழிற்சாலை உள்ளது. அங்கே போதுமான அளவிற்கு இன்றையதினம் பேருந்து நிலையம் இல்லாத காரணத்தால் மக்கள் மிகச்சிரமப்படுகிறார்கள். எனவே அங்கே பேருந்து நிலையம் அமைத்துத்தருமாறு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். அடுத்து என்னுடைய தொகுதியான பூம்புகாரில் இருந்து மயிலாடுதுறை செல்ல வேண்டுமென்றால் முப்பது கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. சீர்காழிக்கு செல்லவேண்டுமானால் 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. பொறையாருக்குச் செல்லவேண்டுமானால் 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, கடலோரப் பகுதியாக, மீனவப் பெருமக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்கிற பூம்புகாரில் தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அடுத்து என்னுடைய தொகுதியிலே உள்ள திருவெண்காட்டிலே அறநிலையத்துறை மூலமாக நடத்தப்படுகிற ஆண்கள் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அறநிலையத்துறை மூலமாக நடைபெறுகிற ஆண்கள் உயர்நிலைப் பள்ளியை நம்முடைய அரசாங்கம் தனியார் பள்ளி என்று கருதாமல், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செம்பனார்கோவிலில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித்தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் என்னுடைய தொகுதி கடலோரப் பகுதியாக இருக்கிறது. மீனவப் பெருமக்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால், கடலோரமாக இருக்கின்ற மீனவர்களுக்கு இப்போது கட்டித் தரப்படுகின்ற - மீனவர் பகுதிகளிலே கட்டப்படுகிற-வீடுகளை அதிகமாகக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான தரங்கம்பாடியில் உள்ள தரங்கம்பாடி கோட்டை இன்றைக்குக் கடலால் அழிக்கப்பட்டு வருகிறது. அதையும் பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த மானியத்திலே பேசுகின்ற நல்ல வாய்ப்பைத் தந்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே விவாதத்திலே இருக்கிற கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கு துறை சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே விரிவாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. தோற்றத்திலே கூட்டுறவுத் துறை வளர்ந்து, விரிந்து விஸ்வரூபம் எடுத்திருக்கிறது. ஆனால் உள்ளடக்கத்திலே அதனுடைய சாரம் உள்ளொடுங்கி சருகாகக் காய்ந்து இருக்கிறது.

இந்தியாவிலே எந்த நோக்கத்தோடு கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டதோ அந்த நல்ல நோக்கத்திற்கு முற்றிலும் பொருத்தமற்ற முறையிலே தான் இன்றைய நடப்பு அனுபவம் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அதுபற்றிய விரிவான விவரங்களை எல்லாம் இப்போது முன்வைப்பதற்கு உரிய நேரம் இல்லை. நான் குறிப்பாக சில முக்கியமான விஷயங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நுகர்பொருள் துறையிலேயும் சரி, கூட்டுறவுத் துறையிலேயும் சரி, மூன்று பகுதியினரின் நலன்கள் காப்பாற்றப்பட வேண்டியிருக்கிறது. ஒன்று, உற்பத்தியாளர்களின் நலன்; பிறிதொன்று உபயோகிப்பாளர்களுடைய நலன், இன்னொன்று, ஊழியர்களின் நலன். இந்த மூன்று நலன்களையும் பொருத்தமான முறையிலே இணைத்தால்தான் இந்தத் துறை வெற்றிகரமாக இயங்க முடியும். இந்த மூன்று பகுதியினரின் நலன்களையும் வெற்றிகரமாக இணைப்பதில் எந்த அளவிற்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்களை நாம் பரிசீலிக்கப் போனால் சில கசப்பான விஷயங்களையும் சொல்ல வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

நான் முதலிலே எடுத்துக் கொள்ள விரும்புவது ஊழியர்களின் நலன். இன்றைக்கு எல்லாத் தரப்பிலேயும், எல்லாப் பகுதிகளிலேயும் மிகக் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றவர்கள் ரேஷன் கடை ஊழியர்கள்.



ரேஷன் கடை ஊழியர்கள்தான் இன்றைக்கு மிக முக்கியமான இலக்காக கருதப்பட்டு கடுமையாக தாக்கப்பட்டு வருகிறார்கள்.

ரேஷன் கடைகளிலே நடைபெறுகிற முறைகேடுகளைக் குறித்து எனக்கு மாற்று அபிப்பிராயங்கள் இல்லை. அந்த முறைகேடுகளை நியாயப்படுத்தவேண்டும் என்ற நோக்கமும் எனக்கு இல்லை. ஆனால், எந்த ஒன்றையும் உணர்ச்சி நிலையிலிருந்து மட்டுமே அணுகக்கூடாது. அறிவுபூர்வமாகச் சிந்தித்து அணுகுவதுதான் பிரச்சினைக்குத் தீர்வு அளிக்க உதவும். ரேஷன் கடை ஊழியர்களுடைய நடவடிக்கையைப் பற்றிப் பார்க்கிறபோது, திடீரென்று யார் வேண்டுமானாலும் செக்-அப் செய்யப் போகிறார்கள். ஒரு 20 கிராம், 400 கிராம் குறைவாக இருக்கிறது என்றால், அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்; கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்கள். இரண்டு வகையிலே ரேஷன் கடை ஊழியர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒன்று, அவர்களுடைய சுயகௌரவம் இன்றைக்குச் சேதாரப்படுத்தப்படுகிற மாதிரி வேறு என்றுமே சேதாரப்படுத்தப்பட்டதில்லை.

முற்பகல் 11-10

இன்னொன்று, ஏறுகிற விலைவாசியும், அபரம்பற்று உயர்ந்திருக்கிற பணவீக்கமும் அவர்களின் குடும்பச் செலவை நெருக்குகிற அதே நேரத்தில் அவர்களின் சம்பளம் மட்டும் உயர்த்தப்படவில்லை. நான் ஏன் ஊழியர்களின் நலன் என்று முதலிலே எடுத்துக்கொண்டேன் என்றால், மாநில அரசாங்கம் கொள்கைவழிப்பட்டு சிந்திக்கவேண்டும் என்பதற்காகத்தான். இப்போது மாநில அரசு இந்தத் துறையில் குறிப்பாக இந்த ஊழியர்களுக்கு - நான் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானமே அதுதான். இதே மாநில அரசு ஏன் சம்பள விஷயத்தில் இரட்டை அளவுகோலை கைக்கொள்கிறார்கள்? ரேஷன் பொருட்களை மக்களுக்கு வினியோகிக்கின்ற கடமை, பொறுப்பை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபட்டிருக்கின்ற இரண்டு பகுதி தொழிலாளர்களுக்கு, இரண்டு பகுதி சம்பள அளவுகோலை கைக்கொண்டுள்ளதை இந்த மாநில அரசு எந்தவகையில் நியாயப்படுத்துகிறது என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதே நிலை தொடர்ந்து நீடிப்பது என்பது அந்த ஊழியர்களுடைய நலன்களை முற்றிலும் நிராகரிக்கிற ஜனநாயக நெறிமுறைக்கு எதிரான பண்பாக முடிந்துவிடும். அவர்கள்கூட பல கட்டங்களில் விண்ணப்பித்தார்கள் இன்றைக்கு வரையில் தீர்வில்லை - தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 29 மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளுடைய ஊழியர்கள் பற்றித்தான் நான் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். அதில் கிட்டத்தட்ட 8,000-லிருந்து 9,000 ஊழியர்களுடைய சம்பளக் கோரிக்கை நியாயமானது நுகர்பொருள்

வாணிபக் கழகத்திற்கு ஒரு சம்பளம். அதே வேலையைச் செய்கிற கூட்டுறவுத் துறை ஊழியர்களுக்கு இன்னொரு சம்பளம். இந்தச் சம்பள வேறுபாட்டிற்கு நாம் என்ன பதில் சொல்கிறோம்? அதற்கு அமைச்சரவர்கள் இறுதியாக என்ன பதில் அளிக்கப் போகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் இன்னொரு வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், 28-30 மாதங்களாகி விட்டது ஒப்பந்தம் போட்டு, 12(3) ஒப்பந்தம் முடிந்து 30 மாதகாலம் ஆகியும்கூட தொழிற்சங்கங்களை அழைத்து, ஜனநாயகப்பூர்வமாக விவாதித்து, தொழிலாளர்களின் தரப்பு கருத்து என்ன என்பதைக் கேட்டறிந்து இறுதியில் முடிவு எடுப்பது என்பதுதான் பொருத்தம். ஆனால் இந்த விஷயத்தில் கடந்த 10-ஆம் தேதியன்றைக்கு ஒரு அரசாணையின் மூலம் ரூ100 சம்பள உயர்வு என்று அறிவித்திருப்பது என்பது ஜனநாயகத்தை கேலி செய்வதாகவுள்ளது. ஜனநாயக மரபுகள் நிராகரிக்கப்பட்டிருப்பதைத்தான் இது வெளிப்படுத்துகிறது. எனவே நான் வேண்டி கேட்டுக்கொள்ள விரும்புவது, தொழிற் சங்கங்களை அழைத்துப் பேசுவது என்பது முறையான மரபு.

***மாண்புமிகு திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே. தலைவர் என்றே சொல்லிவிடுகிறேன். அதாவது தொழிலாளர்கள் அலலது பணியாளர்களுடைய கோரிக்கை—அது 30 மாதங்களுக்கு முன்பு 12 (3) செட்டில்மென்டிற்குப் போடப்பட்டது என்று சொன்னார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் போடப்பட்டது. இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அந்தக் கோரிக்கையிலே, ஒன்றையாவது நாம் நிறைவேற்றவேண்டுமென்று அந்தத் துறையின் மூலம் முதலமைச்சரிடத்திலே எடுத்துச் சொல்லி, 100 ரூபாயைக் கூட அவர்களுக்கு சம்பளமாக கூட்டிக் கொடுத்தது எப்படி ஜனநாயகத்திற்கு விரோதமாக அமையும் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லவேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. அமைச்சரவர்களின் குறுக்கீட்டிற்காக நன்றி. 12(3) ஒப்பந்தம் போடப்பட்டது 1989-ல். 12(3) ஒப்பந்தம் 5 ஆண்டுகால ஒப்பந்தம் முடிந்து 30 மாதகாலமாக அந்தத் தொழிற்சங்கங்களை அழைத்து ஏன் பேசவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. இடையில் ஆட்சி இல்லையென்றாலும் கூட, இப்போது நாம் அழைத்துப் பேசியிருக்கலாம். இந்த 10 மாதகாலத்தில்கூட அழைத்துப் பேசியிருக்கலாம். அதற்கான முறைப்படியான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டிருக்கின்றன. அழைத்துப்பேசி இதே அறிவிப்பைக் கூட வெளியிட்டிருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ஊழியர்களின் உணர்வு என்ன என்பதை தெரிந்துகொள்வதற்கு ஊழியர்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவது என்பது மரபு. அந்த



மரபு பின்பற்றப்படவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இது இதுவரையிலும் பின்பற்றப்படவில்லை என்பதால் இன்னொரு விஷயத்தை இதிலே குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எந்த அளவிற்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதற்காக பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

"பட்டம்பகல் திருடர்களைப் பட்டாடைகள் மறைக்குது

ஒரு பஞ்சையைத்தான் திருடன் என்று எல்லாம் சேர்ந்து உதைக்குது"

என்று பாடினார். அதேபோல் எம்.எல்.ஏக்கள் மற்றும் அதிகாரிகள் எங்காவது ஒரு முறைகேட்டை கண்டுபிடிக்கவேண்டுமென்றால், ரேஷன்கடைக்குள் புகுந்து, ஒரு ரேஷன் தொழிலாளியை வெளியேற்றுவது ஒன்றுதான் இன்றைக்கு வேலையாக இருந்து கொண்டிருக்கிறது. நான் இதைத் தப்பு என்று சொல்லவில்லை. தவறு இருந்தால் தண்டிக்கலாம். ஆனால் இதே நாட்டில் ஐந்து ஆண்டுகாலம் அரசின் கருவூலங்களை வரம்பற்றுக் கொள்ளையடித்தவர்கள் சுதந்திரமாக உலவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி யாரும் கவலை கொள்ளவில்லை. அவர்களைத் தண்டிக்கவில்லை. ஆனால் சுண்டெலிகளைத் தண்டிக்கிறார்கள். சூத்திரதாரிகள் எல்லாம் தப்பித்துக்கொண்டார்கள். எந்த சூத்திரதாரி தப்பித்துக்கொண்டானோ அவனைப் பற்றி நாம் கவலை கொள்ளாமல், இந்த ரேஷன் கடை ஊழியர்கள் மீது வேட்டை நடத்திக்கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவர்களை அவமானப்படுத்துகிற மாதிரி எனக்குத் தெரிகிறது. அதற்கு இன்னொரு அம்சத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தவறில்லை. ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படுகிற சரக்குகளின் அளவை யார் கவனிப்பது? யார் கவனிக்க முடியும்? (குறுக்கீடு)

முற்பகல் 11-15

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்காடியிலே அந்த ஊழியர்கள் தவறு செய்திருந்தாலும் அவர்களைத் தண்டிக்க வேண்டாம் என்று கூறுகின்றார்களா?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் அடர்த்தி நிறைந்த ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, குற்றத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தினரை மட்டும் தண்டிக்க முற்பட்டுவிட்டு, மீதி 99 சதவிகிதம் குற்றம் புரிந்தவர்களைத் தப்பிக்க விட்டுவிடலாமா, என்பதுதான் கேள்வியே தவிர, குற்றங்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பது என்னுடைய வேண்டுகோள் அல்ல.

அவர் தவறாகப் புரிந்து கொள்கிற இடத்தில் இருப்பதால், எப்போதுமே தவறாகத்தான் புரிந்து கொள்வார். அதைப் பற்றி நான் அக்கறை கொள்ளவில்லை. ஆனால் உண்மையில் என்ன நடந்திருக்கிறது அந்த ரேஷன் கடைகளில் என்பதைச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் நல்லெண்ணத்தில் நான் மிகுந்த நம்பிக்கை கொண்டவன். அவர் மிகுந்த முயற்சி எடுத்து சில முன்னணி ஊழியர்களின் கூட்டங்களை நடத்தி அவர்களின் கருத்துக்களையெல்லாம் கேட்டறிந்தார். அவர் உண்மையில், அந்தக் கருத்துக்களை அந்தரங்கத்தில் அதை வைக்க வேண்டிய இடத்தில் வைத்துப் பரிசீலிப்பார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால், அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து கூட்டம் நடத்தியதற்குப் பின்னால், இன்னொரு துயரம் ஊழியர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அந்தக் கூட்டம் நடத்தாமல் விட்டிருந்தால் கூட நன்றாக இருந்திருக்கும். கூட்டம் நடத்தியபோது மனந்திறந்து ஊழியர்கள் பேசினார்கள். அமைச்சரின் முன்னால், பல்வேறு மறைந்த இரகசியங்களை அம்பலப்படுத்தினார்கள். அதிகாரிகள் எந்த அளவுக்கு முறைகேட்டிற்குரிய களமாக இந்தக் கூட்டுறவுத் துறையை மாற்றினார்கள் என்பதையெல்லாம் எடுத்து வைத்தார்கள். இப்பொழுது என்ன நடக்கிறது தெரியுமா? யார் யார் அமைச்சர் நடத்திய கூட்டத்தில். அதிகாரிகளின் குற்றங்களை முன்வைத்தார்களோ, அவர்கள் எல்லாம் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டம் நடத்தியவர்கள் மேலும்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இடையிலே பேசுவதற்கு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும். நான் பதில் கூறும்போது, இந்தப் பகுதி விடப்படுமேயானால், தக்க விளக்கங்களை நான் தருவதற்குத் தவறியவன் ஆவேன் என்ற காரணத்தினால் நான் விளக்க விரும்புகிறேன். தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசக் கூடாது என்பது எங்களுடைய எண்ணம் அல்ல. 'Whloesale Stores' அதாவது மொத்த விற்பனை பண்டகசாலைகளில், 30 பண்டகசாலைகளில் 6-ஐ தவிர மீதி 24 பண்டகசாலைகளும் இன்றைக்கு மிகவும் நஷ்டமான சூழ்நிலையிலே நடந்து கொண்டிருந்தாலும், அந்த ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு,





அந்த கமிட்டியினுடைய அறிக்கையை வாங்கி, அதை அப்படியே நாங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். அதிலேகூட, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, இந்த அவையிலே, கொண்டு வந்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, அதை விளக்க வேண்டுமென்று கேட்டு, ஒரு அறிக்கைக் கூட்த் தந்திருந்தார்கள். அது இன்னும் வரவில்லை. ஆனால் அதற்குப் பிறகு தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளெல்லாம் எங்களைச் சந்தித்துப் பேசியபோது, எங்களுக்கு நஷ்டம் வந்திருந்தும், இதை நடத்த முடியுமா என்று எண்ணுகின்ற நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சம்பளத்தை உயர்த்தித் தந்திருக்கிறார்கள். நாங்கள் அதற்காக நன்றியைத் தெரிவிக்கிறோம், இருந்தாலும், எங்களை அழைத்துப் பேசிச் செய்திருக்கலாம் என்று பல ஊழியர்கள் எங்களுக்குத் தெரிவித்தார்கள். நாங்கள் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலே அப்படிப்பட்ட ஒரு ஜி.ஓ.-வை அனுமதித்தோமே தவிர, உங்களை அவமானப்படுத்த வேண்டும் அல்லது உங்களை அழைத்துப் பேசினால் எங்களுக்கு தரம் குறைவு என்று நினைத்து நாங்கள் அதைச் செய்யவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் மீண்டும் அப்படிப்பட்ட ஒரு நிலையை நாம் உண்டாக்கலாம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல், ரேஷன் கடை ஊழியர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, அப்படிக் கூட்டப்பட்டபோது, அந்த ஊழியர்கள் எடுத்துரைத்த கருத்துக்களையெல்லாம் ஆராய்ந்து, அவர்கள் எங்களுக்குத் தெரிவித்த கருத்திற்கொப்ப 12 அதிகாரிகளை உடனடியாக சென்னை நகரத்திலேயிருந்து மாற்றி வேறு நல்ல அதிகாரிகளை சென்னை நகருக்குப் போட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட ஊழியர்கள் பாதிக்கப்படுவார்களேயானால், நிச்சயம் இந்த அரசு அவர்களைக் காப்பாற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி, அமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிற அளவுக்கு நிதி நிலைமையில் மொத்த கூட்டுறவு பண்டகசாலைகள் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அந்த நட்டம் யாரால் வந்தது? ஊழியர்களால் வந்ததா? 1976-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கலைக்கப்பட்டு 1976-லிருந்து இன்றைக்கு 1997 வரையில், 20 ஆண்டு காலத்தில் 60 கோடி ரூபாய்

[ திரு. கே. சுப்பராயன் ] [1997 மார்ச் 26

நட்டத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் அதிகாரிகள்; அதிகாரிகளின் மிக மோசமான நிர்வாகம். நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு ரூபாய்க்கு வாங்கி 1½ ரூபாய்க்கு விற்கிற ஒரு வியாபாரம் எப்படி நட்டமாகும். கூட்டுறவுத் துறையில் பொது மக்களுக்கு விற்கப்படுகின்ற அந்த வியாபாரம் என்பதே, வாங்கிய விலையிலிருந்து அதிகமாக வைத்து விற்றும் 60 கோடி நட்டமாகிறது அதற்குக் காரணம் மனிதர்களின் மிக மோசமான முறைகேடான நடவடிக்கைதான். அதிலும் குறிப்பாக கூட்டுறவுத் துறையில் அவற்றிற்கு பொறுப்பாக்கப்பட்டு இருக்கிற அதிகாரிகளின் நடவடிக்கைகள்தான் காரணம். இந்த இடத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன், உழைக்கின்ற ஊழியர்களை சம்பள உயர்வு இல்லாமல் தண்டிப்பது பொருள் அற்றது, பொறுப்பற்றது. தண்டிக்கப்பட வேண்டியவர்கள் அதிகாரிகள். அதிகாரிகளைத் தேடிப் பிடித்து தண்டியுங்கள். இவற்றைத்தான் இந்த நேரத்தில் நான் வேண்டி கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

இதே விஷயத்தில் இன்னொன்றை குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ரொம்ப அழகாக அருமையாக ஆழமாக குறிப்பிட்டிருக்கிறார்கள் 'உணவைப் போதுமான அளவுக்குத் தடையின்றிப் பெறுவது என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள பிறப்புரிமை' என்று குறிப்பிட்டிருக்கிறார் அதேபோல 'மக்களின் வாங்கும் திறனை அதிகரிப்பதன் மூலமே, பொருளாதார வகையில் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்யமுடியும்' என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அதேபோல 'சமுதாயத்தில் வல்லமைபடைத்தவர்கள் நலிந்த பிரிவினரைச் சுரண்டும் நிலையினைத் தடுத்து நிறுத்துவதையே தனது முக்கியக் கடமையாகக் கொண்டு கூட்டுறவு இயக்கம் செயல்பட்டு வருகிறது' என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நியாயங்கள் ஊருக்கு மட்டும் அல்ல; அந்த ஊழியர்களுக்கும் பொருந்தும். நீங்கள் எந்த நல்ல நோக்கத்தை பொதுமக்களுக்குக் கொண்டு செல்கிறீர்களோ அந்த நல்ல நோக்கத்தைக் கொண்டு செல்கிற கன்வேயர் பெல்ட்டே இந்த ஊழியர்கள்தான். எனவே இந்த ஊழியர்களின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும். அதற்காக நான் அமைச்சர் அவர்களுக்கு விண்ணப்பித்துக்கொள்வது...



1997 மார்ச் 26 ]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏதோ 20 ஆண்டுக்காலமாக நடந்த தவறுகளை இந்த 8 மாத காலத்தில் நடந்தது போல உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். தயவுசெய்து அதை அவர் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து கடந்த காலத்தில் நடைபெற்ற தவறுகள் இன்றைக்கு ஒட்டுமொத்தமாக இந்த அரசின்மீது திணிக்கப்பட்டிருக்கிறது. 24 மொத்த விற்பனை பண்டகசாலையையும் இன்றைக்கு கொஞ்சம்கூட நடத்துவதற்குள்ள நிதி நிலைமை இல்லாத நேரத்திலும் அவர்களுக்கு 2 கோடியே 87 இலட்சம் ரூபாய் அதிகமாக சம்பளத்தை இன்றைக்கு கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களிலே கலைஞர் அவர்கள் பொறுப்பு ஏற்ற 8 மாதகாலத்தில் பல்வேறு சீர்திருத்தங்களை இந்த மொத்த விற்பனை பண்டகசாலைகளிலே உருவாக்கித் தந்திருக்கிறார்கள். முதலிலே யாரிடம் வேண்டுமானாலும் சரக்கு பெறலாம் அல்லது இன்னாரிடம்தான் பெறவேண்டும் என்ற நிலையை மாற்றி இந்தியா முழுமையும் இருக்கின்ற நல்ல துணி உற்பத்தி செய்கின்ற 19 நிறுவனங்களை அடையாளம் கண்டு அவர்களிடம் மட்டும்தான் துணி வாங்கவேண்டும். அதேபோல கொள்முதல் செய்வதிலே பல சீர்திருத்தங்களை உருவாக்கி தலைமையிலே இருக்கிற அதிகாரிகளுடைய கண்காணிப்பில் அந்தக் கொள்முதலை செய்ய வேண்டும் என்று இன்றைக்கு நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறது அரசு.

அதுமட்டுமல்ல. அங்கிருக்கின்ற அதிகாரிகள் மட்டுமே தவறு செய்வதாக இங்கே சொன்னார்கள். அதிகாரிகள் மட்டுமே தவறு செய்வதில்லை. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் தொழிலாளர்களும் சிலர் அந்த அதிகாரிகளோடு இணைந்து செய்த தவறினால்தான் இன்றைக்கு ஒரு மாபெரும் இழப்பை அந்த மொத்த விற்பனை பண்டகசாலை அடைந்திருக்கிறது. அதை மீட்டுத் தருவதற்காக இந்த அரசு 24 சங்கங்களிலே மொத்த விற்பனை பண்டக சங்கங்களிலே முதல் 6 சங்கங்களை எடுத்து திருச்சியில் இருக்கின்ற சிந்தாமணி அமராவதி, கோவையில் இருக்கின்ற சிந்தாமணி மற்றும் மதுரையில் இருக்கின்ற பாண்டியன் சூப்பர் மார்க்கெட் இதையெல்லாம் எடுத்து அவர்களுக்கு இருக்கின்ற தவறுதல் வட்டியை கலைத்து குறுகிய காலக் கடனை நீண்டகால கடனாக மாற்றி வட்டியை குறைத்து மேற்கொண்டு அவர்கள் வியாபாரம் நல்ல முறையிலே நடத்துவதற்காக நிதி உதவியும் செய்வதற்காக இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதனால் தொடர்ந்து கடந்த காலத்தில் நடைபெற்ற தவறுகளை இந்த காலத்தில்

நடைபெற்றதைப் போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 20 ஆண்டுக்காலம் நடந்த இந்த விஷயங்களுக்கெல்லாம் மாநில அரசுதான் பொறுப்பு என்று நான் குறிப்பிடவேயில்லை. ஆனால் இப்போது மாநில அரசுப் பொறுப்பில் இருக்கிறவர்கள் அவற்றைக் களைவதற்கு கடமைப்பட்டிருக்கிறார்களா, இல்லையா? அந்த கடமைப்பட்டுள்ள துறை இவற்றிற்கு தீர்வு அளிக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புவது நாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்கமே யானாலும் சரி, எந்தத் தொழிலாளியானாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி கூட்டுறவுத் துறையைச் சூறையாடிய குற்றவாளிகளை தண்டிப்பதில் நாங்கள் உங்களோடு கைகோர்த்து நின்று உதவத் தயார். இன்னும் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறோம். இந்தக் கூட்டுறவுத் துறையை உள்ளபடியே சிறப்பு அடைய வைப்பதற்குரிய வழிமுறைகள் குறித்து தொழிற்சங்க இயக்கத்தையும் அழைத்துப் பேசி பொருத்தமான நடைமுறை உத்திகளை உருவாக்க வேண்டும். இவற்றைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி உருவாக்க முற்படுகிறபோது அதற்குரிய விவரங்களை நாங்கள் தரத் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு விஷயம். இந்த நஷ்டத்திற்கு எப்படி தீர்வளிக்கலாம் என்பது குறித்து நான் குறிப்பிட விரும்புவது 60 கோடியை மாநில அரசு கொடுத்து ரைட்-ஆஃப் செய்ய வேண்டும். மேற்கொண்டு நஷ்டம் ஏற்படாமல் தடுப்பதற்குரிய நடைமுறைகளை உருவாக்கலாம். அதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த முறைகேடுகளை, ஊழல்களைப் பற்றி விரிவாகப் பேச இப்போது விரும்பவில்லை.

*முற்பகல் 11-25*

இன்னொரு விஷயம் ஊழல்களைப் பொறுத்தவரையில் நம்முடைய டி.என்.சி.எஸ்.சி.யிலே ஒரு சிக்கலான விஷயம். இந்த டி.என்.சி.எஸ்.சி.யில் இன்றைக்கு 500 தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்கள் என்ற முறையில் இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, தற்காலிகத் தொழிலாளர்களாக



17 ஆண்டுகளாக 500 தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பெயர் தற்காலிகத் தொழிலாளர்கள். எத்தனை ஆண்டு காலம் என்றால் 17 ஆண்டு காலமாக இருக்கிறார்கள். இதிலே ஏ.ஐ.டி.யூ.சி. யூனியன் முன்முயற்சி எடுத்து தற்காலிகத் தொழிலாளர்களாக இருப்பது சரியல்ல, சட்ட விரோதம். 480 நாட்கள் அதாவது 2 ஆண்டுக்காலத்தில் தொடர்ந்து 480 நாட்கள் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்படவேண்டும் என்று மாநில அரசு சட்டம் இயற்றி விட்டு அந்தச் சட்டத்தை மாநில அரசே மீறிக்கொள்வது எந்த வகைப்பட்ட கேலிக் கூத்து என்று எனக்குப் புரியவில்லை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று விரைவாகப் பேசி தன் உரையை முடிக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பேசி முடித்து விடுகிறேன். நான் இங்கே குறிப்பிட விரும்புவது, 480 நாட்கள் வேலை செய்த தொழிலாளர்கள் நிரந்தரம் ஆக்கப்படவேண்டும் என்று சட்டம் இயற்றிய இந்த மாநில அரசே அந்தச் சட்டத்தை கௌரவப்படுத்த விரும்புகிறதா; இல்லையா: என்பது தான் என்னுடைய கேள்வி. விரும்புகிறது என்பது அந்தரங்க சுத்தமாக உண்மையானால் அந்த 500 தொழிலாளர்களை உடனடியாக நிரந்தரம் செய்ய வேண்டும்.

இதில் இன்னொரு வேடிக்கை. வேடிக்கையிலும் வேடிக்கை என்ன தெரியுமா: தொழிற்சங்கம் வழக்குப் போட்டது. வழக்கு ஹை-கோர்ட்டுக்குப் போனது. ஹை-கோர்ட் டைரக்ஷன் கொடுத்து அந்தத் தொழிலாளர்களை உடனடியாக நீங்கள் நிரந்தரம் செய்யுங்கள் என்று ஹை-கோர்ட்டின் டைரக்ஷனின்படி இன்ஸ்பெக்டர் ஆப் லேபர் ஒரு உத்தரவுப் போட்டார். தஞ்சையில் இவர்களை எல்லாம் நிரந்தரம் ஆக்குங்கள் என்று போட்ட அந்த உத்தரவை எதிர்த்து ரிட் பெட்டிஷன் போட்டிருக்கிறார்கள் ஹை-கோர்ட்டில், நான் எளிமையாகச் சொல்கிறேன், நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. இரகுமான்கான் அவர்கள் அந்தத் தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று உத்தரவு இடுகிறார்; மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் அந்த உத்தரவை நிறைவேற்ற முடியாது என்று சொல்லி ஹை-கோர்ட்டுக்குப் போனால் எப்படி? இப்படி ஒரு கேலிக்கூத்து இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் நடந்து இருக்கிறது. அவற்றைக் கவனித்து அந்த 500 தொழிலாளர்களை நீங்கள் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இடத்திலே நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் முன் உதாரணமாக விளங்க வேண்டியது மாடல் எம்ப்ளாயர் ஸ்டேட் கவர்மெண்டுதான். இந்த மாநில அரசுதான் ஒரு முன் உதாரணமாக இருக்கவேண்டும் அல்லவா: முன் உதாரணமாக இருந்து வழிகாட்ட வேண்டிய நாங்கள் சம்பந்தப்பட்ட இதே கூட்டுறவுத் துறையில் டெம்பாரிஸ் இருக்கிறார்கள். இந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய தற்காலிகத் தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்ய வேண்டும் அல்லவா: எனவே நிரந்தரம் செய்யப்படவேண்டும் என்று இயற்றப்பட்ட சட்டத்தை கௌரவப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிறைவாக இரண்டொரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். இன்னொரு கேலிக்கூத்து துறையூரில் உள்ள தொடக்கக் கூட்டுறவுப் பண்டக சாலையில் 24-12-1996-ல் 12(3) ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய 11 ஊழியர்களுக்கு சம்பள உயர்வு குறித்து 12(3) ஒப்பந்தம்-எலக்ட்டடு பாடி-அதனுடைய தலைவர் போட்டு இருக்கிறார். அந்த 12(3) ஒப்பந்தம் போட்டதை எதிர்த்து முசிறி டி.ஆர். அவர்கள் டெபுட்டி ரிஜிஸ்தரார் அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்: ஏன் உங்கள் போர்டை கலைக்கக்கூடாது என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். அந்த ஊழியர்களின் கோரிக்கைகளை ஏற்று 12(3) ஒப்பந்தம் போட்ட அந்த போர்டை, தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டை கலைக்க வேண்டும் என்று ஒரு அதிகாரி நோட்டீஸ் கொடுக்கிறார். இந்தச் சட்டமும், அதிகாரிகளின்....

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது நேரடியாக என்னுடைய கவனத்திற்கு வந்தது. தமிழகம் எங்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இப்போது வந்திருக்கிறார்கள். பல்வேறு சங்கங்கள் நிறைய நிதி வசதியோடு, மிகுந்த இலாபகரத்தோடு இருக்கின்ற சங்கங்கள் இருக்கின்றன. பல்வேறு சங்கங்கள் தங்களுடைய சங்கத்தை நடத்துவதற்கே இயலாத நிலையில் இருக்கின்றன. புதிய தலைவர்களாக தேர்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் அந்த சங்கத்திலே நிதிநிலை இருக்கிறதா: அந்தச் சங்கம் சிறப்பாக நடைபெற முடியுமா, சம்பளம் ஏற்றித் தந்தால் சங்கத்தால் கொடுக்க முடியுமா, என்று ஆராய்ந்து அவர்கள் சம்பளத்தை ஏற்றி தந்திருப்பார்களானால் அரசுத் துறை அதிகாரிகள் நிச்சயமாக அவர்களுக்கு அனுமதி அளிப்பார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் வந்த உடனே அவசர அவசரமாக 15 நாட்களுள்ளாக சம்பளத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இன்றைக்கு தலைவர்களுக்கு*



*வந்திருக்கிறது. அதுபோல் இருக்கின்ற இடங்களில்தான் அரசுத் துறை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். துறையூரில் அதே கூட்டுறவுச் சங்கத்தில் அவசர அவசரமாக சம்பளத்தை ஏற்றித் தந்தது மட்டுமல்ல, 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட அந்தச் சங்கத்தினுடைய பணத்தை பினாமி பெயரில் போட்டு லோன் எடுத்து அந்த 10 லட்சம் ரூபாயை சுண்டல் லாட்டரிக்காக பணம் கட்டியிருப்பதும் அந்தச் சங்கத்தில் இருப்பவர்கள்தான். செய்திருக்கிறார்கள். இது அரசுத் துறை அதிகாரிகளின் கவனத்திற்கு வந்து கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு அந்தத் தொகை மீட்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், தமிழகம் முழுவதும் இருக்கின்ற தலைவர்களுக்கும் அறிவிப்பது அந்தச் சங்கங்கள் வாயிலாக இருந்தால் நீங்கள் அவர்களுக்குச் சம்பளம் ஏற்றித் தந்தாலும், சங்கங்கள் சிறப்பாக நடைபெறுகிறது என்றால் அவர்களுக்கு சம்பளத்தை நீங்கள் ஏற்றித் தந்தாலும் இந்த அரசு ஏற்றுக் கொள்ளும். சங்கத்திலே அதிக அளவு நிதி ஆதாரம் இல்லாமல், வியாபாரம் குறைவாக நடந்து, அந்தச் சங்கத்தை நடத்துவதற்கே சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் இடத்திலே சம்பளத்தை உயர்த்தித் தந்தால் நிச்சயமாக அரசு ஏற்றுக் கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*முற்பகல் 11-30*

**திரு. கே. சுப்பராயன் :** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான சிக்கல் இதில் இருக்கிறது. 12(3) ஒப்பந்தம் போடப்பட்டால் சுப்ரீம் கோர்ட்டால் கூட அவற்றை மாற்ற முடியாது. 12(3) ஒப்பந்தம் என்பது சுப்ரீம் கோர்ட்டால்கூட மாற்ற முடியாத, தலையிட முடியாத ஒரு பாதுகாப்புள்ள ஒப்பந்தம், அந்த ஒப்பந்தம் போடப்பட்டு முடிந்து விட்டது. இந்த நிலையில் மாநில அரசு அந்த போர்டை கலைக்க முயற்சித்தாலும், புதிய ஒரு நிர்வாக நிலையை ஏற்படுத்தினாலும் அந்த 12(3) ஒப்பந்தத்தை கௌரவப்படுத்த வேண்டும். அல்லவா? அது குறித்து மாநில அரசு என்ன கருதுகிறது என்று எனக்குத் தெரியவில்லை.*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 12(3) ஒப்பந்தம் பற்றி மாண்புமிகு உணவுத் துறை*

அமைச்சர் அவர்கள் எந்த கருத்தும் சொல்லவில்லை. ஆனால் அந்தச் சங்கத்தில் இருக்கக்கூடிய சுமார் 10 லட்சம் ரூபாயை கையாடல் செய்கின்ற வகையில் சுரண்டல் லாட்டரிக்குப் போகின்ற அளவுக்கு தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட காரணத்தால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்களே தவிர, தொழிலாளர்களோடு 12(3) ஒப்பந்தம் செய்து கொண்ட காரணத்தால் அந்தச் சங்கத்தினுடைய தலைவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்) :** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில சங்கங்கள் நட்டத்தில் இயங்கக்கூடிய கால கட்டத்தில் கூட இப்படி தலைவர்கள் செயல்படுகிறார்கள் என்ற வகையில் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பல சங்கங்களில் தலைவர்கள் வந்த சூட்டோடு சங்கங்கள் நட்டத்திலே இயங்குவது தெரிந்தும்கூட புதிய, புதிய அப்பாயின்டுமெண்டுகளை போட்டு இருக்கிறார்கள். இதை உடனடியாக அமைச்சர்கள் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று, இப்போது எல்லாம் மொத்த கூட்டுறவுப் பண்டகசாலைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஜெயில் சப்ளை முழுவதும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம்தான் சப்ளை செய்ய வேண்டும் என்று அரசு ஆணை இருந்தும் கூட தனியார் மூலமாகவே எல்லா ஜெயில் சப்ளையும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அதனால் மொத்தக் கூட்டுறவுப் பண்டகசாலைக்கு கிட்டத்தட்ட 3 லட்ச ரூபாய் ஆண்டுக்கு வருமானம் வருவதை இழந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க தயாராக இருக்கிறார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 12 (3) ஒப்பந்தம் என்பது சம்பளம் உயர்த்துவது மட்டும் அல்ல. ஆங்காங்கே தலைவர் பெருமக்கள் எல்லாம் வேலைக்கு ஆள் எடுப்பது குறித்து அரசின் சார்பாக ஒரு சட்டம் இயற்றி இருந்தாலும்



முறைப்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக ஆட்கள் பெறப்பட்டு அதிலே நேர்காணல் நடத்தப்பட்டு அரசு அதிகாரிகள் துணையோடு தலைவர்கள் நியமித்துக் கொள்ளலாம் என்று சட்டம் இருந்தாலும் அந்தச் சட்டத்தை மீறி நேரடியாக அவர்கள் எல்லாம் தற்காலிகப் பணியாளர்கள் என்ற அளவில் நிறைய இடங்களில் சேர்த்து இருக்கிறார்கள் என்ற செய்தி அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அப்படி சேர்க்கப்பட்ட தொழிலாளர்கள் முறையான படி சேர்க்கப்படவில்லை என்றால் அவர்களெல்லாம் விலக்கப்பட வேண்டுமென்று அரசுத் துறையின் அதிகாரிகள் சார்பாக சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சிறைத் துறைக்கு முறைப்படி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தான் வழங்க வேண்டும் என்று இருந்தும் தனியார்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது என்று இங்கே தெரிவித்து இருக்கிறார்கள். உரிய முறையில் ஆராய்ந்து நிச்சயமாக அது சீர் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தில் எனக்கு மாறுபாடு இல்லை. அப்படிப்பட்ட முறைகேடானவர்கள் மீது உறுதியான நடவடிக்கை மேற்கொள்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் நிறைவாக சொல்லிக் கொள்ள விரும்புவது.

மாநிலத்தில் அதாவது கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு உரிய பொருட்களை பர்சேஸ் செய்வதற்குரிய பர்சேஸ் பாலிசி முற்றிலும் மாற்றப்பட வேண்டும். அந்த பர்சேஸ் பாலிசியை மாற்றவில்லை என்றால் பெரும் சிக்கல் ஏற்படும். ஒரு உதாரணம் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறித்துக் கொள்ள வேண்டும். கோவையில் கோவை சிந்தாமணியிலிருந்து கோவை மத்திய சிறைச் சாலைக்கு சப்ளை செய்யப்படுகிற பொருட்கள் நூற்றுக்கு நூறு சதம் முறைகேடும், ஊழலும் நிறைந்தது. கடந்த கால ஆட்சியில் யார் அதை செய்தார்களோ அவர்கள்தான் இன்றைக்கும் நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்டு வருகிறார்கள். இது நடப்பதே சம்பந்தப்பட்ட ஸ்பெசல் ஆபீசர் அவர்களால்தான். இதுகுறித்து விரிவான விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட வேண்டும். கோவை சிந்தாமணி மூழ்கிப் போனதற்கு

முழு முதல் காரணமாக இருந்தது ஊழலும் முறைகேடும்தான். அந்த ஊழலிலும் முறைகேட்டிலும் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப்பற்றி நான் விரிவாக, விளக்கமாக சொல்ல எனக்கு நேரம் இல்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 11-35

இறுதியாக ஒன்று 29 கூட்டுறவு பண்டகசாலை. ஊழியர்களுடைய நலனைக் காப்பாற்ற. சிவில் சப்ளைஸ் ஊழியர்களுக்கு இணையான சம்பளம் அவர்களுக்கு நீங்கள் கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை. தயவுசெய்து அடிப்படைச் சம்பளத்தில் 300 ரூபாயாவது உயர்த்துவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நீங்கள் ஒரு தேதியை தீர்மானித்து தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி ஒரு பாசிட்டிவ் அப்ரோச் என்று சொல்கிறோம் அல்லவா, நேர்மறையான அணுகுமுறை மேற்கொண்டு முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, திருப்பூர் தொகுதியில் இருக்கக்கூடிய திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவதற்கு 4½ கோடி ரூபாய் நிதி ஒதுக்க வேண்டும். அதை ஒதுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. அது கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் சார்பில் நடத்தப்படுகிறது. பெண்களுக்கான கல்லூரி அது. அதுவும் திருப்பூர் தியாகி குமரன் பெயரில் இயங்குகிறது. அந்தக் கல்லூரி இப்போது வாடகைக் கட்டிடத்தில் இயங்குகிறது. எனவே, அந்தக் கல்லூரிக்கு இணையத்திலிருந்து 4½ கோடி ரூபாய் உடனடியாக ரிலீஸ் பண்ண வேண்டுமென்று அவர்கள் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைக்கு வாங்குகின்ற எந்தப் பொருளாக இருந்தாலும், கூட்டுறவுத் துறை மூலமாகத்தான், அந்த அதிகாரிகள் மூலமாகத்தான் நாங்கள் வாங்குகிறோம். இதிலே எந்த மாற்றமும் கிடையாது. தனியாரிடத்திலேயிருந்து சிறை நிர்வாகம் வாங்குவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து....



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ரொம்ப இன்டரப்ஷன்ஸ் இருந்தால் எப்படி அவையை நடத்துவது? திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே, மாமன்றத்திற்குத் தெரிவித்ததெல்லாம் நிச்சயமாக சிறைத் துறை, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் வாங்குவதற்காக ஆணையிட்டிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஜி.ஓ. போட்டிருக்கிறது. ஹோம்லிருந்து ஜி.ஓ. வந்திருக்கிறது. 1992-லே ஜி.ஓ. வந்திருக்கிறது. ஆனால், அந்த ஜி.ஓ.-வை மொத்த கூட்டுறவு பண்டகசாலையில் இருக்கக்கூடிய எஸ்.ஓ.-க்கள் முழுமையாகப் புறக்கணித்துவிட்டு, தனியார் மூலமே அவர்கள் செய்து, ஒரு மாதத்திற்கு 3 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஜெயிலிலிருந்தும் அவர்களுக்குக் கிடைக்கும். அந்தச் சப்ளையிலிருந்து, அந்த அளவுக்கு ஊழலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நேற்றுக்கூட உறுதிமொழிக் குழு சார்பாக ஒரு அதிகாரியை-வடாற்காடு-அம்பேத்கர் மாவட்ட ஜெயில் சப்ளை எஸ்.ஓ.-வை கூப்பிட்டு நான் பேசுகிறபோது, அந்த ஊழலைக் கண்டுபிடித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து ஒரு ரிப்போர்ட் வாங்க வேண்டுமென்று கூட நான் ஒரு கருத்துரை சொல்லியிருக்கிறேன். இந்த அளவிற்கு எல்லா ஜெயில்களிலும் தமிழகத்திலே ஊழல் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுத்தால் ஒரு பண்டக சாலைக்கு கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய் மீறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னது, கடந்த காலத்தில் நடைபெற்றது எல்லாம் உண்மை. சிறைத் துறையினுடைய அதிகாரி எங்களது கூடுதல் பதிவாளர் அவர்களுக்கு எழுதுகிறார். அந்தக் கடிதத்திலே எங்களுக்கு உரிய விலையைவிட அதிகமான விலை தந்தும்கூட, சரியான முறையிலே எந்தப் பொருளும் வந்து சேரவில்லை என்று ஒரு கடிதம் வந்தவுடன், உடனடியாக அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும், விற்பனையாளர்கள் சங்கங்களிலும் ஆராய்ந்தபோது, பல்வேறு தவறுகள் நடைபெற்றது உண்மை. அதையெல்லாம் திருத்தி இன்றைக்கு அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். சரியான முறையிலே அவர்களுக்கு பொருள் போய்ச் சேருவதற்காக

உத்தரவிட்டிருக்கிறார்கள். கடந்த 10 நாட்களுக்கு முன்புகூட நேரடியாக பதிவாளர் அலுவலகத்திற்கு அவர்கள் வந்து சென்றிருக்கிறார்கள். உரிய முறையில் ஆராய்ந்து, நல்ல சிறப்பான முறையில், நேர்மையாக நடத்துவதற்கு, இந்தத் துறை உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்.

***திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் பற்றிய மானியத்தின் விவாதத்தில் கலந்துகொண்டு சில கருத்துக்களை எடுத்து வைக்கின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பங்குக்கு ஒரு வாக்கு என்பது கம்பெனிகளின் சட்டம். ஆனால், ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்பது கூட்டுறவின் தத்துவம். ஏழை பணக்காரன் என்று வேறுபாடு இல்லாமல், அதிகப் பங்குத் தொகை, குறைவான பங்குத் தொகை என்று கணக்கீடு இல்லாமல் தனி மனிதனுடைய உரிமையைப் பாதுகாக்கின்ற ஒரு உன்னத அமைப்பாக விளங்குகிறது, இந்தக் கூட்டுறவு அமைப்பு. ஆனால், கடந்த ஆட்சியில் இந்தக் கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் எப்படி சீரழிக்கப்பட்டன என்பதற்கு, எனக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் அடுக்கடுக்கான ஆதாரங்களை எடுத்துச் சொன்னார். எனவே, இப்படிப்பட்ட முறைகேடுகள், ஊழல்கள் இவைகள் எல்லாம் களையப்பட வேண்டும் என்பதற்காகவும், அதே நேரத்தில் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தலே நடத்தாமல், கறையான் புற்றெடுக்க கருநாகங்கள் குடி புகுந்ததைப்போல, சில ஊழல் பெருச்சாளிகள் உறுப்பினர்கள் என்ற போர்வையிலே இந்த அமைப்புகளிலே புகுந்து கொண்டு கூட்டுறவுத் தத்துவத்தையே நாசப்படுத்திக் கொண்டிருந்த நிலையை மாற்றி, போலி உறுப்பினர்களையெல்லாம் அந்தக் கூட்டுறவு அமைப்புகளிலிருந்து நீக்கிவிட்டு, கடந்த ஆட்சியில் நடத்தப்படாமல், நடத்த முடியாமல் இருந்த கூட்டுறவு அமைப்புகளுக்கானத் தேர்தலை இந்த ஆட்சியிலே நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கையிலே நிர்வாகத்தை ஒப்படைத்திருக்கின்ற இந்த அரசையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.



முற்பகல் 11-40

இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலம் பயன் பெறுகிறவர்கள் பெரும்பாலும் விவசாயிகள், நடுத்தர மக்கள், கைத்தறி நெசவாளர்கள் மற்றும் மகளிர், உழைக்கின்ற மக்கள் ஆகியோர். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கப்படுகின்ற குறுகிய காலக் கூட்டுறவுக் கடனுடைய வட்டிச் சுமை குறைக்கப்பட வேண்டும் என்று பல ஆண்டுகாலமாக இந்த மாமன்றத்திலே பலரும் உரையாற்றியிருக்கிறோம். இந்தக் குறுகிய காலக் கடன்களுக்கு ரிசர்வ் வங்கி வசூலிக்கின்ற வட்டித் தொகை 3.5 சதவீதம். ஆனால், 3.5 சதவீதத்திற்கு ரிசர்வ் வங்கி தருகிற இந்தப் பணம் விவசாயிகளைச் சென்றடைகின்ற நேரத்திலே அந்த வட்டி விகிதம் 13 சதவீதமாக இருக்கின்றது. இந்த முறை மாற்றப்பட வேண்டும் என்றுதான் இந்த மன்றத்திலே பேசிய, இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின் மீது பேசிய பல்வேறு உறுப்பினர்களும் பல ஆண்டுக்காலமாக இந்தத் கோரிக்கைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கி வழங்குகிற அந்தத் தொகை மாநில வங்கிக்கு வந்து அந்த 3.5 சதவீதமாக இருக்கக்கூடிய அந்தத் தொகை, மாநில வங்கிக்கு வருகின்ற நேரத்திலே அவர்கள் அதை 5.5 சதவீதத்திற்கு மத்திய வங்கிக்குத் தருகிறார்கள். மத்திய வங்கி அதோடு தன் பங்காக இன்னும் கொஞ்சம் வட்டியைச் சேர்த்து 10 சதவீதத்திற்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குத் தருகிறது. அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தன் பங்காக இன்னும் சில வட்டி விகிதத்தைச் சேர்த்து 13 சதவீதத்திற்கு விவசாயிகளுக்கு அந்தக் கடனை வழங்குகிறது. இன்னும் சொல்லப்போனால் 25,000-க்கு உட்பட்ட குறுகிய காலக் கடன்களுக்கு 13 சதவீதத்திற்கு இந்த வட்டி வசூலிக்கப்படுகிறது. இதிலே விவசாயி செலுத்துகிற பங்குத் தொகையும் சேர்த்தால், ஏறத்தாழ 14.5 சதவீத வட்டி விவசாயிகள் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த மூன்று அடுக்கு முறையை மாற்றி, ரிசர்வ் வங்கி தருகின்ற அந்தப் பணம் நேரிடையாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம், 3.5 சதவீதமாக ரிசர்வ் வங்கி வழங்குகிற அந்தப் பணத்தை, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தன்னுடைய பங்குக்கு ஒன்றோ அல்லது 1.5 சதவீதமோ வைத்து 5 சதவீத அடிப்படையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தக் கடன் தொகையை வழங்குவோமேயானால், நிச்சயமாக இதுதான் விவசாயிகளுக்குத் தருகிற மிகப்பெரிய சலுகையாக அமையும் என்று நான் கருதுகிறேன்.

சென்ற முறை கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இலவச மின்சாரத் திட்டத்தை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்கி மிகப் பெரிய சலுகையைச் செய்தார்கள். அந்தச் சலுகையானது, அன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கு 'வயிற்றிலே பால் வார்த்ததைப்' போல் அமைந்தது. இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலம் கடன் பெறுகின்ற விவசாயிகளுக்கு இந்த வட்டி விகிதத்தை குறைத்து, இன்னும் குறைந்த வட்டியிலே கடன்கள் வழங்கப்படுமேயானால் நிச்சயமாக அது விவசாயிகளுடைய வயிற்றிலே தேன் வார்த்ததைப்போல அமையும் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி பல்வேறு கிராமங்களிலே செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் போதுமான வசதிகள் இன்னும் அந்த வங்கிகளுக்குக் கிடையாது. இப்போது நகைக் கடன்களாக விவசாயிகளுக்கு ஏராளமான தொகையை அரசு அளித்து வருகிறது. அப்படி அந்த நகைக் கடனுக்காக விவசாயிகள் தருகின்ற அந்த நகைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே பாதுகாப்புப் பெட்டக வசதிகள் கிடையாது. எனவே, அந்தப் பாதுகாப்புப் பெட்டக வசதிகளை நல்ல முறையிலே அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, சரக்கீட்டுக் கடன் என்கின்ற ஒரு சலுகையும் விவசாயிகளுக்கு இருக்கின்றது. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களைக் கொண்டுவந்து. அதை அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே அடமானம் வைத்து கடன் பெற வசதி இருக்கிறது. ஆனால் இந்த வசதியை முழுமையாக இன்றைக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கிறார்கள். காரணம், கிடங்கு வசதியில்லை. அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அந்தச் சரக்கீட்டுக் கடன் பெறுவதற்கு கொண்டு வந்து பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு கிடங்கு வசதிகள் இல்லாத காரணத்தாலே விவசாயிகள் அந்தச் சலுகையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே. அதையும் நல்லமுறையிலே நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள சின்னியம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி பல ஆண்டுகாலமாகச் சிறப்பாகச்



செயல்பட்டுக்கொண்டிருக்கிற வங்கி. அந்த வங்கியை நான் சமீபத்திலே போய் பார்த்தேன். அது மிகச் சிறிய கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு நியாயவிலைக் கடையும் நடத்துகிறார்கள். வங்கி அலுவலகம், நியாயவிலைக்கடை, உரங்களை வைக்கின்ற கிடங்கு போன்றவைகளுக்கு இடம் போதாமல் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே அங்கு ஒரு புதிய கட்டிடத்தை நல்ல முறையிலே அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

அடுத்து நிலவள வங்கி. நிலவள வங்கித் தலைவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் மட்டுமே அதிகபட்சத் தொகையாக கடன் வழங்க வேண்டுமென்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. மாறி வருகின்ற சூழ்நிலைக்கேற்பவும், அதிகரித்து வருகின்ற தேவையைக் கணக்கிலே கொண்டும். அந்தத் தலைவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் கடன் வழங்கலாம் என்ற அளவிற்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று நான இநத நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'பண்ணைசாராக் கடன்' என்ற திட்டத்தின் அடிப்படையில் கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய மக்களுக்கு, அவர்களின் சுகாதாரத்தைப் பேணும்பொருட்டு, சுகாதார நலத் திட்டங்களுக்கு கிராமப்புறங்களில் கல்வித் தகுதியில் தேர்ந்த மருத்துவர்களுக்கு மருத்துவமனை அமைக்கக் கடன் வழங்கப்படுகிறது. இந்தக் கடன் தொகை, இந்த ஆண்டு 28 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். அதுபோல, கிராமங்களில் சாலைப் போக்குவரத்துக்கும், சிறு ஊர்தி வைத்திருப்பவர்களுக்கும் இந்த நிலவள வங்கியில் பண்ணைசாராக் கடன் திட்டத்தின் அடிப்படையில் கடன் வழங்குகிறார்கள். ஆனால் அந்தக் கடன் தொகையைப் பெறுவதற்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் கடுமையாக இருக்கின்றன. எனவே அந்த நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் மனப்பாங்கை மக்கள் மத்தியில் நாம் வளர்த்தேயாக வேண்டும். அரசின் சார்பில் கொடுக்கப்படுகின்ற கடன்கள், மற்றும் பல்வேறு துறைகளின் சார்பில் கொடுக்கப்படுகின்ற கடன்கள் எதுவாக இருந்தாலும், அவைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை என்ற உணர்வு மெல்ல மெல்ல

மக்கள் மத்தியிலே ஏற்பட்டுவிட்ட விளைவால்தான் இன்றைக்கு இந்த அமைப்புகளெல்லாம் நஷ்டத்தில் இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் ஒன்றைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும், கடன்களை வாங்குவதிலும் மற்றும் நிர்வாகத்திலும், பெரியார் மாவட்டம் இன்று கூட்டுறவுத் துறையிலே முதன்மை மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது. ஏறத்தாழ 78% கடன் வசூல் செய்து சாதனை படைத்திருக்கிற மாவட்டம், பெரியார் மாவட்டம். அதிலும் குறிப்பாக, நாங்கள் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய 'எலவுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி' தமிழ்நாட்டிலேயே சிறந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாக இருந்து இன்றைக்கு அகில இந்தியாவிலேயே 'சிறந்த வேளாண்மைக் கூட்டுறவு வங்கி' என்ற பரிசைப் பெற்றிருக்கிறது. அந்த அளவிற்கு வாங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதிலும், தொடர்ந்து கடன்கள் பெறுவதிலும், வைப்புத் தொகையை ஏராளமாக அந்த வங்கியில் செலுத்துவதிலும் அந்த வங்கி மிகச் சிறப்பான நிலையைப் பெற்றிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து தனியார் நிதி நிறுவனங்கள் இன்றைக்குப் போட்டி போட்டுக் கொண்டு புற்றீசல்களைப்போல தமிழ்நாட்டில் முளைத்து, நடுத்தர மக்களுடைய இரத்தத்தை உறிஞ்சுவதைப்போல, அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை வைப்புத் தொகை என்ற அடிப்படையில், அவர்களுக்கு ஏராளமான வட்டிகளையும், பரிசுப் பொருட்களையும், ஊக்கத் தொகையையும் வழங்குவதாக விளம்பரங்களைத் தந்து, கோடிக்கணக்கான மதிப்புள்ள பொருட்களும், பணமும இன்றைக்கு அந்தத் தனியார் நிதி நிறுவனங்களில் சிக்கிக் கொண்டிருக்கின்றன. அதனால் தமிழகத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தத் தனியார் நிதி நிறுவனங்கள் தங்களை ஏமாற்றிவிட்டன என்பதை உணர்ந்த பிறகுதான் இன்றைக்குப் பாதுகாப்பான வங்கிகளில் பணத்தை டெபாசிட் செய்யவேண்டுமென்ற உணர்வு மக்களிடையே ஏற்பட்டு, அந்த அடிப்படையில் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவு வங்கிகளில் தங்களுடைய பணத்தை டெபாசிட் செய்வதிலே மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். எனவே அந்த வகையில் வருகின்ற வைப்புத் தொகையை பாதுகாப்பாக வைப்பதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இந்த அரசு பொறுப்புக்கு வந்த பிறகு, இந்தத் துறையில் நடைபெற்ற பல்வேறு ஊழல்கள், முறைகேடுகள், போன்றவைகளெல்லாம் களையப்பட்டு, இன்றைக்கு இந்தத் துறை மக்களுக்கு எந்த அளவுக்கு பணிகளை ஆற்றவேண்டுமோ அந்த அளவுக்குச் செய்து வருகிறது. அந்த அடிப்படையில் விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியிலே நிலவுகிற மனநிறைவான செய்தி என்னவென்றால், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, ஜப்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதுதான். ஆனால் கடந்த கால ஆட்சியில் விவசாயப் பெருங்குடி மக்கள் மீது ஜப்தி நடவடிக்கை என்ற பெயரில் எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதை இந்த மாமன்றம் பலமுறை விவாதித்து இருக்கிறது. விவசாயிகள் ஏதோ வேண்டாத தீய சக்தியைப் போல கருதப்பட்டு, கூட்டுறவுச் சங்க அதிகாரிகளும், காவல்துறை அதிகாரிகளும் கிராமங்களில் அத்துமீறி நுழைந்து பெண்கள் கையில் அணிந்திருந்த வளையல்களைக் கழற்றியும், காதிலே அணிந்திருந்த தோடுகளைப் பலவந்தமாகப் பிடுங்கியும் சென்ற காட்சிகளெல்லாம் கடந்த ஆட்சியில் நடைபெற்றன. ஆனால் இன்றைக்கு கருணையுள்ளம் கொண்ட நமது முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, விவசாயிகள் நிம்மதியாக விவசாயத் தொழிலில் ஈடுபட முடிகிறது. இப்போது அவர்கள் மீது எந்தவிதமான அடக்குமுறையும் கிடையாது. அவர்கள் அவமானப்படுத்தப்படுவதும் கிடையாது. ஜப்தி என்ற முறை அறவே நீக்கப்பட்டு, இன்றைக்கு அமைதி நிலவுகிற சூழ்நிலையை ஏற்படுத்திய நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

மாநிலத்திலே இன்றைக்கு 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த 23 வங்கிகளையும் 'ஏ, பி மற்றும் சி' என்று தரம் பிரித்திருக்கிறார்கள். 'ஏ,பி, மற்றும் சி' என்று தரம் பிரித்திருக்கிற இந்த வங்கிகளில் போதுமான அலுவலர்கள் இல்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட பதவிகளை நிரப்புவதற்கு என்ன முறையைக் கையாண்டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஒரு பதவிக்கு 2 லட்ச ரூபாயிலிருந்து 5 லட்ச ரூபாய் வரை கையூட்டுப் பெற்றுக் கொண்டு அது மத்திய கூட்டுறவு வங்கியாக இருந்தாலும் அல்லது வேறு எதுவாக இருந்தாலும் ஆட்களை

நியமித்தார்கள். 5 லட்ச ரூபாய் வரை லஞ்சம் கொடுத்துவிட்டு, மத்திய கூட்டுறவு வங்கியிலே, அந்தப் பணியிலே ஒருவர் அமர்கிறார் என்றால், அவர் போட்ட முதலை வட்டியோடு எடுப்பதற்குத்தான் முதலில் முயற்சி செய்வார். எனவே இதன் காரணமாக ஊழல்களும், முறைகேடுகளும் நடந்தன. இன்றைக்கு ஏராளமான நடுத்தர மக்கள் நம்முடைய கூட்டுறவு வங்கிகளை நாடி வருகிற காரணத்தால், மற்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு பணியாளர்களைத் தேர்வு செய்கிற நேரத்தில் எந்த அளவு விழிப்புணர்வுடன், கல்வித் தகுதி, கம்ப்யூட்டர் பயிற்சி, கூட்டுறவு பயிற்சி போன்றவற்றில் எல்லாம் தகுதியும், தேர்ச்சியும் உடையவர்களைத் தேர்வு செய்வதைப்போன்று, மிகுந்த எச்சரிக்கையுடன், உன்னிப்பாக இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கும் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தினால், இந்தியாவில் இருக்கின்ற தேசியமயமாக்கப்பட்ட மற்றும் ஷெட்டியூல்டு வங்கிகளைவிட மிக உயர்ந்த நிலையில் மத்திய, மாநில கூட்டுறவு வங்கிகள் நிச்சயமாகச் செயல்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மிக முக்கியமாக நாம் பேசுகின்ற ஒரு பிரச்சினை, உணவுப பொருள் பங்கீடு. அடிக்கடி இந்த உணவுப் பொருள் பங்கீடு சம்பந்தமாக விவாதித்திருக்கிறோம்.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் இந்த

ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்று சொன்னான் பாரதி. எனவே, தனி மனிதனுக்கு உணவு கொடுக்க வேண்டிய அதிகாரமும், பொறுப்பும் அரசின் கடமையாகும். எனவே இந்தக் கடமையை நல்ல முறையில் நிறைவேற்ற நியாய விலைக் கடைகளை ஒழுங்குபடுத்த வேண்டியது நம்முடைய கடமை.

**மாண்புமிகு மாற்றுத் தலைவவர்: (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். ஏனென்றால் நிறைய உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்:** பேசி முடித்துவிடுகிறேன். கடந்த ஆட்சிக் காலத்தில் நியாய விலைக் கடைகளில் என்னென்ன



முறைகேடுகள் நடைபெற்றன என்பதைப் பற்றியெல்லாம் நாம் விவாதித்திருக்கிறோம். முறைகேடுகளுக்கும், ஊழல்களுக்கும் காரணங்களாக மூன்று காரணங்களை அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் சொல்கிறார்கள். ஒன்று, நியாய விலைக் கடைகளுக்கு வருகின்ற உணவுப் பொருளின் எடை குறைவாக இருக்கிறது; இரண்டு, தினக்கூலி அடிப்படையில் பணியாற்றுகின்றவர்களின் சம்பளம் குறைவாக இருக்கிறது; மூன்று, அவர்களுக்கு மேலேயுள்ள அதிகாரிகள் மாதாமாதம் இவ்வளவு தொகை தங்களுக்குத் தர வேண்டுமென்று வலியுறுத்துவதாகச் சொல்கிறார்கள். இப்படியெல்லாம் கடந்த ஆட்சியிலே நடைபெற்றன. அந்த ஊழல்கள் இன்றைக்கு மெல்ல மெல்லக் குறைந்து வருகின்றன.

சில சமயம் சிவில் சப்ளைஸ் கிடங்கிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு வருகின்ற பொருள்கள் எடை குறைவாக வருகின்றன. அரிசியாக இருந்தாலும், சர்க்கரையாக இருந்தாலும் 80 அல்லது 100 கிலோ எடை கொண்ட மூட்டை 5 அல்லது 6 கிலோ எடை குறைவாகத்தான் வருகிறது. ஐ.ஓ.சி. போன்ற ஆயில் கம்பெனிகளில் டீசல், பெட்ரோல் போன்ற பொருள்களை வழங்குகின்றபோது, 10,000 லிட்டர் வழங்குகின்றார்கள் என்றால் ஒரு 10 லிட்டர் சேர்த்தே வழங்குவார்கள். பில்பரோஜ் மற்றும் லைன் லாஸ் போன்ற சேதாரங்கள் போக, குறிப்பிட்ட சரியான அளவு இலக்கை அடைய வேண்டுமெனபதற்காக, கூடுதலாக 10 அல்லது 15 லிட்டர் ஆயில் வழங்குவது வழக்கம். அதைப்போல, சிவில் சப்ளைஸ் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்குப் பொருள்களை அனுப்புகின்ற நேரத்தில் 100 கிலோ அரிசியோ, சர்க்கரையோ அனுப்புகிறபோது, கூடுதலாக 2 கிலோ அனுப்பினால் நிச்சயமாக அதைப்போன்ற அளவு குறைபாடுகளுக்கு வாய்ப்பு இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஊதியத்தின்ன உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசுக் கொறடா அவர்கள் இன்றைக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லை என்ற காரணத்தாலே, அவருடைய கோரிக்கை ஒன்றை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். நீலகிரி மாவட்டம் முழுவதும் குறிப்பாக காய்கறிகளும், பழங்களும் விளைகின்ற மாவட்டம், அங்கே உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப்பு

இல்லை. எனவே அங்கே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள், தாயகம் திரும்பிய தமிழர்கள், ஏழையெளிய மக்கள் போன்றவர்களுக்கு நியாய விலைக் கடைகளிலே உணவுப் பொருள்கள் வழங்குகின்றபோது, மற்ற மாவட்டங்களுக்கு வழங்குவதைக்காட்டிலும், தன்னுடைய மாவட்டத்திற்குச் சிறப்புச் சலுகை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அவர் தன்னுடைய கோரிக்கையைத் தெரிவிக்க விழைகிறார். எனவே, அவருடைய அந்தக் கோரிக்கையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்று, அந்தச் சலுகையை வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

*முற்பகல் 11-55*

நியாய விலைக் கடைகளைப் பொறுத்தவரையில், அங்குள்ள ஊழியர்களுடைய ஊதியம் உயர்த்தப்படுவது மட்டுமல்ல, இன்றைக்கு அரசு எடுத்திருக்கின்ற ஒரு மிகப் பெரிய முயற்சியை நான் பாராட்டியாக வேண்டும். பொது விநியோக முறை சீரமைக்கப்பட்டு, இதிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில், உணவுத் துறைச் செயலாளரைத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினர்கள், நுகர்வோர் அமைப்புகளின் ஒரு பிரதிநிதி மற்றும் மாநிலத்தில் பொது விநியோக முறையை நடத்தும் உயர் அதிகாரிகள் ஆகியோரைக் கொண்ட குழு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அந்தக் குழு கேரளா, ஆந்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பொது விநியோக முறை செயல்படும் விதத்தினை ஆராய்ந்து, தனது பரிந்துரைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தந்திருக்கிறது என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகள் அரசாங்கத்தினுடைய தீவிரப் பரிசீனையில் உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகள் என்ன என்பது கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. அவைகளையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு இல்லை. எனவே, அந்தக் குழு, பொது விநியோக முறையைச் சீரமைப்பதற்காகத் தந்திருக்கின்ற பரிந்துரைகளை அரசு நல்ல முறையிலே பரிசீலித்து, இந்தப் பொது விநியோக முறையிலே இருக்கின்ற சிற்சில குறைபாடுகளையும் களைந்து, இன்னும் சிறப்பான முறையிலே உணவுப் பொருள் பங்கீட்டை நிச்சயமாக நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.





அதேபோல, இன்றைக்கு மூன்று வகையான வண்ண அட்டைகளை அறிவித்திருப்பதை உண்மையிலே மாநில மக்கள் மனதார வரவேற்கிறார்கள். ஏழையெளிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டிய உணவுப் பொருட்கள், நடுத்தர வர்க்கத்தினருக்குச் சென்று சேர வேண்டிய உணவுப் பொருட்களெல்லாம் எங்கெங்கோ போய், அந்த ஏழை எளியவர்களுடைய கரங்களுக்குக் கிடைக்காத நிலையில், இவ்வாறு மூன்று வண்ண அட்டைகளை நீங்கள் அறிவித்திருப்பது, உள்ளபடியே ஏழையெளிய மக்களுக்கு அரசு தருகின்ற உணவுப் பொருட்கள் சென்று சேருவதற்கு நல்ல வாய்ப்பாக அமையும்.

அதேபோல, பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்காக வழிமுறைகளை எளிமைப்படுத்தியிருக்கிறீர்கள். உள்ளபடியே அதனை நான் மனமாரப் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியில் நான்கு பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென்பதற்காக, சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் பொதுமக்கள் கொடுத்த மனுக்களைக் கொடுத்து, அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட நேரத்தில், அவர்களும் நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால், அதற்கான அனுமதி வழங்குவதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. மாவட்டத்திலேயுள்ள அதிகாரிகள் பரிந்துரை செய்து, இங்கே இருக்கின்ற 'ரிஜிஸ்டரார்' வரை அந்தக் கோப்பு வந்து, அந்த 'ரிஜிஸ்ட்ரார்' அனுமதி தந்தால்தான் அந்தப் பகுதியிலே பகுதி நேர நியாய விலைக் கடைகளைத் திறக்க முடியும் என்ற ஒரு நிலையில், 6 மாத காலமாகியும், எங்களுக்கு அந்த அனுமதி கிடைக்கவில்லை. எனவே, இந்தச் சிக்கலை நீங்கள் புரிந்துகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அந்த அதிகாரத்தை வழங்கியிருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று.

எனவே, இதுபோன்று நடைமுறையில் இருக்கின்ற சிக்கல்களையும், சிரமங்களையும் நீக்குகின்ற அளவிலும், இந்தத் துறை மிகச் சிறப்பாகச் செயல்படவும், அதன் மூலம் ஏழையெளிய. மக்கள், குறிப்பாகக் கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்கள், நல்ல முறையிலே உணவுப் பொருட்களைப் பெறுவதற்குமான நல்ல வாய்ப்பினை நீங்கள் மேலும் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதனை வரவேற்று, அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இர்ரமன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பதே ஒரு அரசினுடைய தலையாய கொள்கையாக இருக்க வேண்டும். அந்த வகையிலே, முக்கியமான மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி கூறுகிறேன்.

பொதுவாக மனித உடலிலே அனைத்துப் பாகங்களுக்கும் இரத்தத்தை பாய்ச்சுவது இருதயம். அதைப்போல, ஒரு ஆட்சிக்கு நல்ல நீட்டிப்பையும், ஆயுளையும் கொடுப்பது, பி.டி.எஸ். என்று சொல்லப்படுகின்ற இந்த பொது விநியோக முறை. இதிலே பெறுகின்ற வெற்றிதான், ஒரு அரசினுடைய வெற்றியாக இருக்க முடியும்.

அரசு கொடுத்திருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். தேசிய செயல்முறை பொருளாதார ஆய்வுக்குழு, தன்னுடைய அறிக்கையிலே தமிழ்நாட்டில், கிராமப்புறங்களில், இந்த பி.டி.எஸ். மூலம் 83 சதவிகிதம் பேர் பயனடைகிறார்கள் என்றும், தேசிய அளவிலே 36 சதவிகிதம் பேர் பயனடைகிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது. உண்மையிலே இது சாதனைதான். ஆனால், சாதனை என்பதை நாம் ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்று சொன்னால், கிராமப்புறங்களிலே நூற்றுக்கு 83 பேர் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள் என்றால், அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படவேண்டும்: எந்த ஒரு குறைபாடுமின்றி செயல்பட வேண்டும் என்பதிலே அரசு மிகுந்த எச்சரிகைகயோடு இருக்க வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

பொதுவாக, அரசுக்கும், அரிசிக்கும் நிறைய சம்பந்தம் உள்ளது. மக்களுக்கு பயன்படுகிற அடிப்படை பொருள்களான அரிசி வழங்குவதில், ஏதாவது தடங்கல் ஏற்பட்டால், அது நிச்சயமாக அரசின்மீது விளைவுகளை ஏற்படுத்தும் என்பதிலே ஐயம் இல்லை. அந்தவகையிலே, அடிப்படை உணவுப் பொருள்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமாயில் போன்ற அத்தியாவசியப் பொருள்களை சப்ளை செய்வதிலே. குறிப்பாக ஏழைக் குடும்பங்களுக்குச் சப்ளை செய்வதிலே அரசு மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். ஏதாவது ஒரு தவறு ஏற்பட்டாலும்கூட, அது பெரிய விளைவை ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



பொதுவாக, ஒரு ரேஷன் கார்டு என்னும்போது, அது எப்படி இருக்க வேண்டுமென்றால், அது ஒரு தனி மனிதனுடைய உடைமைபோல் இருக்க வேண்டும். அதை மார்வாடி கடையிலே அடகு வைத்து, அதன்மூலம் பொருள்களை வாங்க முடியும் என்கிற அளவுக்கு அதற்கு ஒரு மதிப்பு இருக்க வேண்டும். அந்தக் கார்டு இருந்தால், இந்த இந்தப் பொருள்களைப் பெறலாம்; குடும்பத்தை எளிதாக நடத்தலாம் என்ற உணர்வு, அந்த மதிப்பு அந்தக் கார்டுக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அந்த மதிப்பு, எந்த நிலையிலேயும் கெடாமல் பாதுகாக்க வேண்டியது, நல்ல ஆட்சி தரக்கூடிய ஒரு அரசினுடைய தலையாய கடமை என்பதை நான் மறுபடியும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நேற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் பேசும்போதுகூட, முதலமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். உறுப்பினர், ஒரு நபருக்கு 4 கிலோ வீதம் வழங்கப்படுகிற அரிசி, அதிகபட்சம் 20 கிலோவாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். ஒரு யூனிட் என்பது, ஒரு நபர் என்று இருப்பதைவிட, இப்போது இருக்கின்ற முறையிலே, ஒரு யூனிட் என்பதை. ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு நபருக்கு 4 கிலோ என்பதை விட, ஒரு குடும்பம் என்பதை ஒரு அலகாகக் கருதி, ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ என்பது, குறைந்தபட்சமாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நான் தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக விடுக்க விரும்புகிறேன்.

அதேபோல், இப்போது நடைமுறையிலே இருக்கிற அட்டையை மாற்றுவதிலே அரசு முனைப்பாக இருக்கிறது. மூன்று விதமான வண்ணங்களைக் கொண்ட அட்டைகள் வழங்குவதிலே அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்தி வருகிறது. இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அட்டைகளை மாற்றும்போது, கொடுக்கின்ற அந்த விண்ணப்பங்களைப் பெறுவதிலே, மக்கள் மிகவும் அவதியுறுகிறார்கள் என்ற உண்மையை நான் அரசுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக, நியாய விலைக் கடைகளில் முகப்பிலே பார்த்தால், கூட்டங்கூட்டமாக, அந்த விண்ணப்பங்களைப் பெறுவதிலே, போட்டிக் போட்டுக் கொண்டு, முந்தியடித்துக் கொண்டு செல்வதிலே, அவர்கள் சிரமப்பட்டு அவதியுறுகிறார்கள். இந்த நிலைமைகள் மாறவேண்டும். அந்த 'ஃபார'ங்களை நாம்

[ டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ] [1997 மார்ச் 26

அவரவர்களுடைய வீடுகளிலேயே தரவேண்டும். எப்படி வாக்கெடுப்பின்போது, ஓட்டுச் சீட்டுகளை 'எனுமரேட்' செய்து வழங்குகிறோமோ, அதே முறையை நாம் கடைப்பிடிக்க வேண்டும். அதற்குத் தேவைப்பட்டால், ஆசிரியப் பெருமக்களைக்கூட நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, அந்த 'ஃபாரம்'களைத் தருவது, விண்ணப்பத் தாள்களைத் தருவது ஆகியவற்றை மிக எளிதான காரியமாக மாற்றி, அவர்களுடைய வீட்டு முகப்பிலேயே, அவர்களுடைய வீட்டு வாசலிலேயே தந்தால், அது ஒருவிதத்திலே மக்களுடைய நலனைப் பாதுகாக்கும்; இன்னொரு விதத்திலே அரசினுடை நலனையும் பாதுகாக்கும். ஏனென்று சொன்னால், அந்த வீட்டிலே போய்ப் பார்க்கும்போது, அந்த வீட்டிலே அந்தக் குடும்பம் இருக்கிறதா என்பதை நாம் உறுதி செய்துகொள்ள முடியும். ஆக, அந்தவகையிலே, இரண்டு விதமான நன்மைகள் இதிலே இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, என்னுடைய நண்பர் ஒருவர் - சிறந்த நிர்வாகி என்று பெயர் பெற்றவர்—சொல்வார்: ஒரு வீட்டிலே சென்று பார்க்கும்போது, அந்த வீட்டிலே இரண்டு குடும்பங்கள் இருக்கின்றனவா; மூன்று குடும்பங்கள் இருக்கின்றனவா என்பதைக் கணக்குப் பார்க்க வேண்டுமானால், அங்கே இருக்கிற அடுப்பைப் பாருங்கள்; அது உண்மையைச் சொல்லிவிடும் என்று சொல்வார். அந்த வகையிலே, ஒரு கூட்டுக் குடும்பம் இருக்கக்கூடிய வீட்டில் செல்லும்போது, அங்கு இருக்கிற அடுப்புகளை எண்ணிப் பார்த்தால், நிச்சயமாக அங்கே இருக்கிற குடும்பங்களின் எண்ணிக்கை தெரிய வரும். அது போலி ரேஷன் கார்டுகளை மீட்க நிச்சயமாக உதவும். இந்தக் கருத்தினை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, ஒரு வாசனை வரக்கூடிய அரிசி என்றால், அது ரேஷன் கடை அரிசியா என்று கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறது. பழுப்பு நிறமடைந்து, முகர்ந்து பார்த்தாலே ஒரு வாசனை வந்தால், அது ரேஷன் கடை அரிசி என்ற ஒரு அடையாளம் கூட இருக்கிறது. இந்த நிலைமையை அரசு ஆராய்ந்து, செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெருத்த அளவிலே சோதனை செய்து, சேமிப்பு செய்து, அவற்றை வழங்குவதிலே சிரமங்கள் சில இருக்கலாம். இருந்தாலும்கூட, சாதாரண அங்காடியிலே கிடைக்கின்ற அரிசியின் தரத்தையொட்டி, நம்முடைய நியாயவிலைக் கடைகளிலே வழங்கப்படுகிற அரிசி இருக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே சில



1997 மார்ச் 26 ] [ டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ]

வியாபார நுணுக்கங்கள்கூட இருப்பதாகச் சொல்கிறார்கள். 'பாலிஷ்' செய்தால், அதனுடைய குவாலிட்டி—அதனுடைய எடை—குறைந்து போய்விடுகிறது.

*பிற்பகல் 12-05.*

அதனால்தான் அந்தமாதிரி பழுப்புநிற அரிசியை நாம் பெறுகிறோம் என்று சொல்லுகிறார்கள். அதை அரசு கவனித்து வியாபார ஸ்தாபனங்களில் கிடைக்கக்கூடிய அரிசியைப் போன்று தரமான அரிசியை நியாயவிலைக் கடைகளில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, சேமிப்புக் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்குச் செல்கிற வழிகளிலே கடத்தல் என்பது சாதாரணமாக நடக்கின்ற ஒன்றாகச் சொல்லப்படுகிறது. சிறந்த முறையில் தையல் போட்டு பாதுகாக்கப்பட்ட மூட்டைகளாகக் கொடுத்தால்கூட அந்த மூட்டைகளையெல்லாம் களவாடக்கூடிய அளவிலே நுணுக்கங்களை சிலபேர் கற்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தக் கருத்தையும் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவாக எல்லாத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. ஆனால் இந்தக் கூட்டுறவுத் துறையில் மட்டும் பழைய நிர்வாகமே, பழைய அதிகாரிகளே நீடிப்பதாகச் சொல்லப்படுகிறது. நிச்சயமாக ஒரு மாற்றம் வரவேண்டும். அப்படி மாற்றம் வந்தால்தான் அவர்களுடைய மனதிலும் மாற்றம் வரும். பழைய நிர்வாகமே நடப்பதால் அவர்கள் செய்த தவறுகளையெல்லாம் அவர்கள் மறந்துவிடுவார்களென்பது நினைப்பதற்கில்லை. எனவே அந்த நிர்வாகத்தை, மாற்றி, ஒரு புதிய நிர்வாகத்தை, ஒரு புதிய சிந்தனையுடைய நிர்வாகத்தை, குறிப்பாக இந்தத் துறைக்குத் தரவேண்டும். கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஒயின் போன்ற மதுபானங்களையும் எடுத்து விற்கிறார்கள். ஒருவேளை அவர்கள் இலாபம் கருதி அதை அந்தக் கூட்டுறவுக் கடைகளில் வைத்து விற்றாலும்கூட, அவர்களுடைய கவனம் எல்லாம் இதன்பால் செல்வதால் அத்தியாவசியப் பொருட்களின்மீது இருந்த கவனம் குறைகிறது என்ற உண்மை நிலையை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்த பி.சி.பி. அதாவது பிரைவேட் கோ-ஆப்பரேட்டிவ் பேங்க்ஸ் என்று சொல்லப்படுகிற அந்தக் கூட்டுறவுக் கடைகளுக்கு ஒயின் ஷாப் வைக்கின்ற உரிமத்தைத் தருவதிலே அரசு கொஞ்சம் கண்டிப்புக் காட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக எரிபொருள் என்பது வாழ்வினுடைய அடிப்படைத் தேவையான ஒன்று. முதலிலே நாம் விறகை எரித்தோம், பிறகு கெரசினைக் கொண்டு எரித்தோம். இப்போது கேஸைக் கொண்டுதான் எரிக்கிறோம். பல்வேறு எரிபொருட்களை நாம் பயன்படுத்தினாலும், அதில் முக்கியமான ஒன்றான எல்.பி.ஜி. என்று சொல்லப்படுகிற அந்த கேஸை பொது விநியோக முறை திட்டத்தின்கீழ் கொண்டு வரவேண்டும் என்று இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தனியார்களுக்கு கொடுக்கப்படுகின்ற அந்த எல்.பி.ஜி. உரிமை, அந்த கேஸ் விற்பனை செய்யும் உரிமை, நம்முடைய நியாயவிலைக் கடைகளுக்குக் கொடுக்கப்பட்டால், நிச்சயமாக ஒரு சரியான நிர்வாகத்தை, மக்களுக்குப் பயன்படுகிற நிர்வாகத்தை நாம் அமைத்துக்கொள்ளலாம். நமது அரசு மத்திய அரசிடம் இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த சமையல் கேஸ் விற்பனை செய்யும் உரிமையை, விநியோகிக்கும் உரிமையை கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு வழ்ங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக அத்தியாவசியப் பொருட்களைப் பொறுத்தவரையில் ஆண்களைவிட பெண்கள் தான் அதிலே அதிகமாகக் கவலை கொள்பவர்கள். ஆகவே எல்லா கூட்டுறவு அங்காடிகளிலும் விற்பனையாளர்களாக பெண்களை நியமிக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு வகுக்க வேண்டும். பெண்களை நியமித்தால் நிச்சயமாக முறைகேடுகள் குறையும். அதோடு குடும்பத் தலைவி என்ற ஸ்தானத்தில் அவர்கள் இருப்பதால் இந்த அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதிலே இருக்கும் சிரமங்களை உணர்ந்திருப்பார்கள். ஆகவே பெண்களை விற்பனையாளர்களாக போடக்கூடிய நிலைமையை அரசு உருவாக்கவேண்டும். மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வழங்கப்படுகிற தொகுப்பிலே கோதுமையின் அளவு குறைந்திருக்கிறது என்று குறிப்பிலே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த நிலைமை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். அரிசிக்குப் பதிலாக கோதுமையை உட்கொள்வதன் மூலம் பல வியாதிகளை நாம் தடுக்க முடியும். எனவே கோதுமை உண்ணும் பழக்கத்தை மக்களிடையே வலியுறுத்த வேண்டும். இந்த நியாயவிலைக் கடைகளில் கொடுக்கப்படுகிற கோதுமையின் அளவை அதிகரிக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலமாக ஒரு சிறந்த ஆரோக்கியத்தை மக்களிடையே உண்டுபண்ணமுடியும் என்ற நம்பிக்கையை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.





பாமாயில் என்பது விசேஷ தினங்களிலே வருடத்திற்கு 2 அல்லது 3 தினங்களில் மட்டும்தான் வழங்கப்படுகிறது. நேற்றைக்குக்கூட மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டிலேயே பாமாயிலை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே அந்தப் பாமாயிலை விரைவாக.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் ஒரே நிமிடத்தில் உரையை முடித்து விட வேண்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பாமாயிலை முறைப்படி எல்லா மாதங்களிலும் வழங்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். பொதுவாக 2 கோடி ரூபாய்க்கு மேல் வருமானமுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகாரிகளாக எம்.டி.யை நியமித்து உத்தரவு வழங்கப்பட்டது. அதாவது நிர்வாக இயக்குநர்களாக அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். முறைப்படி தேர்தல்கள் நடத்தப்பட்டு தலைவர்கள் இன்றைக்கு வந்த பிறகும் அவர்களே நீடித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி நீடிக்கக்கூடாது என்று தலைவர் சொல்லும்பட்சத்தில் அவர்கள் விலக மறுக்கிறார்கள். எம்.டி.யை எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தை கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்குமானால் உங்கள் சங்கத்தினுடைய உரிமையை நான் ஏன் பறிக்கக்கூடாது என்று ஜே.ஆர். நோட்டீஸ் தருகிறார். இதற்காக திருச்சியிலேகூட ஒரு மாநாடு நடத்தப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-10

ஆகவே முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கின்ற பட்சத்திலே அவர்களுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட நிர்வாக இயக்குநர்களை வாபஸ் பெறவேண்டும். அப்படிச் செய்தால் ஜனநாயக நெறிமுறைக்கு நாம் மதிப்பு கொடுத்ததாக இருக்கும். ஆகவே இந்த நிலைமையை அரசு மாற்ற வேண்டும்.

பொதுவாக, பொது விநியோகத் திட்டத்திலே பல குறைகள் இருப்பதாக பல்வேறு நேரங்களில் மக்கள் சொல்லுகிறார்கள். அந்தப் பணியாளர்களை கண்காணிக்க மாவட்டந்தோறும், அல்லது கடைகள்தோறும் கண்காணிப்புக் குழுக்களை அரசு நியமிக்க வேண்டும். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உள்ளாட்சி மன்றப் பொறுப்பாளர்கள், 5 ஆயிரம் ஓட்டுக்கள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட

கவுன்சிலர்களும், 50 ஆயிரம் வாக்குகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கவலைப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுடைய சேவையைப் பயன்படுத்தி, அங்கே இருக்கின்ற உள்ளாட்சி மன்றத் தலைவர்களது சேவையைப் பயன்படுத்தி சிறந்த கண்காணிப்புக் குழுக்களை ஒவ்வொரு கடைக்கும் அரசு நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி நியமிக்கும்போது அவர்களுக்கு தகுந்த அதிகாரத்தையும் வழங்கவேண்டும். விஜிலென்ஸ் கமிட்டி என்று போட்டால் மட்டும் போதாது. அவர்களுக்கு அதற்குண்டான சக்தியையும் அதிகாரத்தையும் வழங்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, கூட்டுறவு அங்காடிகளிலே மிகச் சிறப்பான பெயர் பெற்றிருக்கின்ற, சிறப்பாக என்றால் பாப்புலராக இருக்கின்ற காமதேனு, கற்பகம், சிந்தாமணி போன்ற கடைகளில் இருக்கின்ற பொருட்கள் எல்லாம் விலை அதிகமானவை என்ற ஒரு உணர்வு மக்களிடையே இருக்கிறது. அதற்கு என்ன காரணம், யார் காரணம் என்பதைக் கண்டறிந்து அதற்குண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, மாதர் சங்கங்கள் மற்றும் டோக்ரா போன்ற திட்டங்களின் கீழ் பணிபுரியும் பெண்களை முழுமையாகப் பயன்படுத்தி இந்தப் பொது விநியோக முறையைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும். பொதுவிநியோக முறையைச் சிறப்பாகச் செயல்படுத்தினால் அதுவே இந்த அரசுக்கு பெரும் வெற்றியாக அமையும். எந்த நேரத்திலும், எந்த காலத்திலும் அரிசியினுடைய விலையை ஏற்றாமல் இருந்ததுதான் காலம் சென்ற தமிழக முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெற்றிக்குக் காரணமாகும் என்று பலபேர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படை உண்மையின்பால் கவனம் செலுத்தி, நம்முடைய அரசு, மக்களுடைய அரசாக இருக்கின்ற இந்த அரசு மக்களுக்கு சிறப்பாக பொது விநியோக முறையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து Primary Co-operative Societies என்று சொல்லப்படுகிற, கூட்டுறவு நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில் அந்தக் கடைகளில் பணிசெய்கின்ற நபர்களுக்குக்



கொடுக்கப்படும் சம்பளம் அல்லது கமிஷன் அங்கே வருகின்ற இலாபத்தை ஒட்டித்தான் தரப்படுகிறது. எனவே அவர்களுக்கு வழங்கப்படுகிற தரகுப் பணம், அல்லது தேவைப் பணத்தை அதிகமாக்கிக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்வு வளம்பெறும் என்ற கருத்தை இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் இங்கே ஒன்றை வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகள் கொடுக்கின்ற புள்ளிவிவரங்களை மட்டும் நம்பி இந்த அரசு செயல்படக்கூடாது. ஏனென்றால் யதார்த்த நிலைமையை உணர்ந்து அரசுக்குச் சொல்லக்கூடிய சக்தி மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது. எந்த நேரத்திலும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள், மாவட்ட உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் என்று பலர் இருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய வலிமையைப் பயன்படுத்தி ஒரு வளமான தமிழகத்தை, ஒரு வளமான நிலையை இந்த அரசு செய்ய வேண்டும், தமிழகத்தில் இந்த பொது விநியோக முறையைச் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே உணவு மற்றும் கூட்டுறவு மானியங்களின் மீது என்னுடைய கருத்துக்களை வைத்திட அனுமதி கொடுத்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நான் இங்கே ஒரு சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

'உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம்' ஆகிய மூன்றுக்கும் உத்தரவாதம் செய்ய வேண்டியதுதான் ஒரு நாட்டை ஆளும் அரசினுடைய கடமையாகும். அந்த அடிப்படையில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த உணவு பற்றிய மானியத்தில் நான் என்னுடைய கருத்துக்களை வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12-15

இது ஒரு மாற்றுக் கருத்து என்று கூடச் சொல்லலாம். இன்னும் சொல்லப்போனால், அது அமைச்சர் அவர்களுக்கு, சுமையைக் குறைக்கக்கூடிய ஒரு யோசனை என்றும் கூட எடுத்துக் கொள்ளலாம். நாங்கள், பொது நிறுவனங்கள் குழுவினுடைய சார்பாக, சமீபத்தில் கர்நாடகம் மற்றும் மகாராஷ்டிரம் உட்பட பல மாநிலங்களுக்குச் சென்று வந்தோம். அந்த மாநிலங்களிலே, கண்டறிந்த, கேட்டறிந்த, செய்திகளினுடைய அடிப்படையில், என்னுடைய கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக உணவுப் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சொல்கிறேன். இது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமன் அவர்கள் கூட ஒரு சில கருத்துக்களைச் சுட்டிக் காட்டினார்கள். ஆனால், என்னுடைய கருத்தானது தமிழகத்திற்கு சற்று வித்தியாசமானது. பொதுவாக பல்வேறு பழக்க வழக்கங்கள் எல்லாம் எப்படி கடந்த காலங்களிலே தேய்ந்து போனதோ அது போல உணவுப் பழக்க வழக்கங்களும் கூட தேய்ந்து விட்டன. தமிழகத்திற்கும், கர்நாடகத்திற்கும் மற்றும் ஆந்திராவிற்கும் உரிய ஒரு தானியமாக விளங்கிய, ராகி என்று ஏழை எளிய மக்களால் சொல்லப்படுகிற கேழ்வரகு என்ற ஒரு அரிய உணவு வகை, இன்று தமிழகத்திலே காணாமல் போய்விட்டது. ஆனால், அருகாமையில், காவிரி பொங்கி வழியக்கூடிய கர்நாடகாவின் தென் மாநிலத்தில் ராகி தான் ஒரு மிகப் பிரதான உணவாக அங்கே சொல்லப்படுகிறது. ஆனால், தமிழகத்திலே இது ஏழை எளிய மக்களுடைய பொருளாகக் கருதப்படுகிறது. கர்நாடகாவிலே அதுதான் பணக்காரர்களுடைய உணவாகக்கூட இருக்கின்றது. அதன் காரணமாக, அங்கே சர்க்கரை வியாதி குறைந்திருக்கிறது. கொழுப்புச் சத்துக்களினால், பாதிக்கப்படக்கூடிய இதயம் சம்பந்தப்பட்ட வியாதிகள் கூட இதனால் வருவது கிடையாது என்ற தகவல்கள் எல்லாம் வந்திருக்கின்றன. எனவே, நாமும் கூட இங்கே, குறிப்பாக மழை குறைவாக இருக்கக்கூடிய, நீர்ப் பற்றாக்குறையாக இருக்கக்கூடிய இந்த மாநிலத்திலேயும், அது போன்ற உணவுப் பழக்க வழக்கங்களை, மக்கள் மத்தியிலே பரப்பவும், வசதி படைத்தவர்கள் கூட அதனைப் பயன்படுத்தவும், ஒரு விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதுவரையிலும் காத்து இருக்க முடியாது. இங்கே அரிசிக்கு பழக்கப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். மேலும், இங்கே ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கப்படக் கூடிய அரிசியினுடைய அளவு குறைந்தபட்சம் 12



கிலோ என்றும் அதிக பட்சம் 20 கிலோ என்றும் அறிவித்திருக்கிறார்கள். நான், வேண்டிக்கொள்வது, அந்த குறைந்தபட்சமே 20 கிலோவாக இருக்கவேண்டும். ஏனென்றால், வறுமைக்கோட்டிற்குக் கீழே; ஏழை எளிய கூலித் தொழிலாளர்களும், விவசாயத் தொழிலாளர்களும், எந்தவிதமான வேலைவாய்ப்பு உத்தரவாதமும் இல்லாமல், ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு யூனிட் அளவு என்பதனை அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான சமநிலையை நாம் அடைய முடியும். எனவே, இது போன்ற கருத்தினை ஏற்றுக்கொண்டு குறைந்தபட்சம் 20 கிலோ என்ற அடிப்படையிலே நீங்கள் அரிசியினை வழங்கவேண்டுமாய் இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவுத் துறையில், நியாய விலைக் கடைகளில் ஊழியர்கள் தவறு செய்கிறார்கள் என்று எல்லோரும் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள். கூட்டுறவுத் துறையிலே மேல்மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையிலும் ஊழல்மயமாகி, கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த அளவிற்கு இப்போது அங்கு ஊழல் இல்லாவிட்டாலும், அரசியல்வாதிகளினுடைய தலையீடு இருக்கின்ற வரையில். அங்கே ஊழலை நிறுத்த முடியாது. எனவே, மொத்தமாகக் கூட்டுறவு பண்டகசாலைகளில் அரசியல் வாதிகளினுடைய தலையீடு இல்லாமல் இருக்க, நான் இந்த மாமன்றத்தில் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் அங்கே ஊழியர்கள் மத்தியிலே, சொல்லப்படக்கூடிய கருத்து என்னவென்றால், "நாங்கள் பல ஆண்டுகளாக வேலை செய்கின்றோம், ஆனால் நிரந்தரமாக்கப்படவில்லை" என்று சொல்லுகின்றார்கள். குறிப்பாக, அமுதம் பண்டகசாலை அல்லது சிவில் சப்ளைஸ் போன்ற மற்ற கூட்டுறவுக் கடைகளிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கும் சமமான ஊதியம் அங்கே வழங்கப்படுவதில்லை.

பிற்பகல் 12-20

குறிப்பாக, சென்னையிலே இருக்கக்கூடிய டி.யு.சி.எஸ்.—Triplicane Urban Co-operative Society போன்றவைகளில் எல்லாம் அதே வேலை, அதே பணியைச் செய்யக்கூடிய ஊழியர்களுக்கும் சமமான ஊதியம் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. பத்து ஆண்டு காலத்திற்கு மேலாகப் பணியில் இருக்கக்கூடியவர்களுக்கு இன்னும் அவர்களது பணி நிரந்தரமாக்கப்படவில்லை. எனவே, அவர்களை நிரந்தரமாக்குவதற்கும், அவர்களுக்கு இணையான சம்பளம், ஒட்டுமொத்தமாகக் கூட்டுறவுத் துறையிலே, கூட்டுறவுப்

பண்டகசாலையானாலும், சாதாரணக் கடைகளானாலும், ஒரே இணையான சம்பளத்தை வழங்குவதற்கும் இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் துறையில் ஊழல் உருவாவதே எடை போடுவதிலேதான். எனவே அதிகபட்சம், கொஞ்சம் செலவானாலும்கூட, தரமான பொருட்களை பாக்கெட்டுகளிலே போட்டுக் கொடுப்பதுதான் அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நில வள வங்கிகளில் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட கடன்களில் நிறைய மோசடி நடைபெற்றிருக்கிறது. ஐ.ஆர்.டி.பி. கடன்களை ஏழையெளிய மக்களுக்கு கொடுக்கின்றபோது உண்மையான 'அசெட்' கிரியேட் ஆகாமல், அதாவது அவர்களுக்கு ஆடுகள் வாங்க, மாடுகள் வாங்கக் கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகள் வாங்கப்படாமல் போலியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே 10 ஆண்டுக்காலம், 15 ஆண்டு காலத்திற்கு முன்னால் கடன் வாங்கியவர்கள் எல்லாம் இப்போது வட்டியோடு சேர்த்துக் கடனைக் கட்டக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, ஏழை மக்கள் மீது நடந்த இந்த மோசடியையும் கணக்கில்கொண்டு, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் வாங்கிய கடன்களை எல்லாம் ரத்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டிருக்க கூடிய விவசாயிகள் வாங்கிய கடன்களையும் ரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கூட்டுறவு வங்கிகளின் மூலமாக நகைகளின் மீது கொடுக்கப்படக்கூடிய கடன்களில் பெரிய மோசடி நடந்து கொண்டிருக்கிறது. ஏழை மக்கள் சென்றால் அங்கே அவர்களைப் புறந்தள்ளி விடுகிறார்கள். அதே சமயத்தில் இங்கே குறைந்த வட்டிக்கு வாங்கி, வெளியிலே அதிக வட்டிக்குவிட்டு கொள்ளையடிக்கக்கூடிய சேட்டுகளுக்கு மட்டும் இலட்சக்கணக்கிலே கடன்கள் கொடுக்கக்கூடிய சூழ்நிலை சென்னையிலே மட்டுமல்லாமல், எல்லா மாவட்டத் தலைநகரிலும் காணமுடிகிறது. எனவே, இந்த மோசடியைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கூட்டுறவுத் துறையிலே ஆயிரக்கணக்கான பேர் வேலைக்கு எடுக்கப்படுகிறார்கள். அதில் எந்த நடைமுறை



கடைப்பிடிக்கப்படுகிறது? ஏனென்றால், இட ஒதுக்கீடு என்பது இப்போது, சமீப காலமாகப் புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்றாக இருக்கிறது. கடந்த காலத்திலே வேண்டியவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு, இட ஒதுக்கீடு தத்துவமே புறக்கணிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக, தமிழகத்திலே அதற்கான நடைமுறையை உருவாக்கி, இட ஒதுக்கீடு புறக்கணிக்கப்படாத அளவில் வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதன் காரணமாகத்தான் வ.உ.சி. மாவட்டம், நெல்லை மாவட்டம் ஆகிய இடங்களில் சமீபத்திலே வேலைக்கு எடுக்கக்கூடிய, பணியில் அமர்த்தக்கூடிய அந்த நடைமுறைகூட, வழக்குமன்றத்திற்குச் சென்று நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குளறுபடிகள் எல்லாம் நடக்காமல் தடுக்க, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு மாணவர் இல்லங்களில் கொடுக்கக்கூடிய அரிசியின் தரம் மிகவும் மோசமாக உள்ளது. நான் பல அரசு மாணவர் இல்லங்களுக்குச் சென்று பார்த்தேன். மிக மிக மோசமாக இருக்கிறது. சூப்பர் பைன் என்பதற்குப் பதிலாக மிகவும் தரம் குறைவான அரிசி வழங்கப்படுகின்றது. அந்தக் குறைபாடுகளும் தடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகள் மீது பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்தபடியாக திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்.

*பிற்பகல் 12-25*

**திரு. பே.வே.ஸ்ரீ. வெங்கடேசன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவுத் துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது இம்மன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் உரித்தாக்குகிறேன்.

இன்றையதினம், நடைபெறுகின்ற இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கை விவாதத்தில், கூட்டுறவுத் துறையில் சில சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்ற என்னுடைய பணிவான கோரிக்கையை நான்

இந்த மாமன்றத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக கடந்த ஆட்சிக் காலத்திலே கூட்டுறவு வங்கிகளின் தேர்தல்களை நடத்தாமல் இருந்த அந்தக் காலகட்டத்தில், மக்கள் கூட்டுறவுத் துறை என்ற ஒன்று இருக்கிறது என்கிற நினைவே இல்லாமல் இருந்தனர். தானைத்தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, நீதிமன்றத்தினுடைய கோரிக்கையை ஏற்று கூட்டுறவுத் தேர்தல்களை முறையாக நடத்தி, நல்ல ஜனநாயகத்தை நிலைநாட்டியுள்ளார்கள். இதன் காரணமாக, இன்றைக்கு கிராமங்களில் கூட்டுறவு வங்கிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டத் தலைவர்களாக வருகை தந்திருக்கிறார்கள்.

கிராமங்களில் கூட்டுறவு வங்கிகளின் மூலமாக பல சலுகைகளை விவசாயிகள் பெறக்கூடிய இந்தக் காலகட்டத்தில், அங்கே பணியாற்றக்கூடியச் செயலாளர்களால், கிராம வங்கிகளில் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், அந்த வங்கிகளிலே செயலாளர்களாக இருப்பவர்கள், நிரந்தரமாக ஒரே வங்கியில் பணியாற்றிக்கொண்டிருப்பதால், ஊழல்கள் மலிவதற்கு, காரணமாக இருக்கின்றார்கள். ஒரு கிராம வங்கி எப்போது ஆரம்பிக்கப்பட்டதோ, அப்போதிலிருந்து, அதே வங்கியில் செயலாளராக இருக்கின்றார். அந்த வங்கியினுடைய நெளிவு சுளிவுகளை தெரிந்து கொண்டு, பாமர மக்களுடைய எண்ணத்தைப் புரிந்துகொண்டு அவர்களை ஏமாற்றுகின்ற வகையில், அந்தச் செயலாளர்கள் ஊழல் செய்யக்கூடியவர்களாக பணியாற்றுகிறார்கள். பினாமிகள் பெயரிலே வங்கிகளின் பணத்தை எடுக்கிறார்கள். பாமர மக்களிடம் எதற்காகவோ கையெழுத்து வாங்கிக்கொள்கிறார்கள். பின்னால் கடன் வசூல் செய்யும் போது, கடனை வாங்கவில்லை என்று கூறும் ஆதங்கம் கிராம மக்களிடத்தில் இருக்கிறது. அதற்குப் பின்னர் தீர விசாரித்தால், வங்கியினுடைய செயலாளரோ அல்லது வங்கியின் மேலதிகாரியாக இருக்கக்கூடிய தனி அலுவலரோ சேர்ந்து ஊழல் புரிந்திருக்கின்ற காரணத்தால்தான் என்று தெரிகிறது. ஒரு சில உதாரணங்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகாரப்பட்டி கிராம வங்கியில் கிட்டத்தட்ட 25 இலட்சம் ரூபாய் நகைக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே நகைகளே இல்லை. அது தற்போது போலீஸ் விசாரணையில் இருக்கிறது. அடுத்து குடமாண்டப்பட்டி கிராம வங்கியிலே நகைபேரில்





14 இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறார்கள். நகை இல்லாமல் கடன் கொடுத்ததைப் பற்றி விசாரணை மேற்கொண்டபோது, அந்தச் செயலாளர் நீதிமன்றத்திற்குச் சென்று தடை உத்தரவு பெற்று இருக்கிறார், விசாரணை கூடாது என்று. செயலாளர்கள் ஒரே வங்கியில் தொடர்ந்து பணியாற்றுவதுதான் இதற்குக் காரணம். ஆகவே கிராம வங்கியினுடைய செயலாளர்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வேறு வங்கிகளுக்கு மாற்றம் செய்ய வேண்டுமென்ற பணிவான கோரிக்கையை நான் அரசுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிராம வங்கிகளின் வைப்பு நிதி கொடுக்கின்றவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்கள் கேட்கின்ற கடன் தொகைகளை தாராளமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். கிராம வங்கிகள் குறிப்பாக விவசாயிகளுக்கு மாத்திரம்தான் கடன் வழங்குகிறது. வியாபாரத்திற்கும் கிராம வங்கிகள் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது, கடன் வழங்குகிறபோது, தொகுப்புக் கடன்களாக 10 பேர் 12 பேர் சேர்ந்தால்தான் கடன் கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையை மாற்றி உடனுக்குடன் கடன் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு விநியோகத் துறை, இந்த அரசு வந்த பின்னர், மிகவும் சீரான முறையிலே நடைபெறுகின்றது என்று கிராம மக்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு இருந்தாலும்கூட, உணவு விநியோகத் துறையிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு தற்போது கொடுக்கப்படுகின்ற சம்பளம் குறைவாக இருக்கின்ற சூழ்நிலையில், அவர்கள் திருடக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. அதுமாத்திரம் அல்ல கிடங்குகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற அரிசி மற்றும் விநியோகப் பொருட்கள் போன்றவற்றின் எடையை, கிடங்குகளிலேயே குறைத்துக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு 100 கிலோ கொண்ட மூட்டைக்கு குறைந்தது 6 கிலோ அல்லது 8 கிலோ குறைவாகக் கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. அதை அவர்கள் தட்டிக் கேட்டால், நான் கொடுக்கின்ற சரக்கைத்தான் நீ எடுத்துக்கொண்டு போக வேண்டும்; முடிந்தால் எடுத்துக்கொள்; இல்லாவிட்டால் விட்டுவிட்டு சென்றுவிடுங்கள் என்று மிரட்டக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அதையும் நீங்கள் சீர் செய்யவேண்டும்.

[ திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் ] [1997 மார்ச் 26 பிற்பகல் 12-30

இப்போது விநியோகிக்கின்ற முறை முழுசதவீதமாக இல்லாமல் 80, 85 சதவீதம்தான் விநியோகிக்கின்ற அளவுக்கு இருக்கின்றது. அதை முழுமையாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக விற்பனை சங்கத்திலே இப்போது வியாபாரம் செய்கின்றபோது அங்கே நம்முடைய அரசாங்கம் 3% விற்பனை வரியையும், 1% லெவியும் கொடுக்க வேண்டுமென்று கேட்பதாக சொல்கிறார்கள். இதனால் அந்த சங்கத்துக்கு ஒரு பகுதி நஷ்டம் ஏற்படுகின்றது. ஆகவே, அருள்கூர்ந்து அரசை நான் கேட்டுக்கொள்வது எல்லாம், விற்பனை சங்கத்திலே வாங்கப்படுகின்ற பொருட்களுக்கோ அல்லது விற்கப்படுகின்ற பொருட்களுக்கோ அந்த 1 சதவீதம் ரெகுலேட் மார்க்கெட்டிங் கமிட்டி கொடுக்கின்ற செஸ்ஸை நீக்க வேண்டும்; விற்பனை வரியையும் நீக்க வேண்டும். அதனால் பல விற்பனை சங்கங்கள் இலாபமாக நடக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படும் என்று நான் இந்த நேரத்திலே என்னுடைய கருத்தை வலியுறுத்துகின்றேன். நஷ்டம் ஏற்படக்கூடிய விற்பனை சங்கங்களுக்கு அரசின் துறை மூலம் பெட்ரோல் விநியோகிக்கின்ற ஒரு உரிமையையும், கேஸ் விநியோகிக்கின்ற ஒரு உரிமையையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் கெரசின் தனியாக பேரலிலே வைத்து விற்காமல், எப்படி பெட்ரோல் பங்க் மூலம் பெட்ரோல் விற்கின்றார்களோ, அதுபோல கெரசின் பங்க் ஆங்காங்கே வைத்து கெரசின் பங்க் மூலம் மண்ணெண்ணெயை விற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்ட மொத்த விற்பனை பண்டகசாலை இருப்பது போல, மாநிலத்தில் ஒரு காலத்திலே எல்லா இடங்களிலும் மொத்த விற்பனை பண்டகசாலைகள் இருந்தன. ஆனால், இடையிலே ஏனோ அந்த பண்டகசாலைகளுக்கு மட்டும் தேர்தல் நடத்தாமல் இருக்கின்ற காரணத்தால் அவை நலிந்து போய்விடக்கூடிய அளவிலே இன்றைக்கு இருக்கின்றன. ஒரு காலத்திலே கோவை சிந்தாமணி மொத்த விற்பனை பண்டகசாலையில் லைவர் இருந்த காரணத்தாலே லாபமாக நடைபெற்றது. ஆனா அதற்குப் பின்னால் வந்த, கடந்த கால ஆட்சியிலே தனியார் காலத்திலே அந்த மொத்த விற்பனை பண்டக சாலைகள் எல்லாம் நலிந்து போய்க் கொண்டிருக்கின்றன. ஏனென்றால் வியாபார நோக்கம் தெரியாத காரணத்தாலே. எந்தப் பொருட்கள் எந்த நேரத்தில் வாங்க வேண்டும் என்று அவர்களுக்குத் தெரியாத



1997 மார்ச் 26 ] [திரு. பே. வே. ஸ்ரீ. வெங்கடேசன் ]

ஒரு சூழ்நிலை; எந்தெந்தப் பொருட்கள் எந்தெந்தப் பட்டத்தில் விளையும் என்று தெரியாத ஒரு சூழ்நிலையில், அந்த வியாபாரப் பொருட்களை வாங்கக் கூடிய அளவுக்கு அவர்களுக்குத் தெரியாத சூழ்நிலையிலே, நஷ்டம் ஏற்படக்கூடிய காலக்கட்டத்திலே இருக்கின்றன. ஆகவே அவற்றைத் தெரிந்து கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் சில கடன்கள் கொடுக்க முடியாத சூழ்நிலையிலே அங்கே இருக்கின்ற அலுவலர்கள் பணியாற்றுகின்றார்கள். குறிப்பாக நம்முடைய அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்கு போய் சேரக்கூடிய அளவுக்கு தாட்கோ கடன்கள், ஐ.ஆர்.டி.பி. கடன்கள் போன்றவற்றை எல்லாம் வங்கிகள் மூலமாக கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி இருந்தாலும் கூட மற்ற வங்கிகள் கொடுக்கின்ற ஒரு உரிமையைக்கூட நம்முடைய மத்திய கூட்டுறவு வங்கி கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலையிலே அங்கே அதிகாரிகள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

நேற்றுக்கூட நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் மிகவும் வருத்தத்துடன் அந்த அதிகாரி மீது குற்றச்சாட்டை சொல்லி இருக்கின்றார்கள். நான் எவ்வளவு தூரம் சொல்லியும்கூட அந்த மத்திய வங்கியிலே பணியாற்றக்கூடிய செயலாளர் என்னுடைய கோரிக்கையை ஏற்காமல் கடன்கூட கொடுக்கமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றார் என்று பத்திரிகையிலே செய்தி வந்து இருக்கின்றது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் தர்மபுரி ம[illegible]த்தைப் பொறுத்தவரையில் அங்கே புழுங்கல் அரிசி சாப்பிட்டுப் [illegible]ப்படாதவர்கள்; அங்கே புழுங்கல் அரிசி விநியோகம் செய்கின்ற[illegible] தர்மபுரி மாவட்டம், சென்னை ஆகிய இரண்டிலும் பச்சை அரிசி சாப்பிடக்கூடிய அளவுக்கு இருக்கின்றார்கள். ஆகவே, அங்கே பச்சை அரிசி வழங்குவதற்கு உண்டான வாய்ப்பை நீங்கள் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற கடைகளில் வெறும் அரிசியும் மண்ணெண்ணயும்தான் விற்கிறார்களே தவிர நகரத்தில் விற்பது போன்று ரவை, கோதுமை, மைதா போன்ற உணவுப் பொருட்களையும் அங்கே

விற்க உரிமையை நீங்கள் வழங்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு இந்தத் துறையின் சார்பாக இங்கே நல்ல முறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக் கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு.

பிற்பகல் 12-35

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உணவு, நுகர்பொருள், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு முழுவதும் ஏறக்குறைய 23,125 நியாயவிலைக் கடைகளும்-கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலே 21,927 கடைகளும், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பிலே 1,198 கடைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்தக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளதைப் போல, வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவைப் போதுமான அளவுக்குத் தடையின்றிப் பெறுவது என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள பிறப்புரிமை -பர்த் ரைட்-ஆகும் என்று சொல்லியிருப்பதைப்போல, இந்தப் பிறப்புரிமையை நிறைவேற்றுகிற நோக்கத்தோடு இந்தக் கடைகளில் அத்தியாவசியமான பொருள்கள், ஏழை எளிய மக்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் அரசால் வழங்கப்படுகின்றன.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சுப்பராயன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கும், மீதமிருக்கின்ற ஏறக்குறைய 22 ஆயிரம் கூட்டுறவுச் சங்கக் கடைகளின் மொத்த பண்டக சாலைகள் போன்றவற்றில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கும், அவர்கள் பார்க்கிற வேலை ஒன்றுதான் என்றாலும், சம்பளத்திலே அவர்களிடையே இருக்கிற வித்தியாசத்தை, இரட்டை நிலையை நிச்சயமாகப் போக்க அரசு



முன்வரவேண்டுமென்று நானும் அவரோடு சேர்ந்து அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பிலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன். இவர்களுடைய அடிப்படைச் சம்பள வீதத்தை உயர்த்தித் தரவேண்டுமென்றும் நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அவர்கள் எல்லாம் சேர்ந்து போராட்டம் நடத்திய காலகட்டங்களில் அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே திரு. பெருமாள், திரு. குப்புசாமி போன்றவர்களும், இன்றைக்கு மத்திய அமைச்சராக இருக்கின்ற திரு. என்.வி.என். சோமு போன்றவர்களும், அன்றைக்கு 21-2-1996-லே உண்ணாவிரதம் இருந்தவர்களிடையே பேசுகின்றபோது, சம்பளம் உயர்த்திக் கொடுக்க, சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும் என்று அ.தி.மு.க. அரசு கூறுகிறது, இந்தச் சட்டியில் இல்லையென்றால் இருக்கின்ற சட்டியில் அகப்பையைப் போட்டு எடுக்கத்தான் நாங்கள் ஆட்சிக்கு வருவோம், வந்து அப்படி எடுத்துக் கொடுப்போம் என்றெல்லாம் அன்றைக்கு அவர்களுக்கு ஏற்கெனவே உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது. சொல்வதைச் செய்வோம் என்று அடிக்கடிச் சொல்கிற தி.மு.க. அரசு, அவர்களுக்குத் தந்திருக்கின்ற அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற விதத்திலே செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நாங்கள் வந்து பார்த்தோம். சட்டி காலியாகவே இருந்தது. நிரம்பிய பிறகு நிச்சயம் அகப்பையிலே வரும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே உத்தரவாதம் தந்துவிட்ட காரணத்தால் நிச்சயமாக அந்தப் பணியாளர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே இதிலே அந்த அடிப்படைச் சம்பள வித்தியாசம் இருக்கின்ற காரணத்தாலேயும் சம்பளம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலேயும் சில முறைகேடுகள், தவறுகள் நடக்க வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே இந்த ஊதிய உயர்வு கொடுப்பது என்பது இந்த நியாயவிலைக் கடைகள் முறையாக, நேர்மையாக நடக்க உதவியாக இருக்கும். இன்னொன்று, நியாயவிலைக் கடைகளைப் பொறுத்தவரையில், பொதுவாக, நான் தி.மு.க. என்று சொல்லவில்லை, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சிக்காரர்களும் எதிர்க்கட்சிக்காரர்களும்

போய், அவர்கள் நடத்தும் பொதுக்கூட்டங்களுக்கு நன்கொடை வாங்குவது, அல்லது குண்டர்கள் போய் மாமூல் வசூல் செய்வது என்பதெல்லாம் இந்த மாதிரி உள்ள 22,000 கடைகளில்தான் நடக்கிறது. ஒரு கடைக்கு 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று வைத்துக்கொண்டு பொதுக்கூட்டம் நடந்தால் போய்க் கேட்பதெல்லாம் நடக்கிறது. இதுமாதிரி, அது தனி அமைப்புக்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசியல் கட்சிகளாக இருந்தாலும் சரி, இவர்களுக்கு அவர்கள் டொனேஷன் கொடுக்கக்கூடாது. இந்தக் கடைகளிலேபோய் டொனேஷன் வாங்கக் கூடாது. அவர்களே சம்பளம் வாங்குவது குறைச்சல் என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே சென்று டொனேஷன் கேட்கிறபோது என்ன நடக்கிறதென்றால், முறைகேடுகள் நடக்கின்றன. நிச்சயமாக வெளியே விற்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த டொனேஷன் முறை, இந்த் முறைகேட்டுக்கு நிச்சயமாகக் காரணமாக இருக்கிறது. இப்படி யாராவது, அது எந்தக்கட்சி, ஆளும்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, யார் போய் கேட்டாலும் சரி, அப்படிக் கேட்பவர்கள்மீது ஊழியர்கள் புகார் செய்தால் உடனடியாக, நிச்சயமாக அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இது முறைகேடுகளைக் குறைப்பதற்கு நிச்சயமாக உதவும். தவறுகள் இல்லாமல் ஒழுங்காக அந்த நியாயவிலைக் கடைகள் நடைபெற உதவியாக இருக்கும்.

*பிற்பகல் 12-40*

இப்போது, ஒரு வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை, நியாயவிலைக் கடை இருக்கிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட குழு வெளி மாநிலங்களுக்கெல்லாம் சென்றுவந்து ஒரு ஊராட்சிக்கு ஒரு நியாயவிலைக் கடை இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். இது பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். அவர்களுக்கு வேண்டிய அடிப்படைப் பொருள்களை வாங்கிக்கொள்ள உதவியாக இருக்கும். எனவே கிராமப்புறங்களிலே ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஒரு நியாயவிலைக் கடை என்ற முறையிலே ஆரம்பிக்க அரசு முன்வர வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடும்ப அட்டைகள். ஏறக்குறைய 1 கோடியே 50 இலட்சம் குடும்ப அட்டைகள் இருக்கின்றன. நிச்சயமாக அதிகம்தான். ஜனத்தொகையை எடுத்துக்கொண்டாலும் சரி, வாக்காளர் எண்ணிக்கையின் அடிப்படையில் எடுத்துக் கொண்டாலும் சரி, ஒரு குடும்பத்திற்கு நான்கு என்று பார்த்தால்கூட 6, 7 கோடி வரவேண்டும்.



எனவே ஏறக்குறைய 20-லிருந்து 25 இலட்சம் போலி குடும்ப அட்டைகள் இருக்கலாம் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் போலி அட்டைகள் களையப்பட, நிறுத்தப்பட அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய 2 1/4 இலட்சம் டன் அரிசி நமக்கு தேவைப்படுகிறது. இதிலே மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து முன்னால் எல்லாம், நான் உணவு அமைச்சராக இருந்தபோதெல்லாம் ஏறக்குறைய நமக்கு 50,000 டன்கள்தான் தந்து வந்தது. ஆனால் அப்போது ஏறக்குறைய ஒரு லட்சம் டன்கள்தான் தேவைப்பட்டது. இப்போது குடும்ப அட்டைகளுடைய எண்ணிக்கையும் அதிகமாகியிருக்கிறது. ரேஷன் கடைகளிலே அரிசி வாங்குபவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. வெளி மார்க்கெட்டிலே விலை அதிகமாக இருக்கிற காரணத்தினாலே, மக்கள் நியாயவிலைக் கடைகளிலே அரிசி அதிகமாக வாங்குகின்றார்கள். இதிலே மத்திய அரசு தருகிற ஒதுக்கீட்டை அதிகரித்துத் தரவேண்டும் என்று நானும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வற்புறுத்துகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உங்களுக்கு 5 நிமிடம் தான் ஒதுக்கியுள்ளார்கள். மன்னித்துக்கொள்ள வேண்டும். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே. மாண்புமிகு பேரவைத் தலைவரே வந்திருக்கலாம் போல இருக்கிறது (சிரிப்பு). நான் அடிக்கடி சொல்வதுண்டு, 'நாற்காலிக்கு ஒரு விசேஷ சக்தி இருக்கிறது' என்று. யார் இருந்தாலும் அப்படி ஆரம்பித்து விடுவார்கள். எனவே, சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன் (சிரிப்பு). எனவே, மத்திய அரசு இந்த ஒதுக்கீட்டை நிச்சயமாக அதிகரித்துத்தர வேண்டுமென்று நானும் நிச்சயமாக வற்புறுத்துகிறேன். இதிலே, ஏறக்குறைய சராசரியாக மாதம் 1½ லட்சம் டன் மத்திய அரசு தருகிறது. இது தவிர நமக்கு ஏறக்குறைய 10 இலட்சம் டன் தேவைப்படும். இதை இப்போது ஏகபோகக் கொள்முதல் மூலமாக நாம் விவசாயிகளிடத்திலே இருந்து கொள்முதல் செய்ய வேண்டியிருக்கிறது. முதலிலே விவசாயிகள் நியாயவிலைக்

கடைகளிலேயும் அதாவது அரசாங்க நேரடி கொள்முதல் நிலையங்களிலேயும் விற்றார்கள். வெளிச் சந்தையிலேயும் விற்க முடிந்தது. இப்போது மழை இல்லை என்ற காரணத்தினால் ஏகபோகக் கொள்முதல் அமல்படுத்தப்பட்டு இருக்கிறது. இதிலே, விவசாயிகளையும் நீங்கள் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாதிரி இரட்டை விலையிலே அவர்கள் விற்கும்போது, விவசாயிகளுக்கு அதனாலே இலாபம் இருந்தது. இப்போது ஏகபோக கொள்முதல் செய்கின்ற காரணத்தினாலே விவசாயிகளுக்கு நிச்சயமாக அது பாதிப்புதான். எனவே, அவர்களுடைய உற்பத்திச் செலவு, உரம், பூச்சி மருந்து மற்றும் கூலி எல்லாம் சேர்த்தால் நிச்சயமாக விவசாயிகள் நஷ்டத்திலும், கஷ்டத்திலும் இருக்கவேண்டிய சூழ்நிலைதான் அவர்களுக்குத் தொடர்ச்சியாக ஏற்படுகிறது. எனவே, ஒரு குவிண்டாலுக்கு 40 ரூபாய் கூடுதலாக கொடுத்தீர்கள். இப்போது 50 ரூபாயாக அறிவித்திருக்கிறீர்கள். இன்னும் அதை அதிகரித்துத் தரவேண்டும், விவசாயிகளை காக்கின்ற விதத்திலே, விவசாயிகளுக்கு உதவுகிற விதத்திலே என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்திலே நான் நம்முடைய திரு. பழனிசாமி அவர்கள் சொல்லியதைப்போல குவிண்டாலுக்கு 100 ரூபாய் தரவேண்டும் என்கிறார் இல்லையென்றாலும் இரண்டுக்கும் இடையிலே, அதாவது 50-க்கும் 100-க்கும் இடையிலாவது கணிசமாக உயர்த்தித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-45*

இன்னொன்று, இந்த 3 அட்டை கொடுபபதிலே நிச்சயமாகக் குழப்பம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள்கூட மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள் என்று சொன்னார்கள். நிச்சயமாக மக்கள் பாராட்டவில்லை. நான் பல மாவட்டங்களில் சுற்றுப் பயணம் போகிறபோது இதைப்பற்றி பேசினால் மக்கள் எல்லாம் அதற்கு சிரிக்கவும், அரசை குறை சொல்லிப் பேசுகிறபோது கைதட்டவும் செய்கிறார்கள். இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்று சொன்னால் அதிருப்தி இருப்பதைத்தான் காட்டுகிறது. ஏற்கெனவே ஒருகார்டுதான் கொடுக்கப்பட்டது. இப்போது வறுமையின் நிறம் சிகப்பு, வளமையின் நிறம் பச்சை, இரண்டுக்கு இடையே மஞ்சள் என்றெல்லாம் கொடுக்கிறபோது, இந்த மூன்று விதமான அட்டைகளால் நிச்சயமாகக் குழப்பங்கள் ஏற்படும். (குறுக்கீடு)



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் பேசிய கூட்டங்களில் இந்த மூன்று அட்டைகள் கொடுக்கப்பட்ட விஷயங்கள் பற்றிப் பேசுகிறபோது மக்கள் சிரித்தார்கள் என்று சொன்னார். அங்கே திரண்டிருந்தவர்கள் எல்லாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களாகத்தான் இருப்பார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணா தி.மு.க.காரர்களும் இருந்தார்கள். பல இடங்களில் கம்யூனிஸ்ட் தோழர்களும் இருந்து கைதட்டினார்கள், பேச்சு கேட்க வந்தவர்கள். (சிரிப்பு).

**திரு. ஜி. பழனிசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, அப்படியெல்லாம் கம்யூனிஸ்ட்காரர்கள் எல்லாம் பார்த்து அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சிரித்தது என்ன காரணத்தால் என்று சொன்னால், இது மாதிரியாக ஒரு நல்ல திட்டம் வந்திருக்கிறபோது இவர் இப்படி பேசுகிறாரே என்று பார்த்து சிரித்து இருப்பார்கள். (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நல்லதை சொல்கிறோம், கேட்டால் கேளுங்கள் (சிரிப்பு) இல்லையென்றால் நீங்களும் தோழமைக் கட்சி என்பதால் உங்களுக்குக் கெட்ட பெயர் வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளுங்கள். எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. இதிலே என்னவென்றால், குடும்ப அட்டைகள் விண்ணப்பம் வழங்குகிறபோதே மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து, பல இடங்களில் சென்னையிலே பெரிய அடிதடியே நடந்தது. இப்போது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே அட்டைகள் வழங்குவதில் குழப்பம். இப்படி மூன்று விதமான அட்டைகள், நான் நினைக்கிறேன், இந்தியாவில் வேறு எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை. ஏதோ பக்கத்து மாநிலத்தில் 2 அட்டைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாற்றுத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பொதுக் கூட்டங்களில் பேசியதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. மூன்று அட்டைகளை வழங்கினால் முதலமைச்சர் அறையிலே வைத்து அழகு பார்க்கலாமே தவிர மக்களுக்கு அது பயன்படாது என்ற அளவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதாக செய்தி வந்திருக்கிறது. இந்த மூன்று அட்டை முறையை அனைத்து பத்திரிகையாளர்களும் வரவேற்று இருக்கிறார்கள். தினமணி உள்பட, துக்ளக் சோ உள்பட வரவேற்று இருக்கிறார்கள். இந்த மூன்று அட்டை முறையில் எந்தவிதமான குழப்பமும் ஏற்படுவதற்கு வழியில்லை. மத்திய அரசின் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கிற 38 சதவீதம் வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் — அதாவது வருடத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்கு குறைவாக இருக்கிறவர்களுக்கு ஒரு அட்டை என்றும், மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேலேயும் அதே நேரத்தில் வளமாக இருக்கின்றவர்கள், முழுமையாக விற்பனை வரி, வருமான வரி செலுத்துகின்றவர்களுக்கு என்று ஒரு அட்டையும், இடையிலே இருப்பவர்களுக்கு ஒரு அட்டை என்றும் மூன்று அட்டைகளை வைத்திருக்கிறோம். இதற்குக் காரணம் அரிசியின் உபயோகம் ஏழையெளிய மக்களுக்கு மட்டும் நல்லமுறையில் செல்ல வேண்டும் என்பதற்காகதான் இந்த மூன்று அட்டை முறை திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இடையிலே மஞ்சள் அட்டை வழங்குகிற நபர்கள் விவசாயிகளாக இருந்தால், 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் அல்லது கிராமப்புறங்களில் வியாபாரம் செய்பவர்கள், அவர்களுக்கு அரிசி தேவையில்லை என்றால் கூடுதலாக, ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதை விட, மண்ணெண்ணெய்யோ, சர்க்கரையோ வழங்கலாம் என்று அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததன் நோக்கம், அரிசியின் அளவை நாம் வெளிச் சந்தையிலிருந்து இங்கே கொண்டு வருவது மிகவும் சிரமமாக இருக்கிறது என்பதால் அதைக் குறைப்பதற்காகவும், அரசு மானியத்தைக் குறைப்பதற்காகவும் தான் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. அதிலேயும் நல்ல பலன் கிட்டியிருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் 17 லட்சம் அட்டைதாரர்களுக்கு...

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** அமைச்சர் அவர்கள் பதிலுரையில் இந்த விவரங்களைத் தெரிவிக்கலாம்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** நீங்கள் இருப்பீர்களோ இல்லையோ, தெரியாது. போய் விடுவீர்கள். (சிரிப்பு) 17 லட்சம் அட்டைகளில் வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள் போக இடையிலே



இருப்பவர்கள் 100-க்கு 38 சதவீதம் பேர் அரிசி வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் பேசியது உண்மைதான். நான் சொன்னேன், 3 விதமாக அட்டைகள் கொடுக்கிறீர்கள், அதிலே சிகப்பு அட்டையை கோட்டையிலே வைத்துக் கொள்ள வேண்டியதுதான். முதலமைச்சர் அறையிலோ, அமைச்சர்கள் அறைகளிலோ வைத்துக் கொள்ள வேண்டியதுதான். இந்த அட்டை பயன்படாது என்று சொன்னேன். ஏன் இப்படி சொன்னேன் என்றால் ஏறக்குறைய 15,000 ஆண்டு வருமானம் என்று இருக்கிறது. 15,000 ஆண்டு வருமானம் என்றால் மாத வருமானம் 1,250; மாத வருமானம் 1,250 என்றால் ஒரு நாளைக்கு 40 ரூபாய். ஒரு நாளைக்கு 40 ரூபாய் சம்பளம் என்றால், விவசாய கூலிக்குக்கூட சம்பளம் — [illegible] பழனிசாமி அவர்களிடத்தில் கேட்டேன். 40 ரூபாய் ஆண்களுக்கு, 30 ரூபாய் பெண்களுக்கு என்றால் 70 ரூபாய் ஒரு நாளைக்குக் கிடைக்கும். அவர்கள் ஒரு மாதத்தில் 20 நாட்கள், 30 நாட்களுக்குகூட' வேலைக்கு போக வேண்டியதில்லை. ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கு வேலைக்கு போனாலே 1,400 ரூபாய் வரும். எனவே உச்சவரம்பு என்பது, சிகப்பு அட்டை யாருக்கு தரப் போகிறீர்கள்? அரிசி வாங்கலாம், எல்லா பொருள்களும் வாங்கலாம் என்று சொல்வது சிகப்பு அட்டைக்கு. சிகப்பு அட்டை என்பது 15,000 மத்திய அரசு உச்சவரம்பு, மாதம் 1,250 ரூபாய், நாளைக்கு 40 ரூபாய் என்று பார்த்தால், அன்றாடம் தினக்கூலிக்கு வேலைக்கு போகிறவர்களுக்குகூட இந்த அட்டை தரமுடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாற்றுத் தலைவர் அவர்களே, தினக்கூலி என்பதில் அனைவருக்கும் தினமும் வேலைக்கு செல்கிற வாய்ப்பு இருப்பதில்லை. முப்பது நாட்களிலே 10 நாட்கள் வேலை கிடைக்கலாம், 12 நாட்கள் வேலை கிடைக்கலாம் அல்லது 15 நாட்கள் வேலை கிடைக்கலாம். அதை வைத்துத்தான் வறுமைக் கோட்டிற்குக் கீழே என்று ஒரு கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தினக்கூலிகளுக்கு தினமும் வேலை தரவேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பு. வேலையும் தர வேண்டும். நான் சொல்வது வேலையில்லாமல், ஐந்து நாள்...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, திருநாவுக்கரசு அவர்கள் என்ன சொல்கிறார் என்றால் ஏழைகளுக்கு சிகப்பு அட்டை கொடுக்காதீர்கள். ஏனென்றால் அவர்கள் அதிக சம்பளம் வாங்குகிறார்கள் என்று. அவர்களையெல்லாம் சீமான்கள் பக்கத்திலே திருப்பி அவர்களுக்கு அந்த அட்டையை வழங்க வேண்டாமென்று சொல்வது போல இருக்கிறது. இது ரொம்ப தவறான வாதம், ஆபத்தான வாதமும்கூட.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஏழைகளுக்குக் கொடுங்கள், ஏழைகளுக்குக் கிடைக்காது என்றுதான் சொல்கிறேன். நான் சொல்கிற வாதம் இப்படி தினக்கூலிகளுக்கு வேலைப் பார்க்கிற அன்றாடங் காய்ச்சிகளுக்குக்கூட சிகப்பு அட்டை பயன்படாது. ஏனென்றால் 1,250 ரூபாய்க்கு - இன்றைக்கு அவர்களுடைய சம்பளம் ஒரு நாளைக்கு 40, 30 என்றால் கூட 70 ரூபாய் வந்துவிடுமே. எனவே தினம் தினம் வேலைக்கு.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மாற்றுத தலைவர் அவர்களே, சிகப்பு அட்டையென்று சொன்னாலே கொடுக்கவேண்டும் என்பதுதான் அர்த்தமே தவிர கொடுக்கக்கூடாது என்பதல்ல. சிகப்பு அட்டை யார் வைத்திருந்தாலும் அவர்களுக்கு குறைந்தபட்சம் 12 கிலோவும், அதிகபட்சம் 20 கிலோ அரிசி கிடைக்கும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நீங்கள் சொன்னது சிகப்பு அட்டை கொடுத்த பிறகு. நான் சொல்வது சிகப்பு அட்டை கொடுப்பதிலே இருக்கிற சிக்கலைச் சொல்கிறேன். சிகப்பு அட்டை கொடுத்த பிறகு நீங்கள் அரிசி கொடுப்பதைப் பற்றி சொல்கிறீர்கள். நான் சொல்வது



சிகப்பு அட்டை கொடுக்கிறபோதே யாருக்கு சிகப்பு அட்டை கொடுக்கிறோம். இதுமாதிரி வருமானம் பதினைந்தாயிரத்திற்கு உட்பட்டு இருக்கவேண்டும் என்று சொல்கிறபோது - நான் சொன்னது இந்தமாதிரி ஏறக்குறைய மாதத்திற்கு ரூ. 1,250 என்று ஆகிறது. இது ஒரு பக்கம். இன்னொரு பக்கத்திலே அரசு அலுவலர்கள் என்று வைத்துக்கொண்டால், அரசு அலுவலர்கள் யாருக்குமே கிடைக்காது. சாதாரண பியூன், வாட்ச்மேனிலிருந்து லாஸ்ட் கிரேட் சர்வெண்ட் வரைக்கும், போலீஸிலே இருக்கிற காவலர்கள் இப்படி யாரெல்லாம் இந்த அரிசியை வாங்கிக்கொண்டு இருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் இப்போது 1,250 ரூபாய் என்று வைத்தால்....

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இங்கே பெயரையும் கொடுக்கவில்லை, வந்து கோரிக்கையையும் வைக்கிறீர்கள். பெயர் கொடுத்த உறுப்பினர்களுக்கே 10 நிமிடம் என்றால் நீங்கள் 17 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். நீங்கள் ரொம்ப அனுபவமுள்ள சட்டமன்ற உறுப்பினர். சுருக்கமாகப் பேசுவதற்கு நீங்கள் பழகிக் கொள்ளுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை. இங்கு குறுக்கீடுகள் இருந்த காரணத்தினால் நேரம் ஆகிவிட்டது. இல்லையென்றால் ஐந்து நிமிடத்தில் முடித்திருப்பேன். அதனாலே அரசு அலுவலர்களுக்கு இந்த அட்டை கிடைக்காது என்ற பொருளிலேதான் அப்படிச் சொன்னேன். இதைப் பரிசீலிக்க வேண்டும். மத்திய அரசாங்கம்கூட இந்த வரம்பை அதிகரிப்பதற்கு யோசித்துக் கொண்டிருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. 15 ஆயிரம் என்பதை 20 ஆயிரமாகவோ, 25 ஆயிரமாகவோ உயர்த்தவேண்டும் என்று மத்திய அரசே பரிசீலிப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. எனவே நீங்களும், மாநில அரசும் பரிசீலிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் எல்லோரும்....

**மாண்புமிகு திரு. கே. என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ இங்கு பேசி தமிழ்நாட்டிலே ஒரு தவறான தகவல் பரப்புகிறார் என்று சந்தேகம் வந்திருக்கிறது. வருமான வரி கட்டுகின்றவர்கள், விற்பனைவரி கட்டுகின்றவர்கள், அவர்கள் இரண்டு பேருக்கு மட்டும்தான் அரிசி இல்லை என்பது அரசாங்கத்தினுடைய அறிவிப்பு. நாட்டில் இருக்கிற மற்ற அத்தனை பேருக்கும் மாதம்

பத்தாயிரம் ரூபாய் வருமானம் இருந்தால்கூட அரிசி தேவையென்றால் அரிசி வழங்குவது அரசினுடைய கடமை, வழங்குகிறோம். வறுமைக் கோட்டிற்குக் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வருமானம் என்பது இன்றைக்கு எப்படி அளவு வைத்திருக்கிறோம் என்றால் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் அனைவருக்கும் அத்தனையும் தரவேண்டும். தொழில் செய்பவர்கள், கைவினைஞர்கள், தொழிலாளிகள், கட்டிட தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் இருந்தால் அவர்களெல்லாம் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு முழுமையாக அரசு சார்பாக அளிக்கப்படுகின்ற அத்தனைப் பொருட்களும் வழங்கப்படும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே இந்த உச்சவரம்பை ஆண்டுக்கு 15 ஆயிரம் என்பதை அதிகரிக்க வேண்டும் என்பது என்னுடைய வாதம். எனவே அதிகரிக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கேட்டால் இதனாலே இந்தச் சிகப்பு அட்டைக்குள்ளே நீங்கள் சொன்னதைப்போல மூன்று வகையான அட்டைகளிலே - அதைச் சொன்னால் இன்னும் நேரம் ஆகும் - மூன்று வகையான அட்டைகளில் இந்தச் சிகப்பு அட்டைக்கு எல்லாம் கிடைக்கிறது. பச்சை அட்டைக்கு அரிசி கிடையாது. இடையிலே இருக்கிற மஞ்சள் அட்டைக்கு இது வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளலாம், அது வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளலாம். இதுதான் அரசாங்கத்தினுடைய அறிவிப்பு. எனவே இந்தச் சிகப்பு அட்டைக்குள்ளே வரவேண்டுமென்றால் அவர்களுக்கு மத்திய அரசாங்கம் 15 ஆயிரம் என்று சீலிங் வைத்து இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறாக புரிந்துக் கொள்ளக்கூடாது. மஞ்சள் அட்டைக்கு இது வேண்டுமானால் வாங்கலாம், அது வேண்டுமானால் வாங்கலாம் என்பது தவறு. மஞ்சள் அட்டைக்கு சிகப்பு அட்டை போன்ற உரிமையுண்டு. ஆனால் மஞ்சள் அட்டை வைத்திருப் பவர்களுக்கு ஒரு ஆப்ஷன். அவர்களுக்கு என்ன ஆப்ஷன் என்றால் அரிசி வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களேயானால்-அவர்களுக்கு அரிசி உண்டு, மற்ற ரேஷன் கடைகளிலே கிடைக்கின்ற எல்லா பொருட்களும் உண்டு. எங்களுக்கு அரிசி வேண்டாம் என்று சொல்லி விடுவார்களேயானால் அவர்கள் சர்க்கரை அல்லது



மண்ணெண்ணெய் இதுவரையிலே பெற்றதைவிட கூடுதலாகக் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன். அரிசி வேண்டாம் என்றால் அதை வாங்கிக் கொள்ளலாம். அரிசிக்கு பதிலாக கூடுதலாக மற்றதைத் தருகிறேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, உரிமை உண்டு, அதுதான், அரிசி வாங்குவதற்கு....

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். சிகப்பு அட்டைக்காரர்களுக்கு உள்ள உரிமை மஞ்சள் அட்டைக்கும் நிச்சயமாக உண்டு. அதிலே என்ன Option என்றால், மஞ்சள் அட்டை வைத்திருப்பவர்கள் எங்களுக்கு அரிசி தேவையில்லை என்று சொன்னால், கூடுதலாக இப்போது பெறுகின்ற மண்ணெண்ணெயைவிட அதிகமாகப் பெற்றுக் கொள்ளலாம்: இப்போது பெறுகின்ற சர்க்கரையைவிட அதிகமாக பெற்றுக் கொள்ளலாம். இது வேண்டும், அல்லது அது வேண்டும் என்பது, இரண்டிலே ஒன்று என்ற நிலை இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருநாவுக்கரசு, உங்கள் நேரம் முடிந்துவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசி முடித்தாகிவிட்டது. அடுத்து திரு. ஆ. நடராசன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரே பாயின்ட்தான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பாயின்டைத்தான் சொல்லி முடித்துவிட்டீர்களே. 4 தடவை பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரேயொரு வார்த்தையிலே முடித்துக் கொள்கிறேன்.

**மாணபுமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வார்த்தையிலே பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** ஒரே வார்த்தை என்று சொன்னால், பேரவைத் தலைவர் என்று மட்டும்தான் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தானே சொன்னீர்கள். அதைத் தெரிந்துகொண்டுதானே நீங்கள் ஒரே வார்த்தை என்று சொன்னீர்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** தயவுசெய்து நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்பது இரண்டு வார்த்தை. (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நீங்களே உத்தரவு போட்டு அதையும் மீறச் சொல்கிறீர்கள். எனவே, மொத்தமாக விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில் இந்த 10 மாத காலத்திலே விலைவாசி நிச்சயமாக பல்வேறு திசைகளிலே உயர்ந்திருக்கிறது. அரிசி விலை - வெளிச் சந்தையிலும் சரி - அத்தியாவசியமான பண்டங்கள் எல்லாம் உயர்ந்திருக்கின்றன. எனவே, அரசு இதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன மாதிரி ஒரு தடவை தமிழ்நாட்டினுடைய அரசியல் என்பது அரசியல் அல்ல, அரிசி இயல் என்று சொன்னார். ஏற்கெனவே ஆட்சி மாற்றங்கள் அரிசி விலை அத்தியாவசியமான பண்டங்களுடைய விலைவாசி உயர்வினால்தான் ஏற்பட்டது. அன்றைக்கு பல காரணங்கள் இருந்திருக்கலாம், காங்கிரஸ் ஆட்சி போனதற்கு. ஆனால் பிரதான காரணம் விலைவாசி உயர்வு. அதற்குப் பின்னாலே, இன்றைக்கு விலைவாசி நிலைமை என்னவென்றால், இந்த 10 மாதத்திலே விலைவாசி உயர்ந்திருக்கிறது என்றுதான் மக்கள் நினைக்கிறார்கள். உண்மையிலேயே பல பொருட்கள் விலை உயர்ந்து இருக்கிறது. நேரம் கருதி நான் மற்றவற்றைச் சொல்லவில்லை. ஒன்றிரண்டு குறைந்திருக்கலாம். ஆனால் பொதுவாக விலைவாசி ஏறி இருக்கிறது. எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்த, நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். மத்திய அரசுக்குத்தான் பெரும் பங்கு, ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும், மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து நிச்சயமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அரசுக்குச் சொல்லி அமைகிறேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

***திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்ற கொள்கையை நிலைநாட்டுகிற வகையில் ஜனநாயக முறைப்படி, கூட்டுறவுப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து பொறுப்பேற்றுச் செயல்படுத்த கூட்டுறவுச் சங்கத் தேர்தலை



நடத்தியதற்காக நம்முடைய தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டி, நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. அதன்பிறகு நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டவுடன், லஞ்ச லாவண்ய நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கின்ற வகையிலே, அந்தத் தேர்தலைக் கடந்த கால அரசு ரத்து செய்த காட்சியை நாம் பார்த்தோம். மீண்டும் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், அத்தகைய லஞ்ச லாவண்ய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில், உள்ளாட்சித் தேர்தல்களையும், கூட்டுறவுத் தேர்தல்களையும் நடத்திய தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்ட விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்களைக் குறுகிய காலக்கடன்களை, நீண்டகாலக் கடன்களாக மாற்றப்படும் என்று அரசு அறிவித்திருப்பதைப் பாராட்டி, அதை உடனடியாக நடவடிக்கைக்குக் கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளிலே பணியாற்றும் ஊழியர்களைப் பொறுத்தவரையில், சமூக விரோதிகள் தங்களது சுயநலத்திற்காகப் பல்வேறு கட்டங்களிலே அவர்கள்மீது தாக்குதல் நடத்தி, அதன்மூலம் கொள்ளை அடித்துக் கொண்டிருந்த நிலைமையை மாற்றி, நம்முடைய அரசு ஏற்பட்டதற்குப் பின்னாலே, தீவிரமான, முனைப்பான நடவடிக்கை எடுத்து, அந்தச் சமூக விரோதிகளுடைய நடவடிக்கைகளை முறியடித்து, நல்லமுறையிலே வினியோகங்களைக் கொண்டு வந்திருப்பதை இந்த நேரத்திலே பாராட்டி, அதை இன்னும் வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை மாநகரத்திலே சில இடங்களில் கெரோசின் பங்க் வைக்கப்பட்டு அதன் மூலம் எல்லாக் கார்டுதாரர்களுக்கும் குறைவின்றிக் கிடைக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போலவே, தமிழகத்திலே இருக்கிற மற்ற நகரங்களுக்கும் கொண்டுவர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கழக ஆட்சிக் காலத்திலே மிகச் சிறப்பாக நடந்துவந்த, சூப்பர் மார்க்கெட்டுகள், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே ஊழலுக்கும்,

சுரண்டலுக்கும் ஆளாகி, நலிந்துவிட்ட நிலைமையைப் பார்க்கிறோம். அதேசமயம், சூப்பர் மார்க்கெட், கூட்டுறவுப் பண்டகசாலை, நியாயவிலைக் கடைகள், நுகர்பொருள் வாணிபக் கழகம் போன்றவைகள் இலாபகரமாக நடைபெற அவை இண்டேன் கேஸ், மதுபானக் கடைகள், பெட்ரோல் பங்குகள், கெரோசின் பங்குகள் போன்றவற்றை நடத்திட மேலும் அனுமதி தரவேண்டும் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். கோவை சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் உள்ளது - நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் சொன்னதைப் போல மிகவும் நட்டத்திலே உள்ளது கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஏராளமான, கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. அந்த சூப்பர் மார்க்கெட்டைச் சரி செய்வதற்கு நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதைப் பாராட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

அதைப்போல கோவை சிந்தாமணி மார்க்கெட்டைச் சேர்ந்த 'சன்ப்ளவர் ஆயில் மார்க்கெட்' என்கிற ஆயில் கம்பெனி நீண்டகாலமாக மூடிக்கிடக்கிறது. செயலற்ற அந்த சூப்பர் மார்க்கெட்டில் நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணம், அந்த சூப்பர் மார்க்கெட் ஒரு வெள்ளை யானையாக இருக்கிறது. அதை விற்கவோ அல்லது மீண்டும் தொடர்ந்து நடத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, அந்தக் கூட்டுறவு சிந்தாமணி சூப்பர் மார்க்கெட்டிலே இருந்த ஊழியர்களை கூட்டுறவு வங்கிகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த நம்முடைய அரசாங்கத்தைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாய விலைக் கடைகளை இரண்டு கிலோமீட்டருக்கு ஒரு கடை திறக்கலாம் என்கிற அனுமதி கொடுத்ததற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல பகுதி நேரக் கடைகளை ஏராளமாகத் திறப்பதற்கு, ஒவ்வொரு கிராமத்திலேயும் திறப்பதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில கடைகளில் 2,000 பங்கீட்டு அட்டைகள் வரை உள்ளன. அவைகளை மாற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மை வங்கி, நில வள வங்கி, செயலாளர்கள் இன்றையதினம் அந்தந்தச் சங்கங்களிலேயே இருந்து வருகிறார்கள்.



அந்த நிலைமையை மாற்றி, ஒரு பொது மாறுதலை அவர்களுக்குத் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நியாய விலைக் கடைகளில் ஏராளமான ஊழல்கள் ஒரு காலத்திலே நடைபெற்று, இப்போது அவைகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதை மேலும் செம்மைப்படுத்த வேண்டுமானால், இந்திய உணவுக் கழகத்தின் கிடங்கிலே இருந்து 'எப்.சி.ஐ.'-யிலேயிருந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அனுப்பப்படும் அரிசி, உணவுப் பொருள்களை மீண்டும் எடை போட்டு, ரேஷன் கடைகளுக்கு வழங்க அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள கட்டணம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினாலே பல தவறுகள் நடைபெற வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே கட்டண நிர்ணயத்தை நியாயமாகச் செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

போலி கார்டுகள் ஏராளமாக இருந்து வருகிறது. அதைக் கடந்த 10 மாத காலத்திலே நம்முடைய அரசாங்கம் கைப்பற்றி இருந்தாலும், இன்னும் இருப்பவைகளைக் கைப்பற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் பேசுகிறபோது 3 வகையாக வழங்கக் கூடாது என்றும், வழங்குவதிலே குழப்பம் ஏற்படும் என்றும் சொன்னார்கள். ஆனால் பல்வேறு பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் அதைப் பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை அன்போடு தெரிவித்துக்கொண்டு, அந்த விண்ணப்பங்களிலே கேட்கப்பட்டுள்ள கேள்விகள் மிகவும் அதிகமான அளவில் விளக்கங் களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல நம்முடைய மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது ரூ. 3 கோடி கொடுத்ததை அரசாங்கம் தானே செய்திருக்கலாமா என்கிற கேள்வியைக் கேட்டார்கள். தொழிற் சங்கங்களைக் கேட்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஏறத்தாழ 10,000 தொழிலாளர்கள் பயனடையக் கூடிய நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைப் பணியாளர்களுக்காக நம்முடைய—கடந்த கால ஆட்சியாளர்களின் தவறான, ஊழல் நிறைந்த நடவடிக்கைகள்

காரணமாக பெருத்த நஷ்டத்திலே இயங்கி வந்தாலும் - தாயுள்ளம் படைத்த நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ரூ. 3 கோடியை அரசாங்க நிதியிலேயிருந்து அள்ளி வழங்கியதைப் பாராட்ட மனமில்லாமல் போனது என்ன காரணம் என்று தெரியவில்லை ஆனால் தயவுசெய்து நான பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். சம்பளச் சீரமைப்புக் குழுவினுடைய முடிவுகள் அத்தனையையும் நம்முடைய அரசாங்கம் ஏற்றிருக்கிறது. அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை நீக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பணியாளர்கள் 11,000 பேருக்கு பென்ஷன் திட்டம் கொணடுவரத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது மத்திய அரசு ஓய்வுத் திட்டத்தைவிட பேரவை கொடுத்திருக்கிற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.பி.எப். சங்கம் 1988-லே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அங்கீகாரம் செய்யப்பட்டது. அது 'ரீ-வேல்யுவேஷன் அண்டு இம்பிளிமென்டேஷன் கமிட்டி'யினுடைய சிபாரிசுகள் அடிப்படையிலே செய்யப்பட்டது. ஆனால் 1991-லே அரசியல் காரணங்களுக்காக ஏ.டி.பி. சங்கம் முறையற்ற அங்கீகாரத்தை—நிபந்தனைகளோடு கூடிய அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே அந்த அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை சிந்தாமணி போன்ற சில கூட்டுறவு பண்டக சாலைகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக நிரந்தரமற்ற நிலையில் பணியாற்றி வந்த தொகுப்பூதியப் பணியாளர்களை..... (குறுக்கீடு)

*பிற்பகல் 1-05*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர் அண்ணா தொழிற்சங்கப் பேரவைக்கு அங்கீகாரம் கொடுத்ததை ரத்துச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கமானாலும் சரி அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற் சங்கமானாலும் சரி, இரண்டுமே முறையாகத்தான் பதிவு செய்யப்பட்டு. அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. ரத்துச் செய்தால்தான் அரசியல் நோக்கோடு ரத்துச் செய்யப்படுகிறது என்று வரும். எனவே, இரண்டு சங்கங்களுமே இருக்க வேண்டும். தடை செய்யக் கூடாது என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை நீங்கள் முழுமையாகக் கேட்கவில்லை. அங்கீகாரம் கொடுத்ததே நிபந்தனைகளோடுதான். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாகத்தான் கேட்டேன். டீடெயில்ட்-ஆகச் சொன்னால், நேரம் ஆகும் என்பதனாலே சுருக்கமாகச் சொன்னேன். எல்லாம் நிறைவேற்றப்பெற்று இருக்கிறது; முறையாகத்தான் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஏற்கெனவே, முதலமைச்சர் சொன்ன வகையில், நீங்கள் பேச வேண்டுமென்று கேட்கிற நேரத்தில் எல்லாம் உங்களுக்கு அனுமதி கொடுக்கின்றேன். ஆனால், பதில் சொல்கிற நேரத்திலேயும் நீங்கள் இருந்தால்தான் முறையாக இருக்கும். நீங்கள் பேசிவிட்டுப் போய்விடக் கூடாது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. செல்லக்குமார் அவர்களுக்கு முதலமைச்சர் பதில் சொன்னது பத்திரிகையிலே வந்த மாதிரி—அதாவது பரவாயில்லை, முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லிவிட்டு, பாராட்டுகிறேன் என்று சொல்லியதும் பத்திரிகையிலே வந்துவிட்டது.—ஆனால், நீங்கள் சொன்னது மட்டும் பத்திரிகையிலே வந்தால், நான் ஏதோ பேசிவிட்டு, பதில் சொல்கிறபோதெல்லாம் அவையிலே இல்லாமல் இருக்கிறேன் என்று பத்திரிகையிலே வந்துவிடும். ஒவ்வொரு முறையும் பேசிவிட்டு, பதில் சொல்கிறபோது, முதலமைச்சர் அவர்களின் டிமாண்டிலே கூட, எந்தத் தடவையும் நான் இல்லாமல் இருந்ததே கிடையாது. நான் பேசுவதை முடித்துக் கொண்டு, பதிலைக் கேட்டுவிட்டுத்தான்

போயிருக்கிறேன். இப்போதும் மாண்புமிகு அமைச்சர் திரு. நேரு அவர்கள் பேசும்போதும் இருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இந்த வேண்டுகோளை வைத்தபோதே, 'மதியம் வர மாட்டேன். உடனே பேசவிடுங்கள்' என்று சொல்லித்தான் சொன்னார்கள். (சிரிப்பு)

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அறைக்குள்ளே நான் பேசிய இரகசியங்களையெல்லாம் நீங்கள் அம்பலத்திலே சொல்லக் கூடாது. (சிரிப்பு)

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலும், அம்பலத்திலும் ஒரே மாதிரி நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை சிந்தாமணி போன்ற சில கூட்டுறவுப் பண்டகச் சாலைகளில் கடந்த 10 ஆண்டுக் காலமாக நிரந்தமின்றிப் பணியாற்றி வந்த தொகுப்பூதியப் பணியாளர்களை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணி நிரந்தரம் செய்ததற்காகப் பாராட்டி வரவேற்கின்றேன்.

அதேபோல, இதர பண்டகச்சாலையில் உள்ள தொகுப்பூதிய, தினக்கூலியில் உள்ள தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை சிந்தாமணிக்கு (மணியடிக்கப்பெற்றது) அரசினுடைய நிலத்தை வாங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், அன்றைய ஆட்சிக் காலத்திலே 26 லட்சம் ரூபாய் கட்டினால்தான் பத்திரப் பதிவு செய்ய முடியும் என்று சொல்லப்பட்டது. ஆனால், அவர்கள் சொந்தமாக வாங்கிய டான்சி நிலத்தைப் பத்திரப் பதிவு செய்வதற்கான கட்டணத்தைப் பல மடங்கு குறைத்ததை நாம் அத்தனை பேரும் அறிவோம். நம்முடைய தலைவர் ஆட்சிக்கு வந்தவுடனே 2,660 ரூபாய் மட்டுமே செலுத்தி பத்திரப் பதிவு செய்ததை இந்த நேரத்திலே நன்றியோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்தியக் கூட்டுறவு வங்கியிலே பணிபுரியக்கூடிய ஊழியர்களுக்குக் கடந்த ஜெயலலிதா ஆட்சியிலே 2 ஆண்டுகளுக்கு மேலாக ஊதிய உயர்வு வழங்காமல் காலம் கடத்தி வந்தார்கள். வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்தியும், கடந்த ஆட்சியில் அவர்கள் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை. பாட்டாளிகளின் பாதுகாவலர், தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், சீரமைப்புக் குழுவின்



பரிந்துரைகளை அப்படியே ஏற்று, ஊதிய உயர்வு வழங்கியதற்காகப் பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றக் கூடிய சுமை தூக்கும் தொழிலாளர்களுக்குச் சட்டப்படி வருங்கால வைப்பு நிதி, பி.எஃப். பிடித்தம் செய்ய வேண்டும் என்று இருந்தும், இதுவரை பிடித்தம் செய்யப்படவில்லை. அதை உடனடியாகப் பிடித்தம் செய்து அவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் 1972-ஆம் ஆண்டு தொலை நோக்கோடு, ஏழைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைத் துவக்கினார்கள். 25 ஆண்டுகள் நிறைவேறி வெள்ளிவிழா கொண்டாடக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்தில் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கியதுபோல, சுவர்க் கடிகாரம் இல்லாமல் கைக் கடிகாரம் வழங்க வேண்டும். அவர்கள் மீது இருக்கிற வழக்குகளைத் திரும்பப்பெற வேண்டும், வேலை நிறுத்தம் செய்த நாட்களை விடுப்பாகக் கருதி, இந்தச் சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

பிற்பகல் 1-10

***திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையிலே இங்கு பேசக்கூடிய வாய்ப்பு கொடுத்தமைக்கு மனமார்ந்த மகிழ்ச்சியை, நன்றியைத் தெரிவித்து, எனக்குத் தெரிந்த சில கருத்துக்களை உங்கள் முன்னாலே, அவையின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் உள்ளாட்சித் துறைக்கும், கூட்டுறவுத் துறைக்கும் தேர்தல் கொண்டு வருவதாக உறுதியளித்தபடி தேர்தல் கொண்டுவந்து எல்லோரும் பாராட்டக்கூடிய அளவிற்கு அவர்களுடைய செயல்பாடுகள் அமைந்தன. அதேநேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களிடத்திலே பேசுகின்றபோது எதிர்க் கட்சியாகச் செயல்பட வேண்டும், குறைகளை எங்களிடத்திலே எடுத்துச்சொல்ல வேண்டும் என்று கேட்ட அளவில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக கூட்டுறவுத் தேர்தலை முறையாக, நேர்மையாக நடத்த வேண்டும் என்று நீங்கள் நினைத்திருந்தாலும்கூட நடந்த கூட்டுறவுத் தேர்தலிலே, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும்,

தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், வீட்டுவசதி கட்டிடங்கள் சங்கமாக இருந்தாலும், நில அடமான வங்கி - லேண்ட் மார்ட்கேஜ் வங்கியாக இருந்தாலும் முழுமையாக நேர்மையாக நடக்கவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இன்று பால் உற்பத்தியாளர்....(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டுமொத்தமாகக் கூட்டுறவுத் துறையில் நடைபெற்ற அனைத்துத் தேர்தலும் நியாயமாக நடைபெறவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 22,000 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி எல்லாவிதமான நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு தேர்தல் நடைபெற்றது. தேர்தலிலே குறைபாடு இருந்தது என்றுகூட பல பேர் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே அங்கொன்றும் இங்கொன்றும் ஏதாவது தவறு நடந்திருந்தால் முழுமையாகத் தவறு நடைபெற்றதாகக் கூறுவது சரியல்ல. தமிழ்நாட்டிலே தேர்தலே இல்லாமல் இருந்த கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடைபெற்று எவ்வளவு உன்னதமான முறையிலே ஜனநாயக முறையை கூட்டுறவுத் துறையிலே ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலும் ஊழல் நடந்ததாக நான் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒன்று பாக்கி இல்லாமல் எல்லாத் துறையையும் சொல்லிவிட்டுத் தான் தவறு நடந்தது என்று சொன்னீர்கள். நீங்கள் குறிப்பாக ஏதாவது சொல்வதாக இருந்தால் நீங்கள் ஏற்கெனவே சொன்னதைத் திரும்பப் பெறவேண்டும், பேசுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய நிர்வாகம் சிறப்பாக, நேர்மையாக, ஒழுங்காக



நடந்தால்தான் அங்கே இருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவின் மூலமாகப் பயனடையக்கூடிய பயனீட்டாளர்கள் அத்தனைபேரும் சிறப்பான முறையிலே பயனடைய முடியும். இன்று கூட்டுறவுத் துறையிலே கடந்த காலத்தில் சிறப்பான நிர்வாகத்தின் மூலமாக ஒரு நல்ல நிர்வாகத்தைக் கொடுக்காத நிலையை எல்லாம் மாற்றி உள்ளாட்சித் துறைக்கு எந்த அளவுக்கு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று நினைக்கின்றோமோ அதே அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் அந்தந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே இருக்கக்கூடிய, பொறுப்பிலே இருக்கக்கூடிய பொறுப்பாளர்களுக்கும் முழுமையான அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக இன்று தேர்தல் எல்லா நிலையிலேயும் நடந்தும்கூட இன்னும் அந்தப் பொறுப்புக்கள் முழுமையாக ஒப்படைக்கப்படாதச் சூழ்நிலையில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இன்னும் சில இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இன்று இருக்கக்கூடிய கூட்டுறவு இயக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்ற எல்லா வங்கிகளையுமே சிறப்பாக நடத்துவதற்குச் எதிர்காலத்திலே நிர்வாகம் சிறப்பாக இருப்பதற்கு மேல்நிலையிலேயிருந்து கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் அத்தனைபேரும் அமைச்சகம் என்ன முடிவு எடுக்கிறதோ, அந்த அமைச்சகத்தினுடைய முடிவை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

அந்தந்தச் சங்கங்களில் உள்ள உண்மையான பயனீட்டாளர்கள் உறுப்பினர்களாக இருந்து தேர்தலிலே கலந்திருந்தார்களேயானால் சிறப்பாக இருந்திருக்கும். குறிப்பாக பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினுடைய நியதியே 120 நாட்களுக்கு பால் ஊற்றி இருக்க வேண்டும். குறைந்தது, 300 லிட்டர் பாலாவது ஊற்றியிருக்க வேண்டும் என்ற நியதியின் மூலமாகத்தான், அங்கே தேர்தலிலே நிற்கக் கூடியவர்களாக இருந்தாலும், தேர்தலிலே வாக்களிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் இருக்க வேண்டும் என்ற நியதி இருந்தும்கூட, அங்கே உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் அத்தனைபேரும் வாக்களிக்கலாம் என்ற நியதியை, மாற்றியமைத்து, அங்கே பால் உற்பத்தியாளர்கள் சங்கத்திலே இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் மனச்சங்கடமான ஒன்று என்பதை இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[ திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் ] [1997 மார்ச் 26

ஆகவே, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேயும், 400, 500 உறுப்பினர்கள் என்ற நிலையையெல்லாம் மாற்றி, ஒரு ஊராட்சி மன்றத்திலே 2,500 வாக்காளர்கள் இருந்தார்களேயானால், அத்தனைபேரும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேயும் வாக்காளர்களாகி, அங்கே வாக்குப் போட்ட நிலையையெல்லாம் நாம் பார்த்தோம். இதெல்லாம் எதிர்காலத்திலே, எந்தக் கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், அதிலேயிருக்கக்கூடிய பயனீட்டாளர்கள், யார் பயன்படுத்துகின்றார்களோ அவர்கள் தேர்தலிலே நிற்பதாக இருந்தாலும், வாக்களிப்பதாக இருந்தாலும் அந்த அளவிற்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, கைத்தறி நெசவாளர் சங்கத்தில் தலைவர்களாக வருவதற்கு எந்த அளவிறகுப் போட்டியிருந்தது என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். காரணம், உற்பத்தி செய்யாத துணிகளுக்கு, வாங்காத நூல்களுக்குக் கடந்த காலத்திலே பை - சொசைட்டி என்பார்களே, அதைப்போல மீண்டும் ஒரு வாய்ப்பு கிடைக்குமா என்ற நிலையின் காரணமாகப் பல பெரியோர்களெல்லாம் இந்தக் கைத்தறி நெசவாளர் சங்கத்திலே தலைவர்களாக வருவதற்கு முயற்சி செய்து வந்திருக்கக்கூடிய சூழ்நிலையில் இங்கே மாண்புமிகு முதல்வரும், மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்களும் இன்று அதை நல்ல முறையிலே நிர்வகித்து எதிர்காலத்திலே கடந்த கால ஊழல் நடைபெறாமல் இருப்பதற்கு நீங்களெல்லாம் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மாதிரி கூட்டுறவுச் சங்க விதிகளை மற்ற மாநிலங்களிலே பின்பற்றுகின்றபோது ஏன் நமது மாநிலத்திலே மாத்திரம் பின்பற்றாமல்— ஒரு கமிட்டியை அமைத்து அந்தக் கமிட்டியினுடைய விவரத்தைத் தெரிந்து நீங்கள் செயல்படுத்த வேண்டிய அவசியத்திலே தாங்கள் இல்லை. காரணம், தாங்கள் 1957-லேயிருந்து 40 ஆண்டுகளாக இங்கே நிர்வாகப் பொறுப்பிலே ஒரு தலைசிறந்த நிர்வாகியாக, முதலமைச்சராக இருந்து வருகின்றீர்கள். அப்படியிருக்கின்றபொழுது, குழுவை அமைத்துத்தான் நீங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்திலே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் இருந்த காலத்திலே 1960-லேயெல்லாம கூட்டுறவுச் சங்கத்திலே மரியாதைக்குரிய நாச்சியப்ப கவுண்டர் போன்றவர்கள், சுப்பிரமணிய கவுண்டர் போன்றவர்கள், எஸ்.கே. சென்னியப்ப கவுண்டர் நாச்சிமுத்து முதலியார் போன்றவர்கள் நிர்வாகம் செய்தது இங்கு இருக்கக்கூடியவர்கள் அத்தனை பேருக்கும்



1997 மார்ச் 26 ] [ திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் ]

தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில், கடந்த காலத்திலே இருந்த அந்த சட்டத்திட்டங்களையே முழுமையாகப் பயன்படுத்த, முழுமையான அதிகாரத்தைக் கொடுத்து, அங்கே நிர்வகிக்கச் சொல்லக்கூடிய வாய்ப்புக் கொடுத்தீர்களேயானால் முழுமையாகச் சிறப்பாக இருக்க முடியும். ஆகவே, கமிட்டி அமைத்து, மற்ற மாநிலங்களைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா போன்ற மாநிலங்களிலே முழுமையான அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரங்களை முழுமையாக நீங்கள் வழங்க வேண்டும். அப்பொழுதுதான் கூட்டுறவே நாட்டுயர்வு, தங்கம் செய்ய முடியாததைச் சங்கம் செய்ய முடியும் என்ற சூழ்நிலையில், மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகளிலேயெல்லாம், இன்று தனியார் நூற்பாலைகளிலே தரமான நூல்களும், எடையும் அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையில், கூட்டுறவு நூற்பாலையிலே எடை குறைந்தும், அதேநேரத்திலே விலை அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கின்றோம். எதிர்காலத்திலே, தனியாரோடு போட்டி போடக் கூடிய அளவிற்குக் கூட்டுறவு நூற்பாலையினுடைய தரத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

வருடத்திற்கு ஒருமுறை, கூட்டுறவு வார விழா கொண்டாடுகின்றோம். அங்கே அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கலந்து கொள்கிறோம். ஆனால், அதிலே இருக்கக்கூடியவர்கள், பொதுமக்கள் முழுமையாகக் கலந்து கொள்ளாத சூழ்நிலையைப் பார்க்கின்றோம். ஆகவே, பொதுமக்களும், இந்தக் கூட்டுறவு வார விழாவிலேயெல்லாம் கலந்து கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

மாண்புமிகு முதல்வரவர்களும், கைத்தறித் துணிநூல் கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்திலே கைத்தறி, விசைத்தறி நூற்பாலைகளை ஒழுங்குபடுத்தக்கூடிய அளவிற்கு எதிர்காலத்திலே செயல்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேசிய வேளாண்மை மற்றும் கூட்டுறவு வங்கி நிதி உதவிகளின் மூலமாகச் செயல்பட்டு வருகின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நான்கே முக்கால் கோடி ரூபாய் நிதி கையிருப்பாக இருப்பதாகக் கூறியிருக்கின்றீர்கள். குறிப்பாக, எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும், கூறியதைப் போல தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் இரும்புப் பெட்டகங்கள் எங்கெங்கு எல்லாம் தேவை என்று கூறுகிறார்களோ அத்தனைபேருக்கும் நீங்கள் இரும்புப் பெட்டகங்களை வழங்க வேண்டுமென்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, பெரிய மாவட்டத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியாக இருக்கக்கூடிய எலவுமலையில், மரியாதைக்குரிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய முன்னாள் தலைவர் வி.ஆர்.பூசப்பனும், அங்கே பணியாற்றுகின்ற செயலாளர் மணி போன்றவர்கள், பணியாளர்கள் அத்தனைபேரும் சிறப்பாகப் பணியாற்றிய காரணத்தாலே இன்று ஒரு கிராம வங்கியிலே 19 கோடி ரூபாய் டெப்பாசிட் ஆகி இருக்கக்கூடிய சூழ்நிலை. ஆனால் அங்கே தேசிய வங்கியாக இருக்கக்கூடிய ஸ்டேட் பேங்க், கனரா பேங்க் போன்ற வங்கிகளிலே 4 கோடி, 5 கோடிதான். காரணம், அங்கே ஒரு குடும்பமாக, ஒற்றுமையாக அங்கே இருக்கக்கூடிய மக்களோடு, பிணைப்போடு பழகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையின் காரணமாக, இந்தியாவிலே தலைசிறந்த எலவுமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இருக்கிறது. ஆகவே, வாய்ப்பு இருக்குமேயானால், அங்கே எப்படிப் பணியாற்றுகிறார்கள் என்று தெரிந்து கொள்ளும் நிலையை அங்கே பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பை நீங்கள் எல்லோருக்கும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, கூட்டுறவு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் :** கூட்டுறவு வங்கியிலே 19 சதவீதத்திற்கு நகைக் கடனைக் கொடுக்கிறீர்கள். ஆனால், தேசிய வங்கியிலே விவசாயிகளுக்கு 12 சதவீதத்திலே கொடுக்கிறார்கள். இது என்ன நியாயம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்து எதிர்காலத்திலே, விவசாயிகளுக்குத் தேசிய வங்கியிலே எந்த அளவிற்கு வட்டி விகிதம் குறைவாகக் கொடுக்கின்றார்களோ அதே அளவிற்கு இங்கேயும்,



கூட்டுறவு வங்கியிலேயும் கிடைக்கக்கூடிய அளவிற்குச் செய்ய வேண்டும்.

குறிப்பாக, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொன்னதுபோல, இந்த அரிசிப் பிரச்சினை என்ற ஒரே காரணத்தினால்தான் 1967-லே காங்கிரஸ் கட்சி தோற்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். மீண்டும் மக்களுக்கு அடிப்படைப் பிரச்சினையான, அடிப்படைத் தேவையான அரிசி, கோதுமை, சர்க்கரை, சீமெண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் முழுமையாக, தேவையானவர்களுக்குத் தேவையான அளவிற்கு, ஊழலற்ற முறையில், எங்கே எடுக்கப்படுகிறதோ, அங்கேயே எடையைப் போட்டு, எங்கே கடையாகக் கொடுக்க இருக்கின்றீர்களோ அங்கே கொண்டு போய்க் கொடுக்கின்ற நேரத்தில் அங்கேயும் எடையைப் போட்டு, வருகின்ற வழியிலே குறையாமல், மக்களுக்கு ஒழுங்காக அந்தப் பணியாளர்கள் விநியோகம் செய்யக்கூடிய அளவிற்கு அதை நிவர்த்தி செய்து ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன்.

200 கார்டுகளுக்கு ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைப்பதிலே உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றோம். அதை அங்கே இருக்கக்கூடியவர்கள் கேட்காமலேயே, அதிகாரிகள் எங்கெல்லாம் தேவை என்று நினைக்கின்றார்களோ அவர்களே ஆரம்பிக்கக்கூடிய அளவிற்கு அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிமிடத்திலே உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். என். பாலசுப்பிரமணியன் :** ரேசன் கார்டுகள் இதுவரையில் கொடுக்கப்படாத பகுதிகளுக்கு, கார்டுகள் உடனடியாகக் கொடுக்க வேண்டும். நியாய விலைக் கடைகள் இல்லாத இடத்தில் உடன் ஆரம்பிக்க வேண்டும். நிதி நிலை அறிக்கையிலே பேசுகின்றபொழுதுகூட குறிப்பிட்டேன். கிராமத்திற்கும், நகரத்திற்கும் வேறுபாடு இல்லாமல் ஒரே சீராக அத்தியாவசியப் பொருட்களை எல்லாப் பகுதிக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்தக் கூட்டுறவு மானியக் கோரிக்கையிலே பேசக்கூடிய வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம் தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்கள் மோசிகீரனாரின் புறப்பாட்டுக்குத் தங்கத் தமிழில் தெளிவுரை எழுதியுள்ளார்கள். அதிலிருந்து ஒருசில வரிகளை நான் இங்கே சுட்டிக் காட்டுவதிலே பெருமை அடைகின்றேன்.

மன்பதை ஆளும் ஆட்சியின் மாட்சியே
அந்த மக்களுக்குயிராம் அவர்கள் வாழும்
மண்ணுக்கும் உயிராம் ;
வேற்படை விற்படை எனவிருவகைப் படைகள்
இருப்பினும் விழிப்புடன் வேந்தன்
விரைந்து செயல்பட வேண்டும் அன்றோ ;
வெளிநாட்டுப் பகைப்பலத்தை விரட்டுகின்ற வீரமுடன்
ஒளிநாடாய்த் தனைாட்டை உருவாக்கி வைப்பதற்குத்
தெளிவுற்ற ஆட்சி தரும் தேவையன்றோ ; சோம்பலினால்
நெளிகின்ற போக்கிருந்தால் நெல் எங்கே நீர் எங்கே
அறிவார்ந்த அரசொன்றே நாட்டுக்குயிராம் அமைந்துவிடின்

அதன் பின்னர் நீர் வளமும் நில வளமும் பிற வளமும் நிறைந்து குலுங்கிடும் அறிவீர்

என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதற்கேற்ற முறையிலே அரசாண்டு வரும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்கு உறுதுணையாகக் கூட்டுறவுத் துறையும், கூட்டுறவு நிறுவனமும் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகின்றேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடும்பொழுது, தன் உடைமைக்கும் பொது உடைமைக்கும் இடையே அமைக்கப்பட்ட பாலம்தான் கூட்டுறவு என்றார்கள்.



டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையிலே, மேகங்கள் கூடி மழையாய்த் தருவது போன்று மக்களுக்கு நன்மை கொடுப்பதாகக் கூட்டுறவு இருக்க வேண்டும் ; அது காகங்கள் கூடி, இருப்பதைப் பகிர்ந்து கொண்டு போகின்ற நிலைமையில் இருக்கக் கூடாது என்று விளக்கமாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படிப்பட்ட கூட்டுறவு பற்றிய செய்திகள் மக்களைச் சென்றடைகிறதா என்றால் அது இல்லை என்று என்னால் கூற முடியும். இதை நாம் வலுப்படுத்துவதற்காகத்தான் கூட்டுறவு கல்வியிலே கல்வி முறையைப் பரவலாக்க வேண்டும் ; கூட்டுறவுப் பயிற்சியைப் பலப்படுத்த வேண்டும் ; கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கூட்டுறவுப் பாடத்தை ஒரு பாடத் திட்டமாக அறிவிக்க வேண்டும். இதைக் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் செயல்பட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றி தமிழ்நாட்டிலே இயங்கி வருகின்ற பல்கலைக் கழகங்களோடு இணைந்து கூட்டுறவுப் பாடத்திலும் தனித் துறையை உருவாக்க வேண்டும்.

பிற்பகல் 1-25

கூட்டுறவு வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து ஒரு கணிசமான தொகையை ஒதுக்கி, அந்த வைப்புத் தொகையிலிருந்து வருகின்ற வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டுதோறும் கூட்டுறவுப் பாடத்திலே அதிக மதிப்பெண்கள் பெறுகின்ற மாணவர்களுக்கு அதைப் பரிசாகக் கொடுக்க வேண்டும். அதை ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்ற கூட்டுறவு வார விழாவிலே வைத்துக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல கருத்தை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கல்வியைப் பற்றி பேசுகின்ற நேரத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முதலாக திருப்பூர் நகரத்திலே, திருப்பூர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற அந்தக் கல்லூரிக்கு போதிய நிதியின்மை காரணத்தினால் அங்கே கட்டுமானப் பணிகள் எல்லாம் நடைபெறவில்லை. கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், கல்வி நிதியிலிருந்தும், தேங்கிக் கிடக்கின்ற அந்தப் பணத்தை அக்கல்லூரிக்கு அனுமதித்துத் தந்தால் அங்கே படிக்கின்ற மாணவர்களுக்குக் கட்டிடம் அமைத்து, அந்தக் கட்டிடங்களிலே கல்வி பயில ஏதுவாக இருக்கும். தற்போது வாடகைக் கட்டிடத்திலே, வாடகை என்றுகூடச் சொல்ல முடியாது, ஒரு தனியார் பள்ளிக் கட்டிடத்திலே அந்தக் கல்லூரி நடந்து கொண்டிருக்கிறது. தொடங்கி இக்குறிப்பிட்ட குறுகிய காலத்திலே அந்தக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் அனைவரும்

பாராட்டத்தக்க வகையிலே சென்ற தேர்விலே தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கூற நான் ஆசைப்படுகிறேன். அந்தச் சங்கத்திற்குச் சொந்தமான 2½ கோடி ரூபாய் மதிப்புள்ள இடத்திலே அந்தக் கல்லூரி அமைய இருக்கின்றது. கல்லூரி முழுமையாக அமைய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கோரிய 4½ கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கல்லூரி நலனைக் கருத்திலே கொண்டு வழங்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று கடந்த 5 ஆண்டுக் காலத்திலே கூட்டுறவுத் துறையானது ஊழலுக்கு உறைவிடமாக இருந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலே பெருவாரியான மோசடிகள் எல்லாம் நடந்திருக்கின்றன. அங்கே இதர கணக்குகள் என்ற தலைப்பிலே சுமார் 1½ கோடி ரூபாய் அளவுக்குச் செலவிடப்பட்டிருக்கிறது. அந்த வங்கிக்கு கட்டப்பட்ட கட்டிட வேலை முடிந்தும்கூட, காஸ்ட் எஸ்கலேஷன் என்ற வகையில் மறுபதிப்பு செய்து சுமார் 32 1/2 இலட்சம் ரூபாய் எடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற விவரங்களையெல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு முழுமையான விசாரணை அமைத்து, இப்படிப்பட்ட தவறுகள் நடந்திருந்தால் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு இப்படிப்பட்ட தவறுகள் இனிமேல் நடக்காத அளவிற்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று கோவை மத்திய கூட்டுறவு வங்கியிலே நடந்திருக்கின்ற மோசடிகள் பற்றியெல்லாம் இதே அவையிலே கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக விவாதிக்கின்றபோது அந்தப் பணியிலேயிருந்த செயலாளர் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார். ஆனால் அந்த வங்கியிலே அன்று முதல் இன்றுவரை இருக்கின்ற அதிகாரிகள்தான் இன்னும் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்கள் பண்ணைச்சாரா கடன்களிலே வழங்கிய கடன்களிலேயெல்லாம் பல்வேறு மோசடிகள் நடந்திருக்கின்றன. அதற்கு அத்தாட்சியாக, அதிலே வழங்கப்பட்ட கடன்கள் எல்லாம் வசூல் செய்யப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது எல்லாவற்றையும் பார்க்கும்போது நமக்கு சந்தேகத்திற்கு இடம் அளிக்கிறது. ஆகவே, அங்கே



நடைபெறுகின்ற முறைகேடுகளையெல்லாம் நாம் விசாரணை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கூட்டுறவு வங்கிகளுக்கு மிக அதிகமான அளவுக்கு வைப்புத் தொகை வந்திருக்கிறது. காரணம், தனியார் நிதி நிறுவனங்களிலே மோசடிகள் என்ற காரணத்தினால், கூட்டுறவு நிறுவனங்களுக்கு சுமார் 6 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு வைப்புத் தொகை வந்திருக்கிறது. ஆனால், அதை மிகுதியாகப் பயன்படுத்தி கடன்கள் கொடுக்க இயலவில்லை. அதற்குக் கடன் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதிகமான வைப்புத் தொகையை இருப்பிலே வைத்துக்கொண்டு வட்டி கொடுத்துக் கொண்டிருந்தால் கண்டிப்பாக வருங்காலத்திலே அந்த வங்கிகள் நஷ்டத்தில் இயங்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே போன்று நகர கூட்டுறவு வங்கிகளுக்கெல்லாம் ஒரு தலைமைக் கூட்டுறவு வங்கி அமைக்கப்பட வேண்டும். கொள்கை விளக்கத்திலேகூட இதைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு நிமிடத்திலே பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ம. சண்முகம் :** தலைவர் அவர்களே, கடன் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு எல்லாம் பயிற்சி அளித்து சாதனை செய்வது போல, கீழ் நிலையிலுள்ள ஊழியர்களுக்கும் அரசின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளும் வகையிலே பயிற்சி அளிக்க வேண்டுமென்ற கருத்தை நான் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அதே போல, விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசனத்திற்குக் கடன் வழங்குகிறபோது, கிணறுகளுக்கிடையே 150 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். இந்த நிபந்தனை இருக்கின்ற காரணத்தினால் அங்கே சொட்டுநீர்ப் பாசனக் கடனைப் பெற முடியாத சூழ்நிலையிருக்கிறது. ஆகவே, அந்த நிபந்தனையை முழுமையாக நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுச் சட்டவிதியில் நிறைய மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் சிறிது நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**திரு. ம. சண்முகம் :** கூட்டுறவுச் சட்ட விதியில் நிறைய மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. கூட்டுறவு விதியிலே ஒரு பிரிவிலே சொல்கின்றபோது, 'கூட்டுறவுப் பணியாளர்கள் பணியிலேயிருந்து விடுபட்ட இரண்டு, மூன்று ஆண்டுகாலத்திற்கு வேறு பணியிலோ நிர்வாகத்திலோ பொறுப்பு எடுத்துக்கொள்ளக்கூடாது' என்று இருக்கின்றது. அந்த வகையிலே பார்த்தால், நான் சட்டமன்ற உறுப்பினராக வந்திருந்தாலும்கூட, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலேகூட, ஒரு இயக்குநராக வர வாய்ப்பு இல்லை. கூட்டுறவுத் துறையிலே நாங்கள் பெற்ற எங்களுடைய அனுபவத்தையெல்லாம் அந்த நிர்வாகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. எனவே அது போன்ற விதிகளையெல்லாம் நீங்கள் நீக்கித்தர வேண்டும். தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியானது இன்றையதினம் தரம், கொள்கைகள் இவைகளில் பல்வேறு மாற்றம் செய்யவேண்டிய காரணத்தால் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே நடந்துகொண்டிருக்கிறது. நேரமாகின்ற காரணத்தினால் இத்தோடு முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு ஒரேயொரு கருத்து. காலையில் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கேள்வியெழுப்பிய நேரத்தில், நான் குறுக்கிட்டு வேடிக்கையாகச் சொன்னதை அவர் வினையாக எடுத்துக் கொள்ளாமல் சற்று வேதனையோடு எடுத்துக்கொண்டார் என்று கருதுகிறேன். அவரோடு பேசியபின் இது எனக்குத் தெரிந்தது. அவர்கள் சொன்னார்கள், 'பொன்னம்மாள் எது சொன்னாலும் இந்த ஆட்சியிலே நடக்கும் என்று ஒரு தவறான பிரச்சாரம் நடைபெறுகிறது' என்று. நான் குறுக்கிட்டு, அப்படித் தவறான பிரச்சாரத்தால் உங்களுக்கு எந்த கஷ்டமும் வேண்டாம், இப்போது நான் பிரகடனப்படுத்துகிறேன், 'அக்கா பொன்னம்மாள் என்ன சொன்னாலும் நடக்காது, நடக்காது' என்று நான் வேடிக்கையாகத்தான் சொன்னேன். அதை வினையாக எடுத்துக்கொள்ளத் தேவையில்லை, நடக்கும் என்று கூறி (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது நாமெல்லாம் அவையிலிருந்து தலைவர் உத்தரவுப்படி நடப்போம். *(சிரிப்பு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதிய உணவு தரவிருக்கின்றார்கள். அதிலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். வேறு யாரோ சாப்பிட்டுவிட்டு, சென்ற தடவை பல உறுப்பினர்கள் 'தங்களுக்கு உணவு கிடைக்கவில்லை' என்று சொன்னார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 2.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 2.30 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் தொடர்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்கள் 6 பேர் இன்னும் பேசவிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 10 நிமிடம் பேசவேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையை 3 ½ மணிக்குத் தொடங்கவேண்டும். ஆகவே, யாரும் கண்டிப்பாக 10 நிமிடத்திற்கு மேல் பேசக் கூடாது. அதைக் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நம்முடைய மூத்த உறுப்பினர் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களைக் கேட்டுக் கொண்டு, அவையை நடத்தச் சொல்லி அழைத்து, திரு. டி. நடராஜன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)**

***திரு.டி. நடராஜன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இரண்டாவது முறையாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், என்னுடைய குடும்பத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எங்களுடைய இளைய தளபதி, சென்னை மாநகரத் தந்தை திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், எங்களையெல்லாம் வழி நடத்திச் செல்கின்ற எங்கள் மாவட்டத்தினுடைய அமைச்சர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்த மானியத்தில்

பேசுவதற்கு அனுமதி அளித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டபொம்மன் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது நியாயவிலைக் கடைகளில் இருக்கின்ற முள் தராசுகள் சரியாக இல்லாததால், அங்கேயிருக்கின்ற சேல்ஸ்மென் நிறைய தவறுகள் செய்ய வாய்ப்பிருக்கின்றன. எனவே, அப்படிப்பட்ட முள் தராசுகளை மாற்றிவிட்டு, எலக்ட்ரானிக் தராசுகளை அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று அங்கிருக்கும் விற்பனையாளர்களுக்கும், டி.என்.சி.எஸ்.சியில் பணிபுரிகின்ற விற்பனையாளர்களுக்கும் சம்பள விகிதத்தில் மாறுபாடு இருக்கிறது. டி.என்.சி.எஸ்.சியில் உள்ள விற்பனையாளர்களுக்கு 2,000 ரூபாயாகவும், அதே ஊழியர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிகின்றபோது 900 ரூபாயாகவும் இருக்கின்றது. அதனால் இந்த மாறுபாட்டைக் களைந்து இருவருக்கும் சமமாகச் சம்பளம் வழங்கிட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து எடுத்து வரப்படுகின்ற பொருட்களில் எடைக் குறைவு இருக்கிறது. இந்த எடைக் குறைவு பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நிறையப் பேர் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எடைக் குறைவு ஏற்படாமல் இருக்க வேண்டுமென்பதற்காக இப்போது 'பறக்கும் படை' யை அமைத்திருக்கிறார்கள். இந்த 'பறக்கும் படை' யின் பணியினை மேலும் தீவிரப்படுத்தி இந்தக் குறையே இல்லாமல் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மண்ணெண்ணெய் வினியோகத்தைப் பொறுத்தவரையில், மாநகராட்சிப் பகுதிக்கு 10 லிட்டர் என்றும், நகராட்சிப் பகுதிக்கு 6 லிட்டர் என்றும், பேரூராட்சிப் பகுதிக்கு 5 லிட்டர் என்றும், கிராமப்புறங்களுக்கு 3 லிட்டர் என்றும் இப்போது வழங்கப்படுகிறது. கிராமங்களில் வழங்கப்படுகின்ற 3 லிட்டர் மண்ணெண்ணெயை 5 லிட்டராக உயர்த்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது வழங்கப்படுகின்ற 3 லிட்டர் கூட சரியாக வழங்கப்படுவதில்லை. 2 அல்லது 2½ லிட்டர்தான் வழங்குகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், 'எங்களுக்கு 80% ஒதுக்குகிறார்கள், அதனால் இப்படிக் குறைவு ஏற்படுகிறது' என்று



சொல்கிறார்கள். ஆகவே, எல்லா அட்டைகளுக்கும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தனியார் மூலமாக மண்ணெண்ணெய் வினியோகம் செய்ய லைசென்ஸ் வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் சரியாக வழங்குவதில்லை. எனவே, நியாய விலைக் கடைகள் மூலமே மண்ணெண்ணெய் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசியைப் பொறுத்தவரையில், ஒரு அட்டைக்கு 20 கிலோ அரிசி வழங்கப்படும்போது அதில் 12 கிலோ புழுங்கல் அரிசியாகவும், 8 கிலோ பச்சரிசியாகவும் வழங்கப்படுகிறது. கிராமங்களில் இருக்கின்ற மக்கள் பச்சரிசியை வாங்குவதில்லை. எனவே அவர்களுக்கு புழுங்கல் அரிசியே 20 கிலோ வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேசன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற செயலாளர்கள் இறுதிவரை ஒரே வங்கியில் பணியாற்றுகின்ற நிலை இருக்கிறது. அதனால் அவர்கள் நிறைய தவறுகள் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, குறைந்தபட்சம் அந்தப் பணியாளர்களை மாவட்ட அளவிலாவது மாற்றக்கூடிய வகையில் அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

கூட்டுறவு வங்கிகளில்தான் அதிகமான திருட்டு ஏற்படுகின்ற ஒரு நிலை இருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமத்தை விட்டு சற்றுத் தள்ளி இருப்பதால் நிறைய திருட்டுக்கள் நடைபெற வசதியாக இருக்கிறது. இந்தத் திருட்டுக்களையெல்லாம் கண்டுபிடிக்க அபாய மணி இருந்தால் நன்றாக இருக்கும். அபாய மணி அடித்தால் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள் ஓடிவந்து, திருடர்களைப் பிடிக்க வாய்ப்பாக இருக்கும். அதனால் ஒவ்வொரு கூட்டுறவு வங்கியிலும் அபாய மணி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

'டேன்பெட்' மூலமாகத்தான் இந்த கூட்டுறவு வங்கிகளுக்கு உரங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரில்தான் 'டேன்பெட்' இருக்கின்றது. கூட்டுறவு வங்கிகளுக்கும், மற்ற இடங்களுக்கும் 'டேன்பெட்' மூலமாகத்தான் உரம் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த நிறுவனத்திற்கென்று தனியாக லாரிகள் இல்லை. அதனால

ஒப்பந்தக்காரர்கள் மூலமாகத்தான் உரங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அந்த ஒப்பந்தக்காரர்களிடமும் லாரிகள் சரியாக இல்லாமல், வாடகை லாரிகளில் எடுத்துச்செல்கிறார்கள். அதனால் உரங்கள் அந்தந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு உரிய நேரத்தில் சென்றடைவதில்லை. விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் உரங்கள் கிடைப்பதில்லை. ஆகவே அந்தந்தக் கூட்டுறவு வங்கிகளே நேரிடையாக அரசாங்கம் சொல்கின்ற அந்த உரக் கம்பெனிகளில் வாங்கிக்கொள்ளலாம் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால், உரிய நேரத்தில் உரங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்க ஏதுவாக இருக்கும்.

நகைக் கடன்கள் வழங்குவதில் கமர்ஷியல் வங்கிகளுக்கும், கூட்டுறவு வங்கிகளுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. இப்போது கமர்ஷியல் வங்கிகளில் 25,000 ரூபாய் வரை சிட்டா அடங்கல் கொடுத்தால், உடனே அவர்கள் நகைக் கடனோ, பயிர்க் கடனோ கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இந்தக் கூட்டுறவு வங்கிகளில் ACL (ANNUAL CREDIT LIMIT) என்கின்ற முறை மூலமாகக் கடன் வழங்கப்படுகிறது. இதனால் இந்தக் கடன்களைப் பெறுவதற்கு ஒரு மாதத்திற்குமேல் காலதாமதம் ஆகிறது. அதுவும் மத்திய வங்கியின் அனுமதி பெற்றுத்தான் இந்தக் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஏ.சி.எல். முறைகூட மூன்று வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது. அப்படிப் புதுப்பிக்கும்போது ஏற்கெனவே இருந்த பெயர்கள் விடுபட்டுப்போனால், அவர்களுக்கு மறுபடியும் கடன் கொடுப்பதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. இதனால் இந்த ஏ.சி.எல். முறையெல்லாம் ஒழிக்கப்பட்டு, கமர்ஷியல் வங்கிகள் கடன் வழங்குவதைப்போல சிட்டா அடங்கல் கொடுத்த உடனே இந்தக் கூட்டுறவு வங்கிகளும் கடன் கொடுக்க அனுமதிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பண்ணைசாராக் கடன்கள். இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு எல்லாம் பண்ணைசாராக் கடன்கள் கொடுப்பதற்கு அனுமதி அளித்தால் நஷ்டத்தில் ஓடுகின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் மிகவும் இலாபத்தில் ஓடுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஏனென்றால் கமர்ஷியல் வங்கிகள் இந்தக் கடன்களை, அதாவது பண்ணைசாராக் கடன்களான டிராக்டர், கார், மினிவேன் போன்றவற்றை எல்லாம் கடனுக்கு நேரிடையாக வழங்குவதால் விவசாயிகளெல்லாம் கமர்ஷியல் வங்கிகளுக்குச் செல்கின்ற ஒரு நிலையுள்ளது. ஆகவே அவை இலாபம் அடைகின்ற நிலையுள்ளது. எனவே கூட்டுறவு வங்கிகளுக்கும் இப்படி



கமர்ஷியல் வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதைப்போல அதிகாரங்கள் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

50 இலட்ச ரூபாய் வரை டெபாசிட் இருந்தால்தான் இப்போப்பட்ட பண்ணைசாராக் கடன்கள் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இந்த முறையைத் தவிர்த்து எல்லாக் கூட்டுறவு வங்கிகளுக்கும், இந்தப் பண்ணைச்சாராக் கடன்கள் அளிக்க அனுமதி அளிக்க வேண்டும். நம்முடைய எல்.டி.பேங்கினுடைய கண்டிஷனைப் போல, இதற்கும் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்கள் நீண்ட நாட்களாக இரண்டு கோரிக்கைகளை வைத்துள்ளனர். அதிலே முதலாவதாக, கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கெல்லாம் வட்டி இல்லாக் கடன் மூலமாக இரு சக்கர வண்டிகள் வழங்கப்பட வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. அதனால் இந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தமிழ் நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும், அந்த வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் சம்பளத்தில் வித்தியாசம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் எல்லாக் கூட்டுறவு வங்கிகளிலும் பணியாற்றுகின்ற அத்துணைப் பணியாளர்களுக்கும், ஒரேமாதிரியான சம்பளம் இருக்க வேண்டுமென்பது அவர்களுடைய இரண்டாவது கோரிக்கை. அந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, இறுதியாக என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சில பிரச்சினைகளைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செஞ்சித் தொகுதி, விவசாயத்தையே மிகவும் நம்பியிருக்கிற தொகுதி. விவசாயிகள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. இங்கு அதிகமாக நெல் விளைகின்றது. அதனால் இந்தப் பகுதியில் ஒரு நவீன அரிசி ஆலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அன்போடு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-10

அதேபோன்று, என்னுடைய தொகுதியிலுள்ள வல்லம் ஒன்றியத்திலே கடுக்குப்பட்டு என்ற பஞ்சாயத்து, தனிப் பஞ்சாயத்தாக இருந்தும், அங்கே நியாய விலைக் கடை கிடையாது. அங்குள்ள மக்கள் மூன்று

கிலோமீட்டர் தூரமுள்ள மேல் ஒலக்கூர் என்ற கிராமத்திற்குச் சென்றுதான் பொருட்களை வாங்கி வருகிறார்கள். எனவே, அந்தக் கிராமத்திற்கு நியாயவிலைக் கடை ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, நெகனூர்பட்டி என்ற கிராமத்திற்கு பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, மொடையூர் என்ற கிராமத்தில் ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ளது. அந்த ஊரில் அடிக்கடி ஜாதிச் சண்டை ஏற்படுகின்ற நிலை இருக்கின்றது. எனவே, ஆயிரம் குடும்ப அட்டைகளை இரண்டாகப் பிரித்து, தனிக் கடைகள் அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்) :** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. நடராஜன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, செவநந்தல் என்ற கிராமத்தில் 1989-லேயே பகுதி நேர நியாய விலைக் கடை ஒன்று திறக்கப்பட்டது. ஆனால், அந்தக் கடை தற்போது இல்லை. ஆகவே, அந்தக் கடையை மறுபடியும் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், வல்லம் பஞ்சாயத்தில், மேல்சேவூர் என்பது, 5,000 பேர் மக்கட்தொகை கொண்ட ஒரு பெரிய கிராமம். இது 6 சிறிய கிராமங்களை உள்ளடக்கியது. 5,000 பேர் மக்கட் தொகையாகக் கொண்ட அந்தக் கிராமத்தில் இரண்டே இரண்டு நியாயவிலைக் கடைகள்தான் இருக்கின்றன. ஆகவே, மேலும் மூன்று நியாயவிலைக் கடைகளை, அம்மன்குளத்துமேடு, ஈச்சூர், செங்கமேடு ஆகிய மூன்று கிராமங்களில் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதியிலுள்ள ஒலக்கூர் ஒன்றியத்தில், மேல்பேட்டை என்ற கிராமம் உள்ளது. இது தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ளது. இந்தக் கிராம மக்கள் உணவுப் பொருட்களை வாங்க வேண்டுமென்றால், ஒலக்கூர் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கின்றது. இதற்கு அவர்கள் மூன்று கிலோமீட்டர் தூரம் வரை சென்று வர வேண்டியுள்ளது.



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் தயவு செய்து உரையை முடித்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவிடுகிறேன். தயவு செய்து அமருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். சந்தானம்.

***திரு. எல். சந்தானம் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நுகர்பொருள் வழங்கல் மற்றும் கூட்டுறவு மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற துறையாக இத்துறை இருக்கின்ற காரணத்தினால், எல்லோராலும் உற்று கவனிக்கப்படுகின்ற ஒரு துறையாக இருக்கின்றது. இன்றைக்கு உணவு என்பது அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த அரசு செயல்படுகின்றது. அப்படிப்பட்ட இந்த அரசு வள்ளுவன் வழிவந்த அரசு.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்."

என்று வள்ளுவர் கூறியிருக்கின்றார். ஒரு மனிதன் இரந்துதான் தன்னுடைய வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றால், அவனைப் படைத்த ஆண்டவனே கெட்டு ஒழிக என்கின்ற அளவிற்கு ஒரு சாபத்தைத் தந்துள்ளார். எங்களுடைய இயக்கத்தைத் தோற்றுவித்த தலைவர் நேதாஜி அவர்கள். இந்த நாட்டிற்குத் தந்த வாசகம் என்று. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் எல்லா செய்தித் தாள்களிலும் விளம்பரமாக வெளிவந்துள்ளது. இந்த நாட்டினுடைய சுதந்திரம் என்பது எப்படி அமைய வேண்டுமென்பதனை நேதாஜி அவர்கள் மிகச் சிறப்பாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இந்த நாட்டிற்கு வாயளவிலே சொல்கின்ற சுதந்திரம், எழுத்துரிமை, பேச்சுரிமை போன்ற சுதந்திரம் ஆகியவை மட்டும் இருந்தால் போதாது. பொருளாதார ரீதியில், சமத்துவ நிலையை ஏற்படுத்துகின்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குகின்ற ஒரு சுதந்திரமாக, ஜாதிகளை ஒழித்து, ஜாதி பேதங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சுதந்திரமாக, மத மாச்சரியங்களை ஒழித்து, மனித நேயத்தை வளர்க்கின்ற ஒரு சுதந்திரமாக அமைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய இயக்கத்தின் சிந்தனை. ஆனால், இன்றைக்கு அது நிறைவு பெற்றிருக்கின்றதா என்றால், மிக வருத்தத்தோடு, இல்லை என்றுதான் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 35 சதவிகிதம் மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. எனவே, இந்த நாட்டிற்கு சுதந்திரத்தினுடைய பலன் இன்னும் முழுமையாக வந்தடைய வில்லை என்ற நிலையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

பிற்பகல் 2-45

1977-ஆம் ஆண்டிலே, இந்த நுகர்பொருள் வழங்குதுறையின் கீழ், ஏறத்தாழ 6,30,000 டன்கள் மட்டும்தான் பொது வினியோகத் திட்டத்தின் மூலம் வினியோகிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு 18,13,000 டன்கள், மத்திய தொகுப்பிலே இருந்து எடுக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், இந்த 10 ஆண்டுகளிலே, இந்த வினியோக முறை மூன்று மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, தமிழகத்தின் ஜனத்தொகை என்பது அந்த அளவுக்கு நிச்சயமாக உயர்ந்திருக்க முடியாது. இருந்தாலும் கூட, தேவை வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படைக் காரணம், இன்றைக்கு வெளியிலே விற்கப்படுகின்ற பொருள்களினுடைய விலை அதிகரித்து விட்டதேயாகும். ஆகவே, கூட்டுறவுச் வினியோகச் சங்கங்களிலே வாங்குகிற நிலை உயர்ந்திருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது.

இந்த விலைவாசிகள் எல்லாம் உயர்வதற்கு மூலகாரணமாக இருக்கின்ற ஒன்று, உற்பத்திக் குறைவு. உற்பத்தி அதிகம் ஏற்படுமேயானால், அது பொருளாதாரத் தத்துவத்தின்படி, அந்த உற்பத்தி அதிகம் ஏற்படுகிற நேரத்தில், விலைவாசிகள் குறைகின்றன. கடந்த 2 ஆண்டுகளாக, தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்கிற வறட்சியின் காரணமாகவும், வெள்ளச் சேதத்தின் காரணமாகவும் இந்த உற்பத்திக் குறைவு ஏற்பட்ட காரணத்தினால், சற்று விலைவாசி உயர்ந்திருக்கிறது. அதேபோல், பதுக்கல் செய்கின்ற காரணத்தினாலும், இந்த விலைவாசிகள் கூடுதலாக வாய்ப்பு இருக்கிறது. அதேபோல், கடத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. இங்கே உற்பத்தி ஆகின்ற பொருள்களை, அண்டை மாநிலங்களுக்கும், வேறு இடங்களுக்கும் கடத்தப்படுகிற காரணத்தினால், இந்த விலைவாசியினுடைய உயர்வு இருக்கும். இந்த அரசு பொறுப்பேற்றவுடனே, அவற்றையெல்லாம் மிகக் கவனமாகக் கண்டு, எங்கள் பகுதியான மதுரையிலேகூட கடந்த சில நாட்களுக்கு முன்னால் சில உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்ற தகவல்கள் வந்தன; அதையெல்லாம் யார் வைத்திருந்தார்கள் என்று குறிப்பிடக்கூட



முடியாத அளவுக்கு அதைத் தேடி வருபவர்கள் இல்லை என்கிற செய்தியும் பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே, இந்த விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, இந்த அரசு மிக முனைப்பாக, பதுக்கல், கடத்தல் போன்றவற்றைக் குறைப்பதன் மூலமாக, அத்தியாவசியப் பொருள்களின் விலை குறையும் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு மத்தியில் இருக்கிற அரசு நமக்குத் தோழமை அரசாக இருக்கிற காரணத்தால், சென்ற ஆண்டுகளைக் காட்டிலும், இந்த ஆண்டு, 1,45,000 டன்கள் வழங்கியதை, 1,65,000 டன்களாகக் கூட்டி வழங்குகிறார்கள் என்கிற நிலை, மகிழ்ச்சி தருகிற நிலையாக இருக்கிறது. அதோடு, நமது அரசைப் பொறுத்தவரையிலும், ஏழையெளிய மக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகக் கூடாது என்கிற நிலையிலே, நேற்றைக்குக்கூட, நமது தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; இந்த 20 கிலோ அரிசியை எந்த நிலையிலும் குறைத்துக் தரப்பட மாட்டாது என்கிற ஒரு உத்தரவாத்தை, இந்த அவையிலே தந்திருக்கிறார்கள். அதேபோல், ரேஷன் அரிசியினுடைய விலையை ரூ.3.75-லிருந்து உயர்த்தப்பட மாட்டாது என்கிற நிலையையும் சொல்லியிருக்கிற இந்த அரசினுடைய செயல்பாடு வெகுவாக பாராட்டக்கூடிய ஒன்று.

ரேஷன் கார்டுகள் என்பது, சென்ற ஆட்சிக் காலத்திலே பல பேருக்கு வழங்கப்படவில்லை. நமது அமைச்சர் அவர்கள்கூட சொல்கிறார்கள்; 20 இலட்சம் கார்டுகளுக்கு மேல், போலி ரேஷன் கார்டுகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்று. ஆனால், உண்மையிலேயே கிராமப்புறங்களிலே இருக்கிறவர்களுக்கு ஏறத்தாழ 50 சதவிகிதம் பேருக்கு, ரேஷன் கார்டுகள் வழங்கப்படாத நிலை இருக்கிறது. நமது அரசு அதை மிக கவனமாக எடுத்துக் கொண்டு, புதியதாக ரேஷன் கார்டுகள் வழங்குகிற நேரத்தில், அவையெல்லாம் உரியவர்களுக்கு, ஏழைகளுக்குச் சென்றடைகிற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு நமது உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடும் போதுகூட, ஏறத்தாழ 40 ரூபாய் சம்பளம் வாங்குபவர்கள்கூட வறுமைக் கோட்டிற்கு மேலே வருகிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால், தற்போது ரேஷன் கடைகளிலே வேலை செய்கிறவர்கள்தான், அவர்களுக்குக் கொடுக்கிற ஊதியத்தைக் கணக்கிடும்போது, அவர்கள்தான் வறுமைக்கோட்டிற்குக் கீழே கருதப்படுகிற நிலை

இருக்கிறது. எனவே தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இந்த ரேஷன் கடை ஊழியர்களிடத்திலே கருணைகாட்டி அவர்களுடைய சம்பளத் தொகையை உரிய அளவிலே உயர்த்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று எங்கள் இயக்கத்தினுடைய சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 2-50

அதைப்போல பல இடங்களில் 1,500 கார்டுகளுக்கு மேலாக உள்ள கிராமங்களில் கூட ஒரே கடையிலே ஒரே சிப்பந்தியை வைத்து ரேஷன் பொருட்களை விநியோகம் செய்கிற ஒரு நிலை இருக்கிறது. கிராமப்புறங்களிலே வேலைக்குச் சென்றுவிட்டு வருகின்றவர்கள் 1 மணி, 2 மணிக்கு வந்து ரேஷன் பொருட்களை வாங்கித்தான் தங்களுடைய சமையலைச் செய்கிற ஒரு நிலை இருக்கிற காரணத்தினால் உரிய முறையில் அந்தப் பொருட்களை விநியோகம் செய்ய முடியவில்லை. 2,3 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள இடங்களிலிருந்துகூட வந்து உணவுப் பொருட்களை வாங்குகிற நிலை இருக்கிறது. எனவே 1,000 கார்டுகளுக்கு மேலாக இருக்கும் இடங்களிலாவது நிர்வாகச் சிக்கலை எல்லாம் தவிர்த்து உடனடியாக உரிய முறையிலே புதிய கடைகளை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கிராமங்களிலே ரேஷன் பொருட்களை வழங்குகிற நேரத்திலே 100-க்கு 100 சதவிகிதம் வாங்குபவர்கள் இருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தோடு ஏறக்குறைய 80 சதவிகிதம் மட்டும்தான் ரேஷன் வழங்கப்படுகிறது என்று எல்லா இடங்களிலும் சொல்லப்படுகிறது. கிராமப்புறங்களைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு கடுமையான வறட்சி...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளவேண்டும்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சி இருக்கிற காரணத்தினால் அங்கே இருக்கிறவர்கள் 100-க்கு 100 சதவிகிதம் நியாயவிலைக் கடைகளிலே விநியோகிக்கக்கூடிய பொருட்களை வாங்கவேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கு முழுமையாக ரேஷன் பொருட்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நமது மாற்றுத் தலைவர் அவர்கள் மிக வேகமாக இருக்கிறார்கள். இருந்தாலும் ஜனநாயக முறையிலே என்னுடைய கடமையை ஆற்றுவதற்கு தயவு செய்து ஓரிரு நிமிடங்கள் கூடக் கொடுத்தால் பரவாயில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாற்றுத் தலைவர் வேகமாக இல்லை. தலைவர் அவர்கள் சொன்ன உத்தரவை நான் கேட்டு நடக்க வேண்டும். இந்தச் சபையின் அலுவல்களை சொன்ன நேரத்திலே முடிக்கவேண்டும்.

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொறுப்பில் இருந்தவர்கள் என்ற காரணத்தினால் எனக்குச் சற்று அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருளை அடுத்து கூட்டுறவு. இந்த ஆட்சி வந்த நேரத்திலே கடுமையான வறட்சி, நமக்குச் சென்ற ஆண்டும் வறட்சி, இந்த ஆண்டும் வறட்சி என்று தொடருகின்ற காரணத்தினால் இயற்கையை நம்பி இருக்கிற ஒரு தொழிலாக விவசாயம் இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்கு ஆட்படுத்தப்படுகிறார்கள். நான் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த விளக்கக் குறிப்பிலும் கூடப் பார்த்தேன். கடந்த 10 ஆண்டுகளிலே ஏறக்குறைய எல்லா விவசாயிகளும் தங்களுடைய கடன்களை ஒழுங்காக செலுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். 1996-97-ல் தான் செலுத்தப்படாத கடன்களின் விழுக்காடு அதிகமாக வந்திருக்கிறது. ஏறக்குறைய 18% ஆக இருந்த அந்த விவசாயிகளுடைய செலுத்தப்படாத கடன்களின் விழுக்காடு சென்ற ஆண்டு மட்டும் 56% ஆக உயர்ந்திருக்கிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்த வறட்சி என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகிறது. ஏற்கனவே கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் 10,000 ரூபாய் வரை விவசாயிகளுடைய கடன்களைத் தள்ளுபடி செய்து கொடுத்தார்கள். தொடர்ந்து வறட்சி இருக்கிற காரணத்தினால்; மீண்டும் கலைஞருடைய ஆட்சி மலர்ந்திருக்கின்ற இந்த நல்ல வேளையில் விவசாயிகள் பட்டிருக்கக்கூடிய கடன்களுடைய வட்டி, அபராத வட்டியையாவது தள்ளுபடி செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாது வறட்சி பாதித்திருக்கிற இந்த நேரத்திலும் கூட்டுறவுக் கடன்களை ஜப்தி செய்கிற ஒரு நிலை இருப்பதாக நான் அறிகிறேன். அதில் ஒரு குறிப்பு சொல்லுகிறார்கள்,

5 ஏக்கருக்கு அதிகமாக நிலம் உள்ளவர்கள் 10,000 ரூபாய்க்கு மேல் கடன் வாங்கியவர்கள் மீதுதான் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வறட்சி, வெள்ள பாதிப்பு என்று வருகிறபோது 1 ஏக்கரும் ஒன்றுதான். 10 ஏக்கரும் ஒன்று தான். 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களின் நிலையும் அதுதான். 10 ஏக்கரில் விவசாயம் செய்பவர்கள் வறட்சியினால் பாதிக்கப்படுவார்களேயானால் அவர்களுக்கு அதிகப்படியான இழப்பீடு இருக்கிறது. எனவே வறட்சி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எந்தப் பாகுபாடும் இல்லாது இந்த ஜப்தி நடவடிக்கையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

*பிற்பகல் 2-55*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** நன்றி, அடுத்து திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத்துறை, நுகர்பொருள் வாணிபக் கழகம் போன்ற தலைப்புகளிலான இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகிறேன்.

கடந்த ஆண்டில் சில மாவட்டங்களில் வெள்ளச் சேதமும், அதேபோன்று தென் மாவட்டங்களில் கடுமையான வறட்சியும் ஏற்பட்டதன் விளைவாக விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் உள்ளார்கள். எனவே, விவசாயிகளின் கடன்கள் முழுவதையும் ரத்து செய்வதுதான் முறையாக இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அடுத்து கூட்டுறவு வங்கிகள். கூட்டுறவு வங்கிகளில் மேலாண்மை இயக்குனர், அதாவது எம்.டி. நியமனம் செய்து அவருக்கு உரிய ஊதியம் வழங்கக்கூடிய நிலை இருப்பதால் வங்கிகள் கடலில் போகக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. தேர்தலுக்கு முன்னால் இந்த நிலை சரிதானா என்று கேட்டால் அது சரிதான் என்று சொல்லலாம். ஆனால் தேர்தலுக்குப் பிறகு ஜனநாயகப் பூர்வமாக செயல்படுகிற கூட்டுறவு வங்கிகளிலே ஒரு அதிகாரியை திணிப்பது என்பது நியாயமாக இருக்காது. அந்தவகையிலே, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களால் சம்பளத்தைக் கொடுப்பதற்குக் கூட வாய்ப்பு இருக்காது.



எனவே அந்த எம்.டி. நியமனத்தை ரத்து செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அடுத்து பல கூட்டுறவுச் சங்கங்களில், குறிப்பாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் முறையான தேர்தல் நடைபெறவில்லை என்று சொல்லப்படுகிறது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தலை தள்ளிப் போட்டு வருவதாக சொல்லப்படுகிறது. குறிப்பாக எம்.எஸ்.722 ஆணைப்பட்டி பால் உற்பத்தியாளர் சங்கமானது பல நேரங்களில் தேர்தலை தள்ளி வைத்து இருக்கிறது. எனவே, ஜனநாயகப் பூர்வமாக அந்தத் தேர்தலை நடத்தி உடனடியாக அவைகள் செயல்படக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு மாநில தொடக்கக் கூட்டுறவு வங்கி அனைத்துப் பணியாளர் சங்கம். தொடக்கக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் முறையை எளிமைப்படுத்த வேண்டும். கிராமக் கூட்டுறவுக் கடை விற்பனையாளர்களுக்கும், நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர்களுக்கும் இணையான சம்பளத்தை, இரண்டுக்கும் வித்தியாசம் வாராத ஒரு சம்பளத்தைத் தரக்கூடிய ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பேக்கர்களது-ஏற்கனவே அந்தக் கடைகளைப் பொறுத்தவரையில் நிறைய புகார்கள் உள்ளன-சம்பள விகிதத்தை சற்று உயர்த்தினால்தான் அந்தக் குறைபாடுகள் போகும் என்று ஒரு கருத்தும் உள்ளது. எனவே அந்த பேக்கர்களுடைய சம்பளத்தை சற்று உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அருமனை வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு கட்டிடம் கட்டுவதற்கான நிதி கேட்டிருக்கிறார்கள். அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குருமத்தூர் கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் அங்கே நகை கடன் அதிகமாக வழங்க வேண்டுமென்றும், விவசாயக் கடன் அதிகமாக வழங்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அது ஏற்கனவே இலாபத்தில் செயல்படக்கூடிய வங்கியாகும். ஆனால் அதற்குப் போதுமான ஊழியர்கள் இல்லை. பல இடங்கள் காலியாக இருக்கின்றன. எனவே காலியாக இருக்கின்ற இடங்களை நிரப்புவதற்கு

அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நந்துங்காடு கூட்டுறவு வங்கிக்கும் அதே நிலைதான் இருக்கிறது. அதையும் பாதுகாக்கக்கூடிய அளவிலே அதிக அளவில் நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மார்த்தாண்டத்திலே கே.வி.டி.சி.எம்.எஸ். என்று ஒரு கூட்டுறவு அமைப்பு இருக்கிறது. அதிலே பழச்சாறு உற்பத்தி செய்கின்ற ஒரு பிரிவு நீண்டகாலமாக செயல்பட்டு வந்தது. அது தற்போது நின்றுபோய் இருக்கிறது. அதனை மீண்டும் செயல்படுத்துவதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரையில் 1992-93-ம் ஆண்டுக்கும் அதேபோல் 1994-95-ம் ஆண்டுக்கும் அதனுடைய கணக்கு விவரங்களைப் பார்க்கிறபோது ஏறத்தாழ 80 இலட்ச ரூபாய் நஷ்டம் அதற்கு ஏற்பட்டது தெரிகிறது. தணிக்கை அதிகாரிகள் கண்டுபிடித்த பிறகு, மேல் நடவடிக்கை ஒன்றும் மேற்கொள்ளப்படவில்லை. யார் அதற்குக் காரணமாக இருந்தார்களோ அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கும்போதுதான் இனி அது செயல்படுகின்ற காலத்தில் இலாபத்தில் செயல்படுவதற்கும், மக்களுக்கு அது தன்னுடைய பணியை சரியாகச் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கும்.

அடுத்து, குலசேகரத்தில் இருக்கின்ற கூட்டுறவு வங்கியில் 1996-ல் இரண்டு இலட்சம் நகை கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, பினாமியாக நகைகளை வைத்து கொள்ளையடித்து இருக்கிறார்கள். அதிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற அதிகாரிகள் செய்து வருகின்ற தவறுகளைக் கண்டறிந்து முழுமையாக அதைக் களையவில்லை என்றால், ஏற்கனவே இதற்கு முன்னால் இருந்த அதிகாரிகள் காலத்தில் இருந்த நிலைதான் தொடரும் என்ற ஐயப்பாடு நம்முடைய மக்கள் மத்தியில் ஏற்படும். அந்த எண்ணம் வராத வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு தானியப் பொது விநியோக முறையைப் பொறுத்தவரையில் எங்கே சென்றாலும் சரி, எடை குறைவாக



கொடுக்கிறார்கள் என்ற புகார் இருக்கிறது. ஏற்கனவே இது சம்பந்தமாக இந்த மாமன்றத்தில் பல தகவல்களையும், கருத்துக்களையும் சொல்லியிருக்கிறோம். முதலில் இந்த கோடவுனிலிருந்து, வெளியே போகக்கூடிய மூட்டைகளினுடைய எடை சரியாக இருக்கின்றதா என்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது குறித்து ஏற்கனவே, இங்கு ஒன்றைச் சொல்லி வந்திருக்கின்றோம். அதாவது, 5 கிலோ 12 கிலோ அல்லது 20 கிலோ என்ற உறைகளின் மூலமாக விநியோகம் செய்ய வேண்டும் என்று. ஆனால், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

அதுபோன்று, 1 கி.மீ., 2 கி.மீ. தூரத்தில் கடைகள் இருக்கின்ற பல பகுதிகள் உள்ளன. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தின் கடைசியில், ஒரு கிராமம் முழுவதும் மலைப்பாங்கான பகுதியில் இருக்கின்றது. அந்தப் பகுதியிலே மூன்று, நான்கு கி.மீ. தள்ளித்தான் கடை இருக்கின்றது. அங்கு சிவலோகம் என்ற பகுதியில் சிற்றாறு அணைக்கட்டு. இருக்கின்றது. இந்த அணைக்கட்டை தாண்டி ஒரு பகுதி. அவர்கள் கடைக்கு வர வேண்டும் என்று சொன்னால் 3 கிராமம் கணபதிக்கல். அது பெருவாரியாக ஹரிஜன மக்கள் வாழுகின்ற கி.மீ.க்கு மேலே வர வேண்டி இருக்கிறது. அந்தப் பகுதியிலே 350 குடும்ப அட்டைகள்தான் இருக்கும். எனவே, அங்கு ஒரு மாதத்திலே நான்கு தடவைகள் அரிசி வழங்குகின்ற விதத்திலே ஏற்பாடு செய்தால் திருப்திகரமாக இருக்கும். எனவே, 500 கார்டுகளுக்கு ஒரு நியாய விலைக்கடை என்று வகையிலே ஏற்பாடு செய்வது பொருத்தமாக இருக்கும் என்ற நினைக்கிறேன். அது போன்று, ரேஷன் பொருட்கள் என்றைக்கு எந்தப் பொருள் கிடைக்கும் என்ற அடிப்படையிலே விளம்பரப் பலகையினை கடைகளின் முன் வைப்பது, பொருத்தமானதாக இருக்கும்.

அதுபோன்று, சர்வக் கட்சியினரும் அதிகாரிகளும் உள்ளிட்ட கமிட்டி ஒன்றினை ஏற்படுத்துவதன் மூலம், நகரங்களிலும், கிராமங்களிலும் நியாய விலைக் கடைகளில் இருக்கக்கூடிய ஊழல்களைக் கண்டறியலாம். எனவே, எல்லாக் கட்சிகளையும், அதிகாரிகளையும் கொண்ட ஒரு கமிட்டியைச் செயல்படுத்துவதன் மூலமாகத்தான் அங்கு நடைபெறும் ஊழல்களையெல்லாம் சரிவரக் களைய முடியும்.

அதுபோல, நெல்லைக் கொள்முதல் செய்வதைப் பொறுத்தவரையில். ஏற்கனவே. மத்தியத் தொகுப்பிலிருந்து நமக்கு வருகின்ற அரிசி என்பது போதுமானதாக இல்லை. எனவே, நெல்லைக் கொள்முதல் செய்கின்றோம். அது கட்டாயக் கொள்முதல் என்ற ஒரு சித்தாந்த ஏற்பாட்டை ஏற்படுத்திக் கொண்டாலும். நம்முடைய கையிருப்பு திருப்திகரமாக இருக்கக்கூடிய அளவிற்கு அந்தக் கொள்முதல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, இந்த உணவுப்பொருட்கள் விநியோகத்திலே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பார்க்கின்றபோது ஒரு சங்கடமான நிலை என்ன என்று கேட்டால். அங்கு விநியோகிக்கப்படும் அரிசியை இரும்பு அரிசி என்று சொல்கிறார்கள். இரண்டு மணி நேரம் வேக வைத்தால்கூட அந்த அரிசியானது வேகாது. இப்படிப்பட்ட ஒரு குவாலிட்டியை அங்கே கொடுக்கிறார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய பத்மநாபபுரம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினரும் காலையிலே. நம்முடைய சபாநாயகரைச் சந்தித்து அங்கே கடைகளிலே கொடுத்திருக்கின்ற—அந்த ஒய்-30 ஒன்று—அரிசியினுடைய சாம்பிள்களைக் காட்டியிருக்கிறார்கள். அவர்களும் உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

(உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் அரிசி சாம்பிள்களைக் காட்டினார்).

ஒன்று பச்சரிசி, ஒன்று புழுங்கல் அரிசி. இதை எப்படி உணவாக எடுத்துக்கொள்ள முடியும் என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாகப் பாதிக்கப்படுகிற கல்குளம் தாலுக்கா விளவங்கோடு தாலுக்கா. அங்கே போகின்றபோது. கடல் ஓரத்திலே இருக்கக்கூடிய மக்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், எங்களுக்கு மற்ற அரிசி ஒன்றும் வேண்டாம், எங்களுக்கு வேண்டியது புழுங்கல் அரிசி என்று சொல்லுகின்றார்கள். அதுபோன்று மலைப்பகுதிக்குப் போனாலும், அவர்களும் இதையே





தான் கேட்கிறார்கள், புழுங்கல் அரிசிதான் வேண்டும் என்கிறார்கள். எனவே, இவைகளையெல்லாம் நல்ல முறையிலே விநியோகம் செய்வதற்கான ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வெளி மார்க்கெட்டிலும் போய் வாங்க முடியாது. ரூ.14, ரூ.16 என்கிற நிலை இருக்கிறது. எனவே, இந்த வகையிலே அந்த மாவட்டத்திலே, அரிசி வழங்குவதிலே ஒரு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாலே, கட்டாய ரேஷன் சம்பிரதாயம் என்ற ஒரு நிலை அந்தப் பகுதியிலே இருந்து வந்தது. அந்தக் காலத்திலே நல்ல அரிசியைப் போட்டார்கள். இன்னும் அதற்கு மேலே நான் சொல்லப்போனால், அந்த மாவட்டத்திலே நெல் கொள்முதல் கிடையாது. பழைய காலத்திலே 1947-க்கு முன்னாலே, வெள்ளைக்காரனுடைய ஆட்சிக் காலத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே உற்பத்தியாகின்ற நெல் பூராவும் அந்தப் பகுதி மக்களுக்கு போதுமானது என்ற ஒரு விதி இருந்தது. ஆனால், இன்றைய நிலை என்னவென்றால், அங்கே உற்பத்தியாகக் கூடிய நெல்லை அங்கே இருக்கின்ற சாதாரண மக்களுக்கு கையிலே கிடைக்கவே முடியாமல் இருக்கிற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதைக் குறிப்பிடும் அதே வேளையில் நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய எல்லை ஓரப்பகுதியிலே இருக்கின்ற கடத்தல் குறித்துச் சொல்லவேண்டுமென்றால், இது சம்பந்தமாக மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே, அந்தப் பகுதிக்கு வந்திருக்கும்போது செக் போஸ்ட் எல்லாம் பார்த்தார்கள். அவர் பார்த்த நேரம் விடியற்காலை 4 அல்லது 4.30 மணி இருக்கும். அப்போது அங்கே என்ன நிலையிருந்தது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே குறுக்கு கம்பு கூட போடப்படாத சூழ்நிலையில் திறந்தே இருக்கக்கூடிய ஒரு நிலையிருந்தது. அரிசி போனாலும் பரவாயில்லை அது உணவுக்கு பயன்படுகிறது. எனவே, அதைப் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால், அதன் பெயராலே, மிகப் பெரிய கொள்ளைகள் இந்த செக் போஸ்ட்டுகளிலே நடந்து வருகின்றன. எனவே, அது உணவுப் பொருட்களானாலும் சரி, கடத்தல் பொருட்களானாலும் சரி, மணலானாலும் சரி, இவைகள் எல்லாம் கடத்தப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது.

பிற்பகல் 3-05

ஆகவே, செக்போஸ்ட், அனைத்திலும் நல்ல அதிகாரிகளை நியமித்து, முழுமையாகக் கண்காணிக்கின்ற ஏற்பாட்டைச் செய்கின்ற போதுதான் இந்த வினியோக முறையிலே வருகின்ற கோளாறுகளைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று கூறி, என்னுடைய சுருக்கமான உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு.சுப. தங்கவேலன்.

***திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெறுகின்ற கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்பொருள் சம்பந்தமாக மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளில் பேசுவதில் நான் பெருமையும், பூரிப்பும் அடைகிறேன். காரணம், கூட்டுறவு என்றால் என்னவென்று தெரியாத பருவத்தில், பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய மத்திய கூட்டுறவு வங்கியினுடைய பெருந்தலைவராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு, தமிழ்நாட்டிலே மிகப் பின்தங்கிய நிலையிலே இருந்த அந்த வங்கியை, இன்னும் சொல்லப்போனால், இராமநாதபுரம் மாவட்டத்தில் தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி செயல்பட முடியாது. அதைக் கலைத்துவிட்டு மீண்டும் மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியோடு அதை இணைத்துவிடலாம் என்று செயற்குறிப்புகளை ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்திருந்த அந்த காலக் கட்டத்தில், அதனுடைய தலைவராகப் பொறுப்பேற்று, வறட்சியான அந்த மாவட்டத்தில், இரண்டு ஆண்டு காலத்தில் மிகக் கடுமையாக உழைத்து, எந்த நோக்கத்திற்காக இந்த வங்கியிலே நம்முடைய தலைவர் அவர்கள் நம்மை அமர்த்தியிருக்கிறார்கள் என்ற அவருடைய உள்ளுணர்வைப் புரிந்துகொண்டு, கடுமையாக உழைத்து இரண்டாண்டுக் காலத்தில் இந்தியாவிலேயே சிறந்த வங்கியாக அதை மாற்றியமைத்து, அதனுடைய விளைவாக சிங்கப்பூரிலிருந்து ஜப்பான் வரைக்கும் உள்ள கிழக்காசிய நாடுகள் முழுமைக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அனுப்பி வைத்தார்கள். அதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்து, அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்கள், நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்ட அந்தக் காலக்கட்டத்தில் சிதைந்து போயிருந்தன. மிகப்பெரிய நிலச்சுவான்தாரர்கள் கையில் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. ஒரு தாலுக்காவை எடுத்துக் கொண்டால், அங்கே Taluk Co-operative Union என்ற ஒரு கூட்டுறவு ஒன்றியம் இருக்கும். அதிலே 18 அல்லது 20 சங்கங்கள் இருந்தால், அதிலே இரண்டு அல்லது மூன்று சங்கங்களைக் கையிலே வைத்துக்கொண்டு, அந்தக் காலகட்டத்திலே அந்தச் சங்கம் ஓவர் டியூ ஆகிவிடாமல் பார்த்துக் கொள்வார்கள். காரணம், அந்த இரண்டு, மூன்று சங்கங்களுடைய உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று, அதுபோல பல்வேறு அமைப்புகள் சேர்ந்து மத்தியக் கூட்டுறவு வங்கி உருவாக்கப்படும். அந்த நிலைமையை எல்லாம் மாற்றியமைத்து, சாதாரணமான விவசாயிகள் எல்லாம் அந்த—வங்கிக்கு ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள அனைவரும்—வரவேண்டும் என்று விரும்பினார்கள். அதற்குக் காரணம், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஊருக்கு ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் இருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். அவருடைய கருத்துக்களை நடைமுறைப் படுத்தினார்கள். அதன்பிறகு அமைக்கப்பட்ட சந்தானம் குழு பரிந்துரையின் பேரில் பல கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து ஒரு வயபிள் யூனிட்டாக ஆக்கி, ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால், அதில் இத்தனை ஏக்கர் நஞ்சை, இத்தனை ஏக்கர் புஞ்சை, அதனுடைய விவகார எல்லைகள் அமைக்க வேண்டும், அதிலே இவ்வளவு லேவாதேவி வரவேண்டும், ஒரு அலுவலர் இருக்கவேண்டும், ஒரு எழுத்தர் இருக்கவேண்டும், விவசாயிகள் விவரங்கள் கேட்கின்றபோது, அவர்களுக்குப் பதில் தெரிவிக்க வேண்டும், அவர்களுக்குத் துணை புரியவேண்டும் என்கிற அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் நம்முடைய தலைவர் அவர்கள் மிகக் கவனமாக, கூட்டுறவு மிகச் செழிப்பாக வளர்வதற்கு உதவியாக இருந்தார்கள்.

அன்றைக்கு செண்ட் பர்செண்ட் ஓவர் டியூவாக இருந்த சங்கங்களுக்குக் கூட புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக் கடன் வழங்கி, ஏற்கனவே கடன் பெற்றவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி, வாராக்கடன் என்று இருந்ததைக்கூட வசூல் செய்து முடித்து, இந்த மாநிலத்தில் சாதனை நிகழ்த்தி, மகாராஷ்டிராவைப் பின்னாலே தள்ளி, தமிழகத்தை, இந்தியத் துணைக் கண்டத்திலே மிகப் பெரிய கூட்டுறவாளர்கள் நிறைந்த மாநிலமாக உருவாக்கிக் காட்டிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும்.

அப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள், இடைக்காலத்தில் நம்முடைய ஆட்சி இல்லாத காலகட்டத்தில், அவற்றின் குரல்வளைகள் மீண்டும் நெறிக்கப்பட்டன. மீண்டும் 1989-இல் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடந்த சில மாதங்களில் நம்முடைய ஆட்சி கலைக்கப்பட்டு, அதன் பிறகு ஆட்சிக்கு வந்தவர்கள் ஒட்டுமொத்தமாக அந்தச் சங்கங்கள் அனைத்தையும் ஒரே நாளில் கலைத்தார்கள். நாங்களும் கோர்ட்டுக்குப் போனோம். நல்ல முடிவுகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இன்றைக்கு சில சங்கங்களுடைய உறுப்பினர்கள் முறைகேடாக உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருந்ததை நீக்கிய காரணத்தால், அவர்களை ஒட்டுமொத்தமாக நீக்கியது தவறு என்று வழக்காடு மன்றத்திற்கு, உயர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஒட்டுமொத்தமாக நீக்கியது தவறு; ஒவ்வொரு நபருக்கும் செலவைப் பொருட்படுத்தாமல் தனிப்பட்ட முறையில் பதிவு அஞ்சல், விவரங்களை அனுப்பி வைத்து தெரிவித்துவிட்ட பின்புதான் நீக்க வேண்டும்; எனவே உறுப்பினர்களை நீக்கியது தவறு; அது செல்லாது என்று இன்றைக்கு உயர்நீதிமன்றம் அறிவித்திருக்கிறது. ஆனால் ஒட்டுமொத்யாக கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் ஒரே நாளில் கலைத்தபோது. உயர்நீதிமன்றத்தில் நம்மால் நியாயமான தீர்ப்பை எதிர்ப்பார்க்க முடியவில்லை, கடந்தகால ஆட்சியில். அதனாலேயே இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் ஒரு பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

*பிறபகல் 3-10*

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் குறிப்பாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 8,033 இருக்கின்றன. அந்த 8,033 கூட்டுறவுச் சங்கங்கள்தான் இன்றைக்கு கிராமப்புறத்தினுடைய பொருளாதாரத்தை, தனி மனிதனுடைய ஆண்டு வருமானத்தை உயர்த்தக்கூடியதாக இருக்கின்றன.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, மற்ற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசக் கூடாது.

**திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 8,033 கூட்டுறவுச் சங்கங்கள் கிராமங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில், விவசாயிகளைக் கைதூக்கிவிட்டிருக்கின்றன.



கிராமப்புறத்தில் வாழ்கின்ற விவசாயிகளுடைய ஆண்டு வருமானத்தை உயர்த்திய பெருமை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உண்டு என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு விவசாயினுடைய வாழ்வில் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைவான ஒரு வாழ்க்கையைத் தந்திருக்கின்றன. அப்படிப்பட்ட பொற்காலம் நம்முடைய காலத்திலே உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, அந்தச் சங்கங்கள் சிதைந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அது சம்பந்தமாக ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் வந்த ஆட்சியாளர்கள், எந்தத் துறையிலும் வேலை வாங்கிக் கொடுக்க முடியாதவர்கள்—வேலை வாங்கிக் கொடுக்க முடியாவிட்டாலும், கமிட் செய்த காரணத்தால், அவர்களை எல்லாம் வேலைக்குக் கொண்டுபோய் சேர்ப்பதற்குரிய ஒரே புகலிடம் கூட்டுறவுச் சங்கங்கள்தான் என்று கருதி, அங்கே வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு சங்கத்தினுடைய டிரான்ஸ்சாக்ஷன் என்ன, லேவாதேவியில் எவ்வளவு மார்ஜின் வருகிறது, அந்தச் சங்கத்தினுடைய நிர்வாகச் செலவு என்ன; எந்த அனுமதியும் பெறாமல் இன்றைக்கு ஏராளமான பேர்களை வேலைக்கு அமர்த்தியிருகிறார்கள். அப்படி அமர்த்தப்பட்டவர்களுக்கு, அவர்களே வழிகாட்டியாக நின்று, லேபர் கோர்ட்டில் 12(3) செட்டில்மென்ட்டுக்காக வழக்கு போடுகிற வகையில் உதவுகிறார்கள். இன்றைக்கு அது குருவி தலையிலே வைக்கப்பட்ட பனங்காயைப் போல வந்திருக்கிறது. அதனால் பல கூட்டுறவுச் சங்கங்கள் அழிவின் பாதையிலே போய்க்கொண்டிருக்கின்றன. இவைகளைச் சீரமைப்பதற்கு நமக்கு புதிய சிந்தனை வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால் அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளம்-சங்கத்தினுடைய இலாபத்தையும் விழுங்கி, அசலையும் விழுங்கி, உறுப்பினர்கள் செலுத்தியிருக்கக்கூடிய பங்குத் தொகையையும் மேய்கின்ற அளவுக்குப் போய் பிறகு சங்கங்கள் எல்லாம் நொடிந்து போய், நலிந்துபோய், சிதைந்து போய், விவசாயிகளுக்குத் துணை புரிவதற்கு ஒரு ஸ்தாபனம் இல்லாமல் போய்விடுகின்ற அளவுக்கு இன்றைக்கு நாட்டிலே கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் கூட்டுறவுத் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. எனவே, கூட்டுறவுத் துறையை, ஒரு சிறந்த வழிகாட்டுதல் மூலமாக புதியதாகச் சீரமைத்து. சங்கத்தினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு ஒரு வழிமுறையை உருவாக்க நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்து ஏ.சி.எல். பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஆனுவல் கிரடிட் லோன்—ஒவ்வொரு ஆண்டு ஒரு கூட்டுறவுச் சங்கம் அந்த ஆண்டுக்கான மனுக்களைத் தயாரிக்கிறது. ஆனால் புதிய நடைமுறைப்படி இன்றைக்கு நம்முடைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுடைய தலைமையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நபார்டு வங்கியினுடைய அதிகாரிகள், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் அதிகாரிகள், பல்வேறு அதிகாரிகள், வேளாண்மைத் துறை அதிகாரிகள், கூட்டுறவுத் துறை அதிகாரிகள், கூட்டுறவு வங்கியின் அதிகாரிகள் இத்தனைபேரும் கூடி அமர்ந்து கிரடிட் பிளான் தயார் செய்கிறார்கள். இந்த ஆண்டுக் கடன் திட்டத்தை அவர்கள் தயார் செய்த பிறகு, அதே வேலையை சங்கத்தினுடைய அளவில் மீண்டும் ஒரு முறை செய்து நேரத்தை விரயமாக்க வேண்டிய அவசியம் இல்லை. அந்த நேரத்தில், சங்கங்களுடைய பணியாளர்கள் டெபாசிட் சேகரிப்பது போன்ற பணிகளில் ஈடுபடலாம். இன்றைக்கு கிராமப்புறங்களில் உள்ள சங்கங்கள், நகை பேரில் கடன் கொடுக்கின்றன. இது சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும், அந்த ஆண்டுக்கான மனுக்களைத் தயார் செய்கிறது. அதன்பிறகு, கிராமத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு கடன் கொடுப்பதைக்காட்டிலும், அந்த விவசாயிகளுக்கு எவ்வளவு நஞ்சை நிலம் இருக்கிறது; எவ்வளவு புஞ்சை நிலம் இருக்கிறது; அவனுடைய நில வளம், நீர் வளம் என்ன, நீர் ஆதாரம் என்ன; எந்த கிராப் பயிரிடப் போடுகிறான்; அந்தக் கிராப்பை எவ்வளவு ஏக்கரில் பயிரிடுகிறான்; எவ்வளவு வருமானம் வரும் என்பதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஒவ்வொரு விவசாயிடமும் அவன் வைத்திருக்கக்கூடிய நிலத்தின் விஸ்தரிப்பின் அடிப்படையில் பயிர் சாகுபடி செய்கின்ற தன்மை இவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு 'கேஷ் கிரடிட்' காசுக் கடனாக அளித்து, ஒரு பாஸ் புத்தகத்தை விவசாயினுடைய கையில் கொடுத்துவிட வேண்டும்.

அந்த வங்கிக்குச் செல்ல வேண்டும். அந்த வங்கிக்குச் சென்று ஒரு விவசாயிக்கு என்ன தேவை ஏற்பட்டாலும் அந்தப் பணத்தை அவன் எடுத்துக்கொள்ள வேண்டும்; அவனுக்கு திருப்பிச் செலுத்துகின்ற வாய்ப்பு வருகின்றபோது, திருப்பி அதை போட்டு வைக்கக்கூடிய அளவிற்கு இடைப்பட்ட காலத்தில் அந்த வட்டி வீதத்தைக் கணக்கிட்டு, வங்கிகளிலே கணக்கிட்டுக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் ஒவ்வொருவருடைய கையிலேயும் ஒரு பாஸ்புத்தகத்தைக் கொடுத்துவிட



வேண்டும். இதிலே ஒரு சிக்கல் வரலாம். நாம் விவசாய உற்பத்திக்கு கடன் தருகின்றோம். அவர்களை வேளாண்மைத் தொழிலில் ஈடுபட வைக்கின்றோம். *(மணியடிக்கப்பெற்றது.)*

*பிற்பகல் 3-15*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** *மாண்புமிகு உறுப்பினர் தயவுசெய்து ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.*

**திரு.சுப. தங்கவேலன்:** எனவேதான் அவர்களுக்கு ரீ-பேயிங் கெப்பாசிட்டி வருகிறது. உற்பத்தி அல்லாத செலவினங்களுக்கு அவன் எடுத்த பணத்தை செலவழித்துவிடுவானே என்று சொன்னால், அப்போது அவர்களுக்கு எல்லாம் நிச்சயமாக ரீ-பேயிங் கெப்பாசிட்டி வராது என்று அந்தத் துறை கருதுவார்கள் என்று சொன்னால், ஒரு ஐந்தாண்டுக் காலம் கடனை வாங்கி, தவணை தவறாமல் யாரெல்லாம் செலுத்தி இருக்கின்றார்களோ, அப்படிப்பட்டவர்களுடைய கணக்கை எடுத்துக்கொண்டு, ஒரு 25 சதவீதம் ஒவ்வொரு சங்கத்திலும் கேஷ் கிரடிட் முறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரே ஒரு கோரிக்கை. இன்றைக்கு நாட்டு மக்களிடத்திலே இருக்கிற பிரச்சினை என்கின்ற முறையிலேயும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலே இந்த சட்டப் பேரவையிலே அறிவிக்கப்பட்ட குழுவில் நானும் ஒரு உறுப்பினர் என்கின்ற முறையில், இந்த நுகர்பொருள் சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். இங்கே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பிலே தரப்பட்டு இருக்கின்ற புத்தகத்தின் கடைசியில் ஒரு பட்டியலையே தந்து இருக்கிறார்கள். 1978-ஆம் ஆண்டிலிருந்து 1996-ஆம் ஆண்டு வரைக்கும் நம்முடைய மாநிலத்திலே விளைச்சலுக்கு ஏற்றவாறு அவ்வப்போது போனஸ் தருவதைப் போல 8 கிலோ விரும்பியவர்கள் பச்சரிசி வாங்கிக் கொள்ளலாம், 3 கிலோ பச்சரிசி வாங்கிக் கொள்ளலாம், 5 கிலோ பச்சரிசி வாங்கிக்கொள்ளலாம் என்று ஒவ்வொரு காலக்கட்டத்திலேயும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே பல்வேறு விவரங்களைத் தந்து இருக்கிறார்கள். ஆனால், எந்தக் காலத்திலேயும் அரிசியின் அளவைக் கொடுத்துவிட்டு, அது நிரந்தரமாக இருந்தது இல்லை என்பதை நாமெல்லாம் உணர முடிகிறது. விளைச்சல் வருகின்றபோது அதிகமாகத் தருகின்றோம். நம்முடைய தேவை இன்றைக்கு 2¼ லட்சம் மெட்ரிக் டன் அரிசி. நம்முடைய

தமிழ்நாட்டிலே உச்சபட்சமாக கொள்முதல் செய்தால் கூட, நாடு முழுவதும் விளைந்தால்கூட, 12 லட்சம் மெட்ரிக் டன் தான் கொள்முதல் செய்ய முடியும். நம்முடைய தேவைகளுக்காக பஞ்சாப் மாநிலத்திலேயும், மத்தியப் பிரதேசத்திலேயும், ஆந்திரப் பிரதேசத்திலேயும் நாம் கொள்முதல் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். அப்படியே கொள்முதல் செய்து அங்கே அரிசி கிடைத்தால்கூட, அதைக் கொண்டுவருவதிலே வேகன்கள் கிடைக்காமல் கஷ்டங்கள் ஏற்படுகின்றது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நம்முடைய நாட்டிலே கடந்த ஆட்சியிலே ஏதோ அதிகமான அளவிற்கு அரிசி கொடுக்கப்பட்டதாகவும், நம்முடைய தலைவருடைய ஆட்சி வந்த பின்னர் அரிசியினுடைய அளவைக் குறைத்துவிட்டதாகவும் ஒரு மாயையை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்த அந்த 4½ ஆண்டுகளிலே அவர்கள் கொடுத்தது பழைய 12 கிலோ அரிசி தான். 12 கிலோ அரிசிதான் தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால், 1992-லும், 1993-லும் மட்டும் அதாவது பொங்கலுக்கு மட்டும் 3 கிலோ பச்சரிசி கூடுதலாக வழங்கி இருக்கின்றார்கள். 4 ஆண்டு 6 மாதம் 12 கிலோ அரிசியைத் தந்தவர்கள் கடைசியாக தேர்தல் வருகிறது; தேர்தல் கமிஷன் தேதியை அறிவிப்பதற்கு முன்பு, அவர்கள் அந்த அரிசியை உயர்த்திக் கொடுத்து விட வேண்டுமென்று கருதி, எந்தவிதமான அரசு ஆணையும் பிறப்பிக்கப்படாமல் ஒரு கோப்பிலே கையெழுத்துப்போட்டு, 20 கிலோ அரிசி என்று கொடுத்தார்கள். அப்போது அரிசி 12 கிலோவிலிருந்து 20 கிலோ கொடுப்பதற்கு அரசு கிடங்கிலே என்ன ஸ்டாக் இருந்தது? ஒரு கார்டுக்கு கூடுதலாக 8 கிலோ கொடுத்தால் எவ்வளவு வரும் என்றெல்லாம் கணக்குப் பார்க்காமல், கண்மூடித்தனமாக அந்த நேரத்திலே தேர்தலில் வாக்காளர்களைக் கவருவதற்காக அறிவிக்கப் பட்டது. ஆனால், அவர்கள் அதைக் கொடுத்தது 5 மாதம். ஆனால் இன்றைக்கு ஏறத்தாழ 10 மாத காலம்—நம்முடைய கிடங்குகள் காலியாக இருந்த நேரத்தில், இங்கே மாண்புமிகு அமைச்சர்கள் இரண்டு பேரும் அமர்ந்து இருக்கிறார்கள்; ஒருவர் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்த மாண்புமிகு முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அருமை அண்ணன் தங்கபாண்டியன் அவர்கள்; இந்த இடைப்பட்ட சிக்கலான காலக்கட்டத்தில ஆந்திர மாநிலத்திலேயும், மத்தியப் பிரதேசத்திலேயும் கொள்முதல செய்து கொண்டு வந்து, 10 மாத காலம் 20 கிலோ



அரிசியை உச்சபட்சம் தொடர்ந்து கொடுத்து—தமிழ்நாட்டில் அரிசி இருப்பு வைத்துவிடாமல், தேர்தலுக்காக ஒரு சித்து விளையாட்டைச் செய்து ஒரு ஆட்சி வெளியேறியதற்குப் பிறகுகூட, இடைவெளி ஏற்பட்டு விடாமல் கிடங்குகளை நிரப்பிய அந்த ஆற்றல் இருக்கிறதே, அது அருமைச் சகோதரர் நேரு அவர்களைச் சாரும்; நான் மத்திய வங்கியின் தலைவராக இருந்தபோது நம்முடைய தலைவர் அவர்கள் அங்கே நடைபெற்ற பொன் விழாவிற்கும் புதிய கட்டிடத் திறப்பு விழாவிற்கும் வந்து என்னைப் பாராட்டியபோது சொன்னார்கள்; என்னுடைய தம்பி தங்கவேலன் நல்ல ஆற்றலும் ஆர்வமும் இளமைத் துடிப்பும் கொண்டவன் என்று என்னைப் பாராட்டினார்கள்; அந்தத் தலைவன் சொன்ன வார்த்தைகள் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத்தான் பொருந்தும் என்று சொல்கிறேன்; இந்த இளமையோடு இருக்கும் உணவு அமைச்சர் அவர்கள் அவ்வப்போது முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையைப் பெற்று, துறை அலுவலர்களின் துணை கொண்டு எங்கே கொள்முதல் செய்தாலும்,—மத்தியப் பிரதேசத்தில் போபாலில் இருந்து மதுரைக்குச் செல்லும்; திருநெல்வேலிக்குச் செல்லும்; சென்னை வந்து மத்திய அமைப்பிலிருந்து அது பிரித்து அனுப்பப்படுவது இல்லை. நேரடியாக ஒரு மாத இருப்பு எப்படியும் ஒவ்வொரு மாவட்டத்திலும் வைத்தாக வேண்டுமென்று ஒரு விரதம் பூண்டதைப் போல அடுத்த அறுவடை நேரத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றார்களே, அதுதான் இந்த மாநிலத்தில் யாருக்கும் தெரியாமல், பத்திரிகைகளுக்கும் தெரியாமல், பிற அரசியல் கட்சிகளுக்கும் தெரியாமல், அவர் கடந்து வந்திருக்கிற பாதை இருக்கின்றதே, கரடுமுரடான முட்கள் நிறைந்த பாதையை அவர் தாண்டி வந்து, அறுவடை சீசனுக்குக் கொண்டு வந்து, நாட்டு மக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறாரே, அவரை இந்த மாமன்றத்தில் நான் பாராட்டுவதற்கு, அவருடைய உழைப்புக்கு நன்றி செலுத்துவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 3-20

இங்கே அரிசி விலை குறைத்துத் தரப்படுகிறது என்று சொன்னார்கள். 3 கார்டுகள் எப்படித் தரப்படுகிறது, எங்கே என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். கேரளாவிலே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** 15 நிமிடத்திற்கு மேல் நீங்கள் எடுத்துக்கொண்டு விட்டீர்கள். ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

[1997 மார்ச் 26

**திரு. சுப. தங்கவேலன்:** நாம் கொள்முதல் செய்கிற ஆந்திராவிலும் நம்மால் கொள்முதல் செய்யப்படுகிற மத்தியப் பிரதேசத்திலும் உள்ள உணவு அமைச்சர்கள் எல்லாம், எப்படி தமிழ்நாட்டில் ரூ. 3.75-க்கு அரிசியைத் தருகிறீர்கள் என்று கேட்கிறார்கள்? ரூ. 9.75 அடக்கம் ஆகிறது. எங்களிடத்திலிருந்து அரிசி வாங்குகிறீர்கள். நாங்களே ரூ. 5.75-க்கு தருகிறோம். ஆனால் நீங்கள் எப்படி ரூ. 3.75-க்குத் தருகிறீர்கள் என்று, மத்தியப் பிரதேசத்தில் வழக்கறிஞராகவும் உணவுத் துறை அமைச்சராகவும் இருக்கக்கூடிய அவர்கள் எல்லாம் எங்களை ஆச்சரியத்தோடு வினவினார்கள். அவர்தான் கலைஞர் என்று நான் விளக்கத்தைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நம்முடைய சிஸ்டம் தான் பெஸ்ட் சிஸ்டம். இதைக் கம்பேர் செய்வதற்கு சிஸ்டமே கிடையாது. மத்தியப் பிரதேசத்தில் இப்போதுதான் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அங்கே இந்தத் திட்டத்தின் வயதே இரண்டுதான். பெட்டேடார் என்ற அதிகாரி, தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்துப் பார்த்து, நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனின் திட்டங்களைப் பற்றி அறிந்து, தெரிந்து, நம்முடைய கொள்கைப் புத்தகங்களை எல்லாம் வாங்கிக் கொண்டுபோய், இன்றைக்கு அந்த மாநிலத்தில் அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆந்திராவில் நாம் கொள்முதல் செய்கிறோம். அங்கே இன்றைக்கு 3 கார்டு இருக்கிறது. அங்கேகூட இந்த அளவுக்குக் குறைத்துக் கொடுப்பதில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலேயே இங்கே நம்முடைய தமிழ்நாட்டில்தான் அதிக அளவு, உச்சபட்ச அரிசி 20 கிலோ தருகிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** பேசியது போதும். உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறை, உணவுத் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்தை நான் இங்கே இந்த அவையின் முன்னாலே வைக்க விரும்புகின்றேன்.

"வாடித்தொழிலின்றி வறுமையால் சாவதெல்லாம்

கூடித்தொழில் செய்யா குற்றத்தாலே"

என்று பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் சொல்வார்கள். கூட்டுறவுத் துறையினுடைய இன்றியமையாமையை





வலியுறுத்துவதற்காகச் சொல்லப்பட்ட பாடல் வரிகளே அவை. அதேபோல, "உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்" என்பது நமது இலக்கிய வழக்கு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதியம் அறுகலை உணவை அளித்து இங்கே உறுப்பினர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டியிருக்கிறார்கள். முதற்கண் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதனையடுத்து, கடந்த ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுத் துறையினுடைய குரல்வளையானது நெரிக்கப்பட்டு, ஜனநாயகமே கேலிக்கு ஆளான சூழ்நிலையில் குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்த கூட்டுறவுத் துறையினுடைய செயல்பாடுகளை, 'ஆக்சிஜன்' செலுத்தி, 'சலைன்' போட்டு, இன்றைக்குத் தேர்தல் நடத்தியதன் மூலமாக. அதனைச் சிறப்பாக இயங்கச் செய்கின்ற அளவுக்கு வழிவகைகளைச் செய்திருக்கின்ற மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் இந்த நேரத்திலே பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் வணங்கிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே பல தவறுகள் நடந்திருக்கின்றன. அந்தத் தவறுகளைப் பற்றி இந்த மாமன்றத்திலேயும் பேசப்பட்டு விட்டன. கூட்டுறவுக் கடைகளில் நேரடியாகப் பொருட்களைக் கொள்முதல் செய்யலாம் என்ற அந்த விதி இருப்பதைப் பயன்படுத்தி மயானக் கூரைகளிலிருந்து இலவச வேட்டி சேலை வரைக்கும் நடைபெற்ற பல ஊழல்கள், பல தவறுகள் இருந்தாலும், அந்தத் தவறுகளில் எல்லாம் சம்பந்தப்பட்டுள்ள பல அதிகாரிகள் இன்னமும் நழுவிய மீனிலே நழுவிய மீனைப்போல தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 3-25

ஆக, இதுவரையிலும் நாம் கேள்விப்பட்டது போலி ரேஷன் அட்டைகளைப் பற்றி மட்டும் தான் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் போலியான பல கூட்டுறவுச் சங்கங்களைக் கடந்த ஆட்சிக் காலத்திலே உருவாக்கி, அதன் மூலமாக இத்தகைய ஊழல்களை எல்லாம் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், வரலாற்றிலே, உண்மையிலேயே இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கின்றபோது, வேதனையும், வெட்கமும் படக்கூடிய அளவிற்குத்தான் இருக்கிறது. இந்தத் துறைகளிலே நடைபெற்றிருக்கின்ற ஊழல்களை விசாரிக்கிறபோது, துறை சார்ந்த அலுவலர்களை வைத்தே விசாரிக்கின்ற காரணத்தினாலே, இன்னும்கூட

பல உண்மைகள், பல ஊழல்கள் வெளிவராமல் தடுக்கப்பட்டிருக்கிறதோ அல்லது மறைக்கப்பட்டு வருகிறதோ என்ற அச்ச உணர்வானது எங்களைப் போன்றவர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் இருப்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக பல ஊழல்கள் நடைபெற்றிருந்தாலும், இதுவரையிலும் கேள்விப்படாத ஒரு ஊழல், ஆனால் கடந்த ஆட்சியிலே நடைபெற்றது, முந்திரி ஊழல். மூடிமறைக்கப்பட்ட முந்திரி ஊழல். 1995-96- ஆம் ஆண்டிலே சுமார் 500 கோடி ரூபாய்க்கு முந்திரி வாங்குவதற்கு அங்கே தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமானது அதற்கான முயற்சியிலே இறங்கி, அந்த உரிமையை ஒரு தனியாருக்கு விட்டு, அதிலே முந்திரியே அந்த நிறுவனத்திற்கு வராமலேயே, வெறும் பில்கள் மட்டுமே வந்து, சில பல நாட்களுக்குப் பிறகு அந்த முந்திரியானது கெட்டுப்போய் விட்டது. பூரணம் பூத்துவிட்டது என்றெல்லாம் காரணம் காட்டப்பட்டு, அந்த முந்திரியை நீங்களே விற்றுவிடுங்கள் என்று அவர்களுக்கே அந்த அனுமதியைக் கொடுத்து, 500 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட அந்த முந்திரியானது 400 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டு, அதிலே பலகோடி ரூபாய்கள் ஊழல் செய்யப்பட்டிருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், ஏற்கெனவே அந்த 500 கோடி ரூபாய்க்கு முந்திரி வாங்கப்பட்டபோது சுமார் 13 கோடி ரூபாய்க்கு ஊழல்கள் நடைபெற்றிருப்பதாக பத்திரிகைகள் எல்லாம்கூட எழுதின. ஆனால் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, நடைபெற்ற இந்த ஊழலானது, இன்றைய வரையிலே சரியான முறையில் விசாரிக்கப்படவும் இல்லை. அதற்கு, தவறு செய்த அதிகாரிகளின் மீதோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் மீதோ நடவடிக்கையெடுத்து தக்க தண்டனை வழங்கப்பட்டதாகவும் எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இதற்கு ஒரு (குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 'டான்பெட்' நிறுவனம் மூலம் முந்திரி வாங்கியதில் ஏற்பட்ட ஊழல், சென்ற ஆண்டு என்னுடைய கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது தெளிவாக இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டு அது தொடர்பாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு ஏறக்குறைய 25 பேருக்குமேல் அந்தத் துறையிலே



இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அது தவிர, இது முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களுடைய தனிப்பார்வைக்குச் சென்று 'விஜிலன்ஸ் கமிஷன்' மூலமாகவும் தற்போது அது ஆய்வில் இருக்கிறது. பெரிய அதிகாரியும் இன்றைக்கு இடைநீக்கம் செய்யப்பட்டு, பதவியிலிருந்து இறக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து கடுமையான நடவடிக்கைக்கு அந்தத் துறையில் நான் இருந்த காலத்திலும் சரி. மாண்புமிகு அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் பொறுப்பேற்ற பிறகும் சரி, நடவடிக்கை கடுமையாக எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த மாமன்றத்திற்கும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும்கூட நான் மீண்டும் இதிலே வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்று சொன்னால், இதிலே இன்னும் சில அதிகாரிகள் விடுபட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் இதிலே முழுமையான விவரங்களை அறிவதற்காக, இந்த வழக்கை சி.பி.ஐ. யிடம் விட்டால்கூட நலமாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். ஆகவே, இதிலே தவறு செய்தவர்களைக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டியது அவசியம் என்பதை நான் இதன்மூலமாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற இந்த சில முறைகேடுகளை வெளிவராமல் தடுக்கக்கூடிய வேலைகளைச் சில அதிகாரிகளே செய்வதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அதற்குக் காரணம், நம்முடைய கூட்டுறவுத் துறையிலே மிக அதிகமான அளவிற்கு ஊழியர்கள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஏனைய மாநிலங்களிலே இல்லாத அளவிற்கு இங்கே கூட்டுறவுத் துறையிலே அரசு ஊழியர்களாக அதிகமான அதிகாரிகள் இருந்தும்கூட ஒரு முறையான நடவடிக்கை, தவறு செய்தவர்கள் மீது இல்லாமலிருப்பது இங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டிற்காக, மேற்கு வங்காளத்திலே அரசு ஊழியர்களாக கூட்டுறவுத் துறையிலே இருப்பவர்கள் 1,200 பேர்கள்தான். கேரளத்திலே 1,600 பேர்கள். ஆந்திராவிலே 2,500 பேர்கள். மகாராஷ்டிராவிலே 3,000 பேர் அதிகாரிகள். ஆனால் தமிழ்நாட்டிலோ இந்த அரசு அதிகாரிகள் கூட்டுறவுத் துறையில் 9,000 பேர் இருக்கிறார்கள். இந்த அதிகாரிகள் அவர்கள்

சோதனையிடுவதற்கு மற்ற மற்ற வேலைகளுக்கு செல்கிறபோது அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் அவர்களுக்குரிய டி.ஏ. டி.ஏ., எல்லாம் வழங்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, இப்படி பல்வேறு நிதி நெருக்கடிகளுக்கு அந்த கூட்டுறவுச் சங்கங்கள் ஆளாவதற்கு காரணம் இந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதும் ஒரு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஆகவே, இந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கையைக் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும். அவர்களை வேறு துறைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

*பிற்பகல் 3-30*

ஏன் இதைக் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் இத்தகைய அதிகாரிகளால் ஏற்பட்ட நன்மைகளைவிட பல நேரங்களில் தீமைகள் தான் விளைந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்கிறேன். இந்தத் துறையைச் சேர்ந்த ஊழியர்களிலே பலபேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக இந்தக் கூட்டுறவுத் துறையின் தனி அதிகாரிகளின்கீழ் வேலை செய்கிற ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வருகிறபோது, அந்த நிலுவைத் தொகையைப் பெற்றுத் தருகிற நேரத்திலே அது ஊழியர்களுக்குப் போய்ச் சேராமல் அந்தத் தனி அதிகாரிகளே போட்டு எடுத்துக் கொண்டதாக பல இடங்களில் புகார்கள் இருக்கின்றன. அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அதிகாரிகள் வீடு கட்டிக் கொண்டார்கள். அந்த ஊழியர்களுக்கு அந்த ஊதிய உயர்வினுடைய அரியர்ஸ்-நிலுவைத் தொகை கிடைக்கவில்லை என்பது பரவலான குற்றச்சாட்டு என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைக்கு அந்த அதிகாரிகள் தப்பித்துக் கொள்வதற்கான வழியாக இருப்பது — சொல்வார்களே, ஈசனாலே என்றைக்கும் 16 என்று வரம் பெற்ற மார்க்கண்டேயன் எமனது பாசக் கயிற்றிலிருந்து தப்பியது போல இந்த அதிகாரிகள் எந்த ஆட்சி மாறினாலும் அவர்கள் அந்தத் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்கிற ஒரு சூழ்நிலையைத் தான் இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

எடுத்துக்காட்டாக எனக்கு வந்த தகவலை வைத்துக்கொண்டு நான் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு



வர விரும்புகிறேன். காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கியிலே 1994-95 கடந்த ஆட்சி காலத்திலே இதரச் செலவினங்கள் என்று சொல்லி 1.24 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதாக காட்டப்பட்டது. அந்தச் செலவு என்னவென்று சொன்னால், ஜே.ஜே. டி.வி.க்கு விளம்பரம் **கழிப்பறைக்குக்கூட குளிர்சாதன வசதி பொருத்தப்பட்டதற்கான செலவுகள் என்றெல்லாம் காட்டப்பட்ட வகையிலே ஊதாரித்தனமான செலவுகள் செய்யப்பட்டதற்கு அடிப்படை காரணமே அதிகாரிகள்தான் என்பது உண்மையான குற்றச்சாட்டாகும். ஆனாலும்கூட அந்த அதிகாரிகள்மீது இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. அதைப்போல நீங்கள் பார்க்கிறபோது இன்றைக்கு அந்த காஞ்சிபுரத்தில் ஒரு 3 அடுக்கு மாடி கட்டியிருக்கிறார்கள் அந்த மத்தியக் கூட்டுறவு வங்கிக்காக.... (குறுக்கீடு).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேராசிரியர் அவர்கள் பேசுகிறார்கள் எனக்கு ஒன்றும் பிரச்சினையில்லை. ** போட்டுக்கொள்ளுங்கள் தயவுசெய்து **சொன்னதெல்லாம் வேண்டாம். பத்திரிகையிலே வந்தால் அசிங்கமாக இருக்கும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ஆமாம், அந்த ** எல்லாம் அவைக் குறிப்பிலே ஏற வேண்டாம்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ** என்பது நல்ல தமிழ்ச்சொல். இதிலே தவறு ஒன்றும் இருப்பதாக நான் கருதவில்லை. பத்திரிகையிலே வந்தது. நான் ஒன்றும் அதிலே தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி அகற்றுங்கள். நான் பிரச்சினைக்கு வருகிறேன். அதிலே திருத்திய மதிப்பீடு 40 இலட்சம் ரூபாய் என்று போட்டார்கள். ஆனால் இது தெருக்கூத்து என்று ஒரு வாரப் பத்திரிகையிலே இதுபற்றி விவரமாக எழுதப்பட்டது. ஆனால் இதுவரை அந்த அதிகாரி ஒரு விசாரணைக்குக் கூட உட்படுத்தப்பட்டாரா என்பது தெரியவில்லை. இதைவிட இன்னொரு செய்தி, தணிக்கை அதிகாரிகளே தவறு என்று சுட்டிக்காட்டி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

---

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் கொண்டஞ்சேரி என்ற இடத்தில் இருக்கக்கூடிய அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே மத்திய கூட்டுறவு வங்கியிலேயிருந்து பணம் பெற்றிருக்கிறார்கள். பெறப்பட்ட பணமானது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கொண்டஞ்சேரியிலே....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** ** என்ற அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்க வேண்டாம். அதை நீக்கிவிடுகிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** ** என்று நீங்கள் திருத்திக் கொள்ளலாம். ஆக இந்த மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து பெறப்பட்ட பணமானது தொடக்கக் கூட்டுறவு வங்கிக் கணக்கிலே வராமலேயே ரூ. 53 லட்சம் இன்றைக்கு ஏப்பம் விடப்பட்டிருப்பதாகக் குற்றச்சாட்டு இருக்கிறது. ஆகவே, இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். இப்படி பல தவறுகள் சில அதிகாரிகள் செய்து அவர்கள் இந்த ஆட்சியில் இன்னும் விசாரிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணமாக நான் ஒன்றை நினைக்கிறேன். அதிகாரிகள் ஒருவேளை மோசடி செய்பவர்களுக்கு கூட அவர்கள் மீது ஒரு பாசப்பிணைப்புடன் ஏதாவது இரக்கம் காட்டி விடுகிறார்களோ என்ற ஒரு அச்ச உணர்ச்சி என்னைப் போன்றவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அந்தத் தவறை தயவு செய்து திருத்திட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கூட்டுறவு வங்கி ஊழியர்களுடைய பென்சன் திட்டமானது இன்றைக்கு தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு வழங்குவதைப் போல அதாவது, ஊழியர்களுடைய சம்பளத்திலே இரண்டரை சதவீதமும், நிர்வாகத்தின் சார்பாக இரண்டரை சதவீதமும் இப்படியாக பிடித்துவந்த பென்சன் நிதியானது உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு அதன் மூலமாக பென்சன் தொகை வழங்கப்படுகிறது.

பிற்பகல் 3-35

அதேபோல 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் அந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொளகிறேன். இதன் மூலமாக 7,300 மாவட்ட மத்தியக் கூட்டுறவு

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



வங்கி ஊழியர்கள் பயன் அடைவார்கள். இதிலே மதிப்பிற்குரிய முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. முருகராஜ் அவர்களாலே நிறுவப்பட்ட அந்தச் சம்பளம் மற்றும் பணிநிலை சீரமைப்புக் குழு அளித்த பரிந்துரையின்படி பென்சன் வழங்கப்படுமேயானால் அது அந்த மத்தியக் கூட்டுறவு வங்கியிலே பணி செய்கின்ற ஊழியர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு அமல்படுத்தப்படுகின்ற அந்தப் பென்சன் திட்டத்தைப் போல முதல் கட்டமாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து அந்தத் துறையிலே இருக்கக்கூடிய சுமார் எண்பதாயிரம் பேர்களுக்கும் அது வழங்கப்பட்டால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதையும் அதிலே அரசுக்கு எந்த வகையிலும் நஷ்டம் அதாவது பொருளாதார செலவு, சுமையில்லை என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள், 13-8-1996-லே இந்த அவையிலேயே அறிவித்திருக்கிறார்கள். மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுடைய சம்பளம் மற்றும் பணிநிலை சீரமைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட குழுவினுடைய அறிக்கை — முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி முருகராஜ் அவர்களுடைய தலைமையிலே ஏற்படுத்தப்பட்ட குழுவின் அந்த அறிக்கையானது முழுமையாக ஏற்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலே அந்தக் கோரிக்கை முழுமையாக ஏற்கப்படவில்லையென்று சொல்லப்படுகிறது. அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால்—30 ஆண்டுகளுக்கு பிறகுகூட அவர்களுக்கு பதவி உயர்வு இல்லாமல் இருக்கிறது. 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெயிட்டேஜ் தருவார்கள். அந்த மாதிரியான ஊதிய உயர்வுகூட இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கேட்பதெல்லாம் 15 ஆண்டிற்கு ஒருமுறையாவது அந்தத் துறையில் பணியிலே இருப்பவர்களுக்கு ஒரு பதவி உயர்வு தரக்கூடாதா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்):** 15 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது. தயவுசெய்து வேறு விஷயம் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுக்கலாம்......

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** கடைசியாக, எனவே அந்த ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். ஊதிய உயர்விலேகூட பாரபட்சங்கள் காட்டப்படுகிறது. மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு

1991-ல் 17 சதவிதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்ட போது நகர கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 12 சதவீதம் வழங்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் இடைப்பட்ட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு 10 சதவிதம்தான் வழங்கப்பட்டது. 1989-ல் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அதே 10 சதவிதம் வழங்கப்பட்டதுதான் 5 ஆண்டுகள் பொறுத்தும் வழங்கினார்கள். எனவே விலைவாசி என்பது அவர்களுக்கு மட்டும் ஏறவில்லையா என்பதை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற அளவுக்கு அதற்கு எற்றாற்போல மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுத் துறையிலே கடன் வழங்குகிறபோது மூன்று அடுக்கு முறையானது இரண்டு அடுக்கு முறையாக மாற்றப்பட வேண்டுமென்று கோரிக்கையை பலரும் வைத்தார்கள். நானும் அதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதன்மூலமாக விவசாயிகளுக்கு, அதாவது மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளை மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியினுடைய கிளைகளாக மாற்றினால் ஏறத்தாழ 12½ சதவீதமாக வசூலிக்கப்படுகின்ற வட்டியானது 10½ சதவீதமாகி அது விவசாயிகளுக்கு ஏறத்தாழ இரண்டு சதவீத வட்டியானது குறைகின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது. எனவே விவசாயிகளுக்கு நன்மை தருகின்ற இந்தச் செயலை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். சமவேலைக்கு சம ஊதியம் இன்றைக்குத் தரப்படுவதில்லை. நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்துகின்ற அந்தக் கடைகளின் மூலமாக 5 சதவீத உணவுப் பொருள்கள்தான் வழங்கப்படுகிறது.

## (மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற உறுப்பினர் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேசவேண்டும். (சிரிப்பு) உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். அதுதொட்டு 95% விநியோகமானது கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் கடைகளின் மூலமாகத்தான் நடைபெறுகிறது. ஆகவே தயவுசெய்து இதிலே மூவாயிரம் ரூபாய் நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே இருக்கிற ஊழியர்கள்



பெறுகிறபோது கூட்டுறவுச் சங்கத்திலே இருக்கக்கூடிய அளவையாளர்களுக்கு எண்ணூறு ரூபாயும், காசாளர்களுக்கு தொள்ளாயிரம் ரூபாயும் என்று இருப்பது மிகப்பெரிய ஏற்றத்தாழ்வாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-40

அதேபோல் இந்த மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தச் சட்டத்தினை நீங்கள் ஏற்றுக் கொள்கிறபோது, அதிகாரிகளுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்துகிற வகையிலேயும், அதிலே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய அதிகாரத்தின் செயல்பாட்டிற்குப் பாதுகாப்பு அளிப்பதைப் போலவும் கூட்டுறவு மாதிரிச் சட்டமானது இருக்கிறது. எனவே, அந்தத் தன்மை கெடாத அளவிற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பரிந்துரைகளை ஏற்கிறபோது, அதனுடைய உயிர்நாடித் தன்மையானது கெடாத அளவிற்கு நீங்கள் அந்தப் பரிந்துரைகளை ஏற்று, கூட்டுறவுத் துறையினை மேலும் செம்மைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

பெரும்பாலும், ரேஷன் கடைகளிலே உள்ள ஊழியர்கள் பாதிக்கப்படுவதற்குக் காரணமே, அதனைச் சோதனையிடுகின்ற அதிகாரிகள் 10 வகையான அதிகாரிகள் மேற்பார்வை செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றுத் தலைவரே உங்களுக்கு ஒரு நிமிடம்தான் என்று சொன்னார். நான் வந்து 5 நிமிடம் ஆகிவிட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அதிலே 10 வகையான அதிகாரிகள், மாவட்ட விநியோக அதிகாரி, கூட்டுறவு அதிகாரி, தொழிலாளர் துறை அதிகாரி, புட் செல் அதிகாரி, பறக்கும் படை அதிகாரி என்று இப்படி 10 விதமான அதிகாரிகள் செல்லுகிறார்கள். அவர்கள் கார்களிலே போகிறார்கள். அந்தக் கடைக்காரர்களிடம் 100-ஐக் கொடு, 200-ஐக் கொடு என்று கேட்கிறார்கள். அதனாலே, அந்தப் பணத்தை அட்ஜஸ்ட் செய்வதற்காக, சில நேரங்களிலே அந்த ஊழியர்கள் தவறுகள் செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை வருவதாக அந்த ஊழியர்களே புகார் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு

அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு நான் கொண்டு வரவிரும்புவது. தயவுசெய்து, இந்த அதிகாரிகளுடைய எண்ணிக்கையைக் குறைத்து,— அவர்கள் பதிவு செய்கிற வேலை, சங்கங்களுக்கு வந்து அனுமதி வழங்குகிற வேலை, விசாரிக்கின்ற வேலை என்று எல்லாம் இல்லாமல், இவற்றோடு மட்டும் நிறுத்திவிட்டு,—கூட்டுறவுச் சங்கங்களிலே தவறுகள் நடக்காமல் இருப்பதற்காக அனைத்துக் கட்சிகளைக் கொண்ட குழுக்களைப் போட்டு, அவைகள் கண்காணிக்கின்ற வகையிலே, இதனைச் செய்திடல் வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக மண்ணெண்ணெய்க் கடைகளிலே வழங்கப்படுகின்ற, சைக்கிள் ரிக்ஷாவிலே வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெயானது ரூ. 2.65-க்கு கூட்டுறவுத் துறை வழங்குகிறது. அதை 3 ரூபாய்க்குத்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று அரசு ஆணையே இருக்கிறது. ஆனால், அவை என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்றால், 12 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதிலேயே ஒரு நாளைக்கு பொது மக்களுக்கு 12 லட்சம் ரூபாயிலிருந்து 15 லட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவது என்னவென்றால், சைக்கிள் ரிக்ஷாக்களிலே விற்கப்படுகின்ற மண்ணெண்ணெய்க்கான விலையைக் கட்டுப்படுத்த வேண்டும், அநியாய விலைக்கு விற்கப்படுவதைத் தடுத்திடல் வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொண்டு, கடைசியாக.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கடைசியாக எதையும் சொல்ல முடியாது. அடுத்து, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறும் கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் மானியக் கோரிக்கைகள் எண் 23, 34-ல் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்ற பழமொழிக்கேற்ப கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் நல்ல நிலையில் இயங்கி மக்களுக்குச் சேவை செய்ய அயராது உழைத்தும், ஆலோசனை வழங்கியும் வரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டி நன்றி தெரிவித்து, எனது உரையைத் துவங்குகின்றேன்.



இந்தியாவில் முதன்முதலாக கூட்டுறவு மூலம் விவசாயிகளுக்கு பல நன்மைகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். கிராம கூட்டுறவு வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு 13 சதவீதத்தில் கடன்கள் வழங்கப்படுகின்றன. அதே வங்கியில் விவசாயிகள் தங்கள் நகைகளை அடகு வைத்து கடன் பெறுபவர்களுக்கு 19 சதவீத வட்டி வாங்குவதைக் குறைத்து 12 சதவீதமாக ஆக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் தங்கள் நகைகளை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வைத்தால், 12 சதவீதம் வட்டிக்குப் பணம் கொடுக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ரிசர்வ் வங்கி, நபார்டு வங்கி மூலம் 5 சதவீத வட்டிக்கு மாநிலக் கூட்டுறவு வங்கி வாங்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கிறது. மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம், தொடக்க வேளாண்மை வங்கிகளுக்கு கொடுத்து, விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்போது, 12 சதவீதம் என்பதை 9 சதவீதமாகக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கடன் பெறுவதற்கு நில உடைமைச் சான்றிதழ் கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று வரவேண்டும் என்று வங்கியில் கூறுவதாலும் அவர்கள் ஆண்டுக்கடன் விண்ணப்பம் தயாரித்து மத்திய வங்கியிடம் அனுமதி பெற்று, கடன் வழங்குவதாலும் காலதாமதம் ஏற்படுகிறது. தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நில உடைமைப் பதிவேட்டினைப் பார்த்து, கடன் வழங்குவதைப் போல கிராம வங்கியிலும் கடன்களை வழங்கினால், காலதாமதத்தைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில கிராம வங்கிகள் விவசாயிகள் கடன்களும், நகைக் கடன்களும் மட்டும்தான் வழங்கி வருகின்றன. விவசாயிகள் நலனைக் கருத்தில் கொண்டு, பண்ணைசாராக் கடன்களையும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு ஐ.ஆர்.டி.பி. போன்ற மானியத்தோடு கூடிய கடன்களையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சுமார் 20 தொடக்க வேளாண்மை வங்கிக் கட்டிடங்கள் பழுதடைந்துள்ள நிலையிலும் உர மூட்டைகளை வைக்க முடியாத நிலையிலும், அலுவலகங்கள் வாடகைக் கட்டிடத்திலும் இயங்கி வருகின்றன என்றும், வங்கிமூலம் நகைக்

கடன்கள் வழங்கப்படுவதால் நகைகளைப் பாதுகாப்பாக வைக்கவேண்டும் என்ற நோக்கத்திலும். இந்த ஆண்டே. அவைகளுக்குத் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் சோமேஸ்வரம் வங்கியிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரமுள்ள தேவன்குடி கிராமத்தில் ஒரு பகுதி நேர கடை திறக்க வேண்டுமென்றும். ஆதனூர் வங்கி மூலம் பட்டவர்த்தியில் இயங்கிவரும் கடையின் தூரம் 3 கிலோமீட்டர் இருப்பதால் துரும்பூரில் ஒரு பகுதி நேர கடை திறக்க வேண்டுமென்றும், திருப்புறம்பியம் கிராமத்தில் சுமார் 1,000 குடும்பக் கார்டுகளுக்கு ஒரே கடை இருப்பதால், அந்தக் கடைக்கும் உத்திரை கிராமத்திற்கும் இடையே 3 கிலோமீட்டர் தூரம் இருப்பதால் திருப்புறம்பியம் தெற்கு பகுதியில் ஆதிதிராவிடர் சமுதாயக் கூடத்திற்கு மற்றொரு கடையை வைத்து பொருள் வழங்கலாம் என்றும், கொத்தங்குடி கிராம அங்காடியிலிருந்து குடிதாங்கி என்ற கிராமம் 3 கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதால் குடிதாங்கியில் ஒரு பகுதி நேர கடையைத் திறக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேற்கண்ட நான்கு இடங்களிலும் கடை திறக்க வாடகை இல்லாத கட்டிடங்களை அந்தப் பகுதியில் இருப்பவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 3-45

கூட்டுறவு மூலம் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவும். கூட்டுறவில் பெரும்பாலும், தொகுப்பு ஊதியம். தினக்கூலி போன்ற பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன.

கூட்டுறவு நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்கு டிராக்டர், ஆயில் எஞ்சின் போன்ற கருவிகள் வழங்கும்போது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் வட்டி விகிதத்தைவிட குறைவாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை, நாகை-காயிதே மில்லத், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டங்களில் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நெல் கொள்முதல் செய்வதில் ஈடுபட்டுவரும் அலுவலர், உதவியாளர், வாட்ச்மேன் போன்றவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கிராம அங்காடிகளுக்கு வரும் அரிசி மூட்டைகளைத் தராசு மூலம் எடை வைத்து கடைகளில் இறக்கவேண்டும். அப்போதுதான் கடைகளில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் மக்களுக்கு எடை குறையாமல் கொடுக்க முடியும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம அங்காடிகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யும் வணிகர்கள் 200 லிட்டர் கொள்ளளவு உள்ள பேரலில் அளவு குறையாமல் கொடுக்க வேண்டுமென்றும், அப்போதுதான் பணியாளர்கள் அளவு குறையாமல் மக்களுக்கு கொடுக்கமுடியும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நகரங்களில் உள்ள குடும்பக் கார்டுகளுக்கு வழங்கும் மண்ணெண்ணெய் அளவு கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொளகிறேன்.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் மூலம் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு வீடு கட்டுவதற்கு கடனாக ரூ. 7,600-ம், மானியமாக ரூ. 1,700-ம், ஆக மொத்தம் ரூ. 9,300 வழங்குகிறார்கள். அந்தத் தொகையின் மூலம் வீடு கட்டமுடியாத நிலையினைக் கருத்தில்கொண்டு கடனாக ரூ. 20,000-மும், மானியமாக ரூ. 5,000-மும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்தில் உள்ள சகோதரர்கள், குமாரர்களுக்குத் திருமணமாகி குழந்தைகளோடு தனியாக இருப்பவர்களுக்கு தனி குடும்பக் கார்டு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் தஞ்சை, நாகை-காயிதே மில்லத், ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டங்களில் விவசாயிகளின் நெல் கொள்முதலுக்கு விலை-ஊக்கத்தொகை குவிண்டாலுக்கு ரூ. 50 என்று கொடுப்பதை ரூ. 100 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் மூலம் விவசாயிகள் - ஒரு மெட்ரிக் டன்னும், அதற்கு மேலும் கொடுக்கும் விவசாயிகள் குடும்பத்தில் யாருக்காவது விபத்து ஏற்பட்டால் அரசு ரூ. 25,000 இனாமாக வழங்குவதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யும் விவசாயிகளின் நெல்லிற்கு ஒரு மெட்ரிக்

டன்னும் அதற்கு மேலும் கொடுத்தால் அவர்களுடைய குடும்பத்தில் யாருக்காவது விபத்து ஏற்பட்டால் ரூ. 25,000 இனாமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு சென்ற ஆண்டு 50 இடங்களைத் தேர்வு செய்திருக்கிறீர்கள். அதற்கு எவ்வளவு வழங்கியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கிராம வங்கிகளில் விவசாயிகள் கடன் வாங்கி நீண்ட வருடங்களாக கட்ட முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையை உணர்ந்து முழுமையாக தள்ளுபடி செய்துகொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொது விநியோகத்தைக் கண்காணிக்க மாவட்டந்தோறும் ஒரு கண்காணிப்புக் குழு ஏற்படுத்தவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களை இந்தக் குழுவில் அங்கம் பெறச் செய்ய வேண்டும். மாதம் ஒரு கூட்டம் நடத்த வேண்டுமென்றும் நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கூட்டுறவு வங்கிகள் மூலம் அதிக தூரமாக இருக்கின்ற இடங்களில் புதியதாக கடைகளைத் திறக்க வேண்டுமென்றும், 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற பகுதிகளிலும் கடைகளைத் திறக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர்.

*பிற்பகல் 3-50*

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக இந்த மாமன்றத்தில் மானியத்தைத் தாக்கல் செய்கின்ற வாய்ப்பைத் தந்த எங்களது பாசமிகு தலைவர் அவர்களை வணங்கி, வாக்களித்த மக்களையும் நினைத்து வணங்கி, இந்த உணவு மானியக் கோரிக்கையிலே 17-க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் தந்துள்ள பல்வேறு அரிய பெரிய கருத்துக்களை உள்ளடக்கி, என் உரையை நான் துவக்குகின்றேன்.



ஒரு நாளைக்குக் குறைந்தது 5 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை ஆகியவற்றை 4 ஆயிரத்திற்கு மேற்பட்ட லாரிகளிலே ஏற்றி, 23,125 கடைகளிலே, 50 ஆயிரம் பணியாளர்களை வைத்து விநியோகிக்கின்ற பொறுப்பையும், அதேபோல் 1 கோடியே 20 இலட்சம் பேரை உறுப்பினர்களாகக் கொண்ட 11,140 சங்கங்களில் கிட்டத்தட்ட 9 ஆயிரத்து 315 கோடி ரூபாய் வரவு செலவு செய்கின்ற அந்த இரு துறைகளின் சார்பில் என்னுடைய கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன். உரையாற்றிய பல்வேறு உறுப்பினர்களும், நல்ல பல கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்கள் அத்தனையையும் நாங்கள் ஏற்றுக்கொண்டு, எவ்வப்பொழுது எல்லாம் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்க முடியுமோ, அவ்வப்பொழுதெல்லாம் நடவடிக்கை எடுப்பேன் என்ற உறுதியை முதலில் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

4-வது முறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, உணவுத் துறையின் சார்பாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற அரிசியினுடைய அளவு ஒவ்வொரு மாதமும் 2 இலட்சத்து 25 ஆயிரம் டன்கள். ஆனால், அரிசியினுடைய கையிருப்போ 2 லட்சத்து 90 ஆயிரம் டன்கள்தான். அப்படிப்பட்ட நேரத்தில் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும், உடனடியாக அரசின் சார்பாக 200 கோடி ரூபாய் மானியத்தை அதிகப்படுத்தித் தந்து, பிற மாநிலங்களிலிருந்து அரிசியைத் தருவித்து, டெல்லிக்குச் சென்றபோது எல்லாம் பிரதமர் அவர்களை நேரடியாகச் சந்தித்தும், சென்னையிலே இருக்கும்போதெல்லாம் கடிதம் மூலமும், தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டும், மத்திய தொகுப்பிலேயிருந்து மாதம் ஒன்றுக்கு 1,40,000 டன்கள் வாங்கித் தந்ததோடு மட்டும் அல்லாமல் மாதம் ஒன்றுக்கு 25,000 டன்கள் கூடுதலாக வாங்கித் தந்தும், மத்திய அரசு வெளிச் சந்தையிலே விற்கின்ற அந்த அரிசியை நமக்கு வாங்கித் தந்தும் இருக்கிறார்கள். அதோடு மட்டும் அல்லாமல் அரிசியைக் கொண்டு வருகின்ற வேகன்களுக்காக இரயில்வே துறையின் அமைச்சரோடு பேசி, ஏற்பாடு செய்து தந்தும், இப்போது இந்தத் துறையில் தேக்கமே இல்லாதவாறு 8 மாத காலமும் அரிசியைச் சீராகவும், சிறப்பாகவும் விநியோகம் செய்து கொண்டிருப்பதும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடியான தலையீட்டின் காரணத்தால்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இதிலே, சில உறுப்பினர்கள் எடுத்துரைக்கும்போது நல்ல அரிசியாக எங்களுக்குத் தரவேண்டும், எங்களுக்கு பச்சை அரிசி தரவேண்டும் என்றார்கள். சில உறுப்பினர்கள் எங்களுக்கு புழுங்கல் அரிசி தரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே வலியுறுத்தினார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலே மிகவும் கருப்புக் கலரிலே அரிசியைத் தருகிறார்கள் என்று எடுத்துரைத்தார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒவ்வொரு மாதமும் மத்திய தொகுப்பிலேயிருந்து வருகின்றபோது ஒரு இலட்சத்து 65 ஆயிரம் டன்கள் அரிசியிலே ஒரு சில நேரங்களிலே இதுபோன்ற வகையான அரிசி வருவதுண்டு. அப்படி வருகின்ற அரிசி உடனடியாக மாற்றித் தரப்பட வேண்டும் என்று துறையின் சார்பாக அறிவுறுத்தப்பட்டு இருந்தாலும், தேவையானபோது மாற்றிக்கொள்ளலாம் என்று சில ஊழியர்கள் செய்கின்ற தவறினால் பல நேரங்களில் இதுபோன்ற காரியங்கள் நடைபெற்று விடுகின்றதே தவிர, உள்ளபடியே இந்த அரிசியை வழங்க வேண்டும் என்று இந்த அரசு எப்போதும் நினைத்ததும் இல்லை. அதுபோல் நடந்ததும் இல்லை.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆந்திராவிலிருந்து வாங்கப்பட்ட அரிசி, இதுவரை பொது விநியோகக் கடைகளிலே வழங்கப்பட்ட அரிசியைவிட மிக நல்ல அரிசியாக இருந்த காரணத்தால் ஒவ்வொரு மாதமும் 1 இலட்சத்து 90 ஆயிரம் டன்கள் 'ஆஃப் டேக்' செய்து, அந்த அரிசியின் தரத்தின் காரணமாக 2 இலட்சத்து 25 ஆயிரம் டன் வரைகூடும் அரிசி விநியோகிக்கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரிசியினுடைய ஒவ்வொரு மாதத் தேவை, மே மாதம் 1996-ல் ஆரம்பித்தது 1 இலட்சத்து 95 ஆயிரம் டன்கள். ஆனால், டிசம்பர் மாதத்திலே அதனுடைய தேவை மொத்தம் 2 இலட்சத்து 13 ஆயிரம் டன்கள். அதை நாங்கள் வழங்கியிருக்கிறோம். இப்படி அரிசி கொள்முதல் செய்து விநியோகம் செய்திருந்தாலும்கூட, இன்றைக்கு அது போதுமானதா, அது தொடர்ந்து சரியான முறையிலே மக்களுக்கு வழங்கப்பட முடியுமா என்று பார்த்தால், அது இயலாது. அதனால்தான் கடந்த 3 ஆண்டுக்காலமாக — இங்கு உரையாற்றினார்களே மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் : ஏகபோக கொள்முதல் திட்டத்தை இங்கு துவக்கி நிரந்தரப்படுத்தாத தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று சொன்னாரே அப்படி அந்த 3 ஆண்டுக்காலம்— அந்தத் தொழிலாளர்களுக்கு எந்த பணி வாய்ப்பும் தரப்படவில்லை. எந்தவிதமான சம்பளமும் தராமல் இருந்த தொழிலாளர்களுக்கு



வாய்ப்பும் அளிக்க வேண்டும் அதே நேரத்தில் பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு ஏகபோக கொள்முதல் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் அறிமுகப்படுத்தினார்கள். அதிலே நமக்கு எஸ்டிமேட்டட் டார்கெட் 9 இலட்சம் டன் நாம் சம்பா பருவத்திலே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்றும் 1 இலட்சம் டன் குறுவை பருவத்திலே கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று குறியீடு வைத்து செய்ததிலே 1 இலட்சத்து பதினோராயிரம் டன் குறுவைப் பருவத்திலும் சம்பா பருவத்திலே நேற்றோடு 9 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-55

இதிலே பல மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைத்தார்கள். விவசாயிகளுக்கு விலை சரியாகத் தரவேண்டும் என்று. விவசாயிகளுக்கு விலையை நல்ல முறையிலே கூட்டித்தர வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் 35 ரூபாய் மானியத்தை 50 ஆக உயர்த்தினார். 50 ஆக உயர்த்தியதோடு மட்டும் அல்லாமல் தரக்கட்டுப்பாடு 15 ரூபாய் என்று இருந்ததை 5 ரூபாயாகக் குறைத்தார்கள். ஆக மொத்தம் விவசாயிகளுக்கு ஒரு குவிண்டாலுக்கு 60 ரூபாய் வரை கூட்டித் தந்திருக்கிறார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இது ஒருசில இடங்களிலே போதாது என்று விவசாயிகள் நினைத்தாலும் போன மாதம் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலே இருக்கின்ற விவசாயிகள் எங்கள் துறையினுடைய அதிகாரிகளைச் சந்தித்து இங்கும் நீங்கள் நேரடி கொள்முதல் நிலையங்களைத் தொடங்குங்கள். வியாபாரிகள் நீங்கள் கொள்முதல் செய்கின்ற விலையைவிட குறைவாக இங்கு கேட்கிறார்கள் என்று சொன்னவுடன் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்திலும் இன்றைக்கு நேரடி கொள்முதல் நிலையம் தொடங்கப்பட்டது. அதன் காரணமாக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்தது. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற நிலைமை.

இப்படி நெல் கொள்முதல் திட்டத்திலே 9,00,000 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு - 9,00,000 டன் நெல்லாக இருக்கும் என்றால் 6,84,365 டன் அரிசியாக இருக்கும். அரிசியாக்கப்படுமே யானால் - ஆனால் இன்றைய அரிசி இருப்பு 1,76,350 டன் அரிசியாகவும் மீதம் நெல்லாகவும் இருக்கிறது. இது அடுத்த 4, 5 மாதங்களுக்கு மிகச்

[ திரு. கே. என். நேரு ] [1997 மார்ச் 26

சிறப்பாக இந்தத் திட்டத்தை நடத்துவதற்கு போதுமான அளவுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்வதிலே பெருமையடைகிறேன்.

வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யும்போதுகூட ஊழலற்ற நேர்மையான நாணயமான முறையை கடைபிடிக்க வேண்டும் என்று முதல்வர் அவர்கள் அறிவுறுத்தி 20-க்கு மேற்பட்டவர்கள் டெண்டர்களிலே பங்கு பெற்றிருந்தாலும் அந்த 20 பேரையும் அழைத்து வைத்து நேராகப் பேசி அவர்கள் 20 பேரும் ஒப்புக்கொண்டு அரிசியை வழங்கியிருக்கிறார்கள். அதுவும் 2 லட்சம் டன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று டெண்டர் விடப்பட்டிருந்தாலும் 2,46,000 டன் வரை ஆந்திரப் பிரதேசத்திலிருந்து கொள்முதல் செய்திருக்கிறோம். இன்றைக்கு பஞ்சாப் மாநிலத்திலிருந்து 1,50,000 டன் அரிசி கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அரிசியை அதிகமான அளவுக்கு இங்கு கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு பிற மாநிலங்களிலிருந்து திறந்த ஒப்பந்தப்புள்ளி கொள்முதல் செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இந்தத் துறையின் சார்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சிறப்பான அளவிற்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பொது விநியோக முறையிலே இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் இங்கு சொன்னார்கள். 3 கலர் கார்டுகள் வழங்கப்படுவதை மக்கள் ஏற்கவில்லை என்று சொன்னார்கள். இல்லை. அனைத்து மக்களும் வரவேற்றிருக்கிறார்கள். அதிலே சொன்னார்கள் 15,000 ரூபாய் வருமானம் என்றால் அந்த 15,000 ரூபாய் வருமானத்திற்கு அதிகமாகத்தான் அனைவருமே இருக்கிறார்கள். ஒரு சாதாரண ஏழை விவசாயக் குடும்பம் அல்லது தினக்கூலிக்காரர்கள்கூட தினமும் 40 ரூபாய் சம்பளம் வாங்கும்போது அவர்கள் எல்லாம் எப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே வருவார்கள் என்ற ஒரு கேள்வியைக் கேட்டார்கள்.

இந்த அரசினுடைய 3 கலர் கார்டினுடைய சிஸ்டம் விற்பனை வரி செலுத்துகின்றவர்கள், வருமான வரி செலுத்துகின்றவர்கள் 10,000 ரூபாய்க்கு மேல் அதிகமான வருமானம் பெறுகின்றவர்கள் அல்லது விவசாய வருமான வரி செலுத்துகின்றவர்கள் இந்த 4 பேர்களுக்குத்தான் அரசே பச்சைக் கார்டுகளைத் தந்து அவர்களுக்கு அரசே அரிசி இல்லை என்று சொல்லி விடுகிறது. இன்றைக்கு ஒரு சாதாரண அரசு அலுவலர்கூட 15,000 ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுகிறார்.



1997 மார்ச் 26 ] [ திரு. கே. என். நேரு ]

அவர்களுக்கெல்லாம் எப்படி அரிசி கிடைக்கும் என்று இங்கு சொன்னார்கள். அந்த 4 பேர்கள் விற்பனை வரி, வருமான வரி மற்றும் விவசாய வருமான வரி, 10,000 ரூபாய்க்கு மேல் இருக்கின்றவர்களைத் தவிர தமிழ்நாட்டில் இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் அரிசி வாங்க உரிமை உண்டு. அதிலே, 15,000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள் இன்றைக்கு சென்னையிலே கணக்கு எடுத்துப் பார்த்தபோது 17 இலட்சம் குடும்பக் கார்டுகளுக்கு நாம் கணக்கு எடுத்துப் பார்த்தபோது 50%-க்கு மேலானவர்கள் இன்றைக்கு குறைவாகத்தான் எழுதித் தந்திருக்கிறார்கள். மீதம் இருக்கின்றவர்கள் தான் விருப்பம் முறையை தேர்வு செய்திருக்கிறார்கள். அரிசி தேவை என்றால் அரிசியாகவும், அப்படி அரிசி தேவையில்லை என்றால் அவர்களுக்குக் கூடுதலாக மண்ணெண்ணெய் அல்லது சர்க்கரை வழங்கப்பட வேண்டுமென்று இந்த 3 கலர் கார்டு இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பல்வேறு இடங்களில் சென்னை மாநகராட்சி மற்றும் அனைத்து 6 மாநகராட்சிகளிலும் இன்றைக்கு பாரங்கள் தரப்பட்டு, அந்தப் பாரங்களைத் திரும்பப் பெற்று ஆய்வு செய்யக்கூடிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 4-00

அதிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக பல்வேறு இடங்களில் உள்ள குடும்பங்களில் விசாரிக்கிறபோது நீங்கள் தரப்பட்டு இருக்கின்ற பாரங்களில் அதிகமான விவரங்களைக் கேட்டு இருக்கிறீர்கள்; அது இவ்வளவு சங்கடமாக இருக்கிறது; வருகின்ற அதிகாரிகள் எங்களிடம் அதிகமான கேள்விகளைக் கேட்கிறார்கள் என்று சொன்னபோது துறையினுடைய தலைவரையும், செயலாளரையும் அழைத்து பாரங்களை நேரடியாக கையால் திருத்தி புதிய பாரங்கள் எளிய முறையில் மக்கள் விண்ணப்பிக்கின்ற இந்த பாரங்கள் திருத்தப்பட்டு இன்னும் ஓரிரு வாரங்களில் மாவட்டந்தோறும் வழங்கப்பட இருக்கின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள், தங்கள் பகுதிகளுக்குச் செல்லும்போது ரேஷன் கடைகளை, பொது விநியோகக் கடைகளை அதிக அளவில் திறக்கவேண்டும்; மக்கள் மிகக்குறுகிய அளவில் அவர்களுக்கு பயன்படத்தக்க அளவில் கடைகள் அமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியதன் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் புதிய ஆணை வெளியிட்டு இருக்கிறார்கள். 800 கார்டுகள் தான் ஒரு கடைக்கு இருக்கவேண்டும் என்றும் அப்படி 800 கார்டுகளுக்கு மேல் இருக்கின்ற கடைகளை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசின் சார்பாக உத்தரவுப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 800 கார்டுகளுக்கு மேல் 500 கார்டுகள் இருக்குமானால் புதிய கடை திறக்கலாம். 800 கார்டுகளுக்கு மேல் 500 கார்டுகள் இல்லாமல் 200 கார்டுகள் இருக்குமானால் 2 கிலோ மீட்டர் தூரத்தில் புதிய கடை திறப்பதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். 200-க்கும் குறைவாக 100 அல்லது 50 கார்டுகள்தான், குடும்பங்கள்தான் இருக்கிறார்கள் என்றாலும் கூட அவர்களுக்கும் திறக்கவேண்டும் என்ற அவசியம் மாவட்ட ஆட்சித் தலைவர் நினைபபாரானால் ஒரு ஜாதிப் பிரச்சினையோ அல்லது மிக முக்கியமான பிரச்சினையோ, மற்ற இடங்களுக்குச் செல்ல முடியாத இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நினைப்பார்களானால் அந்த இடத்திலே ஒரு பகுதி நேரக்கடைத் திறப்பதற்கு முழு அதிகாரமும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடைகளில் அதிகமான அளவுக்கு எடை குறைவாக இருக்கிறது என்பதை அனைத்து உறுப்பினர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது ஆண்டு ஆண்டு காலமாக தொடர்ந்து 15, 20 ஆண்டு காலமாக இருந்தாலும் சென்ற 5, 6 ஆண்டுக் காலத்தில் இது மிக அதிகமான அளவில் நடைபெற்று இருக்கிறது. உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடோன்கள் அத்தனையையும் சரி செய்யவேண்டும் என்று உத்தரவிட்டதன் காரணமாக இன்றைக்கு தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் சார்பில் 150 அதிகாரிகளைக் கொண்ட விஜிலென்ஸ் குழு ஏற்கெனவே இருப்பதை விட அதிகமாக நியமிக்கப்பட்டு மாதந்தோறும் இருக்கின்ற 281 குடோன்களை மாதம் ஒரு முறையாவது அவர்கள் சென்று சரி பார்க்க வேண்டுமென்று உத்தரவிட்டு இன்றைக்கு ஓரளவுக்கு சரியாக இருக்கிறது. கிட்டத்தட்ட 12, 15 அதிகாரிகள் சஸ்பென்ஷன் செய்யப்பட்டு இருக்கிறார்கள். 8 அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்தக் காரணத்தால் இன்றைக்கு குடோன்களில் எடை சரியாக இருக்கிறது.

அதேபோல் தராசு சரியில்லை என்று பல மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொனனார்கள். அதனால் துறையின் சார்பாக ஆராயப்பட்டு அத்தனை இடங்களிலும் 5 ஆண்டு காலத்திற்கு மேல்



இருக்கின்ற அத்தனை தராசுகளையும் புதிதாக வாங்கச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் வெகு விரைவில் அத்தனை இடங்களிலும் தராசுகள் புதிதாக வழங்கப்படும் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொன்னார்கள். ஒவ்வொரு இடத்திலும் சொன்னார்கள். அதிகாரிகள் அதிகமான அளவில் சென்று பார்க்கிறார்கள். அதனால் ஊழியர்கள் அதிகமான அளவுக்கு அவர்களுக்குப் பணம் தர வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். மாண்புமிகு தலைவர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் அரசு அந்த ரேஷன் கடைகளில் இருக்கின்ற பணியாளர்களை நேரடியாக அழைத்துப் பேசி உங்களுக்கு யார், யாரால் தொந்தரவு என்று கேட்டு அவர்கள் நேரடியாகச் சொன்னார்கள். அதிகாரிகளின் சார்பாகவும். அரசியல் கட்சிகளின் சார்பாகவும் அங்கே உள்ள குண்டர்கள், ரவுடிகளின் சார்பாகவும் எங்களுக்கு அதிகத் தொந்தரவு இருக்கிறது : இதையெல்லாம் நீக்கித் தரவேண்டுமென்று சொன்னபோது இந்தக் குடிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையின் சார்பாக இருக்கின்ற ஐஜி. அவர்கள் இன்றைக்கு வட சென்னைப் பகுதியில் சோதனையிட்டு 8-க்கும் மேற்பட்ட கடைகளில் இருக்கக்கூடிய ரவுடிகளைக் கைது செய்து இன்றைக்கு அந்தக் கடைகள் ரவுடிகளின் தொல்லையில்லாமல் நடைபெறுவதற்குரிய வழிவகை செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், அதிகமாகத் தவறு செய்யும் அதிகாரிகளை உடனடியாக இடம் மாற்றி இன்றைக்குப் புதிய அதிகாரிகளை நேர்வு செய்து இந்த சென்னை மாநகரில் இன்றைக்கு நியமித்து இருக்கிறோம். ஓரளவுக்கு அந்தத் தொழிலாளர்கள் சொன்ன கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றித் தந்து இருக்கிறோம் என்பதையும், அரசியல் கட்சி என்ற அளவில் யாராவது கேட்பார்களானால் நேரடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள். நாங்கள் அவர்களிடம் பேசுகிறோம் என்று அவர்களிடம் சொல்லி, இன்றைக்கு இந்த நிலைமைகளை ஓரளவு சரி செய்திருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்

பிற்பகல் 1-05

மற்றபடி, சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாநகர் மன்ற உறுப்பினர்களோ கடையிலே சென்று அவர்கள் என்ன இருப்பு இருக்கிறது என்று கேட்டால்

அவர்களுக்குக் காட்டச் சொல்லி அந்த ஊழியர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இங்கு கடைகளிலே என்ன அலாட்மெண்ட் இந்த மாதத்திற்கு, இத்தனை கார்டுகளுக்கு, இவ்வளவு பொருட்கள் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இனி ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், ஒவ்வொரு மாநகர் மன்ற உறுப்பினருக்கும் இனிவரும் காலங்களில் தெரிவிக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படித் தவறு செய்கின்ற நபர்கள் யாராக இருந்தாலும், நிச்சயமாக இந்த அரசு அவர்களுக்கு கண்டிப்பாகத் தண்டனை வழங்கியே தீரும். தவறு செய்த ஊழியர்களை மீண்டும் மீண்டும் நீங்கள் வேலையில் வைத்துக் கொள்கின்ற காரணத்தினால்தான் தொடர்ந்து இதுபோலத் தவறுகள் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். பல உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறியபோது, பல ஆண்டுக் காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்ற பணியிடங்களை நிரப்ப வேண்டுமென்று சொன்னார்கள். இது, சென்னை மாநகரம் மற்றும் தமிழகம் முழுவதும் இருக்கின்ற அத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து ஆரம்பித்து மத்திய கூட்டுறவு வங்கி, நிலவள வங்கி, இன்னும் இருக்கின்ற நமது டி.என்.எஸ்.சி. பேங்க் தலைமை வங்கி வரை காலி பணியிடங்களை நிரப்புவதற்கு, அதுவும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கு சொன்னதைப்போல இட ஒதுக்கீட்டு முறையைக் கடைப்பிடித்து, அந்த இடங்களெல்லாம் நிச்சயமாக நிரப்பப்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கு விலைவாசியைப் பற்றிச் சொன்னார்கள். அரிசியைப் பற்றிச் சொன்னபொழுது, இன்றைக்கு நான் உறுப்பினர்களுக்குக் காட்டுவதற்காகப் பல்வேறு நகரங்களிலேயிருந்து வாங்கப்பட்டு வந்த அரிசியை இங்கு மேசையிலே வைத்திருக்கிறேன். கடந்த காலம் டிசம்பர் மாதத்து விலையைவிட இன்றைக்கு மிகக் குறைவாக ஒரு கிலோவிற்கு 4 ரூபாய், 5 ரூபாய் அளவிற்கு விலை குறைந்திருக்கிறது.

காய்கறியைப் பொறுத்த அளவுக்கு, சென்னை மாநகரிலே விலை அதிகமாக இருக்கிறது என்று கூறப்பட்டதன் காரணமாக, இன்றைக்கு ஊட்டியிலிருந்து நேரடியாக விற்பனை இணையத்தின் மூலமாக -



கூட்டுறவுச் சங்கத்தினுடைய விற்பனை இணையத்தின் மூலமாகக் காய்கறி கொள்முதல் செய்யப்பட்டு, ஆங்காங்கு கடைகளின் மூலமாக - நியாய விலைக் கடைகளின் மூலமாகவும், வண்டிகளிலே தெருக்களிலே கொண்டு சென்று கொடுக்கின்ற ஒரு வகையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறோம்.

காய்கறி அங்கிருந்து வருகின்றது. 2, 3 நாட்களுக்காவது அதை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்குக் கோயம்பேட்டிலே 2,000 டன் கொள்ளளவு கொண்ட ஒரு கோல்ட் ஸ்டோரேஜ் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் காய்கறி விற்பனையையும் இன்றைக்கு இந்தத் துறை ஏற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றபடி, இங்கு விலைவாசியைப் பொறுத்த அளவிற்கு, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி, விலைவாசி குறைய மத்திய அரசு பொறுப்பு என்றாலும், மாநில அரசின் சார்பாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இங்கு பல உறுப்பினர்கள் கேட்டார்கள். வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற அந்தக் கடத்தல்காரர்களை இங்கு இந்தக் குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுத் துறையின் மூலமாக நாங்கள் பல்வேறு முறையிலே தடுத்திருக்கிறோம்.

கிட்டத்தட்ட 15 ஆண்டுக் காலமாக வியாபாரம் செய்த அந்த வியாபாரிகள் இதுவரை சிக்காதவர்களெல்லாம் சிக்கி இருக்கிறார்கள். அதிலே சில புள்ளி விவரங்களைக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

1995-ஆம் ஆண்டு ரேஷன் அரிசி 6,322 குவிண்டால்தான் பிடிபட்டது. அதிலே ரூபாயினுடைய மதிப்பு 49.98 இலட்சம் ரூபாய். இன்றைக்கு 1-1-1996 முதல் 12-5-1996 வரை 6,962 குவிண்டால்தான். அதனுடைய மதிப்பு 55 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்.

ஆனால், கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு, அன்றையிலிருந்து 23-3-1997 வரை 22,034 குவிண்டால்கள், கிட்டத்தட்ட 183 இலட்சம் பெறுமானமுள்ள அரிசியை இன்றைக்கு நாங்கள் கைப்பற்றியிருக்கிறோம். அந்த அளவிற்குத் திறமையாகச் செயல்பட்டிருக்கிறோம்.

அதேபோல, அரிசி, நெல், கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், போன்ற பொருட்கள் ஒவ்வொன்றுக்கும் கிட்டத்தட்ட அன்றையதினத்தைவிட இன்றைக்குப் பல ஆயிரம் ரூபாய் அதிகமான அளவிற்கு இங்கு நடவடிக்கை எடுத்ததன் மூலமாக இன்றைக்கு வெளி மாநிலங்களுக்குச் செல்கின்ற அந்தக் கடத்தல் தடுக்கப்பட்டிருப்பதன் காரணமாக விலைவாசிகள் ஓரளவிற்கு அரிசியைப் பொறுத்த அளவு குறைந்திருக்கிறது.

இப்படி இந்தத் துறையை மாண்புமிகு முதலமைச்சரவர்கள், அரசாணை 373-ன் படி 3-9-1996 மூலம் இந்தத் துறைக்கு, 1 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 2 ஆய்வாளர்கள், 7 சார்பு ஆய்வாளர்கள், 1 தலைமைக் காவலர்கள், 22 காவலர்கள் மற்றும் 6 ஜீப்புகள் இதையெல்லாம் வழங்கி இந்த வேலையை மிகத் திறமையாகச் செய்யச் சொல்லி உத்தரவிட்டதன் காரணமாக இந்தப் பணி நடைபெற்றிருக்கின்றது.

அதேபோல, உணவுத் துறையின் சார்பாக இங்கே பல்வேறு இலாக்காக்களை உருவாக்கித் தந்தவர் கலைஞர் அவர்கள். இன்றைக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமாக இருந்தாலும், அதேபோல நுகர்பொருள் வாணிபக் கழகமாக இருந்தாலும், பிற்பட்டோர் நலத் துறையாக இருந்தாலும். இப்படி அரசிலே சில இலாக்காக்களைப் பிரித்து செம்மையாக இந்த அரசை வழிநடத்திச் செல்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகோலியிருக்கிறார்கள். அதை தலைவர் அவர்கள்தான் செய்திருக்கிறார்கள். இதுவரை 30,35 ஆண்டு காலமாக உணவுக்கு என்று ஒரு தனி இலாக்கா இல்லையென்று அவரிடம் சொன்னபோது, நிலச் சீர்திருத்த ஆணையாளர் அவர்கள் மூலமாக ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கோரிக்கையை அவர் முன் வையுங்கள், அவர் என்ன பதில் தருகிறார் என்று தெரிந்து நாம் செயல்படுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் துறைக்கு ஒரு தனி இலாக்கா ஆரம்பிப்பதற்கு அந்த ஆய்வை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

அதேபோல, உணவு வழங்கல் துறைக்கு துணை ஆணையாளர், கூடுதல் ஆணையாளர், சென்னை முழுவதும், மாநிலம் முழுவதும்



பொது விநியோகத் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு ஒரு புதிய பதவியை உருவாக்குவதற்கு அரசு முனைந்திருக்கிறது. இப்படி இந்தத் துறையை ஆரம்பிப்பதற்கு முன்பாக இதற்கென்று ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு இந்தத் துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி அரிசி அல்லது நெல் கொள்முதல் செய்து வேண்டுமான அளவுக்கு வைத்திருந்தாலும், அரிசியை நெல்லாக மாற்றுவதற்கு (சிரிப்பு) நெல்லை அரிசியாக மாற்றுவதற்கு தனியார் துறையின் மூலமாக 205-க்கு மேற்பட்ட மில்கள் இன்றைக்கு வந்திருந்தாலும், போதுமான அளவுக்கு இருக்குமா என்றால் இல்லை. ஆனால், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நான்கு மார்டன் ரைஸ் மில்களை இந்த ஆண்டு புதுப்பித்து நவீனப்படுத்தி அதனுடைய கொள்திறனை அதிகப்படுத்துவதற்காக உத்தரவிட்டிருக்கிறார்கள். இங்கு சென்னை அளவில், சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசி, இந்தத் துறையிலே சென்னையைப் பொறுத்தளவில் எப்படி உங்களுக்குச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, 10 மண்டலங்கள்தான் சென்னையிலே இருக்கிறது. ஆனால், 11 தொகுதிகள் இருக்கின்றன. அதனால் 14 மண்டலங்களாக ஆக்கி, அசிஸ்டண்ட் கமிஷனர்கள்-துணை ஆணையர்கள் வேண்டுமென்று நமது மாண்புமிகு உறுப்பினர் கிட்டு அவர்கள் கேட்டார்கள். அதை உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொன்னபோது, சென்னையிலே துணை ஆணையர்கள் இனி 11 பேர்களாக நியமித்து மக்களுக்குப் பயன்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பார்ட்-2 ஸ்கீமில் அதை எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரித்துக் கொண்டிருக்கும்போது, இந்தத் துறையின் சார்பாக கேட்டார்கள், எவ்வளவு கிடங்குகள் உங்களுக்கு இருக்கின்றன என்று. போதுமான அளவுக்கு இருக்கிறதா என்று கேட்டார்கள். 30-க்கு மேற்பட்ட வட்டங்களில் கிடங்குகள் இன்னும் இல்லை என்றார்கள் பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்த வேண்டுமென்றால், கிடங்குகள் உங்களுக்குத் தேவையென்று சொல்லி, 90 இலட்சம் ரூபாய் செலவிலே 7 கிடங்குகள் இந்த ஆண்டு கட்டச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். அதையும் இந்தத் துறை செய்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடைகளை இன்றைக்கு நாங்கள் திறக்கயிருக்கிறோம். புதிய ரேஷன் கடைகளை, துணைக் கடைகள் இல்லாமல், புதிய கடைகளாகத் திறக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல. அனைவரும் சொன்னார்கள். மண்ணெண்ணெய் விநியோக முறையைச் சீர் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் உறுப்பினர்கள் சொன்னார்கள். 50 ஆண்டு காலமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது வாழ்விலே ஈடுபட்டு. பல்வேறு சிறப்புக்களையும். சிறந்த நிர்வாகி என்ற பெயரையும் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஏன் வெளி மாநிலங்களுக்கு ஆட்களை அனுப்பி. இங்கேயிருக்கின்ற தலைவர்களையும். துறையினுடைய அதிகாரிகளையும் அனுப்பிப் பார்க்க வேண்டும். இவரே சிறந்த முறையிலே செய்யலாமென்று சொன்னார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே சிறந்தமுறையிலே பொது விநியோகத் துறை நடைபெறுகிறதென்றால் அது தமிழ்நாட்டிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், இன்னும் இதைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று ஆந்திர மாநிலம். கேரள மாநிலம் மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குச் சென்று வந்த குழுவினுடைய அறிக்கையை இன்றைக்கு நாம் பின்பற்றி பொது விநியோகத் துறையிலே பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறோம். சீர்திருத்தங்களோடு மேலும் கூடுதலாக ஆங்காங்கே எப்படிப் பெட்ரோல் பங்க் இருக்கிறதோ. அதுபோல மண்ணெண்ணெய் பங்க்குகளை தமிழகம் எங்கும். குறிப்பாக மாநகரப் பகுதிகளிலும். தலைநகரப் பகுதிகளிலும். நகரப் பகுதிகளிலும் அமைக்கச் சொல்லி முதல் கட்டமாக உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கு அரசின் சார்பாக, ஆகக்கூடிய செலவில், 2 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் ஒரு பங்க் அமைப்பதற்கு செலவு என்றால், 50 சதவீதம் மானியமாக இந்த அரசு வழங்குகிறது என்று சொல்லி, இந்த ஆண்டு அதுவும் 31-3-1997—க்குள்ளாகவே, 10 பங்க்குகள் அமைப்பதற்காக உத்தரவு தந்ததோடு. அப்படி அரசின் சார்பாக 10 பங்க்குகளுக்கு பணம் தந்திருந்தாலும்கூட. தொடர்ந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாகவும். தொடர்ந்து அதுபோல கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாகவும். எங்கெங்கு தேவையோ அங்கெல்லாம் ஒரு வருடங்களுக்குள்ளாக அமைத்துக் கொண்டு. மீதம் இருக்கின்ற. தரவேண்டிய 50 சதவீதத் தொகையை இன்றைக்கு நீங்கள் அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்ற உத்தரவை



தந்திருக்கிறார்கள். அப்படி ஒரு சிறப்பான திட்டம் மூலம், தமிழகமெங்கும் மண்ணெண்ணெய் பங்க் இந்த ஆண்டு நடத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

அதேபோல், பொது விநியோகத் திட்டத்திலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள்—Right to Information Act —என்ற புதிய சட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே, நமது சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள். உள்ளாட்சி மன்றங்களிலேயுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இப்படி யாராக இருந்தாலும், அந்தக் கடையில் என்ன இருக்கிறது ? அந்தக் கடைக்கு என்ன ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது ? அந்தக் கடையிலே எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளக்கூடிய ஒரு உரிமை அவர்களுக்கு வழங்கப்படும். அவர்கள் கேட்பார்களானால், அந்தச் செய்தி அவர்களுக்குச் சொல்லப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு நுகர்வோர் பாதுகாப்புக்காகப் பல்வேறு சங்கங்கள் தமிழகமெங்கும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தாலும் கூட. அவர்களுக்கு இதுவரை 3,000 ரூபாய். 2,000 ரூபாய், 1,000 ரூபாய் என்று இருந்தத் தொகையை இன்றைக்கு 5,000 ரூபாய், 3,000 ரூபாய் 2,000 ரூபாய் என்று தன்னார்வ நுகர்வோர் இயக்கங்களை ஊக்குவிப்பதற்காக உயர்த்தித் தரவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன்.

நமது உணவுத் துறையைப் பொறுத்தவரையில், மிக இக்கட்டான சூழ்நிலையிலே இருந்த இந்தத் துறையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தானாகவே நேர் நின்று பல்வேறு உதவிகளைச் செய்ததன் காரணமாக இன்றைக்கு ஏழு இலட்சம் டன் அரிசி இருக்கின்ற ஒரு நிலைமைக்கு இந்தத் துறை இன்றைக்குச் செயல்பட்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு. கூட்டுறவுத் துறைக்குச் செல்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே கடந்த 10, 12 ஆண்டுகாலமாக பத்து பெருங் கொள்கைகளை வைத்து இதுவரை இந்தத் துறை நடைபெற்றுக்கொண்டு வந்தது. இந்த ஆண்டு முதல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தாழ்த்தப்பட்ட. பிற்படுத்தப்பட்ட மக்களின்

மீதும், மலைவாழ் மக்களின் மீதும், அவர்களுடைய முன்னேற்றத்தில் எப்போதும் அக்கறை கொண்டிருக்கிற காரணத்தினால், கூட்டுறவு இயக்கத்திலே அந்த பத்து பெருங் கொள்கைகளோடு, இந்த இரண்டு கொள்கைகளையும் சேர்த்து அவர்களுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கு இந்தத் துறை. இந்த ஆண்டு முதல் பயன்படும் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையின் சார்பாக 11,110 சங்கங்களில் 9,315 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் லேவாதேவி நடைபெற்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்வதிலே பெருமகிழ்ச்சியடைகிறேன். வளர்ச்சித் திட்டங்களுக்கான திட்ட ஒதுக்கீடு 1995-96-ஆம் ஆண்டு 23.62 கோடி ரூபாய். ஆனால், 1996-97-லே வளர்ச்சித் திட்டங்களுக்கான திட்ட ஒதுக்கீடு 42.6 கோடி ரூபாய். ஆனால், திட்ட ஒதுக்கீட்டைவிட கூடுதலாக 13.65 கோடி ரூபாயை இந்தத் துறை செலவழித்து இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தமிழகமெங்கும் சிறப்பாக நடைபெற வேண்டும். அப்படிச் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து உதவிகளையும் இந்த அரசு செய்ய வேண்டும் என்று இங்கே எடுத்துரைத்தார்கள். அதிலே ஊழியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துரைத்திருக்கிறார்கள். அதிலே, குறுகிய காலக்கடனாக கடந்த ஆண்டு 505 கோடியே 68 இலட்சம் ரூபாய். கிட்டதட்ட 6 இலட்சத்து 70 ஆயிரம் நபர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். நடுத்தர காலக் கடன்களுக்காக 10.6 கோடி ரூபாய். பயன் பெற்ற நபர்கள் 17603 பேர்கள். நலிவுற்ற பிரிவினர் 5 இலட்சத்து 20 ஆயிரம் நபர்கள். நகையீட்டுக் கடன்கள் கிட்டதட்ட 1,120 கோடி ரூபாய். பயன் பெற்ற நபர்கள் 11 இலட்சத்து 89 ஆயிரம் பேர்கள். இதிலே, உடனடியாகக் கடன் வழங்கும் திட்டத்திலே 268 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. பயன் பெற்ற நபர்கள் 3.83 இலட்சம் பேர்கள். இப்படி இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சார்பாக சிறப்பாகச் செயல்பட்டதன் காரணமாக இந்த ஆண்டு வைப்பு நிதி. திட்ட மதிப்பீடு வைத்தது, 30 நாட்களுக்குள்ளாக 225 கோடி ரூபாயை நாம் வைப்புநிதியாகச் சேகரிக்க வேண்டும் என்று எண்ணியபோது. 'எண்ணிய எண்ணியாங்கு' என்பது போல் இன்றைக்கு அனைத்து இடங்களிலுமே 225 கோடிக்கு மேலாக இந்தத் துறையின் சார்பில் வைப்புநிதி சேகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மிக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மட்டும் இந்த ஆண்டு 187 கோடி ரூபாய் வைப்புநிதியாக வந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 4-20

வேளாண்மை ஊரக வளர்ச்சி கூட்டுறவு வங்கி : தமிழ்நாட்டில் இந்த வங்கிக்கு நில அடமான வங்கி என்று பெயர் இருந்ததை மாண்புமிகு முதல்வர் அவர்கள், நில அடமானம் என்றால், ஏதோ விவசாயிகளை அடமானம் வைப்பதாகத் தரக்குறைவாகக் கருதுவார்கள் என்பதால், அதன் பெயரை நிலவள வங்கி என்று மாற்றி பெயர் சூட்டினார்கள். இந்த நிலவள வங்கியின் மூலம் பண்ணைசாராக் கடன் வழங்கவேண்டுமென்றும், ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கான பல திட்டங்களை இந்த வங்கியின் மூலம் செயல்படுத்த வேண்டுமென்றும் கூறியதன் காரணமாக, இந்த ஆண்டு முதல் நில வள வங்கி என்பது இனி பெயர் மாறி, ஊரக மேம்பாட்டு வளர்ச்சிக் கூட்டுறவு வங்கி-Agricultural Rural Development Co-operative Bank-என்ற பெயரில் அழைக்கப்படும்.

இங்கு கோவையைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் சொன்னார்கள். 'பொய்த்த கிணறுகளுக்கு இன்ஷ்யூரன்ஸ் மூலம் நீங்கள் பணம் தருவதைப் போல, விவசாயிகளின் பொய்த்த ஆழ்குழாய்க் கிணறுகளுக்கும் தாப்படுமா ' என்று கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நீங்கள் அங்கு கடன் பெற்று இருப்பீர்களானால், இன்ஷ்யூரன்ஸ் செய்திருப்பீர்களானால், பொய்த்த ஆழ்குழாய்க் கிணறுகளுக்கும் அந்தப் பணம் திருப்பித் தாப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று, மத்தியக் கூட்டுறவு வங்கி, நகர்ப்புற வங்கி போன்ற அனைத்து வங்கிகளிலும் என்ன குறியீடு செய்யப்பட்டு இருக்கிறதோ அந்தக் குறியீட்டுக்கும் மேலாக நாங்கள் செயலாற்றியிருக்கிறோம் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் கூற விரும்புகிறேன். இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், 17 மாவட்டங்களில் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. மீதியுள்ள 12 மாவட்டங்களுக்கு இந்த ஆண்டு முதல் அந்த ஒன்றியங்கள் புதிதாகத் துவங்கப்படும். மேலும், திருப்பூர்க்குமரன் ஒன்றியத்திற்கு அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று பல்வேறு உறுப்பினர்கள் கேட்டார்கள். அவைகள் உரிய முறையில் போர்டு மீட்டிங்கில் வைக்கப்பட்டு,

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதியைப் பெற்று, எந்த அளவுக்கு வழங்கவேண்டுமோ அந்த அளவுக்கு நிதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

'விற்பனைச் சங்கங்கள் சார்பாகவும் இங்கே சொல்லப்பட்டது. 'டான்பெட்' மூலம் அதிகமான ஊழல் நடைபெற்றதாகவும், அதில் இன்னும் சில அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் சொல்லப்பட்டது. அதற்கு விரிவான அறிக்கையைக் கேட்டிருந்தோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள்கூட சொன்னார்கள். பலகோடி ரூபாய் ஊழல் நடந்துள்ளதாகச் சொன்னார்கள். அதில் முந்திரி கொள்முதல் செய்ததில் மட்டும் 13 கோடி ரூபாய் ஊழல் நடைபெற்றுள்ளது. அதனை சரியான முறையில் விற்காத காரணத்தால், 5, 6 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது சம்பந்தப்பட்டவர்கள்மீது துறையின் சார்பாகவும், விஜிலென்ஸ் செல் மூலமாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதில் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். மேலும், யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்களானால், அரசின் சார்பாக அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க கொஞ்சம் கூட தயக்கம் காட்டமாட்டோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை சார்பாக இந்த ஆண்டு பல்வேறு அறிவிப்புகளைச் செய்யவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். உரையாற்றிய அனைத்து உறுப்பினர்களும் 'தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடங்கள் கட்டவேண்டுமென்று' சொன்னார்கள். மேலும், பாதுகாப்புப் பெட்டகமும், இரும்புக் கதவும், பாதுகாப்பு அறையும் பொருத்தப்பட வேண்டுமென்றும்கூட சொன்னார்கள். இப்போது மொத்தமுள்ள 4,589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில், 4,426 வங்கிகள்தான் பெரிய அளவில் கடன்களை அளிக்கும் வசதியைப் பெற்றுள்ளது. அதிலும் முழுமையாக இரும்புக் கதவும், பாதுகாப்புப் பெட்டகமும் பாதுகாப்பு அறையும் கொண்ட வங்கிகள் வெறும் 1,294 மட்டும்தான். 1808 வங்கிகளில் பாதுகாப்பு அறையும், பாதுகாப்புப் பெட்டகமும் மட்டுமே உள்ளன. எனவே, 2 கோடி ரூபாய் செலவில் இந்த 1,808 வங்கிகளுக்கு இந்த ஆண்டு இரும்புக் கதவுகள் பொருத்தப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மீதியுள்ள 1,324 வங்கிகளில் இரும்புப் பெட்டகம்





மட்டும்தான் உள்ளது. எனவே அவைகளுக்கு 6 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்பு அறைகள் கட்டப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகள் இன்றைக்கு கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளை அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புவதால், அவர்களுக்கு நம்பிக்கையூட்டுகிற வகையில் நாங்கள் 8 கோடி ரூபாய் இந்த ஆண்டு செலவு செய்ய திட்டமிட்டிருக்கிறோம். கடந்த 15, 20 நாட்களுக்கு முன்பு திருவண்ணாமலைக்குச் சென்றிருந்தபோது அங்கே சொன்னார்கள். 'ஒரு நபருக்கு அதிகபட்சமாக 50,000 ரூபாய்தான் பயிர்க்கடன் என்று வைத்திருக்கிறார்கள். 10 ஏக்கரில் கரும்பு பயிரிடும் ஒரு விவசாயிக்கு 50,000 ரூபாய் பற்றாமல், வேறு வங்கிகளுக்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது' என்றார்கள். இந்த ஆண்டு முதல் அரசு வழங்குகின்ற அந்தக் கடன் தொகை 10 ஏக்கர் என்றால் 80,000 ரூபாயானாலும் சரி, ஒரு லட்ச ரூபாயானாலும் சரி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டு, அதாவது 1996-97-ல் பயிர்க் கடனாக 680 கோடி ரூபாய் வழங்கப்படுவதாக குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதிலே ரூ.505.68 கோடிதான் வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு பயிர்க் கடனாக 800 கோடி ரூபாய் என்று நிர்ணயித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-25

இங்கு சில உறுப்பினர்கள் சொன்னார்கள். நகைக் கடன் ஆங்காங்கே கொடுப்பதில்லை, கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறுவதற்கு ஒரு மாத காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு நகை ஈட்டுக்கடனாக ரூ.2,000 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் ரூ.2,227 கோடி வழங்கப்பட்டது. இந்த ஆண்டு இதற்கென ரூ.2,500 கோடியென குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, நகைக்கடன் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் மூலம், நிலங்களுக்கு மட்டும்தான், விவசாயிக்கு மட்டும்தான் என்றில்லாமல், விவசாயிகள் புதிய இல்லங்களைக் கட்டிக்கொள்வதற்காக, வீட்டு மனை வாங்க 20,000 ரூபாய் கடனும், இருக்கின்ற வீடுகளைப் பழுதுபார்க்க 50,000 ரூபாய் கடனும், புதிதாக வீடு கட்டிக்கொள்ள ஒரு லட்ச ரூபாய் வரை கடனும் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1989-ஆம் ஆண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்றபோது, மின்வாரியத்தினை எனக்குத் தந்திருந்தார்கள். அப்போது தகுதி அடிப்படையில், திறமை அடிப்படையில் என்று சொல்லி பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான 'பொறியாளர்' பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இரண்டொரு நாட்களிலே, அவரிடம் இதுபற்றிக் கேட்டபோது, தகுதி திறமை என்று எதுவும் இல்லை, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள அந்த ஒதுக்கீடுகள் அவர்களைத்தான் சேரவேண்டும் என்று சொல்லி அத்தனைப் பணியிடங்களையும் உடனடியாக நிரப்ப உத்தரவிட்டார்கள். அதேபோல மருத்துவர்கள். 750 டாக்டர்களை 10(ஏ) (1)-ல் எடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்தார்கள். இப்படி கடந்த காலகட்டத்தில் செய்தார்கள். இன்றைக்குக் கிராமங்களில் அதிகமான பொறியாளர்கள், டாக்டர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் அல்லது தொழில் செய்வதற்குக் கடன் வழங்க வேண்டும், அதுவும் எளிதான முறையில் கடன் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, 75 கோடி ரூபாய் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், ஆயிரம் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறியாளர் மற்றும் மருத்துவர்களுக்கு கடன் வழங்க இந்த ஆண்டு கூட்டுறவுத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலவள வங்கி, நிலவள வங்கியின் தலைவராக தேர்ந்தெடுக்கபபடுபவருக்கு 40,000 ரூபாய் வரைதான் ஒருவருக்கு கடன் தரும் அதிகாரம் இருந்தது. இந்த ஆண்டு முதல் அந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு 1 லட்ச ரூபாய் வரை, ஒரு தனி நபருக்கு கடன் வழங்கும் அதிகாரம் வழங்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நிலவள வங்கிகளுக்கு வைப்பு நிதி சேகரிக்கும் அதிகாரம் இல்லை. காசோலை வழங்குகின்ற அதிகாரமும் இல்லை. இந்த ஆண்டு முதல் தலைமை வங்கியினுடைய அனுமதியைப் பெற்று நிலவள வங்கிகள், வங்கிகள், பணியையும் செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் 181 நிலவள வங்கிகள் இருக்கின்றன. அதில் 150-க்கு மேற்பட்ட நிலவள வங்கிகளுக்கு சொந்தக் கட்டிடம் இல்லை. அவைகள் அதிகமாக வைப்புத் தொகையும், நகைக் கடன் தொகையும் வைத்திருக்கின்ற காரணத்தால், ஒரே மாதிரி





வடிவமைப்புள்ள கட்டடங்கள் 50 இடங்களிலே இந்த ஆண்டு நிலவள வங்கிகளுக்காக கட்டப்படும் என்பதையும் நான் மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மாவட்டங்கள் எல்லாம் பிரிக்கப் பட்டிருந்தாலும், மத்திய கூட்டுறவு வங்கி 23 இடங்களில்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு திருவாரூர், கரூர், நாமக்கல்-ஐ தலைநகராகக் கொண்டு மத்தியக் கூட்டுறவு வங்கி ஆரம்பிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய கிளைகள் தமிழகமெங்கும் 644 இடங்களில் இருக்கின்றன. இன்னும் கூடுதலான வசதிகள் செய்து தருவதற்காக, மேலும் 25 கிளைகள் இந்த ஆண்டு திறக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பலவற்றிற்கு சொந்தக் கட்டிடங்கள் இல்லை. திருவண்ணாமலை சம்புவராயர், சிதம்பரனார் மற்றும் விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் ஆகிய மாவட்டங்களிலுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குப் புதிய சொந்தக் கட்டிடங்கள் இந்த ஆண்டு கட்டித் தரப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, இருக்கின்ற 644 கிளைகளிலே 214 கிளைகளுக்குத்தான் சொந்த இடங்களிலே கட்டிடங்கள் இருக்கின்றன. அந்தக் கிளைகளிலே 50 கிளைகளுக்கு, இந்த ஆண்டு புதிய இடங்கள் வாங்கி, கட்டிடங்கள் கட்டப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-30

அதேபோன்று, மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இன்றுவரை, வீடு கட்டுவதற்கு ரூ. 2 லட்சம்தான் கடனாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு முதல் வீடு கட்டுவதற்கு வழங்கப்படும் கடன் ரூ.6 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், பேருந்து மற்றும் லாரி வாங்குவதற்கு 75 சதவிகிதம் கடன் வழங்கப்படுவதுபோன்று, இனி மத்தியக்கூட்டுறவு வங்கிகளிலும், வங்கிப் பணிகள் நடத்துகின்ற அத்தனை வங்கிகளிலும், பேருந்து மற்றும் லாரி வாங்குவதற்கு 75 சதவிகிதம் கடன் வழங்க இந்த ஆண்டு முதல் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த ஆண்டு நகரக் கூட்டுறவு வங்கிகள் புதிதாக 6 இடங்களில் துவக்கப்படும். ஓமலூர், இராணிப்பேட்டை, ஓசூர் அல்லது முசிறி, ஆற்காடு போன்ற இடங்களில் ஆண்களுக்கான நகரக் கூட்டுறவு

வங்கிகள் துவக்கப்பட இருக்கின்றன. அதேபோன்று, நாகப்பட்டினம்,
சேலம் ஆகிய இரண்டு இடங்களில் பெண்களுக்கான நகரக் கூட்டுறவு
வங்கிகள் இந்த ஆண்டு தோற்றுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதேபோன்று, கூட்டுறவு ஒன்றியங்கள் 17
மாவட்டங்களில் மட்டும் இருக்கின்றன. மீதமிருக்கின்ற 12
மாவட்டங்களிலும் கூட்டுறவு ஒன்றியங்கள் அமைக்கப்படும். மேலும்,
இந்த ஆண்டு 6 இடங்களிலுள்ள கூட்டுறவு ஒன்றியங்களுக்கு ரூ.50
இலட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் கட்டித் தரப்படும். அதேபோல,
ஒன்றியத்தின் சார்பாக, திருச்சி, காமராஜர் மாவட்டங்களில்
பாலிடெக்னிக் மற்றும் ஐ.டி.ஐ. ஏற்படுத்தப்படும் என்பதையும் நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மொத்த விற்பனைப் பண்டகசாலை ஊழியர்கள் மிகவும் மோசமான
நிலையில் இருப்பதாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்
சுப்பராயன் அவர்களும் மற்றும் சில உறுப்பினர்களும் சொன்னார்கள்.
12-(3) செட்டில்மெண்ட் முடிந்து, இன்றைக்குப் புதிதாக 'வேஜ் ரிவிஷன்
செட்டில்மெண்ட்' செய்கின்றபோது, தொழிலாளர்களையெல்லாம்
அழைத்துப் பேசாமல், அவர்களாகவே செட்டில்மெண்ட் செய்து
கொண்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். துறைச்
செயலாளர் அவர்களை அழைத்துக் கேட்டபோது, அனைத்துத் தொழில்
சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசிய பிறகுதான் அந்த 'வேஜ்
ரிவிஷன் செட்டில்மெண்ட்' ஏற்படுத்தப்பட்டது என்றும், அதைத்தான்
இன்றைக்கு அரசு வழங்கிக் கொண்டிருக்கின்றது என்றும் தெரிவித்தார்.
ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், தொழிற் சங்கத்
தலைவர்களுக்கும் மனக் கஷ்டம் இருக்குமானால், மீண்டும்
அவர்களையெல்லாம் அழைத்துப் பேசுவதற்கு இந்தத் துறை தயாராக
இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தற்போது இருக்கின்ற 30 மொத்தக் கூட்டுறவு விற்பனை
சங்கங்களும் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. அவற்றில்
6 சங்கங்கள் ஓரளவிற்குச் சுமாரான நிலையில் இருக்கின்றன.
மீதமிருக்கின்ற 24 சங்கங்களும் மிகவும் நஷ்டத்திலே இயங்கிக்
கொண்டிருக்கின்றன. இச்சங்கங்கள், உறுப்பினர்கள் சொன்னதைப்போல,
60 கோடி ரூபாய்க்கு மேலே நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன.
இந்தகூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகள் ரூ.60 கோடிக்கு
மேல் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருந்தாலும், அதில் பணியாற்றும்
ஊழியர்களுக்கு ஒரு வருடம் ரூ.2 கோடியே 88 இலட்சம் ரூபாய்
அளவிற்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. 60 கோடி ரூபாய்



நஷ்டம் இருந்தாலும், அந்த ஊழியர்களுடைய நலனை பாதுகாக்க
வேண்டுமென்று இந்த அரசு அந்த ஊழியர்களுக்கு ரூ.2 கோடியே 88
இலட்சம் ஊதிய உயர்வு வழங்கியிருக்கிறது. இவ்வாறு, நஷ்டத்தில்
இயங்கிக் கொண்டிருக்கின்ற அந்தச் சங்கங்களை மீண்டும் புதுப்பித்து,
இலாபகரமாக நடத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்குக்
கொள்முதலைச் சீராக்கியிருக்கிறோம். நல்ல தரமான
பொருட்களைத்தான் வாங்க வேண்டுமென்பதற்காக, எந்தெந்தக்
கம்பெனிகளிடம் இருந்துதான் பொருட்களை வாங்க வேண்டுமென்று
நிர்ணயித்திருக்கின்றோம். அதுவும், கொள்முதலை 'சென்ட்ரலைஸ்'
பண்ணி, மேலே இருக்கின்ற கூடுதல் பதிவாளர் அளவிற்கு,
மேலோட்டமாக இல்லாமல், ஆழ்ந்து பார்த்து, இன்னென்ன
பொருட்களைத்தான் வாங்க வேண்டும் என்று செய்திருக்கின்றோம்.
தலைமை வங்கியிலே சொல்லி, அவர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய
காலக் கடனை நீண்ட காலக் கடனாக மாற்றி, அதிக வட்டியைக்
குறைத்துத் தந்து, பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்திருக்கின்றோம்.
முதற்கட்டமாக, இந்த வகையில் 6 சங்கங்களை எடுத்திருக்கின்றோம்.
கோவை சிந்தாமணி, திருச்சி சிந்தாமணி, மதுரை பாண்டியன், திருச்சி
அமராவதி சென்னை சிந்தாமணி மற்றும் கும்பகோணத்தில் இருக்கின்ற
சந்திரசேகரபுரம் கூட்டுறவு சங்கம் போன்ற சங்கங்களை எடுத்து,
அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அந்தச் சங்கங்கள்
இலாபகரமாக நடப்பதற்கு அந்த ஆண்டு, இவ்வரசால் முயற்சி
எடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-35

அதேபோல, இந்தச் சங்கங்களில் 9 ஆயிரம் தொழிலாளர்கள்
பணியாற்றுகின்றார்கள். அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும்போது,
அவர்களுக்கான சிறப்புத் திட்டமொன்றும் இந்த ஆண்டு அவர்க[illegible]க்குத்
தெரிவிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரி[illegible]த்துக்
கொள்கிறேன். அதேபோல, சென்னை மாநகரம் இன்றைக்கு பரந்து
விரிந்து இருக்கின்ற காரணத்தால், ஒரேயொரு இணைப் பதிவாளரால்
பொது விநியோகத் திட்டத்தை முழுமையாகக் கவனிக்க முடியவி[illegible]
அதை இரண்டாகப் பிரித்து வடசென்னை, தென்சென்னை [illegible]
இரண்டு இடமாகப் பிரித்து அதற்கு ஒரு கூடுதல் இணைப் பதி[illegible]ர்
போடவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு இடங்களிலே சொன்னார்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு
பொது விநியோக முறை திட்டத்திலே தரப்படுகிற விளிம்புத் தொகை
மார்ஜின் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதையும்

உயர்த்தித் தருவதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றிய அத்தனை பேருமே சொன்னார்கள். இந்த அரசுக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்றால் இந்தத் துறை சிறப்பாக நடைபெற வேண்டும் என்று சொன்னார்கள். இந்தப் பொது விநியோகத் முறை திட்டத்தை சிறப்பாக, செம்மையாக நடத்துவதற்காக பொது விநியோக திட்ட இணைப் பதிவாளர், துணைப் பதிவாளர், மேற்பார்வையாளர். அதேபோல குடிமைப் பொருள் துறையில் இருக்கிற அதாவது புட் செல்லிலுள்ள ஐ.ஜி.-யில் இருந்து ஆரம்பித்து இன்ஸ்பெக்டர் வரை அந்தத் துறையில் இருக்கிற அத்தனை பணியாளர்களுக்கும் இந்த ஆண்டு 'வயர்லெஸ்' செட் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

பல்வேறு இடங்களில் 20-க்கும் மேற்பட்ட கூட்டுறவு அச்சகங்கள் இருக்கின்றன. அந்த அச்சகங்களில் இரண்டு அச்சகங்களை மேன்மைப்படுத்தவும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், கரூர் - தீரன்சின்னமலை மாவட்டம், பெரம்பலூர் - திருவள்ளுவர் மாவட்டம், விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், நாமக்கல் - இராஜாஜி மாவட்டம் ஆகிய அந்த 5 இடங்களில் புதிய அச்சகங்களும் தோற்றுவிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். ஒரு உறுப்பினர் சொல்லும்போது ஒரே இடத்திலே 10 ஆண்டு, 15 ஆண்டுக் காலம் அங்கே இருக்கிற செயலாளர்கள் அங்கேயே பணியாற்றுகிற காரணத்தினால் அவர்கள் செய்கிற தவறுகளை எல்லாம் தட்டிக் கேட்க முடியவில்லை காரணம், அவர்களை மாறுதலுக்கு உட்படுத்தமுடியாது என்ற காரணத்தினால் தன்னிச்சையாக அவர்கள் செயலாற்றுகிறார்கள். அவர்களை மாற்றக்கூடிய அதிகாரம் இருக்குமானால் இன்னும் சிறப்பாக நலிவடைந்த சங்கங்களைச் செயல்படுத்தமுடியும் என்றும் கூறி, சரியில்லாத செயலாளர்களை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்கள். அப்படிச் சொன்னதன் பயனாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்தியக் கூட்டுறவு வங்கியின் செயலாளர் மற்றும் துணைச் செயலாளர்களை 'காமன் கேடர்களாக' கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல தொடக்க வேளாண்மை வங்கியில் பணிபுரியும் செயலாளர்களை மத்தியக் கூட்டுறவு வங்கியின்கீழ் கொண்டு வருவதற்கும் இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.



அப்படி அவர்களை 'காமன் கேடர்கள்' ஆகவும், மத்தியக் கூட்டுறவு வங்கியின் கீழும் கொண்டு வந்தால் ஒரு மாவட்டத்திற்குள்ளே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இருப்பவர்களை மாற்றுவதற்கு உள்ள அதிகாரம் வரும். எப்படியும் அந்த அதிகாரம் வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நமது கொறடா திரு. முபாரக் அவர்கள் தெரிவிக்கும்போது நீலகிரி மாவட்டத்திலே முழுமையாக அரிசி பயிரிடுவதேயில்லை அதனால் கடந்த காலத்தில் எங்களுக்குச் சிறப்புத் திட்டமாக 20 கிலோ அரிசி வழங்கினார்கள். அதைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்று கேட்டார். நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் 12 கிலோ என்றும், கூடுதலாக 20 கிலோ அரிசி வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்திற்குச் சிறப்பு என்னவென்றால் கடந்த காலத்திலே 4 கிலோ ஒவ்வொருவருக்கும் கூடுதலாகத் தரப்பட்டு வந்தது. அப்படிப்பட்ட அந்தச் சிறப்புச் சலுகை தொடர்ந்து அவர்களுக்கு வழங்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு, ரேஷன் கடையிலே பணியாற்றுகிறவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். நான் நேற்றைக்கு முன்தினம் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே கூட சொன்னேன். நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே ஒரு தொழிலாளி சேருகிறார் என்று சொன்னால் நேரடியாக அரசு ஊழியராகச் சேருகிறார். ஆனால் கூட்டுறவு ஒன்றியத்திலே பணியிலே சேருகிற பணியாளர்க்கு அந்தந்தச் சங்கத்தினுடைய வரவு-செலவுக்கு ஏற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது. அதுதான் கடந்த காலத்திலிருந்து தொடர்ந்து நடைபெற்று வருகிற முறை. ஒரு நலிவடைந்த சங்கத்திலே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு அரசுப் பணியாளர்கள் அளவுக்குச் சம்பளம் தரப்படுமேயானால் அந்தச் சங்கம் நிச்சயமாக நலிவடைந்து போய்விடும். அதனால் தான் தொடர்ந்து அப்படியே இருக்கிறது. கடந்த முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கலந்து பேசி அவர்களோடு அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் கலந்து பேசி சம்பளத்தை 100 ரூபாய் ஏற்றித்தந்தார்கள். இந்த முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று தொழிற்சங்கத் தலைவர்களையும், அங்கே பணியாற்றுகிற அதிகாரிகளையும் அழைத்துப் பேசி இதைச் சீரமைக்கலாம் என்ற கொள்கையை எடுத்துக் கொள்ளவிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரையாற்றிய அத்தனை பேரும் சொன்னார்கள். 100% பொருட்களை வழங்க வேண்டுமென்று. அப்படி 100% பொருட்களை வழங்கினால்தான்

[திரு. கே. என். நேரு] [1997 மார்ச் 26

அத்தனை மக்களுக்கும முழுமையாகப் பொருட்கள் கிடைக்கும் என்று சொன்னார்கள். 10 ஆண்டு கால ஆவரேஜ், இன்றைக்கு 97 என்றால் 1987-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுவதைப் பார்த்தீர்களேயானால் இன்றைக்கு 1½ கோடி கார்டுகள் என்றால் ஒவ்வொரு மாதமும் 2,81,000 டன் அரிசியை நாம் வழங்கியாக வேண்டும். ஆனால், ஒவ்வொரு மாதமும் அதிகபட்சமான அளவே, 2,25,000 டன் தான் வழங்கி வந்திருக்கின்றோம். அதைத் தான் மக்கள் பெற்றிருக்கிறார்கள். இந்த. 2,25,000 டன் அரிசி வழங்குவதிலேயே. 20 இலட்சம் போலி கார்டுகள் இருக்கின்றன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆனால், ஊழியர்கள், முழுமையாகத் தரவில்லை. முழுமையாகத் தரவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். மக்களுக்குத் தேவைப்படுகின்ற அரிசி. முழுமையாகத் தருவதிலே இந்த அரசு ஒரு போதும் பின்வாங்கியதில்லை. முழுமையாக அளிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-40

அதேபோல, மூன்று கலர் கார்டுகளை நடைமுறைப்படுத்தினால், 100% கொடுப்பதற்கு, இந்த அரசு தயாராக இருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு பேசிய உறுப்பினர்கள், மண்ணெண்ணெய் வழங்கும்போது குறைவாக வழங்குவதாகச் சொன்னார்கள். ஒவ்வொரு மாதமும் நமக்குத் தேவையான அளவு 81,000 கே.எல். ஆனால் நமக்கு மத்திய அரசின் ஒதுக்கீடு 73,000 கே.எல். இதிலே எப்படி முழுமையாக நம்மால் தரமுடியும். நகர்ப்புறத்திலே இருக்கின்றவர்களுக்கு 10 லிட்டர் என்றும், அதிலும் ஒரு கேஸ் வைத்திருந்தால் 5 லிட்டர் என்றும் இரண்டு கேஸ் வைத்திருந்தால் 3 லிட்டர் என்றும்-நகராட்சிப் பகுதிகளிலே 5 லிட்டர் மண்ணெண்ணெய் என்றும், கிராமப்புற பகுதிகளிலே 3 லிட்டர்-இதுதான் நாம் நிர்ணயித்திருக்கின்ற அளவு. இதிலே நகரப்பகுதிகளிலே இருப்பதைப்போல, கிராமப்புறங்களுக்கும் வழங்கவேண்டும் என்று பல உறுப்பினர்கள் கேட்கிறார்கள். எதற்காகக் கிராமப்புறங்களிலே 3 லிட்டர்தான் என்கிற அளவை வைத்தார்கள் என்றால், அங்கு விறகு எளிதாகக் கிடைக்கும் என்கிற காரணத்தால் அவர்களுக்கு மூன்று லிட்டர் என்றும், விறகு கிடைப்பதற்குச் சிரமமாக இருக்கும் என்கிற காரணத்தினால், நகரப்பகுதிகளில் 5 லிட்டர் என்றும் வழங்கப்படுகிறது. இதிலே குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இன்றைக்கு ஒரு சில நேரங்களிலே மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு இருந்தது. இதையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதிகமாக



[திரு. கே. என். நேரு]

1997 மார்ச் 26]

மத்திய அமைச்சரோடு பேசி,இன்றைக்கு, கடந்த மாதம் 5,000 கே.எல். என்றும் என்று ஒரு முறையும், மற்றொரு முறை 5,000 கே.எல். என்றும் இன்றைக்குப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். 'புதிய பங்க்'களை அமைப்பதன் மூலம் சிறப்பான முறையிலே இன்றைக்கு நாம் செய்துவிட முடியும்.' மேலும் இதுவரை அரசுக்கு மானியம் தந்ததை வைத்து, இந்தப் புதிய கார்டுகள் வழங்கப்பட்ட பிறகு, மண்ணெண்ணெய் தேவையான அளவிற்கு முழுமையாகப் பெற்றுத் தருவதற்கு அரசின் சார்பாக உத்தரவாதத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, ஒவ்வொரு மாதமும் சர்க்கரையின் தேவை 31,000 டன். ஆனால் மத்திய அரசு அனுமதித்ததோ 23,674 டன்கள் தான். அதிலே கொஞ்சம் குறைவாக இருக்கின்றது. அதையும் நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

அதேபோல பாமாயில் நமக்கு ஒவ்வொரு மாதமும் 1000 டன் வழங்குகிறார்கள். அதை நகர்ப்புறங்களில் 500 டன்னை லூசாகவும், 500 டன் 'பௌச்' பண்ணியும் தருகின்றோம். அதையும் நகர்ப்பகுதிகளிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம். கோதுமைப் பொருட்கள் எல்லாம் வழங்கப்படுவதில்லை என்று கிராமப்புறங்களிலே சொல்கிறார்கள் என்று பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். நமக்கு ஒவ்வொரு மாதமும் 22,300 டன் கோதுமை மத்திய அரசின் சார்பாக வழங்கப்படுகிறது. அது உரிய முறையிலே, 'ஹல்லிங்' முறையிலே அரைக்கப்பட்டு, கேட்கப்படுகின்ற இடங்களில் இனி வழங்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே கூட்டுறவுத் துறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திருமதி. சுப்புலெட்சுமி ஜெகதீசன் அவர்களும் எடுத்துரைத்தார்கள். அதாவது 'நபார்ட்' வங்கி, தலைமை வங்கிக்குத் தருகின்றபோது 3½ சதவிகிதம் வட்டிக்குத் தருகிறது என்று சொன்னார்கள். இல்லை. நபார்ட் வங்கி தலைமை வங்கிக்குத் தருகின்றபோது 5%, அந்தத் தலைமை வங்கி மத்திய கூட்டுறவு வங்கி 13% வட்டிக்குத் 10% வட்டிக்குத் தருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிக்குத் தருகின்றது. இதுதான் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குத் முறை வேண்டும், இரண்டு நடைமுறை. ஏன், இந்த மூன்று அடுக்கு முறை செய்ய முடியாதா என்றால், அடுக்கு முறையிலே இதைச் செய்ய வங்கிகள் தமிழகம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், தனியார்களுடைய வங்கிகள் தமிழகம் எங்கும் இருப்பது 4,600 வங்கிகள், அத்துணை 14 தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடைய கிளைகளும், தனியார் வங்கிகளும் சேர்ந்து 4,500 கிளைகள். ஆனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினுடைய

கிளைகள் மட்டும் 1,500 இருக்கின்றது. எப்படி நேரடியாக ஒரு வங்கியிலிருந்து, ஒரு வங்கி செயல்பட முடியும் என்றால், இயலாது என்ற காரணத்தினால்தான், ஒவ்வொருவரையும் கவனிப்பதற்காக மூன்று அடுக்கு முறை இருந்துகொண்டிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர், பவானி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலே 12% நகைக்குக் கடன் தருகிறார்கள் என்று. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கியிலே கேட்டால் 19% என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு வங்கி விவசாயிகளுக்கு நகை இல்லாமலேயே 13% வட்டிக்குக் கடன் தருகிறது. ஆனால், தேசியமயமாக்கப்பட்ட வங்கி நகையைப் பெற்றுக் கொண்டு, 12%-க்குக் கடன் தருகிறது இதுதான் உண்மை. அதுதான் அவர்கள் குறைவாகத் தருவதற்கான காரணம் என்று சொல்லி இங்கே வேலைவாய்ப்புக்கு இட ஒதுக்கீடு முறை நிச்சயமாகப் பின்பற்றப்பட வேண்டும் என்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த இட ஒதுக்கீட்டினால் எவ்வளவு பெரிய இழப்பை இழந்திருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அவர் மிகப் பெரிய போராட்டத்தையே நடத்தியவர். அவர் ஆளுகின்றபோது இந்த இட ஒதுக்கீடு பிரச்சினை இருக்காது. நிச்சயமாக மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இருக்கின்ற இட ஒதுக்கீட்டு முறைப்படி, அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-45

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பராயன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பாகப் பணியாற்றிய 210 பணியாளர்களை நிரந்தரப்படுத்துவோம் என்று ஒரு புறம் சொல்லி இன்னும் இதுவரை நிரந்தரப்படுத்தாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிப் பணியாற்றிய 177 பேர்களில் நேரடியாக 4 பேர் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். நீதிமன்றத்திலே அவர்களை நிரந்தரப்படுத்தச் சொல்லி உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து பேசி ஒரு நல்ல முடிவை, அந்த 177 தொழிலாளர்களுக்கும், இந்த ஆண்டு ஏற்படுத்தப்படும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல ஒவ்வொரு வங்கியினுடைய தலைவரும், எம்.டி. தேவையில்லை; நிர்வாக இயக்குநர்கள் தேவையில்லை; தலைவருக்கே அந்த அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இனி அந்த வங்கிகளுடைய தன்மைகளை அறிந்து, ஷெட்யூல்டு வங்கிகளைத் தவிர, மற்ற வங்கிகளில் எம்.டி. பதவியை எடுத்துவிட்டு,



என்ற மகிழ்ச்சியான செய்தியை மற்ற இடங்களுக்கு அனுப்பப்படுவார்கள் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, மானியக் கோரிக்கைகள் மீது உரையாற்றிய திரு. மணி திரு. சுப. தங்கவேலன் அவர்கள் மற்றும் திரு. மணி தீரன் அவர்கள், திரு. சுப. தங்கவேலன் கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் உரையாற்றுகிற போது சில கருத்துக்களைச் சொன்னார்கள். கோவை கன்னியாகுமரி மத்தியக் கூட்டுறவு வங்கி, காஞ்சிபுரம், நடைபெற்றிருக்கின்றன. மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் நிறைய தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. அதே அதிகாரிகள் அந்தத் தவறுகள் இதுவரை கண்டறியப்படவில்லை. அதே அதிகாரிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள்மீது ஏற்கெனவே துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அந்த நடவடிக்கையைத் தீவிரப்படுத்தி, நிச்சயமாக தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியாய விலைக் கடையைப் பிரித்துத் தருவதில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு சிறப்புத் தகுதி கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். இந்த அதிகாரம், மாவட்ட ஆட்சித் தலைவருக்கே இப்போது தரப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய ஊழியர்களின் ஊதிய உயர்வு பற்றியும், அவர்களுக்கு ஊதிய உயர்வு தரவேண்டுமென்றும் சொன்னார்கள். கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப் பட்டுவிட்டன. இன்னும் ஓரிரு வங்கிகள்தான் மிச்சம் இருக்கின்றது. அந்த வங்கிகளின் ஊழியர்களுக்கும் நாங்கள் நிச்சயமாக ஊதிய உயர்வை வழங்குவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய திட்டக் குழு, தன்னாட்சிச் சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகத்திலே சிறப்பாக தன்னாட்சிச் சங்கங்களை ஆரம்பிப்பதற்கு ஒரு புதிய சட்டம் இந்தக் கூட்டத்தொடரிலேயே கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தன்னாட்சிச் சங்கங்கள் அமைப்பதற்கான சட்டங்கள் என்றால் அரசின் பங்குத் தொகையோ, அரசு அதிகாரிகளோ இல்லாமல், கிராமப்புறங்களில் இருக்கின்றவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டு தன்னாட்சிச் சங்கங்களை உருவாக்குவதற்குரிய புதிய சட்டங்களைக் கொண்டு வருவோம் என்ற நல்ல செய்தியைச் சொல்லி, இங்கே உறுப்பினர்கள் எல்லோரும் சொன்ன கருத்துக்களை ஏற்று சிறந்த முறையிலே செயல்படுவோம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, உறுப்பினர்கள் தந்திருக்கிற வெட்டுத்

தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசு கோரிய பணத்தை வழங்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) நாள் பூராவும் விவாதம் நடைபெற்றிருக்கிறது. இன்னும் என்ன கிளாரிஃபிகேஷன்? விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 23—கூட்டுறவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 23—கூட்டுறவு வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி. இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.



**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல்நாசர் இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல்நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவு துறை பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் "அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" ரூ.47,03,80,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### கோரிக்கை எண் 34— நுகர் பொருள் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 34—நுகர் பொருள் வழங்கல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. கணேசன்.

**திரு. இ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. வ. அப்துல்நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு பா. வேல்துரை

**திரு. பா. வேல்துரை:** இல்லை.



*பிற்பகல் 4-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நுகர் பொருள் வழங்கல் பற்றிய 34-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.1019,83,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தேநீரும் காத்துக்கொண்டிருக்கிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (27-3-1997) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-51 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

117. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும் [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

118. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

119. 1995-96-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[1997 மார்ச் 26

**(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

84. மானியக் கோரிக்கை எண்.23 - கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

85. மானியக் கோரிக்கை எண்.34 - உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1997-98. (தமிழ், ஆங்கிலம்)

86. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1996-97. (ஆங்கிலம்)



1997 மார்ச் 26 ]

## இணைப்பு - I

[204- ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## கூட்டுறவுத் துறையின் கொள்கை விளக்கம்

## 1997-98

### அத்தியாயம்-1

அன்பு புலப்படும் கூட்டுறவால்
ஆட்சி பலப்படும் கூட்டுறவால்
தென்பு மிகுந்திடும் யாருக்கும்
தேசம் உயர்ந்திடும் பாருக்குள்
கூட்டுற வென்னும் கொள்கையினைக்
குற்றமில் லாமல் மேற்கொண்டால்
நாட்டில் தரித்திரம் நீங்கிவிடும்
நம்முடைய சுதந்திரம் ஓங்கிவிடும்.

-நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம்.

சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, வருமானமும் செல்வமும் ஓரிடத்திலேயே குவிந்து வருவதால் ஏற்படும் தீமை ஆகியவற்றை நீக்கி அதன்மூலம், சமுதாயத்தில் வல்லமை படைத்தவர் நலிந்த பிரிவினரைச் சுரண்டும் நிலையினைத் தடுத்து நிறுத்துவதையே தனது முக்கிய நோக்கமாகக் கொண்டு கூட்டுறவு இயக்கம் செயல்பட்டு வருகிறது. அது, பல்வேறு உற்பத்திக் காரணிகளுக்கிடையே சமச்சீர் நிலையை உருவாக்கியும், நியாயமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்தியும் நீதியை நிலைநாட்டுகிறது. உன்னத கோட்பாடுகளைக் கொண்டுள்ள கூட்டுறவு இயக்கம் நியாயமான, அறிவுபூர்வமான, நாகரிகமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதைத் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. எல்லாக் குடிமக்களுக்கும் அளவற்ற பொருட் செல்வமும் மன அமைதியும் கிடைப்பதற்கு அது வழிவகுக்கிறது. தமிழ்நாட்டில், கூட்டுறவு இயக்கமானது, மேற்குறிப்பிட்ட இலட்சியங்களுடன் வளமையை நோக்கி பீடு நடை போடுகிறது. தமிழ்நாடு, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்திற்கு ஈடு இணையற்ற முன்னோடியாக விளங்கும் சிறப்பு பெற்றுள்ளது. தமிழகத்தில் கூட்டுறவு இயக்கமானது மக்களின் குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கிய

பங்கினை ஆற்றி வருகிறது. வளர்ச்சித் துறைகளில் ஒன்றாகக் கருதப்படும் கூட்டுறவுத் துறையில் பொதுமக்கள் அதிக அளவில் தொடர்பு வைத்துள்ளனர். மாநிலத்தில் நடைபெறும் அனைத்துவிதமான பொருளாதார நடவடிக்கைகளும் கூட்டுறவுத் துறைக்குள் அடங்கும். வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கடன் வசதி அளித்தல், வேளாண் இடுபொருள்கள் விநியோகம், நியாயமான விலையில் நுகர்பொருள்களை அளித்தல், பொது விநியோகத் திட்ட கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்தல் போன்ற பணிகளில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் தலையாய கவனம் செலுத்துகிறார். பொதுமக்களின் தேவைக்கேற்ப மேற்குறிப்பிட்ட பணிகள் ஒன்றுடன் ஒன்று மிகவும் நெருக்கமாக ஒருங்கிணைந்து இருப்பதால் இப்பணிகளால் கூட்டுறவு இயக்கத்திற்கு மக்களிடையே ஒரு நல்ல மதிப்பு உருவாகி உள்ளது. நம் மாநிலத்தில் உள்ள பல்வகை கூட்டுறவு சங்கங்கள் மக்களின் பல்வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் அவர்களுக்கு ஏற்ற உதவிகள் செய்து வருகின்றன. நடைமுறையில், மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில், கூட்டுறவு இயக்கம் பரவாத முக்கிய இனங்கள் ஏதுமில்லையெனுமளவிற்கு அதன் வளர்ச்சி தெளிவாகப் புலப்படுகிறது.

(அ) 1955 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுபபாட்டில் இருந்தன. 1956-57 ஆம் ஆண்டு முதல் சில வகையான சங்கங்கள் பிற துறைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரியங்களின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டன. அத்துறைகளின் தலைவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்திலுள்ள பதிவாளரது அதிகாரங்களை மேற்கொண்டு செயல்படுகின்றனர். தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைத் தவிர இதர 14 பதிவாளர்கள் உள்ளனர்.

இதர பதிவாளர்களின் விவரம் வருமாறு:

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)
2. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர்
3. தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையாளர்
4. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம்
5. கைத்தறி மற்றும் துணித்துறை இயக்குநர்
6. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை வளர்ச்சி ஆணையாளர்



7. சர்க்கரைத் துறை இயக்குநர்
8. தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்)
9. சமூக நலத்துறை இயக்குநர்
10. மீன்வளத்துறை இயக்குநர்
11. வேளாண்மைத்துறை இயக்குநர்
12. கால்நடைத்துறை இயக்குநர்
13. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சித்துறை
14. பட்டுப்பூச்சி வளர்ச்சித்துறை இயக்குநர்

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இயங்கும் சங்கங்களின் பெரும்பான்மையான நடவடிக்கைகள், (i) கடன் வழங்குதல், (ii) நுகர்பொருள் விற்பனை மற்றும் (iii) விளைபொருள் கொள்முதல் மற்றும் (iv) இதர நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும். பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய எண்ணிக்கை மற்றும் அவைகளின் பணிபற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

| வ. எண். | சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | ஆண்டு வியாபார அளவு (ரூபாய் இலட்சத்தில்) 31-3-96-ல் உள்ளவாறு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | தலைமை கூட்டுறவு நிறுவனங்கள் | 6 | 3,29,968 |
| 2. | மத்திய கூட்டுறவு வங்கிகள் | 23 | 1,20,479 |
| 3. | மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைகள் | 29 | 65,988 |
| 4. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 1 | 4,236 |
| 5. | மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் | 17 | 92 |
| 6. | கூட்டுறவு அச்சகங்கள் | 20 | 272 |
| 7. | கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் மற்றும் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் | 11 | 53 |
| 8. | தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 113 | 63,744 |

[1997 மார்ச் 26

| வ. எண் | சங்கங்களின் வகைகள் | சங்கங்களின் எண்ணிக்கை | ஆண்டு வியாபார அளவு (ரூபாய் இலட்சத்தில்) 31-3-96-ல் உள்ளவாறு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 9. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் (விவசாய சேவை கூட்டுறவு சங்கங்களையும் சேர்த்து) | 4589 | 1,57,776 |
| 10. | பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 18 | 1,626 |
| 11. | தொடக்க நிலவள வங்கிகள் | 181 | 18,883 |
| 12. | கூட்டுறவு நகர வங்கிகள் | 125 | 60,889 |
| 13. | பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கங்கள் (பல மாவட்டங்களை உள்ளடக்கிய பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையும் சேர்த்து) | 1749 | 67,415 |
| 14. | தொடக்க மற்றும் மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள் | 3594 | 35,826 |
| 15. | தொழிலாளர் ஒப்பந்த மற்றும் கட்டுமான கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கருங்கல் சரளைகள் உடைக்கும் சங்கங்கள் | 210 | 365 |
| 16. | ஊரக மின்சாரக் கூட்டுறவு சங்கங்கள் | 3 | 391 |
| 17. | இதர வகை கூட்டுறவுச் சங்கங்கள் | 451 | 3,504 |
| | **மொத்தம்** | **11140** | **9,31,507** இலட்சங்கள் (அல்லது) **9315.07** கோடிகள் |



1997 மார்ச் 26]

(இ) பல்வகைக் கூட்டுறவுச் சங்கங்களில் அரசு முதலீடு செய்துள்ள பங்கு மூலதனத்தின் 31-3-96-ல் நிலுவையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | 31-3-96 நிலுவை (ரூபாயில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு நிலவள வங்கி | 13,30,54,238 |
| 2. | தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி | 1,26,00,000 |
| 3. | தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் | 4,06,62,752 |
| 4. | தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் | 1,20,08,284 |
| 5. | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | 15,29,152 |
| 6. | மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | 25,32,98,540 |
| 7. | நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் | 6,09,29,769 |
| 8. | பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | 76,59,936 |
| 9. | தொழிலாளர்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | 14,59,700 |
| 10. | பழம் பதப்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,68,000 |
| 11. | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | 59,00,000 |
| 12. | கட்டுமானக் கூட்டுறவுச் சங்கங்கள் | 3,80,000 |
| 13. | உப்புத் தயாரிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் | 2,06,846 |
| 14. | உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,40,000 |
| 15. | கூட்டுறவு அச்சகங்கள் | 26,790 |
| 16. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | 34,10,81,608 |
| 17. | தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் (மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகளையும் சேர்த்து) | 80,25,367 |
| 18. | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 13,10,53,027 |
| 19. | நகர கூட்டுறவு வங்கிகள் | 13,01,096 |
| 20. | தொடக்க கூட்டுறவு நிலவள வங்கிகள் | 5,47,34,771 |
| 21. | காமராஜர் மற்றும் தென்னாற்காடு வள்ளலார் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 11,72,52,675 |
| 22. | மாட்டுத் தீவனக் கூட்டுறவுச் சங்கம் | 40,000 |
| | 31-3-96-ல் நிலுவை | 1,18,37,12,551 (அல்லது) 118.37 கோடிகள் |

## 2. பொது முன்னேற்றம்

கூட்டுறவுத் துறையின் பெரும் குறிக்கோள்களாக விவசாயக் கடன்கள் வழங்குதல், வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல், உரங்கள் விநியோகித்தல், நுகர் பொருட்கள் விநியோகித்தல் போன்ற இனங்களில் 1996-97 ஆம் ஆண்டில் 1-4-96 முதல் 31-1-97 வரை அடைந்த முன்னேற்றம் மற்றும் 1997-98 ஆம் ஆண்டிற்கு குறியீடு கீழே குறிக்கப்பட்டுள்ளது:

| வ. எண். | விவரம் | 1996-97 ஆம் ஆண்டுக்கான திட்டம் | 1996-97-ல் அடைந்த முன்னேற்றம் 31-1-97 வரை | 1997-98 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | குறுகிய கால வேளாண்மை கடன் வழங்குதல் (ரூ. கோடியில்) | 680.00 | 153.39 | 800.00 |
| 2. (அ) | நடுத்தர கால வேளாண்மைக் கடன் வழங்குதல் (ரூ. கோடியில்) | 65.00 | 35.34 | 70.00 |
| (ஆ) | நகையீட்டுக் கடன்கள் வழங்குதல் (ரூ. கோடியில்) | 2000.00 | 2037.01 | 2400.00 |
| (இ) | சிறு மற்றும் குடிசை தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன்கள் வழங்குதல் (ரூ. கோடியில்) | 60.00 | 60.90 | 70.00 |
| (ஈ) | வேளாண் விளைபொருள் ஈட்டுக் கடன் (ரூ. கோடியில்) | 7.00 | 5.15 | 7.00 |
| 3. | நீண்ட கால வேளாண்மை கடன்கள் வழங்குதல் (ரூ. கோடியில்) | 200.00 | 100.19 | 294.75 |
| 4. | தொழில் புரிவோர்களுக்கு நகர கூட்டுறவு வங்கி வழங்கிய கடன் (ரூ. கோடியில்) | 40.00 | 14.58 | 45.00 |





| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 5 | வீடுகட்ட கடன் வழங்குதல் (ரூ. கோடியில்) | 60.00 | 23.67 | 55.00 |
| 6. | இரசாயன உரங்கள் வழங்குதல் (ரூ. கோடியில்) | 230.00 | 174.83 | 235.00 |
| 7. | வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்தல் (ரூ. கோடியில்) | 425.00 | 405.44 | 475.00 |
| 8. | நுகர்பொருட்கள் சில்லறை விற்பனை செய்தல் (ரூ. கோடியில்) | 1850.00 | 1514.88 | 1940.00 |
| 9. | கிடங்கு கொள்திறன் வசதியைப் பயன்படுத்தல் (இலட்சம் மெட்ரிக் டன்னில்) | 5.00 | 3.36 | 5.00 |
| 10. | கூட்டுறவு அச்சகசாலை (ரூ. கோடியில்) | 21.39 | 9.51 | 22.00 |
| 11. (அ) | விற்பனையுடன் இணைந்த கடன் வசதி | 0.80 | 0.26 | 1.00 |
| (ஆ) | நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்த கடன் வசதி (ரூ. கோடியில்) | 0.60 | 0.43 | 0.75 |
| 12. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினருக்கு நிதியுதவி அளித்தல் (லாம்ப்ஸ்) (ரூ. கோடியில்) | 17.93 | 12.74 | 18.83 |

[1997 மார்ச் 26

## 3. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு

1995-96 ஆம் ஆண்டு கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழான மொத்த செலவுகள், 1996-97 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு, 1996-97 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 1997-98 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீட்டிற்கான விவரங்கள்கீழே குறிக்கப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| திட்டத்தின் விவரங்கள் (1) | 1995-96 ஆம் ஆண்டின் செலவு (2) | 1996-97 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு (3) | 1996-97 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு (4) | 1997-98 ஆம் ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு (5) |
|---|---|---|---|---|
| அ. மாநில திட்டப் பணிகள் | | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 0.0073 | 0.0073 | 0.0073 | 0.0073 |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் (பயிர் பாதுகாப்பு நிதி மற்றும் வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களின் முதலீடு சேர்த்தது) | 13.2706 | 37.0139 | 43.9324 | 24.6458 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.0860 | 0.5235 | 0.4815 | 0.6757 |
| 4. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | .. | 0.0200 | 0.1700 | 0.0200 |
| 5. பழங்குடியினர் துணைத் திட்டம் | 0.9830 | 0.9000 | 0.9000 | 0.9000 |
| | 14.3469 | 38.4647 | 45.4912 | 26.2488 |
| ஆ. மத்திய அரசு பொறுப் பேற்கும் திட்டங்களும், தன்னாட்சி நிறுவனங்கள் நிதியுதவி பெறும் திட்டங் களும் மற்றும் மத்திய அரசும், மாநில அரசும் சமமான பங்கு கொள்ளும் திட்டங்கள் | 9.2721 | 3.5988 | 3.6031 | 3.4733 |
| | 23.6190 | 42.0635 | 49.0943 | 29.7221 |
| இ. திட்டத்தில் சேராதது | 48.6942 | 40.6729 | 45.4429 | 44.7532 |
| ஆக கூடுதல் | 72.3132 | 82.7364 | 94.5372 | 74.4753 |



1997 மார்ச் 26]

## 1997-98 ஆம் ஆண்டின் புதிய திட்டங்கள்

### 1. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலைகளுக்கு விளிம்புத் தொகை நிதியுதவி

தற்பொழுது மாநிலத்தில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. இந்த அனைத்து மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றன. மொத்த கூட்டுறவு விற்பனைப் பண்டகசாலைகளில் போதுமான உரிய தீர்வு செய்யக்கூடிய வள ஆதாரங்கள் (Net Disposable Resources) இல்லையாதலால், அவைகள் மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து காசுக் கடன் பெற்று (Cash Credit) கட்டுப்பாடு மற்றும் கட்டுப்பாடற்ற பொருள்கள் விற்பனையை நடத்த இயலவில்லை. எனவே, அவைகள் காசுக் கடன் பெற ஏதுவாக விளிமபுத் தொகை நிதியுதவி அளிக்க வேண்டியது அவசியமாகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இரண்டு மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு ரூ. 20.00 இலட்சம் என்ற விகிதத்தில் ரூ. 40 இலட்சம் நிதியுதவி வழங்க அரசால் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

கீழ்க்கண்ட இரண்டு மொத்த கூட்டுறவு விற்பனைப் பண்டக சாலைகள் இந்நிதியுதவி திட்டத்தின்கீழ் அடங்கும்.

(1) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட மொத்த கூட்டுறவுப் பண்டகசாலை.

(2) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை.

### 2. சிறிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்க கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதியுதவி.

நுகர்வோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பண்டக சாலைகள் பொது வியாபாரத்தினை மேற்கொள்ள சில்லறை விற்பனை நிலையங்களை திறப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஏற்கனவே, இத்திட்டம் மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வந்துள்ளது. இத்திட்டம் மாநில அரசு திட்டத்திற்கு 1-4-92 முதல் மாற்றப்பட்டுள்ளதால், மாநில அரசு தனது சொந்த நிதியுதவியின் கீழ் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதற்கிணங்க 1997-98 ஆம் ஆண்டு நிதி ஆண்டில் டாக்டர் அம்பேத்கர் கூட்டுறவுப்

பண்டகசாலை, சென்னை, வத்தலகுண்டு கூட்டுறவுப் பண்டகசாலை, திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் மற்றும் தளவாய்புரம் கூட்டுறவுப் பண்டகசாலை, காமராசர் மாவட்டம் ஆகிய மூன்று பண்டகசாலைகளுக்கு ரூ. 0.60 இலட்சம் வீதம் ரூ. 1.80 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவியாக அளிக்கப்படவுள்ளது.

### 3. நலிவுற்ற தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளை மறுபுனரமைப்பு செய்ய நிதியுதவி

நலிவுற்ற தொடக்கக் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை புனரமைப்பதற்காக படிப்படியாக நிதியுதவி அளிப்பதற்கு அரசு உத்தேசித்து உள்ளது. 1997-98 ஆம் நிதியாண்டில் 5 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 5 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது. நிதியுதவி பெறும் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

(1) திருநகர் கூட்டுறவுப் பண்டகசாலை, மதுரை மாவட்டம்.

(2) அன்னூர் கூட்டுறவுப் பண்டகசாலை, கோயம்புத்தூர் மாவட்டம்.

(3) அருமனை கூட்டுறவுப பண்டகசாலை, கன்னியாகுமரி மாவட்டம்.

(4) வீரசோழபுரம் கூட்டுறவுப் பண்டகசாலை, காமராஜர் மாவட்டம்.

(5) காட்பாடி நகரமைப்பு கூட்டுறவுப் பண்டகசாலை, வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

### 4. பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு நிதியுதவி

முன்பு மேற்கண்ட திட்டம் மத்திய அரசின் ஆதாவுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வந்தது. 1-4-92 முதல் இத்திட்டம் மாநில திட்டத்திற்கு மாற்றப்பட்டதால், மாநில அரசு இத்திட்டத்தினை தொடர்ந்து நடத்துவதற்கும் இத்திட்டத்திற்கு ரூ. 2.70 இலட்சம் நிதியுதவி அளிக்கவும் முடிவு எடுத்தது. அதற்காக இரண்டு பண்டகசாலைகளுக்கு ஒவ்வொரு பண்டகசாலைக்கும் ரூ. 1.35 இலட்சம் என்ற அளவில் திருநெல்வேலி மாவட்ட மொத்த கூட்டுறவுப் பண்டகசாலை மற்றும் கன்னியாகுமரி மாவட்ட மொத்த கூட்டுறவுப் பண்டகசாலை ஆகியவற்றிற்கு பெரிய அளவிலான சில்லறை விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு நிதியுதவி அளிக்க அரசு உத்தேசித்துள்ளது.



### 5. நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைக்க நுகர்வோர் கூட்டுறவுகளுக்கான நிதியுதவி

இத்திட்டத்தின் நோக்கமானது இதுவரை உள்ளடங்காத வட்டம்/வட்டாரத் தலைமையகங்களில் தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் நவீன சில்லறை விற்பனைக் கடைகள் அமைப்பதாகும். ஆகவே, இத்திட்டத்தின்கீழ் 1997-98-ல் இரண்டு கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு அதாவது (1) கோனார்பேட் கூட்டுறவுப் பண்டகசாலை, புதுக்கோட்டை மாவட்டம், மற்றும் (2) பண்ணைக்காடு கூட்டுறவுப் பண்டகசாலை, திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம். நவீன சில்லரை விற்பனைக் கடைகள் அமைக்க தலா ரூ. 2 இலட்சம் வீதம் மொத்தத்தில் ரூ. 4.00 இலட்சம் நிதியுதவி அளிக்க அரசு உத்தேசித்துள்ளது.

### 6. நவீன இயந்திரங்களுடன் கூடிய கூட்டுறவுச் சங்க அச்சகங்களுக்கு நிதியுதவி அளித்தல்

தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு அச்சகங்கள் செயலாற்றி வருகின்றன. அழுத்தப்பட்ட தொய்வக உருளை மீது மை தடவி எதிர்ப்படியாக எடுக்கப்படும் கல்லச்சு முறை அச்சுப் பணிகளின் தேவைகள் பெருமளவில் பெருகியுள்ளது. நவீனமான அழுத்தப்பட்ட தொய்வக உருளைமீது மை தடவி எதிர்ப்படியாக எடுக்கப்படும் கல்லச்சு முறை எந்திரங்களை அதிக அளவில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் பட்சத்தில், அச்சகப் பணிகள் துரிதமாகவும், திறம்படவும் செயல்படுவதுடன், அச்சகங்களின் விற்பனை அளவும் பெருமளவில் வளர வாய்ப்புண்டு. இதன்படி 1997-98 ஆம் ஆண்டு நிதியாண்டில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு அச்சகம் மற்றும் வடஆற்காடு அம்பேத்கர் மாவட்ட கூட்டுறவு அச்சகத்திற்கு தலா ரூ. 3.25 இலட்சம் வீதம் மொத்தத்தில் ரூ.6.50 இலட்சம் நிதியுதவி அளிக்கப்படவுள்ளது.

[1997 மார்ச் 26

அத்தியாயம்-2

## கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் 8033 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களில் 7702 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு சங்க நிர்வாகம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத் தடையாணை, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை, யாருமே வேட்பு மனு தாக்கல் செய்யாமை ஆகிய காரணங்களால் மீதமுள்ள 331 சங்கங்களுக்கான தேர்தல் நடைபெறவில்லை. தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலையும் 31-3-97-க்குள் நடத்தி முடித்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் சங்க நிர்வாகத்திற்குப் புதியவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தினால், அவர்கள் அங்கம் வகிக்கும் சங்கத்தைத் திறம்பட நடத்திச் செல்வதற்கு ஏதுவாக அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. அதற்கிணங்க, அண்மையில் நடந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்கக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு 23-12-96-க்கும் 10-1-97-க்கும் இடைப்பட்ட காலத்தில், கூட்டுறவுக் கொள்கைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் குறித்து, ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்கு, தமிழ்நாடு முழுவதும் சுமார் 500 மையங்களில் 1000 பயிற்றுவிப்பாளர்கள் மூலம் இப்பயிற்சி அளிக்கப்பட்டது.



1997 மார்ச் 26]

அத்தியாயம்-3

## கூட்டுறவுக் கடன்

### (அ) குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்

### 1. கடனமைப்பு

தமிழகத்தில், குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன் வழங்குவதற்கான கூட்டுறவுக் கடன் அமைப்பானது, கீழ்க்கண்ட மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்.

(i) மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

(ii) மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மை தவிர பிற காரியங்களுக்குக் கடன் வழங்கும் சென்னை மத்திய கூட்டுறவு வங்கி நீங்கலாக)

(iii) கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்.

### 2. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 4589 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவை, பயிர் சாகுபடி செலவிற்கான குறுகிய காலக் கடன்களையும், பால்பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப்பண்ணை முதலிய வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தரக் காலக் கடன்களையும், வழங்கி வருகின்றன. அதுமட்டுமின்றி அவை குத்தகை சாகுபடியாளர்களுக்கு பயிர்க் கடன்களையும், நிலமில்லா விவசாயிகளுக்கு துணைத் தொழில்களுக்கான கடன்களையும் வழங்கி வருகின்றன. பயிர் சாகுபடிக் கடன்கள், தேவையின் அடிப்படையில் ரூ. 75,000 வரையில் (அதில் நபர் ஜாமீன் பேரில் ரூ. 55,000 வரை) வழங்கப்படுகின்றன. இவ்வகைக் கடன்களில் ரொக்கம் ஒரு பகுதியாகவும், உரம் பூச்சிக் கொல்லிகள், விதைகள் உட்பட இடுபொருள்கள் ஒரு பகுதியாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. குறுகிய காலப் பயிர் சாகுபடிக் கடன்கள், பயிர் அறுவடை முடிவுற்ற பின்னர் மகசூல் தொகையிலிருந்து அதிகபட்சமாக 15 மாத காலத்திற்குத் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். துணைத் தொழில்களை மேற்கொள்வதற்கான நடுத்தர காலக் கடன்கள் முதலீட்டின் மூலமாகப் பெற்ற வருமானத்திலிருந்து 3 முதல் 5 ஆண்டு காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வைப்பு நிதியை அதிக அளவில்

[1997 மார்ச் 26

திரட்டுவதிலும், அவற்றின் கடன் வழங்கலைப் பரவலாக்குவதிலும் பெருமளவில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வருகின்றன.

### 3. மத்திய கூட்டுறவு வங்கிகள்

மாவட்ட அளவில் செயல்பட்டு வரும் மத்திய கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவை, தங்களது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மூலமாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒப்பளிக்கும் கடன் அளவு வரம்புகளிலிருந்தும் நிதியுதவி அளிக்கின்றன. 31-1-97-ஆம் நாளன்று, அரசு வழங்கியுள்ள ரூ. 35.84 கோடி உட்பட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 171.32 கோடியாகும். 31-1-1997-ஆம் நாளன்று, இவ்வங்கிகளின் ஒதுக்கிய நிதிகள் (Reserves) ரூ. 225.21 கோடியும், வைப்புத் தொகைகள் ரூ. 2752.39 கோடியும் ஆகும். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் எல்லைக்குள் செயல்படும் அனைத்து வகையான கூட்டுறவுகளுக்கும் நிதி வசதி அளிக்கின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கு தமது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தமிழநாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தேசிய வேளாணமை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் கடன்களிலிருந்தும் நிதியுதவி அளிக்கின்றன.

### 4. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி 1905 ஆம் ஆண்டு முதல் வேளாண்மை மற்றும் வேளாண்மை சாராக் கடன் வழங்குவதில் முக்கியப் பங்கினை ஆற்றி வருகிறது. இவ்வங்கி பயிர் சாகுபடிக் காரியங்களுக்கென குறுகிய காலக் கடன்கள், வேளாண்மை முதலீட்டிற்காக நடுத்தர காலக் கடன்கள், நடுத்தர கால மாற்றுக் கடன்கள் மற்றும் நெசவுத் தொழிலுக்கான நிதியுதவி முதலியவற்றிற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அளிக்கும் நிதியுதவிகளைப் பெற்று வழங்குகிறது. இவ்வங்கி, மத்திய கூட்டுறவு வங்கியுடன் இணைந்துள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மேற்கொள்ளும் பொது வியாபாரம் (பொது விநியோகத் திட்டம் அல்லாதது), அத்தியாவசியப் பொருள்கள்



1997 மார்ச் 26 ]

விநியோகம், பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை வழங்கும் நகையீட்டுக் கடன் போன்றவற்றிற்கு காசுக் கடன் அளித்து வருகிறது. மேலும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்/கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகள் நடைமுறை மூலதனம் வழங்கக் காசுக் கடனையும், ஆலைகளுக்கு காலக் கடன்களையும் அளித்து வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்கு, அதில் முதலீடு செய்யப்பட்டுள்ள அரசுக் கடன் பத்திரங்கள், நிரந்தர வைப்புத் தொகை ஆகியவற்றின் பேரில் அதிகப்பற்று வசதிகளையும் அளித்து வருகிறது. மேலும், கனரா வங்கியைத் தலைமையாகக் கொண்ட நிதிக் கூட்டமைப்பின் (Consortium) கீழ் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு (டான்சி) ரூ. 2.50 கோடி காசுக் கடன் அனுமதித்துள்ளது. இவ்வங்கி, தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோஆப் டெக்ஸ்), தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு எண்ணெய் வித்து சாகுபடியாளர் கூட்டுறவு இணையம் போன்ற பிற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி வசதி அளித்து வருகிறது.

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்பெறச் செய்வதற்கு தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி (Primary Co-operative Development Fund) மாநில வங்கி அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டிலிருந்து, மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இம்மேம்பாட்டு நிதிக்குத் தங்களது நிகர இலாபத்திலிருந்து 5 விழுக்காடு அளவிற்கு நிதி உதவி அளித்து வருகின்றன. 31-1-97 அன்று இந்நிதியில் ரூ. 476.72 இலட்சம் கையிருப்பிலுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, அதன் கடன் திட்டங்களை பங்கு மூலதனம் (Share Capital), ஒதுக்கிய நிதிகள் (Reserves) மற்றும் வைப்புகளைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. 31-1-97 ஆம் நாளன்று தலைமை வங்கியின் பங்கு மூலதனம் (Share Capital) அரசின் பங்குத் தொகையான ரூ. 1.26 கோடியையும் உள்ளிட்டு ரூ. 18.59 கோடியாகவும், ஒதுக்கீடுகள் ரூ. 72.50 கோடியாகவும்

[1997 மார்ச் 26

மற்றும் வைப்புத் தொகை ரூ. 1,204.69 கோடியாகவும் உள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் 31-1-97 வரை இவ்வங்கி ரூ. 1271.43 கோடியளவிற்குக் கடன்கள் வழங்கியுள்ளது. இதில், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கி (SIDBI) ஆகியவற்றிடமிருந்து பெறப்பட்ட கடன்கள் ரூ. 429.28 கோடியும் அடங்கும். 31-1-97 ஆம் நாளன்று இவ்வங்கியின் நடைமுறை மூலதனம் (Working Capital) ரூ. 1,877.53 கோடியாக இருந்துள்ளது. இவ்வங்கி 1995-96 ஆம் ஆண்டில் ரூ. 35.11 கோடி நிகர இலாபம் (Net Profit) ஈட்டி அதன் உறுப்பினர் சங்கங்களுக்கு 15 விழுக்காடு அளவிற்கு ஈவுத் தொகை வழங்கியுள்ளது.

## 5. கடன் வழங்குதல்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் மற்றும் எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் இறுதியாண்டில், ஜனவரி 1997 வரை குறுகிய மற்றும் நடுத்தர காலக் கடன் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

| ஆண்டு | குறுகிய காலப் பயிர் சாகுபடிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் நடுத்தரக் காலம்) |
|---|---|---|---|---|---|
| | திட்டம் | முன்னேற்றம் | திட்டம் | முன்னேற்றம் | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| | | | | | (ரூபாய் கோடியில்) |
| **ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1987-88 | 185.00 | 186.82 | 22.00 | 34.03 | 220.85 |
| 1988-89 | 215.00 | 205.04 | 30.00 | 40.14 | 245.18 |
| 1989-90 | 250.00 | 233.84 | 37.55 | 41.11 | 274.95 |
| 1990-91 | 260.00 | 243.98 | 40.00 | 40.02 | 284.00 |
| 1991-92 | 275.00 | 278.52 | 50.00 | 44.71 | 323.23 |
| **எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம்** | | | | | |
| 1992-93 | 300.00 | 340.80 | 55.00 | 45.75 | 386.61 |
| 1993-94 | 350.00 | 439.54 | 50.00 | 52.65 | 492.19 |
| 1994-95 | 450.00 | 561.74 | 55.00 | 61.99 | 623.73 |
| 1995-96 | 560.00 | 561.37 | 60.00 | 65.17 | 626.54 |
| 1996-97 (ஜனவரி '97 வரை) | 680.00 | 453.39 | 65.00 | 35.34 | 488.73 |



1997 மார்ச் 26]

மேலே குறிப்பிட்ட ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கல் சீராக அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. 1997-98 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூ. 800 கோடியும், நடுத்தர காலக் கடனாக ரூ. 70 கோடியும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன் வழங்குவதற்கு நிதி உதவி புரிவது மட்டுமல்லாது, அவற்றின் கடன் வழங்கும் பணியை பன்முகப்படுத்தும் நோக்குடன், இந்தியத் தலைமை வங்கி அங்கீகரித்துள்ள 22 வகையான சிறு தொழில் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றை மேற்கொள்ள தனி நபர்களுக்கு நேரிடையாக பண்ணை சாராக் கடன்களையும், சிறு போக்குவரத்து வாகனங்கள் வாங்கவும் கடன்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய கடன்கள் வழங்குதலில் 1992-93 ஆம் ஆண்டு முதல் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:—

| ஆண்டு (ரூபாய் கோடியில்) | வழங்கிய கடன் |
|---|---|
| (1) | (2) |
| 1992-93 | 7.96 |
| 1993-94 | 12.85 |
| 1994-95 | 20.62 |
| 1995-96 | 20.46 |
| 1996-97 (ஜனவரி '97 வரை) | 16.13 |

1997-98 ஆம் ஆண்டு இத்தகையக் கடன்களை ரூ. 28.00 கோடி அளவிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 6. நில உடைமையாளர்களைக் கூட்டுறவில் சேர்த்தல்

ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, அதன் எல்லையிலுள்ள இரண்டு அல்லது மூன்று வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. இங்ஙனம் மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களையும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்கள் செயல்பாட்டு எல்லையில் உள்ளடக்கியுள்ளன. மாநிலத்திலுள்ள மொத்த நில உடைமை விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 80.37 இலட்சம்

[1997 மார்ச் 26

ஆகும். இதில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 69.38 இலட்சம் ஆகும். 31-1-97 ஆம் நாள் வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 86.3 விழுக்காடும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயக் குடும்பங்களில் (Small and Marginal Farmers) 84.2 விழுக்காடும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 7. உடனடி கடன் வழங்கும் திட்டம்

கடன் வழங்கும் முறையை எளிமைப்படுத்தும் பொருட்டும், தவணை தவறிய கடன் நிலுவை இல்லாத உறுப்பினர்களுக்கு விரைவில் கடன் வழங்குதலை உறுதிப்படுத்தவும், உடனடி கடன் வழங்கும் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் ஒன்று 1991-92 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. நடப்பாண்டில் இத்திட்டம் 3922 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், 1996-97 ஆம் ஆண்டில் 31-1-97 வரை 4.20 இலட்சம் கடன்தாரர்களுக்கு பச்சை வண்ண அட்டை வழங்கப்பட்டு அதன் மூலம் ரூ. 234.29 கோடி அளவிற்கு குறுகிய காலப் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 8. நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல்

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (Nabard) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்த குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தை சொந்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன.

1995-96 ஆம் ஆண்டு மற்றும் 1996-97 ஆம் ஆண்டில் ஜனவரி 1997 வரை நலிந்த பிரிவினர்களுக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:—



1997 மார்ச் 26]

| வ. எண் | விவரங்கள் | ஆண்டு | திட்டம் (விழுக்காடு) | நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | வழங்கப்பட்ட மொத்தக் கடனில் விழுக்காடு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | குறுகிய காலக் கடன் | 1995-96 | 67 | 366.65 | 65.3 |
| | | 1996-97 (ஜனவரி 97 வரை) | 67 | 309.10 | 68.2 |
| 2 | நடுத்தர காலக் கடன் | 1995-96 | 9.5 | 61.20 | 93.9 |
| | | 1996-97 (ஜனவரி 97 வரை) | 9.5 | 36.66 | 90.3 |

1997-98 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினருக்கு குறுகிய காலக் கடன் மற்றும் நடுத்தர காலக் கடன்களில் 70 சதவிகிதம் அளவிற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

## 9. ஆதிதிராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்

பயிர் சாகுபடிச் செலவிற்கென குறுகிய காலக் கடன் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தர காலக் கடன் பெற்று, பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள ஆதிதிராவிட வகுப்பினர் குடும்பத்தில் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் திட்டத்தை அரசு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. அரசு ஒவ்வொரு நபருக்கும் சங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக ரூ. 100 மானியமாக வழங்கி வருகிறது. இதனால், அரசு அளித்துள்ள ரூ. 110.00 இலட்சம் மானியத்தில், இதுகாறும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1.10 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை 1988-89 முதல் மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1988-89 முதல் 1996-97 வரையில் 1,05,092 நபர்களைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்க மைய அரசு ரூ. 105.092 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது. இங்ஙனம், 31-1-97 வரை மாநில மற்றும் மைய அரசுத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 2.15 இலட்சம் நபர்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 26

1996-97 ஆம் ஆண்டில், குறுகிய காலக் கடனில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினரைச் சார்ந்தவர்களுக்கு 14 விழுக்காடும், நடுத்தர காலக் கடனில் 25 விழுக்காடும் வழங்கத் திட்டமிட்டதில் ஜனவரி 1997 வரையில் முறையே 15.4 விழுக்காடும், 35 விழுக்காடும் வழங்கப்பட்டுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில், குறுகிய காலக் கடனில், 14 விழுக்காடும், நடுத்தர காலக் கடனில் 30 விழுக்காடும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10. கூட்டுறவு கடனமைப்பை வலுப்படுத்த வளர்ச்சி செயல் திட்டங்களை செயல்படுத்துதல்

கடன் வழங்கும் நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்குடன் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் வழிமுறைகளின் அடிப்படையில், குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடனமைப்பின்கீழ், கூட்டுறவு வங்கிகள் வளர்ச்சி செயல் திட்டங்களைத் தீட்டியுள்ளன. இந்த வளர்ச்சிச் செயல் திட்டங்கள், அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அனைத்துத் தொடக்கக் கூட்டுறவு நில்வள வங்கிகளையும் குறிப்பிட்ட திட்ட காலத்திற்குள், வாழ்திறன் கொண்டதாக மாற்றியமைக்கும் நோக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் குறுகிய காலக் கடனமைப்பைப் பொறுத்தவரையில், 1994-95 ஆம் ஆண்டு முதல் 1998-99 ஆம் ஆண்டு வரையிலும், நீண்ட காலக் கடனமைப்பைப் பொறுத்தமட்டில் 1994-95 முதல் 1997-98 வரையிலும் செயல்படுத்தப்படும். வளர்ச்சிச் செயல் திட்டங்களை, அவற்றின் அனைத்து அம்சங்களையும் உள்ளிட்டு, முழு அளவில் செயல்படுத்தப்படுவது மற்றும் கூட்டுறவுகளுக்கு நிதி மற்றும் இதர வகை ஆதரவுகளைத் தொடர்ந்து அளிப்பது ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவும், மாநில அரசு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி ஆகியவற்றுடன் தனித்தனியே தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் உடன்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பின்படி வளர்ச்சிச் செயல் திட்டங்கள் செயல்படுத்தப்படுவது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், உடன்பாட்டு ஒப்பந்தக் குறிப்பின்படி குறியீடுகளை எய்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1997 மார்ச் 26 ]

இத்திட்டத்தின்படி, தேசிய வங்கி (நபார்டு) பராமரித்து வரும் தேசிய ஊரகக் கடன் நிதியிலிருந்து (நீண்டகால இயக்கம்) ரூ. 113.31 கோடி அளவிற்கு பங்கு மூலதன உதவியும், குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடனமைப்பில் உள்ள வங்கிகளின் திரண்ட நட்டத்தை ஈடுகட்டவும், வராக் கடன் மற்றும் சந்தேகக் கடன்களைத் தள்ளுபடி செய்யவும் தொடக்க நிலை வங்கிகளுக்கும், நிதியுதவி அளிக்கும் வங்கிகளுக்கும் இடையே நிலவும் மாறுபட்ட நிலையை சமன்படுத்தவும் ரூ. 264.25 கோடி அளவிற்கு தேசிய வங்கி மூலமாக மைய அரசிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சி செயல் திட்ட கால இறுதிக்குள் அனைத்துக் கூட்டுறவு வங்கிகளும் வாழ்திறனை எய்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் பங்கு மூலதனக் கூட்டுறவுக் கட்டமைப்பை வலிமைப்படுத்தும் முகமாக, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் தேசிய ஊரகக் கடன் (நீண்டகால இயக்க) நிதியிலிருந்து மாநில அரசு வாயிலாக பின்வரும் வகையில் பங்கு மூலதன உதவி ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | நிறுவனங்களின் பெயர் | 1994-95 | | 1995-96 | |
|---|---|---|---|---|---|
| | | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் கோடியில்) | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட நிதியுதவி (ரூபாய் கோடியில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் | 8 | 4.71 | 5 | 2.65 |
| 2. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் | 705 | 4.76 | 1640 | 15.25 |
| 3. | தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் | .. | .. | 79 | 3.96 |

[1997 மார்ச் 26

## 11. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான உள்ளமைப்பு வசதி ஏற்படுத்துதல்

அரசு இதுவரை நகைக் கடன் வழங்கும் பணியினை மேற்கொள்ளும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், இரும்புப் பெட்டகம் வாங்குவதற்கு 1045 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 130.95 இலட்சம் கடனுதவி வழங்கியுள்ளது.

இதைத் தவிர, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மூலம் 1992-93 முதல் 1994-95 ஆம் ஆண்டு வரை 350 இரும்புப் பெட்டகங்களும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் 1992-93 முதல் 1994-95 வரை 300 இரும்புப் பெட்டகங்களும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் பொலிவான வங்கிகளாகத் திகழ ஏதுவாக நவீன வங்கி முகப்பு அமைத்திட தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி 650 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு ரூ. 37.25 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. 1995-96 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி 800 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 160.00 இலட்சமும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 200 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ. 40.00 இலட்சமும் நவீன வங்கி முகப்பு அமைத்திட வழங்கப்பட்டு உள்ளன. இந்த 1000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நவீன வங்கி முகப்பு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## 12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வைப்புத் தொகை உத்திரவாதத் திட்டம் செயல்படுத்துதல்

தமிழ்நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை உத்திரவாதத் திட்டம் 1-4-1992 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் திரட்டு வைப்புத் தொகைகளுக்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் உத்திரவாதம் அளிக்கின்றன. இத்திட்டத்தின் நோக்கம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள வைப்புத் தொகைகளுக்கு உத்திரவாதம் வழங்குவதின் மூலம் வைப்புத் தொகையை முதலீடு செய்பவர்களின் மனதில் தங்களது தொகைக்குக் பாதுகாப்பு உள்ளது என்ற நம்பிக்கையை



1997 மார்ச் 26]

ஏற்படுத்துவதோடு மட்டுமின்றி, அவற்றிற்கும் அதிக அளவு வைப்புத் தொகை கிடைப்பதற்கும் இதன் மூலம் வாய்ப்பு ஏற்படுத்துவதும் ஆகும்.

இத்திட்டம், கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து வங்கிகளில் செயல்படும் தன்னிறைவினைப் பெற்று செயல்படுத்தப்படுகிறது:

(i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் ஆண்டு இறுதியில் கடைசி தேதியன்று 6 மாதங்களுக்கு மேல் தவணை கொண்ட வைப்புத் தொகை நிலுவை ரூ. 25,000-மும் அதற்கு மேலும் இருக்க வேண்டும்.

(ii) வங்கிகளின் கணக்குகளை நன்கு முறையாகப் பராமரித்திடல் வேண்டும்.

வைப்பு உத்திரவாதத் திட்டத்தின்கீழ் எழும் கோரிக்கைகளை நிறைவு செய்ய ஏதுவாக ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் உத்திரவாத நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. உத்திரவாதம் வழங்கப்பட வேண்டிய வைப்புத் தொகை நிலுவைக்கு கீழ்க்கண்டவாறு உத்திரவாத நிதிக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| (i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | .. | 0.15% |
| (ii) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி | .. | 0.10% |
| (iii) மாநிலக் கூட்டுறவு வங்கி | .. | 0.05% |

மேற்கூறிய உத்திரவாத நிதி வைப்பு உத்திரவாதத்தின் அடிப்படையில் பெறப்படும் கோரிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக் கூடாது.

## 13. ஒருங்கிணைந்த சிறுதானியப் பெருக்குத் திட்டம்

ஒருங்கிணைந்த அரிசி பெருக்குத் திட்டத்திற்குப் பதிலாக 1994-95 ஆம் ஆண்டு முதல் மைய அரசு ஒருங்கிணைந்த சிறுதானியப் பெருக்குத் திட்டத்தை (Integrated Cereals Development Programme) அறிமுகப்படுத்தி உள்ளது. இத்திட்டம், 13 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லைகளில், 140 தெரிவு செய்யப்பட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1995-96 மற்றும்

[1997 மார்ச் 26

1996-97 ஆம் ஆண்டுகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கடன் குறியீடு மற்றும் எய்தப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:

| ஆண்டு | திட்டக் குறியீடு | அடைந்த முன்னேற்றம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1995-96 | 145.00 | 133.86 |
| 1996-97 (ஜனவரி 1997 வரை) | 150.00 | 139.75 |

## 14. எண்ணெய் வித்துக்கள் பெருக்குத் திட்டம்

இத்திட்டம், சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மறுநிதி உதவியுடன் எண்ணெய் வித்துக்கள் பயிர் சாகுபடி செய்யக் கூட்டுறவுகள் பிரத்தியேகக் கடன் வழங்குகின்றன. 1995-96 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 90.00 கோடி குறுகிய காலக் கடனை அரசு வழங்கத் திட்டமிடப்பட்டதில் ரூ. 101.84 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு குறுகிய காலக் கடன் ரூ. 105.00 கோடி வழங்கத் திட்டமிட்டதில் 31-1-97 வரை ரூ. 59.92 கோடி அளவிற்குக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 15. கடன்கள் வசூல்

இன்று கூட்டுறவுகளை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று, பெருகிவரும் தவணை தவறிய கடன் நிலுவையாகும். இது கூட்டுறவுக் கடன்களைத் தங்குதடையின்றி வழங்குவதற்குப் பெரும் தடையாக உள்ளது. தவணை தவறிய கடன் நிலுவைக் கேட்பில் 40 விழுக்காட்டிற்குக் குறைவில்லாமல் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வசூல் செய்தாலன்றி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மறு நிதி வசதி அளிக்காது. தவணை தவறிய கடன் நிலுவையைக் குறைக்கும் பொருட்டு, கடனைத் திரும்பச் செலுத்தத் தவறியவர்களிடமிருந்து கடனை வசூல் செய்வதை முனைப்பாக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது.



1997 மார்ச் 26 ]

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன் நிலுவை கடந்த எட்டு ஆண்டுகளில் பின்வருமாறு, உள்ளது :-

| தேதியன்று | நிலுவைத் தொகை | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அளவில் | |
|---|---|---|---|
| | | தவணை தவறிய நிலுவைத் தொகை (ரூபாய் கோடியில்) | கேட்பில் தவணை தவறிய நிலுவையின் சதவீதம் (சதவீதம்) |
| (1) | (2) | (3) | (4) |
| 30-6-1989 | 710.58 | 227.50 | 36.3 |
| 30-6-1990 | 941.31 | 398.34 | 55.6 |
| 30-6-1991 | 1091.85 | 404.63 | 43.7 |
| 30-6-1992 | 1114.32 | 444.06 | 41.4 |
| 30-6-1993 | 1435.79 | 398.71 | 31.8 |
| 30-6-1994 | 1533.63 | 397.62 | 27.5 |
| 30-6-1995 | 1719.94 | 418.80 | 24.8 |
| 30-6-1996 | 2048.95 | 576.30 | 29.8 |

சிறு விவசாயிகளிடமிருந்து தவணை தவறிய கடனை வசூலிக்கும்போது கடுமையான நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து சுமூகமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் விதத்திலும், அதே சமயத்தில் தவணை தவறிய கடன் வசூலில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் கீழ்க்கண்ட ஆறுவகையான கடன்தாரர்கள் மீது சட்ட பூர்வ நடவடிக்கை எடுக்க அரசு, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அனுமதி அளித்துள்ளது :-

1) 5 ஏக்கரும் அதற்கு மேலும் நிலம் உள்ள நிலச்சுவான்தாரர்கள்.

2) டிராக்டர் மற்றும் இதர வேளாண்மைத் துணைக் கருவிகள் வாங்க கடன் பெற்றவர்கள்/பண்ணை சாராக் கடன் பெற்றவர்கள்.

3) டாக்டர், வழக்கறிஞர், பொறியாளர் போன்ற தொழில் செய்பவர்கள் மற்றும் வணிகர்கள், அரிசி ஆலை வைத்திருப்பவர்கள், திரை அரங்கு வைத்திருப்பவர்கள் போன்ற இதர வருமானம் உடையவர்கள்.

[1997 மார்ச் 26

4) அடமானம் வைக்கப்பட்ட நிலத்தை விற்றுவிட்டவர்கள்/விற்றுவிட முயற்சிப்பவர்கள்.

5) கடன் தொகையைப் பெற்ற காரியத்திற்குப் பயன்படுத்தாமல் இதர காரியங்களுக்குப் பயன்படுத்தியவர்கள் ; மற்றும்

6) கூட்டுறவு வங்கியில் ரூ.10,000-க்கு மேல் கடன் நிலுவை வைத்திருப்பவர்கள்

## 16. நகைக் கடன்

கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க பணியாற்றி வருகின்றன. 1996-97 ஆம் ஆண்டில் ரூ.2,000.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்க திட்டமிட்டதில், 1996-97 ஆம் ஆண்டு 31-1-97 வரை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் ரூ.2037.01 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கியுள்ளன. 1997-98 ஆம் ஆண்டில் ரூ.2400.00 கோடி அளவிற்கு நகையீட்டுக் கடன்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களின் அவசர நிதித் தேவைகளை நிறைவு செய்து அவர்கள் வட்டிக் கடைக்காரர்களின் பிடியில் சிக்காமல் பாதுகாக்கின்றது.

## 17. விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம்

இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், பாதுகாப்பு பெற்றுப் பயனடைய சரியான ஒரு சாதனமாக, விரிவான பயிர் ஈட்டுறுதித் திட்டம் இம்மாநிலத்தில் 1985-86 ஆம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் உள்ளது. மத்திய அரசும், மாநில அரசும் பிரிமியத் தொகையைப் பகிர்ந்து கொள்வதிலும், ஈட்டுறுதித் தொகையை வழங்குவதிலும் 2:1 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன. இந்திய பொதுக் காப்பீட்டுக் கழகமும், தமிழ்நாடு பயிர்ப் பாதுகாப்பு நிதியினைக் கையாளும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும், முறையே மைய அரசு மற்றும் மாநில அரசின் முகவர்களாகச் செயல்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு நிறுவனங்கள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் நெல், கோதுமை, சிறுதானியங்கள், எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கு வழங்கப்படும் பயிர்க் கடன்கள் முழுவதும், ஒரு விவசாயிக்கு ரூ.10,000-க்கு மிகாமல் கட்டாய அடிப்படையில்



1997 மார்ச் 26 ]

ஈட்டுறுதி செய்யப்படுகிறது. ஈட்டுறுதி செய்யப்பட்ட தொகையில் இரு விழுக்காடு, நெல், கோதுமை மற்றும் சிறுதானியப் பயிர்களுக்கும். ஒரு விழுக்காடு எண்ணெய்வித்துக்கள் மற்றும் பருப்பு வகைப் பயிர்களுக்கும், பிரிமியக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும், சிறு மற்றும் குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. இச்செலவினை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பகிர்ந்து கொள்கின்றன.

நமது மாநிலத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் மற்றும் சூரியகாந்திப் பயிர்களுக்கு இத்திட்டம் செயலாக்கப் படுகிறது. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :-

| வ. எண் | பருவகாலம் | இணைந்த விவசாயிகளின் எண்ணிக்கை | பரப்பளவு ஹெக்டேரில் | ஈட்டுறுதி செய்த தொகை | வசூலித்த பிரிமியம் | வழங்கிய ஈட்டுத் தொகை | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | |
| 1. | காரீப் 1991 | 99844 | 156129 | 3934.00 | 75.84 | 28.56 | 10374 |
| 2. | ராபி 1991-92 | 117594 | 159466 | 5191.75 | 88.85 | 117.93 | 15978 |
| 3. | காரீப் 1992 | 133765 | 292425 | 5670.07 | 110.52 | 195.12 | 16472 |
| 4. | ராபி 1992-93 | 110455 | 161228 | 5781.38 | 97.30 | 111.82 | 22022 |
| 5. | காரீப் 1993-94 | 129548 | 217279 | 6359.06 | 126.46 | 571.37 | 51282 |
| 6. | ராபி 1993-94 | 98264 | 153631 | 5698.98 | 101.69 | 666.19 | 28887 |
| 7. | காரீப் 1994 | 133966 | 205873 | 7139.35 | 139.74 | 20.34 | 2390 |
| 8. | ராபி 1994-95 | 107940 | 175237 | 6512.37 | 114.33 | 164.09 | 12004 |
| 9. | கார்/1995 குறுவை சொர்ணவாரி நெல் 1 | 29172 | 50458 | 1670.63 | 33.41 | 18.01 | 3089 |
| 10. | காரீப் 1995 | 7679 | 17514 | 426.07 | 4.27 | 36.55 | 3105 |

[1997 மார்ச் 26

இத்திட்டம் தற்போது நெல் மற்றும்/இதர பயிர்களுக்கும் 1996-97 ஆம் ஆண்டுக்கு அறிவிக்கப்பட்ட வட்டாரங்களில் கீழ்க்குறிப்பிட்டவாறு செயலாக்கப்படுகிறது :-

| வ. எண். | பயிர் வகை மற்றும் பருவ காலம். | அறிவிக்கை செய்யப்பட்ட வட்டாரங்களின் எண்ணிக்கை (பயிர் வாரியாக) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | நெல் | சோளம் | கம்பு | கேழ் வரகு. | நிலக் கடலை. | எள் | சூரிய காந்தி. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1. | காரீப் (1-4-96 முதல் 30-6-96 வரை) | - | 102 | 62 | 36 | 144 | 50 | 7 |
| 2. | கார்/குறுவை/சொர்ணவாரி நெல் (1-4-96 முதல் 31-7-96 வரை) | 136 | - | - | - | - | - | - |
| 3. | சம்பா/தாளடி/பிஷாணம் நெல் (1-8-96 முதல் 30-11-96 வரை) | 180 | - | - | - | - | - | - |
| 4. | நவரை/கோடை நெல் (1-12-96 முதல் 31-03-97 வரை) | 67 | - | - | - | - | - | - |
| 5. | ராபி 96-97 (1-10-96 முதல் 31-3-97 வரை) | - | 65 | 54 | 85 | 139 | 60 | 2 |



1997 மார்ச் 26 ]

## (ஆ) நீண்ட காலக் கடன் அமைப்பு :

நீண்ட காலக் கடன் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு மாநில நிலவள வங்கி மற்றும் வட்டம்/வட்டார அளவில் 181 தொடக்க நிலவள வங்கிகள் என இரண்டு அடுக்குகளைக் கொண்டதாகும். இக்கடன் நிறுவனங்கள், சிறுபாசனம், தோட்டப்பயிர்கள் சாகுபடி செய்தல் மற்றும் கோழி வளர்ப்பு, பால் பண்ணை, ஆடு வளர்த்தல், டயர் வண்டிகள் வாங்குதல், பட்டுப்புழு வளர்ப்பு போன்ற மேம்பாட்டு நோக்கங்களுக்குத் திட்ட அடிப்படையில் கடன்களை வழங்கி வருகின்றன. மேற்குறிப்பிட்டவை தவிர கிணறுகளைப் பழுது பார்த்தல், நீர்க் குழாய்கள் அமைத்தல், டிராக்டர் விசை உழவுச் சாதனங்கள் வாங்குதல் மற்றும் பண்ணை வீடு, கால்நடைத் தொழுவம் கட்டுதல் போன்ற காரியங்களுக்கும் சாதாரண கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் (Normal Programme) தொடக்க நிலவள வங்கிகள் கடன்களை வழங்கி வருகின்றன. இவ்வகையான கடன்களைத் திருப்பிச் செலுத்தும் காலம் 5 ஆண்டுகள் முதல் 15 ஆண்டுகள் ஆகும்.

### 1. தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி :

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பெறுகிறது. மத்திய, மாநில அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அதன் பிரிவுகள், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. நபார்டு, மத்திய மற்றும் மாநில அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. சிறிய நீர்ப்பாசனம் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் அல்லாத திட்டங்களின்கீழ் நிதியுதவி செய்யும் நோக்கத்தோடு, பகுதி முன்னேற்றத் திட்டங்கள் பலவற்றை மாநில நிலவள வங்கி தீட்டியுள்ளது. 31-1-97 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூ. 43.63 கோடி மற்றும் ரூ.533.16 கோடி நிலுவையில் உள்ளது. 31-1-97 அன்று வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூ. 122.88 கோடியாகும். ஒவ்வொரு சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கான காலம் முடிவடையும்போதும் பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்கான "கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி" (Debenture Redemption Fund) ஒன்றினை வங்கி பராமரித்து வருகிறது. இந்த நிதியில் 31-1-97 ஆம் தேதியில் ரூ.17.23 கோடி உள்ளது.

[1997 மார்ச் 26

பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களைக் கண்காணிக்கவும் (Monitoring) திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயனைக் கணிப்பாய்வு (Evaluation) செய்யவும், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக் குழு ஒன்றை, தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. 31-1-97 வரை 431 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு விரிவாக்கப் பணியாக 'நிலவளம்' என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. பிரதம நிலவள வங்கிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக நபார்டின் உதவியுடன் இறுதிநிலை பணியாளர் பயிற்சித் திட்டம் ஒன்றினை. தமிழ்நாடு கூட்டுறவு மாநில/நிலவள வங்கி சென்னையில் நடத்தி வருகிறது.

## 2. தொடக்க நிலவள வங்கிகள் :

தொடக்க நிலவள வங்கிகள் தமக்குத் தேவைப்படும் நீண்ட காலக் கடன் தொகையை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கியிடமிருந்து பெறுகின்றன.

தொடக்க நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதியை-முக்கியமாக அவற்றின் கடன் வசூல் செயல்பாட்டினை தொடர்புறுத்தும் வகையில் "நபார்டு" (தேசிய வேளாண்மை மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி) நெறிமுறைகளை நிர்ணயம் செய்துள்ளது.

தொடக்க நிலவள வங்கிகளில் கடன் வழங்கும் தகுதியை நிர்ணயம் செய்ய, கீழ்க்கண்ட நெறிமுறைகளை 1-4-1991 முதல் அனுசரிக்கும் வகையில் "நபார்டு" வகுத்துள்ளது:-



1997 மார்ச் 26]

| முந்திய ஆண்டில் ஜூன் 30-ம் நாளில் நிலவள கடன் வசூல் விழுக்காடு. (1) | தொடக்க நிலவள வங்கிகளில் கடன் வழங்கும் தகுதி. (2) |
|---|---|
| 1. 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் | வரையறை அற்றது. |
| 2. 60 விழுக்காட்டிற்கும் குறைவாக | ஜூன் 30-ஆம் நாளுடன் முடிவடைந்த முந்தைய ஆண்டில் வசூலான தொகை அல்லது மார்ச் 31-ஆம் நாளுடன் முடிவடைந்த முந்தைய ஆண்டில் வழங்கிய கடன் தொகை அல்லது கடந்த 3 ஆண்டுகளில் வசூலான தொகை/கடன் வழங்கிய தொகை ஆகியவற்றின் சராசரித் தொகை இவற்றில் எது அதிகமோ அந்த அளவிற்கு கடன் வழங்கலாம். |

மேலும் நபார்டு நிறுவனம் 1997-98 ஆம் ஆண்டிலிருந்து நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதியினை படிப்படியாக பின்வரும் முறைப்படி நிர்ணயிக்க உத்தேசித்துள்ளது :-

| ஆண்டு. (1) | வரையறை அற்ற கடன் தகுதியைப் பெற குறிக்கப்பட்ட வசூல் விழுக்காடு புள்ளி. (2) |
|---|---|
| 1997-98 | 65-க்கும் குறையாமல். |
| 1998-99 | 70-க்கும் குறையாமல். |

[1997 மார்ச் 26

| | |
|---|---|
| 1999-2000 | 75-க்கும் குறையாமல். |

கீழ்க்கண்ட திட்ட காலங்களில் தொடக்க நிலவள வங்கிகள் வழங்கிய கடன்களின் அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :-

(ரூ. கோடியில்).

| திட்ட காலம். | ஆண்டு. | குறியீடு. | எய்தியது. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் | 1985-86 | 20.00 | 24.19 |
| | 1986-87 | 20.00 | 20.52 |
| | 1987-88 | 26.00 | 30.60 |
| | 1988-89 | 27.00 | 28.94 |
| | 1989-90 | 30.00 | 25.97 |
| 2. ஆண்டுத் திட்டம் | 1990-91 | 25.00 | 31.31 |
| | 1991-92 | 32.00 | 41.71 |
| 3. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் | 1992-93 | 41.00 | 64.21 |
| | 1993-94 | 49.50 | 112.85 |
| | 1994-95 | 130.00 | 150.02 |
| | 1995-96 | 170.00 | 188.83 |
| | 1996-97 (ஜனவரி 97 வரை). | 200.00 | 100.19 |

1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 294.75 கோடி அளவிற்கு நீண்ட காலக் கடன்கள் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி திட்டம் வகுத்துள்ளது.

## 2. தொடக்க நிலவள வங்கிகள் கடன்கள் வழங்குவதற்கான புதிய வழிகள் :

நிதி வசதி அடிப்படையில் இதர நிதி நிறுவனங்கள் அளவில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நிலவள வங்கிகள் கீழே விவரித்துள்ளபடி பிற பகுதிகளிலும் கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன :-



1997 மார்ச் 26 ]

### (i) பண்ணைசாரா பகுதிக்கு நிதி வசதி அளித்தல் :

கிராம கைவினைஞர்கள், சிறு கைத்தொழில் செய்பவர்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில் முனைவோர் ஆகியவர்கட்கு பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் நிதி உதவி செய்வதை 1990-91ஆம் ஆண்டு முதல் தொடக்க நிலவள வங்கிகள் மேற்கொண்டு உள்ளன. அவ்வகையான நிதியுதவித் திட்டத்தின்கீழ் இலாபகரமான வேலை வாய்ப்பின் மூலம் கிராமப்புற மக்கள் தங்களது வருமானத்தை கணிசமாக உயர்த்திக் கொள்ளும் வகையில் பயனடைவர். மேலே கூறப்பட்ட திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன்களுக்கு 'நபார்டு' நிறுவனம் கடன் வழங்கும் தகுதிக்கு நிர்ணயித்துள்ள நெறிமுறைகளை வலியுறுத்தாமல் 100 விழுக்காடு மறு நிதியுதவியை அளிக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் தனி நபர் ஒருவருக்கு அதிகப்படியாக ரூ. 50,000 கூட்டுக் கடனாகவும், ரூ. 10 லட்சம் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கலாம் எனக் கடனளவு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மேலும் 'நபார்டு' நிறுவனம் தற்சமயம் கிராமப்புறங்களில் உடல் நலம் மற்றும் சுகாதாரத்தினைப் பேணும் பொருட்டு சுகாதார நலத் திட்டங்களுக்கு பண்ணைசாராக் கடன் திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் மருத்துவமனை, மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் ஆகியவை அமைக்க அதில் தேர்ந்த கல்வித் தகுதி மற்றும் பயிற்சித் தகுதிகள் உடையோருக்கு நிலவள வங்கிகள் மூலம் கடனுதவி அளிப்பதை அங்கீகரித்துள்ளது. இத்திட்டத்தின்படி, மேற்குறிப்பிட்டபடி காரியங்களுக்கு அதிகபட்சமாக ரூ.10 இலட்சம் வரை கடனுதவி அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள நிலவள வங்கிகள் மேற்குறிப்பிட்டபடி அனுமதிக்கப்பட்ட திட்டங்களை அமுல்படுத்தத் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

1990-91-ஆம் ஆண்டு முதல் தொடக்க நிலவள வங்கிகள் பண்ணை சாராக் கடன் திட்டத்தின்கீழ் வழங்கிய கடன்களின் விவரம் வருமாறு :-

[1997 மார்ச் 26

| ஆண்டு. | (ரூ. கோடியில்) கடன் வழங்கியது. |
|---|---|
| (1) | (2) |
| 1990-91 | 1.91 |
| 1991-92 | 3.84 |
| 1992-93 | 15.52 |
| 1993-94 | 40.06 |
| 1994-95 | 51.32 |
| 1995-96 | 72.92 |
| 1996-97 (ஜனவரி 97 முடிய.) | 36.49 |

பண்ணைசாராக் கடன் திட்டத்தின்கீழ் 1997-98-ஆம் ஆண்டில் ரூ.128.75 கோடி அளவில் நிலவள வங்கிகள் மூலம் கடன் வழங்க மாநில நிலவள வங்கி திட்டமிட்டுள்ளது.

**(ii) கிராமப் புறங்களில் சாலைப் போக்குவரத்து காரியங்களுக்கு சிறு ஊர்தி நடத்துநர்களுக்கு கடன் வழங்குதல் :**

கிராமப்புறங்களில் வசிக்கும் தனிநபர், தனிநபர் குழுக்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு விவசாய விளை பொருட்கள் மற்றும் தொழிலியல் உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்துக்காக மூன்று சக்கர வண்டிகள், டெம்போக்கள், வேன்கள் போன்ற போக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்கள் வழங்க தொடக்க வேளாண்மை நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வகைக் கடனின் அளவு, வண்டியின் அமைப்புச் சட்டம், கட்டுமானச் செலவு, வரிகள் உள்ளிட்ட அலகு விலையில் 85 விழுக்காடு என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**3. சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி :**

ஆண்டுக் கடன் திட்டத்தினை நிர்ணயம் செய்கையில், சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக (சிறிய விவசாயிகள்) கடன் தேவைகளை முழுமையாக நிறைவு செய்யும் நோக்குடன் சாதாரணத் திட்டத்தின் கீழ் 20 விழுக்காடு அளவிற்கும், திட்ட அடிப்படையில் 65 விழுக்காடு அளவிற்கும், நலிவுற்ற பிரிவினருக்காக பிரத்யேகமாக நிதி ஒதுக்கீடு



1997 மார்ச் 26 ]

செய்யப்படுகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கப்பட்ட கடன்களின் அளவு மற்றும் அவ்வாறான கடன் தொகைகளின் விழுக்காடு விபரம் வருமாறு :—

| ஆண்டு | (ரூ. கோடியில்) வழங்கப்பட்ட மொத்த கடன். | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன். | வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் விழுக்காடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1992-93 | 64.21 | 17.52 | 27.3 |
| 1993-94 | 112.85 | 25.41 | 22.5 |
| 1994-95 | 150.02 | 30.61 | 20.4 |
| 1995-96 | 188.83 | 37.01 | 19.6 |
| 1996-97 ஜனவரி '97 முடிய. | 100.19 | 16.06 | 16.03 |

**4. கடன் வசூல் :**

தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி அவற்றின் செயல்பாட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஜூன் 30 ஆம் நாளுடன் முடிவடையும் ஆண்டில் வசூல் செய்ய வேண்டிய தொகையில் 60 விழுக்காட்டிற்கும் குறையாமல் வசூல் செய்யாவிடில், அவைகள் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியைப் பெற வாய்ப்பில்லை. தவிரவும், 1997-98 ஆம் ஆண்டிலிருந்து நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதியினை முன்னதாகக் குறிப்பிட்டபடி 'நபார்டு' நிறுவனம் அவைகளின் வசூல் செயல்பாட்டு விழுக்காடு புள்ளிகளை அதிகரித்து நிர்ணயித்துள்ளது. மேலும் நிலவள வங்கிகளின் இலாபம் ஈட்டும் தன்மை மற்றும் கடன் வழங்கப் போதுமான நிதி ஆதாரத்தை பெருக்கிக் கொள்வதற்காகவும், தவணை கடந்த கடன் தொகைகளை கூடுமானவரை உயர்ந்தபட்ச அளவிற்கு வசூல் செய்வது அவசியமாகிறது. எனினும், குறுகிய கால இடைவெளிகளில் அடிக்கடி ஏற்பட்டு வரும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கையின்

[1997 மார்ச் 26

சீற்றங்கள் மற்றும் கடன் பெற்றவர்களிடையே கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற மனப்பான்மை இல்லாத நிலை ஆகியவை தவணை கடந்த தொகைகள் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணங்களாகும். இந்நிலையில், இவ்வகையான கடன்தாரர்களை நேரிடையாகச் சந்திப்பதன் மூலமும் தீவிர அணுகுமுறை மூலமும் தவணைத் தொகைகளை தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் வசூல் செய்ய வேண்டியுள்ளது. மேற்கூறிய இடர்பாடுகள் இருந்தபோதிலும், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளின் கடன் வசூல் செயல்பாடு 1994-95 ஆம் ஆண்டு வரை திருப்திகரமாக இருந்து வந்துள்ளது. ஆனால் 1995-96 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் பல பகுதிகளில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக நிலவள வங்கிகளின் கடன் வசூல் பாதிக்கப்பட்டு நிலவள வங்கிகளின் கடன் வசூல் 42.3 விழுக்காடு அளவிற்கு மட்டுமே உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் வசூல் விவரம் வருமாறு :-

| தேதியில் | கடன் நிலுவைத் தொகை | தவணை கடந்த நிலுவைத் தொகை | கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 30 ஜூன், 93 | 246.49 | 42.37 | 39.8 |
| 30 ஜூன், 94 | 316.31 | 26.92 | 28.7 |
| 30 ஜூன், 95 | 426.60 | 18.49 | 18.0 |
| 30 ஜூன், 96 | 562.85 | 110.42 | 57.5 |

## 5. பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி

தமிழ்நாடு தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகளில் கடன் பெற்று தோண்டப்படும் கிணறுகளில் தண்ணீர் இன்றி பொய்த்துப் போய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்காக "பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி" ஒன்றைத் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி நிர்வகித்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகட்கும், பெரிய விவசாயிகட்கும் முறையே 90 விழுக்காடும், 75 விழுக்காடும் அசல் மற்றும் வட்டிப் பகுதிகளுக்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன சிறு



1997 மார்ச் 26]

விவசாயிகட்கு அவர்கள் செய்த சொந்த முதலீடு நீங்கலாக, முழுத் தொகையும் மானியமாக அளிக்கப்படுகிறது. 31-1-97 வரை 3207 பொய்த்த கிணறுகட்கு ரூ.2.22 கோடி உதவி வழங்கப்பட்டது.

எல்லா மாநிலங்கட்கும் பொதுவான "பொய்த்த கிணறுகள் இழப்பீட்டுத் திட்டம்" ஏற்படுத்தும் நோக்கத்துடனும், மானியம் அளிப்பதில் பொதுவான நெறிமுறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடனும், எல்லா மாநிலங்களும் கடைப்பிடிப்பதற்கான "பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி" ஒன்றை 'நபார்டு' அறிவித்துள்ளது. மேற்படி பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதித் திட்டத்தினை 1-7-86 முதல் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்படி தொடக்கக் கூட்டுறவு வங்கிகள், தொடக்கக் கூட்டுறவு நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி, அவை பொய்த்துப் போனால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகட்கு 100 விழுக்காடு அளவிற்கு மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி கடன் தொகையில் அசல் மட்டும் மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்து கொள்ளப்படும். வட்டிப் பகுதியைப் பொறுத்தவரையில், 'நபார்டு' திட்டங்கள் சார்ந்த கடன்களாக இருந்தால், 'நபார்டு'ம், சம்பந்தப்பட்ட வங்கியும் சரிசமமான அளவிலும், இதர சாதாரணத் திட்டம் சார்ந்த கடன்களாக இருந்தால், முழு வட்டித் தொகையையும் சம்பந்தப்பட்ட வங்கி தள்ளுபடி செய்து தன் சொந்த நிதியிலிருந்து ஏற்கும். 1993-94 ஆம் ஆண்டிலிருந்து இதில் இந்திய அரசின் பங்கு நிறுத்தப்பட்டுவிட்டது. இருப்பினும், மாநில அரசு தொடர்ந்து இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் 31-01-1997 வரை 179 பொய்த்த கிணறுகளுக்கு ரூ.28.49 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதியின் கீழ், 1996-97 ஆம் ஆண்டுக்கு ரூ.15.00 இலட்சம் மானியமாக அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## (இ) நகர்ப்புறக் கடன்

### 1. நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள்

நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கியியல் மற்றும் கடன் வசதிகளைச் செய்து தரும் நிதி

நிறுவனங்களாக நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. தற்போது தமிழகத்தில் 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அவ்வங்கிகள் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய்த் தரப்பு பிரிவினரிடமிருந்து வைப்புத் தொகை சேகரித்து அதனைத் தெரிந்தெடுக்கப்பட்ட காரணங்களுக்குக் கடனாக வழங்கப் பயன்படுத்தி வருகின்றன. சிறு வியாபாரிகள், கைவினைஞர்கள், நடுத்தரப் பிரிவினர் ஆகியோருக்கு வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல், மிகச் சிறு வியாபாரம் செய்தல், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் செய்தல் ஆகிய நோக்கங்களுக்குக் கடன் உதவி செய்வது இவ்வங்கிகளின் செயல்பாட்டில் அடங்குவனவாகும். நகரக் கூட்டுறவு வங்கிகள் 1-4-96 முதல் 31-1-97 வரையில் நகர்ப்புறம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்த மக்களுக்கு குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடனாக ரூ.672.42 கோடி அளவிற்கு கடன்களை வழங்கியுள்ளது. இவ்வங்கிகளின் வைப்புத்தொகை 1-1-1997-ல் ரூ.969.27 கோடி அளவிற்கு நிலுவையில் இருந்தது. இந்தியத் தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை நோக்கங்களுக்கான கடனாகவும், அவ்வாறு வழங்கும் முன்னுரிமைக் கடன் தொகையில், 25 சதவீதத்திற்குக் குறையாமல் நலிவுற்ற பிரிவினருக்கான கடனாகவும் வழங்க வேண்டும்.

## 2. அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டம்

கடன் நிறுவனங்களில் பின்பற்றப்படும் நெறிமுறைகளைப் போலவே, நகரக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களின் கடனின் அளவு அவர்கள் செலுத்தும் பங்குத்தொகை அளவுடன் தொடர்புற்றதாகும். நகரக் கூட்டுறவு வங்கிகளில் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடன் பெறும் சக்தியை அதிகரிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாக் கடனாக ரூ. 500 வழங்கப்படுகிறது. இக்கடன் ஐந்து ஆண்டு சம தவணைகளில் வசூலிக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் கீழ், 1992-93 ஆம் ஆண்டிலிருந்து 1995-96 ஆம் ஆண்டு வரை நகரக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த 10,017 நபர்களுக்கு ரூ.50.00 இலட்சம் பங்கு மூலதனக் கடனாக வழங்கப்பட்டது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டில் நகரக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள 2000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக



ரூ.10.00 இலட்சம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. நகர்ப்புற வங்கிகள் மூலம் வேளாண்மை சார்பற்ற கடன்கள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் வேளாண்மை சாராப் பிரிவில் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன.

1996-97 ஆம் ஆண்டில் சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற வேளாண்மை சாராப் பிரிவு கடன்களாக ரூ.22.00 கோடி அளவிற்கு வழங்கத் திட்டமிட்டு 31-1-97 வரை ரூ.44.77 கோடி அளவிற்கு 33,330 நகர கூட்டுறவு வங்கி உறுப்பினர்கள் கடன் பெற்று பயனடைந்துள்ளனர்.

## 4. தலைமை நகரக் கூட்டுறவு வங்கி அமைத்தல்

நகரக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளை மேம்படுத்த இரண்டு அடுக்கு முறை கொண்டுவருவது என தீர்மானிக்கப்பட்டு, இதற்காக தலைமை நகரக் கூட்டுறவு வங்கி ஒன்றினை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தினை செயல்படுத்தும் பொருட்டு, தற்போதுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் இணையத்தை தலைமை வங்கியாக மாற்றிட பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**அத்தியாயம்-4**

## தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

புதுடில்லி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவிடன் விவசாய மற்றும் தொடர்புடைய பிரதம கூட்டுறவுகளின் வணிக அளவை பன்முகப்படுத்தி பெருக்க, மாநிலத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. சங்கத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் பகுதி சார்ந்த அடிப்படையிலான வளர்ச்சி காண்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், கூட்டுறவுகளின் உள்ளமைப்பு வசதிகளை செம்மைப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்படி, கீழ்க்கண்ட முக்கியமான நோக்கங்களுக்கு உதவியளிக்கப்படுகின்றன :-

(i) திட்ட அறிக்கை தயாரித்தல்

(ii) உள்ளமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

(iii) நடைமுறை மூலதனத்தை அதிகரிக்க வங்கிகளிலிருந்து விளிம்புத் தொகை உதவியளித்தல்.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் சம்பளம் பெறும் மேலாண்மையாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.

(v) உறுப்பினர் கல்வி மற்றும் விளம்பரம் செய்தல்.

(vi) கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் செயல்மேம்பாட்டிற்கு ஊக்கத்தொகை அளித்தல்; மற்றும்

(vii) மின்னணு விவர வகைப்பாட்டு முறை உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் திட்டச் செயலாக்கம்.

காமராஜர், தென்னாற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசு இதுவரை ஒப்பளித்துள்ளது.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்த அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மாவட்டம் காமராஜர்



மாவட்டமாகும். 1989-ஆம் ஆண்டு காமராசர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் துவங்கப்பட்டது. 1995-ஆம் ஆண்டு மார்ச் மாதம் இத்திட்டம் முடிவடைந்தது. ரூ.861.36 இலட்சங்கள் மொத்த செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ரூ.1508.207 இலட்சங்கள் திட்ட மதிப்பளவுடன் 1992-93 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் செயலாக்க காலம் 30-6-96 அன்று முடிவடைய இருந்தது. திட்டத்தைக் குறைவின்றிச் செயல்படுத்த, மாநில அரசின் வேண்டுகோளின்படி தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், இத்திட்டத்தின் செயலாக்க காலத்தை 31-3-97 வரை நீட்டித்துள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை முறையே ரூ. 1081.07 இலட்சங்கள் மற்றும் ரூ. 1160.25 இலட்சங்கள் மதிப்பளவில் செயல்படுத்த 1995 மார்ச் திங்களில் அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டங்களின் இரண்டாவது ஆண்டு கட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

புதுடில்லி தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை ரூ.816.580 இலட்சம் செலவில் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்த 1996-ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்து மார்ச் 1996-ல இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்து, முதல் ஆண்டு குறியீட்டில் 50 விழுக்காடுத் தொகையான ரூ.120.038 இலட்சம் வழிவகை முன்பணமாக அரசால் ஒப்பளிக்கப்பட்டு திட்டச் செயலாக்க முகமையான திருவண்ணாமலை கூட்டுறவு மத்திய வங்கிக்கு விடுவித்துள்ளது. முதலாம் ஆண்டு உபதிட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை தற்போது அண்ணா மாவட்டம் மற்றும் எம்.ஜி.ஆர். மாவட்டம் என்று பிரிக்கப்பட்டுள்ள முந்தைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்திலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1997 மார்ச் 26

## அத்தியாயம் - 5

## கூட்டுறவுகள் மூலம் வேளாண் இடுபொருள்கள் விநியோகம் செய்தல்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை தமிழ்நாட்டில் இயங்கிவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்கு இரசாயன உரங்கள் மற்றும் இதர இடுபொருள்களான விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் கருவிகள் ஆகியவற்றை வழங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு பயிர்க் கடனில் பொருட் பகுதியாகவும், அங்கத்தினர் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்கத்திற்கும், இவ்விடுபொருள்கள் 4,355 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் 82 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நடத்தும் 5,678 சில்லரை விற்பனை நிலையங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த நிதியாண்டிலும் (1995-96) நடப்பு நிதியாண்டிலும் (1996-97) வழங்கப்பட்ட உரம் மற்றும் இதர இடுபொருள்களின் மதிப்பு கீழே தரப்பட்டுள்ளது :-

| ஆண்டு | உரங்கள் | விதைகள் | பூச்சிக்கொல்லி மருந்துகள் | வேளாண் கருவிகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | (ரூபாய் கோடியில்) | |
| 1995-96 | 206.87 | 1.77 | 5.51 | 0.54 |
| 1996-97 (1997 ஜனவரி வரை) | 174.83 | 1.44 | 4.04 | 0.51 |

1997-98 ஆம் ஆண்டில் ரூ. 235.00 கோடி மதிப்புள்ள உரங்களையும், ரூ.2.00 கோடி மதிப்புள்ள விதைகளையும், ரூ. 235.00 கோடி மதிப்புள்ள பூச்சிக் கொல்லி மருந்துகளையும், ரூ.0.80 கோடி மதிப்புள்ள வேளாண் கருவிகளையும் விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



N97.25.2

1997 மார்ச் 26 ]

## அத்தியாயம் - 6

## கூட்டுறவு விற்பனை, பதப்படுத்துதல் மற்றும் கிடங்கு வசதி

### கூட்டுறவு விற்பனை அமைப்பு :

தமிழ்நாட்டில் 113 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், தலைமை விற்பனைச் சங்கமாகத் திகழும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தில் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு இவ்விணையம் சேவை புரிகிறது. தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டங்களுக்காக திருவாரூரிலுள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்திற்காக உதகமண்டலத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் செயல்பட்டு வருகின்றன. 1959 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்) வேளாண் விளைபொருள் விற்பனையில் முக்கிய பங்கு ஆற்றி மாநில அளவிலான விவசாயிகள் நிறுவனமாக செயலாற்றி வருகிறது. இரசாயன உரங்கள் வழங்குதலில் 'டான்பெட்' ஒரு மொத்த விற்பனையாளராகச் செயல்படுகிறது. உரங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அப்பணி தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் மண்டல அலுவலகங்கள் மூலமாக மாவட்ட அளவில் கண்காணிக்கப்படுகின்றது. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி அருகில் 'பாமணி' என்ற இடத்தில் நாளொன்றுக்கு சராசரி 120 டன் அளவு என்.ப்பி.கே. உரக்கலவைகளைத் தயாரிக்கும் திறன் கொண்ட உர ஆலை ஒன்றினை 'டான்பெட்' நிறுவனம் 1970 ஆம் ஆண்டில் துவக்கி செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தில் ஒன்பது இடங்களில் உரக்கலவை மையங்களை 'டான்பெட்' நடத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதைகள், தனியா. உளுந்து போன்ற வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்து வருகிறது. அது விளைபொருள்களுக்கு ஆதரவு விதைகளை வழங்குதலில் 'நெபெட்' (தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம்) நிறுவனத்தின் முகவராகச் செயல்படுகிறது. 1976 ஆம் ஆண்டு [illegible] பூச்சிக்கொல்லி மருந்துகளை வழங்குவதில் ஒரு [illegible] விற்பனையாளராக அது

26824

செயல்பட்டு வருகிறது. 25.460 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 31 கிடங்குகளை அது வைத்திருக்கிறது. அவை தவிர 20475 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட 36 கிடங்குகளை வாடகைக்கு பயன்படுத்தி வருகிறது. இவ்விணையம், சென்னை பேசின்பாலம் பகுதியில் 1,350 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ஒரு குளிர்பதன கிடங்கினையும். சென்னை கோயம்பேடு என்னுமிடத்தில் 2,500 மெட்ரிக் டன் கொள் திறனில் மற்றும் ஒரு குளிர் பதனக் கிடங்கினையும் கொண்டுள்ளது. திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டத்தில் எரியோடு என்னும் கிராமத்தில் ஒவ்வொன்றும் 320 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டுள்ள 3 வெங்காய கிடங்குகளை வைத்துள்ளது. இவை முழுமையாக பயன்படுத்தப்படாமையால் இவற்றை வேறு பொருள்களுக் கான கிடங்காக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1996-97-ஆம் ஆண்டில் ஜனவரி 97 முடிய தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் பிற விற்பனை நிறுவனங்கள் கையாண்ட பொருள்களின் விவரம் பின்வருமாறு :-

| வ. எண். | பொருள் | டான்பெட் நிறுவனம் கையாண்ட அளவு | அளவு மதிப்பு | பிற நிறுவனங்கள் கையாண்ட அளவு | அளவு மதிப்பு | மொத்தம் அளவு | மதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | (அளவு மெ. டன்னில்/மதிப்பு ரூ. இலட்சத்தில்) | | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | உரங்கள் | 126811 | 13227.76 | 40874 | 4254.98 | 167685 | 17482.74 |
| 2. | பாமணிக்கலவை செய்தது | 21301 | 1568.45 | - | - | 21301 | உற்பத்திச் 1568.45 |
| 3. | பாமணி கலவை விற்றது | 22386 | 1771.81 | - | - | 22386 | 1771.81 |
| 4. | பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியது | - | 176.78 | - | 226.88 | - | 403.66 |
| 5. | விதைகள் வழங்கியது | - | 8.67 | - | 134.90 | - | 143.57 |
| 6. | வேளாண் கருவிகள் வழங்கியது | - | 17.35 | - | 33.89 | - | 51.24 |



## (அ) வேளாண்மை விளைபொருட்கள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உறுப்பினர்களுடைய வேளாண்
விளைபொருட்களை பதப்படுத்தி அவைகளை இடைத்தரகர்களின்
குறுக்கீடு இல்லாமல் நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு
உதவுகின்றன. விற்பனைச் சங்கங்கள் உறுப்பினர்களின் வேளாண்
விளைப்பொருட்களை பொது ஏலத்தில் வியாபாரிகளுக்கு விற்பனை
செய்வதற்கு உதவுவதுடன், உறுப்பினர்களிடமிருந்து நேரடியாகப்
பொருட்களை வாங்கி அவைகளை நுகர்வோர்களுக்கு விற்பனை
செய்கின்றன. இச்சங்கங்கள், உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கு
மிடையே தரகு முகவர்களாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு
கூட்டுறவு விற்பனை இணையம் கூட்டுறவு விற்பனைச்
சங்கங்களிடமிருந்து வேளாண் பொருட்களை கூட்டுக்கொள்முதல்
அடிப்படையிலும், முகவர் அடிப்படையிலும், நேரடி ரொக்கக் கொள்
முதல் அடிப்படையிலும் வாங்கி, அவற்றைப் பதப்படுத்தி பாதுகாக்
கின்றன. இவ்விணையம், நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன்
வியாபார ஒப்பந்தம் செய்துகொண்டு, வேளாண் பொருட்களை
விற்பனை செய்வதுடன் நல்ல விலை வரும்போது அவைகளை
வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறது. இவ்விணையம், வேளாண்
பொருள்களை பெரிய அளவிலும் விற்பனை செய்கிறது. 1996-97-ஆம்
ஆண்டில் கரும்பு உள்ளிட்ட வேளாண் விளைபொருள்களை விற்பனை
செய்வதற்காக விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (டான்பெட்
நிறுவனத்தையும் சேர்த்து) நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.425.00
கோடியாகும் : அந்த இலக்கினை அடைவதில் ஜனவரி 1997 வரை
ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ரூ.405.44 கோடி ஆகும்.

1997-98-ஆம் ஆண்டில், 47.500 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள (கரும்பு ரூ.17.500 இலட்சம் மற்றும் பிற பொருள்கள் ரூ.30,000 இலட்சம்) வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## (ஆ) விற்பனையுடன் இணைந்த கடன் வசதி

'விற்பனையுடன் கூடிய கடன் திட்டம்' என்பது கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இத் திட்டத்தின்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கடன் பெறும் உறுப்பினர்கள் விற்பனைச் சங்க உறுப்பினர்களாகச் சேர்க்கப் படுகிறார்கள். கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு கடன் பெற்ற

உறுப்பினர்கள் கொண்டு வரும் வேளாண் விளைப் பொருள்களை உற்பத்தியாளர்கள் அதிக லாபம் பெறும் வகையில் அவர்கள் ஒத்துக் கொள்ளக் கூடிய விலைக்கு பொது ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்விதம் பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகைகள் பிடித்தம் செய்யப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தப்படுகிறது. 1996-97-ஆம் ஆண்டிற்கு ரூ.80.00 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, சாதனை முன்னேற்றம் கண்காணிக்கப்படுகிறது. 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.100.00 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்படும்.

### (இ) கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலைகளும் இணைந்து செயல்படுதல்

ஒருபுறம் உற்பத்தியாளர்களுடைய விளைபொருள்களுக்கு நியாயமான வகையில் வருவாய் தரத்தக்க விலையை நிர்ணயம் செய்யவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருள்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. 1996-97-ல் ஜனவரி 97 வரை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 43.18 இலட்சம் மதிப்புள்ள வேளாண் பொருள்களை விற்பனை செய்துள்ளன. 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.75.00 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்படும்.

### (ஈ) வேளாண் விளைபொருள்களை ஈடாகப் பெற்று கடன் வழங்குதல்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், விவசாயிகளுடைய விளை பொருள்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குக் கடன் வழங்குகின்றன. பின்னர் சந்தையில் நல்ல விலை வரும்போது, அவ்விளைபொருள்களை விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. இதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களுக்கு நல்ல விலை பெற முடிகிறது. இந்த வகையில் 1995-96-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.650 இலட்சம்; எய்திய சாதனையோ ரூ.880 இலட்சமாகும். 1996-97-ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ.700 இலட்சம். ஜனவரி 1997



வரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ரூ. 515 இலட்சம். 1997-98-ஆம் ஆண்டிற்கு ரூ.700 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்படும்.

## 2. பதப்படுத்தும் அலகுகள்

விவசாயிகளுக்கு பதப்படுத்தும் வசதிகளை குறைந்த செலவில் அளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பல வகையான பதப் படுத்தும் அலகுகளை நிறுவ, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும், மாநில அரசும் பங்கு மூலதனமாகவும் கடனாகவும் நிதியுதவி அளிக் கின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் நிர்வாகக் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் கூட்டுறவு அமைப்புகள் மூலமாக நடத்தப்பட்டு வரும் பல்வேறு வகையான பதப்படுத்தும் அலகுகள் பற்றிய விவரம் பின்வருமாறு :-

| வ. எண் (1) | பதப்படுத்தும் அலகின் பெயர் (2) | அலகின் எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1. | அரிசி ஆலைகள் | 38 |
| 2. | பருத்தி அரைவை ஆலைகள் | 17 |
| 3. | வேர்க்கடலை உடைக்கும் அலகுகள் | 15 |
| 4. | எண்ணெய் ஆலைகள் | 14 |
| 5. | பழம் பதப்படுத்தும் அலகுகள் | 3 |
| 6. | காப்பிக் கொட்டை அரைவை ஆலைகள் | 3 |
| 7. | காப்பிக் கொட்டை பதப்படுத்தும் அலகு | 1 |
| 8. | மரவள்ளி கிழங்கு ஆலை | 1 |
| 9. | மஞ்சள் அரைவை ஆலை | 1 |
| 10. | மாவு ஆலைகள் | 4 |
| 11. | பருப்பு ஆலைகள் | 2 |
| 12. | சேமியா பதப்படுத்தும் அலகுகள் | 2 |
| 13. | குளிர் பதன அலகுகள் | 2 |
| 14. | புளி பதப்படுத்தும் அலகு | 1 |
| 15. | சிகைக்காய் அரைவை ஆலைகள் | 2 |
| 16. | விதை பதப்படுத்தும் அலகுகள் | 2 |
| 17. | சோப்பு தயாரிப்பு அலகு | 1 |
| | கூடுதல் | 109 |

[1997 மார்ச் 26

மேற்குறிப்பிட்ட அலகுகள், 1995-96-ல் 47.353 மெட்ரிக் டன் அளவுள்ள பொருள்களையும் 1996-97-ல் (ஜனவரி 97 வரை) 32.657 மெட்ரிக் டன் அளவு பொருள்களையும் பதப்படுத்தி, பக்குவப்படுத்தி உள்ளன. கல் குளம் விளவங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கத்தின் பழம் பதனிடும் அலகு, தெங்குமரஹடா கூட்டுறவு பண்ணைச் சங்கத்தின் அரிசி அரவை ஆலை மற்றும் திருப்பூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் பருத்தி அரைவை ஆலை ஆகியவற்றை நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கல்குளம் விளவங்கோடு கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உள்ள மரவள்ளிக் கிழங்கு பதனிடும் அலகை, உணவு தானியம் பதனிடும் அலகாக மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள அலகுகளின் செயல்திறனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3. கிராமிய மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்

மூன்றாவது உலக வங்கி கூட்டுறவுக் கிடங்குகள் கட்டும் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் கிடங்குகள் கட்டுவதற்கு 30.6.92 வரை நிதியுதவி அளிக்கப்பட்டு வந்தது. நான்காவது உலக வங்கி கூட்டுறவுக் கிடங்குகள் கட்டும் திட்டம் 1-7-92 முதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இத்திட்டம் செயல்படவில்லையாதலால், 1-7-92 முதல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படவில்லை.

31-1-97 தேதிய நிலவரப்படி இருக்கும் கிடங்குகளின் எண்ணிக்கை மற்றும் அவைகளின் கொள்ளளவு பற்றிய விவரம் தரப்பட்டுள்ளது:-

| | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு (இலட்சம் மெட்ரிக் டன்னில்) |
|---|---|---|
| | (1) | (2) |
| (அ) கிராமப்புறக் கிடங்குகள் .. | 4787 | 5.45 |
| (ஆ) விற்பனைச் சங்கக் கிடங்குகள் .. | 261 | 1.33 |
| (இ) நுகர்வோர் கூட்டுறவுச் சங்க கிடங்குகள் .. | 50 | 0.31 |
| மொத்தம் .. | 5098 | 7.09 |

கிராம அடிப்படைக் கட்டுமான வளர்ச்சி நிதியின் கீழ் "நபார்டு" வங்கியின் நிதியுதவியுடன் 1997-98 ஆம் ஆண்டில் 75 கிராமியக் கிடங்குகளைக் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1997 மார்ச் 26 ]

# அத்தியாயம் - 7

# நுகர்வோர் கூட்டுறவு

## 1. அமைப்பு

தலைமை நிலையில், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட நிலையில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் (2994 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள் உள்ளிட்ட) 3594 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளையும் உள்ளடக்கிய மூன்றடுக்கு அமைப்பாக, தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுக் கட்டமைப்பு இயங்கி வருகிறது.

## 2. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்

மாவட்ட மற்றும் தொடக்க நிலைக் கூட்டுறவு பண்டகசாலைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதில் குறிப்பாக, பாடநூல்களை விற்பனை செய்வதில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் முதன்மைப் பங்கு வகிக்கிறது. மேலும், இவ்விணையம் கூட்டுறவுப் பண்டகசாலைகள், பட்டாசுகள் மற்றும் காகிதங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோக்க ஏற்பாடு செய்வதில் ஈடுபடுத்திக் கொள்கிறது. மாநிலத்திலுள்ள கூட்டுறவு அச்சகங்கள் காகிதக் கொள்முதல் செய்வது ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், இதற்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது. இணையம் தற்போது இலாபத்தில் இயங்கி வருகிறது.

## 3. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள்

ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையாவது செயல்பட வேண்டும் என்ற குறிக்கோளுக்கு இணங்கவும், மாவட்டத்தில் நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்கவும், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கென புதிதாக ஒரு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை பதிவு செய்யப்பட்டுள்ளது. விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்திற்கென ஒரு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை துவக்குவது தொடர்பான முதல்நிலைப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. அப்பண்டகசாலை விரைவில் பதிவு செய்யப்படும்.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் வியாபாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அவைகளில் முக்கியமானவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:-

[1997 மார்ச் 26

(i) பல கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலை மோசமாக உள்ளது. தேசியக் கூட்டுறவு நுகர்வோர் இணையத்தின் தன்னிச்சையான மற்றும் தனித்தேர்ச்சி வாய்ந்த அமைப்பான ஆலோசனை மற்றும் மேம்பாட்டுக் குழுவிடம் முதல் கட்டமாக 5 நலிவுற்ற கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் செயல்பாடு குறித்து "உள்ளாழ்ந்த பரிசீலனை செய்யும் பணி" ஒப்படைக்கப்பட்டது. நான்கு பண்டகசாலைகள் பற்றிய ஆய்வினை இக்குழு ஏற்கனவே முடித்து. அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மதுரை பாண்டியன் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை குறித்த ஆய்வறிக்கை எதிர்நோக்கப்படுகிறது. குழுவின் ஆய்வறிக்கைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, பண்டகசாலையின் செயல்பாட்டில் காணப்படும் குறைகளைக் களைவதற்கான பல்வேறு வழிமுறைகள் தொடரப்பட்டுள்ளன.

கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் சுயநிதி ஆதாரம் வளரச் செய்யவும் செலவினை சிக்கனப்படுத்தவும், செயல்பாடுகளைப் புனரமைப்பது குறித்தும் ஒருங்கிணைந்த செயற்திட்டம் விரைவில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

(ii) கடந்த காலங்களில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் நிதி ஆதாரங்கள் இழந்துவிட்டபடியால் தமது வணிகத்திறனை விரிவுப்படுத்த, பண்டகசாலைகளுக்கு நடைமுறை மூலதனமே தற்போது உடனடித் தேவையாக உள்ளது. ஆகவே, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு விளிம்புத் தொகை உதவி வழங்க அரசு முடிவு செய்து, 1997-98 ஆம் ஆண்டுக்கு இரண்டு கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளுக்கு தலா ரூ.20.00 இலட்சத்திற்கு மிகாமல் நிதி உதவி அளிக்கப்படவுள்ளது.

(iii) இடைத்தரகர்களைத் தவிர்ப்பதற்காக கொள்முதல் நடைமுறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு பண்டகசாலைகள், உற்பத்தியாளர்/தயாரிப்பாளர்களிடமிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்யவேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளது.

(iv) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின் மிகைப் பணியாளர்கள் பிற கூட்டுறவு நிறுவனங்களில் மாற்றி பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். இதுவரை நான்கு நலிவுற்ற கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் 113 மிகைப் பணியாளர்கள் ஏற்கெனவே மாற்றிப் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

நலிவுற்ற கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளைப் புனரமைத்தலின் ஒரு பகுதியாக பண்டகசாலைப் பணியாளர்களுக்கென தனி விருப்ப ஓய்வுத்திட்டம் ஒன்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.



1997 மார்ச் 26 ]

(v) கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளின், கணக்கு பராமரித்தல் படிப்படியாகக் கணிப்பொறிமயமாக்கப்படும். 5 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளில் ஏற்கெனவே கணிப்பொறி நிறுவப்பட்டுள்ளது. கணக்குகளைக் கணிப்பொறிமயமாக்குவதன் காரணமாகக் கணக்குகள், உடனுக்குடன் முடிக்கப்படுவதால், கணக்குகளில் தவறு செய்தல், பொய்யான ஆவணம் புனைதல் ஆகியவற்றிற்கான வாய்ப்புகள் குறைக்கப்படும்.

கட்டுப்பாடற்ற பொருட்களின் விற்பனையை மேற்கொள்வதற்காக நலிந்த நிலையிலுள்ள 26 கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு 10 விழுக்காடு சலுகை வட்டி வீதத்தில் 2 கோடி ரூபாயை நீண்டகாலக் கடனாக வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 29 நுகர்வோர் பண்டகசாலையில் பணியாற்றும் சுமார் 8000 பணியாளர்களுக்கு ஊதிய சீரமைப்பு குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு ஊதிய உயர்வு 1.10.94 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 4. தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்

கடந்த 5 ஆண்டுகளுக்கு மேல் தனி அலுவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த அனைத்து தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நிர்வாகக் குழுவிற்கு தேர்தல் நடத்தி முடிக்க இவ்வரசு ஏற்பாடு செய்து, அப்பண்டகசாலைகள் யாவும் தற்போது மக்களாட்சி நிர்வாகத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. இந்த நிர்வாக மாற்றமானது இத்தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் செயல்பாட்டில் புது சகாப்தத்தைத் தோற்றுவிக்கும். தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் செயல் வளர்ச்சி இத்துறையால், மிக உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகிறது.

நலிவுற்ற தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளைப் புனரமைக்கும் முகமாக ஒரு புனரமைப்புத் திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு பண்டகசாலைக்கும் தலா ரூ.1.00 இலட்சத்துக்கு மிகாமல் உதவி வழங்கப்படும். 1997-98-ம் ஆண்டுக்கு 5 பண்டகசாலைகளுக்கு இந்நிதியுதவி வழங்கப்படும்.

## 5. மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள்

கல்லூரி/பள்ளி/தொழில்நுட்ப மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் நோக்கம், மாணவ சமுதாயத்துக்கு பாடப்புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களை வழங்குவது மட்டுமல்லாது, மாணவர்களிடையே கூட்டுறவு மனப்பான்மை மற்றும் பரஸ்பர உதவி

எண்ணத்தைத் தோற்றுவித்தலும் ஆகும். இன்றைய மாணவர்கள் வருங்காலக் கூட்டுறவாளர்கள் ஆவர். மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளே அவர்களது பயிற்சிக் களமாகும். மேலும் இம்மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகளைத் திறம்பட செயல் படுத்தவும், இவ்வியக்கத்திற்கு ஊக்கமளிக்கும் வகையிலும், மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் குறித்த கருத்துப் பட்டறை ஒன்று விரைவில் நடத்தப்படும். இப்பண்டகசாலைகளின் செயல்பாட்டினை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குத் தாராளமாக நிதியுதவி வழங்கக் கோரி தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் அணுகப்பட்டுள்ளது.

### 6. நுகர்பொருட்களின் சில்லறை விற்பனை

பொதுமக்களுக்கு நுகர்பொருட்களை விற்பனை செய்வது இத் துறையின் பெரும் நோக்கங்களில் ஒன்றாகும். நுகர்வோர் கூட்டுறவுகள் மூலம் பொருட்களை சில்லறை விற்பனை செய்ய 1996-97-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான ரூ.1850 கோடியில் ஜனவரி 1997 வரை ரூ.1514.88 கோடி மதிப்புக்கு நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 7. சிறப்பங்காடிகள், சுயசேவைப் பிரிவுகள் மற்றும் சிறிய சிறப்பங்காடிகள்

சிறப்பங்காடிகளையும், சிறிய சிறப்பங்காடிகளையும் நிறுவுதலில் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளே முன்னோடிகள் ஆகும். கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் தனியாருக்கு வெகு காலம் முன்னதாகவே இக்களத்தில் ஈடுபடத் தொடங்கி விட்டதால், நுகர்வோர் கூட்டுறவுகளின் பல பிரிவுகள் தற்போது நவீனமயமாக்கப்படவேண்டும். அல்லது சிறிதளவேனும் பொலிவு படுத்தப்பட வேண்டும். இதற்கென உள்ள நிதியாதாரங்களைப் பொறுத்து இத்திட்டம் ப்டிப்படியாகச் செயல்படுத்தப்படும். ஈரோட் டிலுள்ள சிந்தாமணி சுயசேவைப் பிரிவும், சென்னையிலுள்ள காம தேனுவும் ஏற்கெனவே நவீனமயமாக்கப்பட்டு குளிர்பதன வசதி செய்யப் பட்டுள்ளன.

புதிய அலகுகளைத் தொடங்கும் திட்டம் கடந்த ஆண்டு இவ்வரசால் உயிரூட்டப்பெற்று 8 அலகுகள் நிறுவ நிதியுதவி செய்யப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் மேலும் 7 அலகுகள் நிறுவ நிதியுதவி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.





### 8. சந்தைத் தலையீடு

நுகர்வோரின் தேவை அதிகமாகவும், பொருட்களின் வரத்து குறைவாகவும் உள்ள காலங்களில் குறிப்பாக அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தினைக் கட்டுப்படுத்த அரசிடம் உள்ள வலிமையான ஆயுதங்களில், நுகர்வோர் கூட்டுறவு இயக்கமும் ஒன்றாகும். பொருட்களின் தேவை அதிகரிக்கும் காலங்களில், இலாபத்தினைக் கணக்கில் கொள்ளாது அப்பொருட்களை விற்பனை செய்ய நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலையை அரசு ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளில் பயன்படுத்தி உள்ளது. பொதுவாக, பண்டிகைக் காலங்களிலோ அல்லது தனியார் வியாபாரிகள் பொருட்களைப் பதுக்க முனையும்போதோ இவ்விதமாக சந்தைத் தலையீடு மேற்கொள்ளப்படுகிறது. தீபாவளி காலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட 30 வகையான அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த இலாபத்தில் விற்பனை செய்ததும், ரூ.50 முதல் ரூ.100 வரை விலையுள்ள பாக்கெட்டுகளில் பட்டாசுகளை விற்பனை செய்ததும் குறிப்பிடத்தகுந்தவை.

சந்தையில் காய்கறிகளின் விலை கட்டுக்கடங்காது உயரும்போது, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள், அதிக சில்லரை விற்பனை நிலையங்களைத் திறந்து காய்கறிகளைப் பெருமளவில், நியாயமான விலையில் விற்பனை செய்ய முற்படுகின்றன.

### 9. பொது

நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தை மீண்டும் சரியான தடத்தில் செலுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. இனி வருங்காலங்களிலும் இம்முயற்சி தொடரப்படும்.

[1997 மார்ச் 26

## அத்தியாயம்-8

## பொது விநியோகத் திட்டம்

சமுதாயத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும், நலிந்த பிரிவு மக்களின் முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொண்டு அவர்கட்கு சமூக நீதி கிடைக்கவும், மிகவும் பாதுகாப்பான வளையத்திற்குள் அவர்களைக் காப்பதற்கும், பொது விநியோகத் திட்டத்தில் தனி கவனம் செலுத்தப்பட்டு அதற்கான வெற்றிப் பாதையை உண்டாக்க தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தி வருகிறது.

குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் திட்டமானது 1964-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ளது. குடும்ப அட்டைகள் 1993-ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டன. அவை 1998 வரையில் செல்லுபடியாகும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள காலகாலமாக பொது விநியோகத் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த அரசுக்கு உதவி வருகின்றன. தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தை ஒரு பரந்து விரிந்த அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட வைத்துள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், பொது விநியோகத் திட்டத்தின் உன்னதமான சிறப்பியல்பு என்னவென்றால் மேற்படித் திட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களால் மட்டுமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதாம். தனியார் எவரும் நியாயவிலைக் கடைகளை நடத்த அனுமதிக்கப்படவில்லை.

### 1. அத்தியாவசியப் பொருட்களை நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்குதல்.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 75 முதன்மை சங்கங்கள், 4915 இணைப்புச் சங்கங்கள், 21927 நியாயவிலைக் கடைகள் மூலமாக சுமார் 136.28 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய், பாமாயில் மற்றும் கோதுமைப் பொருட்கள் ஆகியவை மாதாந்திர விற்பனையாக ரூ.114.43 கோடிக்கு விநியோகிக்கப்படுகின்றன. கூட்டுறவுத் துறை மூலம் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இயங்கும் நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் கடைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:-



1997 மார்ச் 26]

**கடைகளின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| நகர்ப்புறக் கடைகள் | .. | 3869 |
| கிராமப்புறக் கடைகள் | .. | 18058 (1852 பகுதிநேரக் கடைகளையும் சேர்த்து) |
| மொத்தம் | .. | 21927 |

29 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், 111 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 4360 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும், 18 பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 359 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளும், 38 பிற சங்கங்களும் சேர்ந்து இணைப்புச் சங்கங்களாக செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் மட்டுமே கூட்டுறவினால் நடத்தப்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் அதிக அளவில் இயங்கி வருகின்றன.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 1995-96 மற்றும் 1996-97 ஆம் ஆண்டுகளில் விநியோகிக்கப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் விவரம் கீழ்கண்டவாறு:-

| வ.எண் | அத்தியாவசியப் பொருள் விவரம் | 1995-96-ல் (1-4-1995 முதல் 31-3-1996 முடிய) விநியோகிக்கப்பட்ட விவரம் | | 1996-1997-ல் (1-4-1996 முதல் 31-1-1997 முடிய) விநியோகிக்கப்பட்ட விவரம் | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. கோடியில்) | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூ. கோடியில்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | அரிசி | 14,04.781 | 526.79 | 11,84.365 | 444.13 |
| 2. | கூடுதல் அரிசி | 1,88.302 | 70.61 | 6,74.604 | 252.97 |
| 3. | சர்க்கரை | 2,62.899 | 237.92 | 2,31.020 | 209.08 |
| 4. | கோதுமை | 96.979 | 43.64 | 92.172 | 41.47 |
| 5. | மண்ணெண்ணெய் (கி.லி) | 6,57.943 | 197.38 | 5,57.232 | 167.17 |
| 6. | பாமாயில் | 2.679 | 7.77 | 3.530 | 11.29 |
| 7. | ரவா | 16.879 | 11.14 | 12.587 | 8.31 |
| 8. | மைதா | 9.275 | 6.03 | 15.181 | 9.87 |
| | மொத்தம் | | 1,101.28 | | 1,144.29 |

[1997 மார்ச் 26

## 2. பொது விநியோகத் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்

(i) மாநில அளவில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசுச் செயலர் பொது விநியோகத் திட்டத்தை ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்கிறார். மண்டல இணைப்பதிவாளர்கள் கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இரு மாதங்களுக்கு ஒரு முறை பொது விநியோகத் திட்டத்தை ஆய்வு செய்கிறார்.

(ii) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை கூட்டுக் கூட்டம் நடத்தப்படுகிறது. இதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இணை நிர்வாக இயக்குநர் மற்றும் சென்னையிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை தனி அலுவலர்கள் கூடிப் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அதற்கான தீர்வுகள் குறித்தும் விவாதித்து அவ்வப்போது தீர்வு காண்கின்றனர்.

(iii) பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடுகளைக் கிராம மற்றும் நகர்ப்புற உள்ளமைப்புகளிடம் அதிகார மாற்றம் செய்வது குறித்து ஆய்வு செய்து பொது விநியோகத் திட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர்களால் அமைக்கப்பட்ட உள்ளூர் விநியோகக் குழுவினர் மேற்கொள்ளும் சட்டம் சாராக் கண்காணிப்புப் பொறுப்பினை உள்ளமைப்புகள் வசம் ஒப்படைக்கும் வண்ணம் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் சட்டம் சார்ந்த இதர பணிகளும் கொள்முதல் மற்றும் விற்பனைப் பணிகளும் உள்ளமைப்புகளிடம் ஒப்படைக்கத் தேவையில்லை எனவும் வகை செய்யப்பட்டு உள்ளது.

(iv) தவறிழைக்கும் விற்பனையாளர்கள் மீது தொடரப்படும் ஒழுங்கு நடவடிக்கைகளை விரைந்து முடிவு கட்டும் நோக்குடன் ஒவ்வொரு மாவட்ட அளவிலும் ஒழுங்கு நடவடிக்கை ஆய்வுக் குழுக்கள் நிலுவை இனங்களை ஆய்வு செய்ய அரசு அமைத்துள்ளது.

(v) நியாயவிலைக் கடைகளுக்கு விற்பனையாளர்களைத் தேர்ந்தெடுக்க மாவட்ட அளவில் ஆள் எடுப்புச் செயலகம் (Recruitment Bureau) அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

(vi) பல்வேறு நிலையில் உள்ள அலுவலர்கள் ஒவ்வொரு மாதமும் நியாயவிலைக் கடைகளை ஆய்வு செய்கின்றனர். அவர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டிய நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:—



1997 மார்ச் 26]

| வ.எண் | பதவி | ஒவ்வொரு மாதமும் ஆய்வு செய்ய வேண்டிய கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | இணைப்பதிவாளர் (பொ.வி.தி), சென்னை | 45 |
| 2. | மண்டல இணைப்பதிவாளர்கள் | 10 |
| 3. | சரகத் துணைப்பதிவாளர்கள் | 10 |
| 4. | துணைப்பதிவாளர் (பொ.வி.தி), சென்னை | 60 |
| 5. | மாவட்டத் துணைப்பதிவாளர்கள் (பொ.வி.தி) | 50 |
| 6. | கூட்டுறவு சார் பதிவாளர் (பொ.வி.தி), சென்னை | அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் 10-க்கு அதிகமாக ஒவ்வொரு வாரமும் இரு முறை ஆய்வு செய்ய வேண்டும். |
| 7. | மாவட்ட கூட்டுறவு சார் பதிவாளர் (பொ.வி.தி) | 25 |

(vii) பொது விநியோகத் திட்டப் பொருட்களின் இயக்கத்தைக் கண்காணிக்க பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளைத் திடீர் ஆய்வு செய்யும் பொருட்டு மண்டல இணைப் பதிவாளர்களும், இணைப்பதிவாளர் (பொ.வி.தி) சென்னையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்தும், மண்ணெண்ணெய் விநியோகஸ்தர்களிடமிருந்தும் நியாய விலைக் கடைகளுக்கு பொது விநியோகத் திட்டப் பொருட்கள் முறைக்கேடுகளின்றி நுகர்வு செய்யப்படுவதைக் கண்காணிக்கவும் பறக்கும் படைகள் அமைக்கப்படுகின்றன.

(viii) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் சரியான அளவில் வழங்கப்படுவதை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் தரப்படுத்தப்பட்ட மூட்டைகளை உபயோகிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

## 3. உப சில்லரை விற்பனை நிலையங்கள்

கிராம மக்கள் குறிப்பாகப் பெண்கள், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற நீண்ட தூரம் நடக்க வேண்டி

யுள்ளதைத் தவிர்க்கும் பொருட்டு அவர்கள் வாழுமிடங்களில்/சிறு கிராமங்களிலும் சில்லரை விற்பனை நிலையங்களை அமைக்க ஆணையிடப்பட்டு உள்ளது. இத்திட்டத்தின்படி 800 குடும்ப அட்டைகளுக்கு மேலுள்ள கிராமப்புற நியாயவிலைக் கடைகளிலிருந்து சில குடும்ப அட்டைகளைப் பிரித்து படித்த பெண்களின் தலைமையில் உப சில்லரை விற்பனை நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. 31-1-97-ல் 179 சில்லரை விற்பனை நிலையங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன.

## 4. திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம்

திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டமானது 1-1-1992 முதல் தமிழ்நாட்டில் தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 68 வட்டாரங்கள் திருத்தியமைக் கப்பட்ட பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் உள்ள 2259 கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் 11,36,997 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டு உள்ளன. இந்திய அரசானது மத்திய வழங்கு விலையை விட ஒரு குவிண்டாலுக்கு ரூ. 50 குறைவாக மத்திய கிடங்கிலிருந்து இத்திட்டத்திற்கு அரிசி வழங்குகிறது. ஆனால், இக்குறைக்கப்பட்ட விலையைக் காட்டிலும் குறைவான விலைக்கே தமிழ்நாட்டில் அரிசி விநியோகிக்கப்படுகிறது. 1992 ஜனவரி முதல் இத்திட்டத்திற்கு கூடுதல் அரிசியையும் இந்திய அரசு ஒதுக்கி ஒவ்வொரு மாதமும் வழங்கி வருகிறது.

## 5. அரசு மானியம்

பொது விநியோகத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைகளை வலுவூட்டும் நோக்குடன் பொது விநியோகத் திட்டத்தை செயல்படுத்துவதால் இக்கூட்டுறவு நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்ய வேண்டி அரசு மானியம் வழங்கி வருகிறது. இவ்வகையில் 1995-96-ம் ஆண்டில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற நியாயவிலைக் கடைகளுக்கு ரூ.1107.79 இலட்சம் அரசு மானியமாக வழங்கியது.

## 6. நடமாடும் நியாயவிலைக் கடைகள் நடத்த ஊர்திகள் வாங்க நிதியுதவி அளித்தல்

மலைவாழ் மக்களுக்காக அவர்கள் வீட்டு வாசலிலேயே அத்தியாவசியப் பொருட்களை ஊர்திகள் மூலமாகக் கொண்டு சென்று வழங்க நடமாடும் நியாயவிலைக் கடைகள் திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டப் பகுதிகளில் செயல்படுகின்றன. இதற்கான



நிதியுதவியை மத்திய அரசு வழங்கி வருகிறது. இந்த நிதியுதவியானது 50 % கடனாகவும் 50 % மானியமாகவும் வழங்கப்படுகிறது. 1996-97 ஆம் நிதி ஆண்டில் ரூ. 33,24,300 செலவில் 6 ஊர்திகள் வாங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 7. கிடங்குகள் கட்டுவதற்கு அரசு மானியம்

திருத்தியமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பகுதிகளில் கிடங்குகள் கட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய அரசு நிதியுதவி ஏற்பாடு செய்கிறது. இத்திட்டத் தின் கீழ் 50 % கடனாகவும் 50 % மானியமாகவும் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அவ்வாறு கடனாக வழங்கும் தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மேற்படி கடன் வழங்கப்பட்ட முதல் ஆண்டிலிருந்து வட்டியுடன் 5 வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் ரூ.76.87 இலட்சம் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. நடப்பு 1996-97-ஆம் ஆண்டில் மொத்தம் 2450 மெட்ரிக் டன் கொள்ளளவு. கொண்ட 17 கிடங்குகள் கட்ட ரூ. 25.00 இலட்சம் கடனாகவும் ரூ.25.00 இலட்சம் மானியமாகவும் மொத்தம் ரூ. 50 இலட்சம் மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கியுள்ளது.

## 8. வறியோர் நலன் காக்கும் பொதுவிநியோகத் திட்டம்

ஏழை எளிய மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு மைய அரசு 1997-ஆம் ஆண்டு ஜூன் முதல் நாளிலிருந்து வறியோர் நலன் காக்கும் பொதுவிநியோகத் திட்டத்தை அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 10 கிலோ அரிசி/கோதுமையை மைய அரசு வழங்கும். மைய அரசு வகுத்துள்ள வரம்புகளின்படி தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 45.79 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது உள்ள ஒதுக்கீட்டு அளவான 1.65 இலட்சம் டன் அரிசி மற்றும் 22,300 டன் கோதுமைக்குப் பதிலாக இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்காக ஒரு மாதத்திற்கு 45,790 டன் அரிசியும் வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களுக்கு 38,437 டன் அரிசியும் ஆக மொத்தம் 84,227 டன் அரிசி/கோதுமை மட்டும் மைய அரசு வழங்க உள்ளது. தமிழ்நாடு அரசு மூன்று வகையான அட்டைகளை, அதாவது, வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு சிவப்பு நிற அட்டையும், வசதி படைத்த குடும்பங்களுக்கு பச்சைநிற அட்டையும், இந்த இரு பிரிவிலும் உட்படாத குடும்பங்களுக்கு மஞ்சள் நிற அட்டையும் வழங்க உத்தேசித்துள்ளது.

[1997 மார்ச் 26

## அத்தியாயம் - 9

## தனிவகை கூட்டுறவு அமைப்புகள் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு

### 1. தனி வகைச் சங்கங்கள்

நலிவுற்ற பிரிவைச் சார்ந்த சில சமுதாயப் பிரிவினரான தொழிலாளர்கள், சலவையாளர்கள், முடி திருத்துவோர், உப்புத் தொழிலாளர் மற்றும் மலைவாழ் இனத்தவரின் நலனுக்கென சிறப்பினமாகச் சில வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒப்பந்தப் பணிகளை பெற்று அதன் மூலம் தனது உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன.

### (i) கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 20 கூட்டுறவு அச்சகங்கள் உள்ளன. இவை அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் (பஞ்சாயத்து யூனியன், நகராட்சிகள் முதலியன) ஆகியவற்றின் அச்சுப் பணிகளை நிறைவேற்றுவதோடு அனைத்து கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும் பூர்த்தி செய்கின்றன. உள்ளாட்சி மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் வாக்குச் சீட்டுகள் இவ்வச்சகங்களால் வெற்றிகரமாக அச்சடித்து வழங்கப்பட்டன.

31-1-97 முடிய உள்ள விவரப்படி கூட்டுறவு அச்சகங்களில் மொத்த 10,320 உறுப்பினர்கள் உள்ளனர். பங்குத் தொகை ரூ.72.26 இலட்சம் உள்ளது.

1995-96-ல் கூட்டுறவு அச்சகங்களின் மொத்த வியாபாரம் ரூ.16.82 கோடியாக இருந்தது.

1996-97-ஆம் ஆண்டிற்கு கூட்டுறவு அச்சகங்களின் மொத்த வியாபாரம் ரூ.21.39 கோடியாக இருக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஜனவரி 1997 வரை ரூ.9.51 கோடி எட்டப் பட்டுள்ளது. 1997-98-ல் 22 கோடி ரூபாய் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் அச்சுப் பணித் தேவைகளை யும் கூட்டுறவு அச்சகங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.

கூட்டுறவு அச்சகங்களை நவீன மயமாக்குவதற்காக 1996-97-ம் ஆண்டு ரூ.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சென்னை மத்தியக் கூட்டுறவு அச்சகம் மற்றும் கோவை மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு



1997 மார்ச் 26]

அளிக்கப்பட்டுள்ளது. 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் மேலும் பல கூட்டுறவு அச்சகங்கள் பரிந்துரைக்கப்பட உள்ளன.

### (ii) உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு மற்றும் விற்பனை சங்கங்கள்

உப்பு உற்பத்தியாளர்களின் ஏழ்மை நிலையைப் போக்கி அவர்களின் வாழ்வின் நிலையை உயர்த்துதல் வேண்டி உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

தமிழகத்திலுள்ள உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 7 சங்கங்கள் பிரத்யேகமாக ஆதிதிராவிடர் உறுப்பினர்களுக்காக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் தையூர் ஆதிதிராவிடர் கூட்டுறவு உப்பு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் அதன் உறுப்பினர்களுக்கு 62 எண்ணெய் இயந்திரம் வாங்கிட ரூ. 5,37,959 அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. இது தவிர, உப்பு உற்பத்தியை மேம்படுத்தவும், அயோடின் கலந்த உப்பு உற்பத்தி செய்யவும் ரூ. 1,32,32,100-க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### (iii) இதர சிறப்பு கூட்டுறவுச் சங்கங்கள்

சவரத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்றவை சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டியும் அவர்களுக்கு நிதியுதவியளித்து கண்காணிக்கவும் உருவாக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன.

### (iv) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள்

தமிழகத்தில் சுமார் 210 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் 40% சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ளன. மொத்த தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் 40 சங்கங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக மட்டும் ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்களுக்கு மத்திய அரசிடமிருந்து பங்கு மூலதனம் நடைமுறை மூலதனம் மற்றும் மேலாண்மை மானியம் என பலவாறு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

[1997 மார்ச் 26

## 2. பழங்குடியினர் மேம்பாடு

பழங்குடியினர் நலத்தினைக் கருத்திற்கொண்டு, தற்போது தமிழ்நாட்டில் 18 மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில், அப்பகுதிவாழ் பழங்குடியினத்தைச் சேர்ந்த 72,362 நபர்களும், பழங்குடியினரல்லாதவர்கள் 7,044 நபர்களும் உறுப்பினர்களாக உள்ளனர். பழங்குடியின மக்களின் மிகவும் பின்தங்கிய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு அரசு இச்சங்கங்களுக்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து நிதியுதவியினை வழங்கி வருகிறது. இச்சங்கங்கள் விவசாயம் மற்றும் உற்பத்தி நோக்கங்களுக்காக பழங்குடியின மக்களுக்கு வட்டியில்லாக் கடன்களை வழங்கி வருகின்றன. பழங்குடியின மக்கள், மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பயனடையும் வகையில், அரசு உறுப்பினர்களுக்கான பங்கு மூலதன மானியம், வட்டி மானியம், போக்குவரத்து வண்டிகள் வாங்க மானியம், வாகன ஓட்டுநர் ஊதியம் மற்றும் வாகன பராமரிப்பு மானியம், நிர்வாக மானியம், மேலாண்மை இயக்குநர் ஊதியத்திற்கான மானியம் ஆகியவற்றிற்கான நிதியுதவிகளைத் தொடர்ந்து வழங்கி வருவதுடன், இச்சங்கங்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சில புதிய திட்டங்களுக்கும் மானிய நிதியுதவி அரசால் வழங்கப்பட்டு வருகிறது. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கடந்த நான்காண்டுகளில், 1995-96-ஆம் ஆண்டு வரை பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ.325.88 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இவ்வகை நிதியுதவி பழங்குடியின மக்களுக்கு தொடர்ந்து கிடைக்க திட்டமிடப்பட்டுள்ளது.



1997 மார்ச் 26]

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மலைவாழ் மக்கள் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் எய்திய முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு:-

| ஆண்டு | கடன் வழங்கியது | வேளாண் விளைபொருள் கொள்முதல் | வேளாண் இடுபொருள் வழங்கியது | சிறுவனப் பொருள் சேகரம் | நுகர்பொருள் விநியோகம். (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1992-93 | 409.88 | 71.65 | 93.52 | 87.23 | 309.67 |
| 1993-94 | 492.04 | 90.04 | 105.07 | 92.26 | 415.07 |
| 1994-95 | 641.23 | 100.64 | 101.25 | 88.65 | 481.04 |
| 1995-96 | 790.80 | 122.22 | 123.56 | 112.95 | 476.90 |
| 1996-97 (ஜனவரி 97 வரை) | 572.61 | 91.93 | 85.71 | 36.20 | 487.33 |

## அத்தியாயம்-10

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

### 1. கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரப்படுத்துதலைத் தீவிரமாக்குதல்

கூட்டுறவு இயக்கத்தை நன்முறையில் செயல்படுத்தவும். முன்னேற்றுவிக்கவும் பல்வேறு விதமான கோணங்களில் திறமையுடன் செயல்படுத்தவும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியை கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கும் அங்கத்தினர் அல்லாதோருக்கும் வழங்கவும். கூட்டுறவுக் கொள்கைகளை விளம்பரப்படுத்தவும் 1914-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் என்ற மாநில அமைப்பு ஒன்று உருவாக்கம் பெற்றது. இந்த நிறுவனம் கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி முதலியவைகளில் கவனம் செலுத்தி பொதுமக்களுக்கு அரிய தொண்டாற்றி வருகிறது. மாநிலம் முழுவதும் மாவட்ட அளவில் தற்போது 16 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மேற்குறித்த பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில், மாநிலத் தலைமைக் கூட்டுறவு சங்கங்களும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மற்றும் பயிற்சி நிறுவனங்களும் அங்கத்தினராக உள்ளனர். இதற்கான நிதி ஆதாரங்கள் அங்கத்தினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கும் வருடாந்திர சந்தா மூலமும் கூட்டுறவு வெளியீடுகளை விற்பதன் மூலமும் மாநிலத்திலுள்ள இதர கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, கூட்டுறவுக் கல்வி நிதிகளும் ஆகும்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இருவகையான நிதிகளைப் பராமரித்து வருகிறது. அவை முறையே (1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் (2) கூட்டுறவு கல்வி நிதி ஆகியவை ஆகும். மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் தாங்கள் ஈட்டும் நிகர லாபத்திலிருந்து 3 விழுக்காடு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்காகவும், 2 விழுக்காடு கூட்டுறவுக் கல்வி நிதிக்காவும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு செலுத்தி வருகின்றன. மாவட்ட அளவிலான கூட்டுறவு ஒன்றியங்கள், இவ்வாறு வசூலிக்கப்படும் மேற்கண்ட 2 தொகைகளிலிருந்து 10 விழுக்காடு தொகையை தங்களுடைய பராமரிப்பு செலவுக்காக வைத்துக் கொள்கின்றன. இவ்வாறு வசூலிக்கப்படும் மீதமுள்ள 90% நிதியை 1988-ஆம் வருடத்திய கூட்டுறவுச் சங்க சட்ட



விதிகள் எண் 90 மற்றும் 91-ன் படி பராமரிக்க இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் இக்குழுக்களின் பதவி வழித்தலைவர் ஆவார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம். கூட்டுறவுக் கொள்கைகளை மக்களிடையே புத்தக வெளியீடுகள் மூலமும், பொருட்காட்சிகள் நடத்துதல் மூலமும். விளம்பரச் சுவரொட்டிகள் மூலமும், திரை அரங்குகளில் ஸ்லைடுகள் மூலமும் திரைக் காட்சிகள் மூலமும் பரப்பி வருகிறது. மேலும். அங்கத்தினர்களிடையே கூட்டுறவு அங்கத்தினர் கல்வித் திட்டம் என்ற ஏற்பாட்டின்படி கூட்டுறவுக் கல்வி போதிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் கூட்டுறவு வார விழா மக்களிடையே கூட்டுறவின் முக்கியத்துவத்தை உணர்த்த கொண்டாடப்பட்டு வருகிறது. தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமும் மாணவர்களுக்குக் கூட்டுறவுக் கல்வி பரப்பப்பட்டு வருகிறது.

சமீபத்தில் நடந்த கூட்டுறவுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்களுக்குக் கூட்டுறவுக் கொள்கை மற்றும் முக்கியத்துவத்தைப் பற்றியும் கூட்டுறவுகளின் செயல்பாடு பற்றியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் போதிக்கப்பட்டது. மேலும். தமிழ்நாட்டில் இயங்கி வருகின்ற பல்கலைக் கழகங்களில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்புகளில், கூட்டுறவைப் பாடமாகக் கொண்டு சிறந்து விளங்குகின்ற மாணாக்கர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் வழங்கப்பட்டு கூட்டுறவின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டு வருகிறது.

### 2. கூட்டுறவுப் பயிற்சி

கீழ்நிலை அலுவலர்களுக்கு கூட்டுறவுப் பயிற்சி அளிக்க மாநிலத்தில் தற்போது 9 கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள் கூட்டுறவு தொடர்பான பல்வேறு அடிப்படைப் பயிற்சிகளை 2 வாரங்களிலிருந்து 42 வாரங்கள் வரை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டு வருகிறது. அஞ்சல் வழிக்கல்வி மூலம் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு கூட்டுறவு பட்டயப் பயிற்சி 1992-93 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

உயர்நிலை அலுவலர்களுக்கு மாநிலத்தில் இயங்கி வருகின்ற நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனம் மூலம் சென்னையிலும்,

[1997 மார்ச் 26

மதுரை கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திலும். பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு த**லைமைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ்
ரூ.2.22 கோடி செலவில் 1992-ஆம் ஆண்டு முதல் சென்னைக்கு
அடுத்த மாதவரத்தில் விவசாயக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி
நிறுவனம் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனம் பணி சார்புடைய
பயிற்சிகளையும், தேவைக்கவசியமான பயிற்சிகளையும், குறுகிய கால
கூட்டுறவுப் பயிற்சிகளையும் அளித்து வருகிறது. இது தவிர, தர்மபுரி
மாவட்டத்திலுள்ள பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள
பட்டுக்கோட்டையிலும், தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சி
நிறுவனம் 1992-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, படித்தும்
வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் தேடும்
வகையில் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி சுயவேலை வாய்ப்புத்
தேடும் வகையில் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையங்களை
தற்போது தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைத்து ஒரே
சங்கமாகச் செயல்பட வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன.



1997 மார்ச் 26 ]

## அத்தியாயம் - 11

## மாதிரி கூட்டுறவுச் சட்டம்

1990-ம் ஆண்டு மார்ச் திங்களில் மத்திய திட்டக் கூழு, திரு. சௌத்ரி பிரஹாம் பிரகாஷ். மத்திய அரசின் முன்னாள் கூட்டுறவு (மற்றும்) வேளாண் துறை அமைச்சர் தலைமையில், கூட்டுறவு அமைப்புகளின் தற்காலிக நிலைமையில் அனைத்து மாநிலங்களும் ஏற்கத் தக்க வகையில் ஒரு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை ஏற்படுத்திடவும் குழு ஒன்றை அமைத்தது. அக்குழு 1991-ஆம் ஆண்டு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத் தயாரித்து அளித்தது.

மாதிரி கூட்டுறவுச் சட்டம், மாநிலத்திலுள்ள அனைத்து செயற் பதிவாளர்களுக்கும் அனுப்பப்பட்டு, அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு சர்க்கரைத்துறை ஆணையர் அவர்கள் தலைமையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், பால்வளத்துறை ஆணையர், கைத்தறித் துறை ஆணையர், தொழில் மற்றும் வணிகத்துறை ஆணையர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு சிறு குழு ஏற்படுத்தப்பட்டு அக்கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தில் சொல்லப்பட்டவற்றுள் ஏற்கத்தக்க அம்சங்களை மாநில கூட்டுறவுச் சட்டத்தில் சேர்க்கவும், மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினையொட்டி மாநில கூட்டுறவுச் சட்டத்தில் நீக்கப்பட வேண்டியவற்றை இனங்கண்டு தெரிவித்திடவும் அக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்படி குழு தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இதன் தொடர்பாக இறுதி முடிவு எடுத்திடும் முன்பு 1994-ஆம் ஆண்டு அரசு கூட்டுறவுச் சங்கங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகிகளின் கருத்தையறியவும் முன்னணி கூட்டுறவாளர்கள் மற்றும் கூட்டுறவு அமைப்பில் நாட்டம் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்தையறியவும் உத்தேசித்தது. தற்போது தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மத்திய மற்றும் தலைமைச் சங்கங்களுக்கான நிருவாகக் குழு தேர்தல் நடைபெற உள்ளது. நிருவாகக்குழு தேர்ந்தெடுக்கப் பட்டபின்பு அக்குழுவிடமிருந்து பெறப்படும் கருத்துகளையொட்டி மாநில அரசு மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினை ஏற்கவோ வேறு வித முடிவுகளை எடுக்கவோ உள்ளது.

[1997 மார்ச் 26

## அத்தியாயம் - 12

### முடிவுரை

வேளாண்மைக் கடன் வழங்குதல், இடுபொருள் வழங்குதல், நுகர்வோர் பணிகள், வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும் விலைகளை நிலை நிறுத்துவதற்கென சந்தைத் தலையீட்டுமுறை முதலியவை வாயிலாக மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் பெரும்பணி ஆற்றி வருகின்றன.

தேர்தல் முடிவுற்று ஜனநாயக முறைப்படி நிர்வாகக் குழு உறுப்பினர்களால் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வகிக்கப்பட்டு வருவதால் கூட்டுறவு இயக்க கோட்பாட்டினை திறம்பட செயலாற்றுவதற்கு நிர்வாகக் குழுவின் பங்கு முக்கியமாக உள்ளது. அனைத்து தர மக்களுக்கும் சங்கத்தின் பணிகள் உடனுக்குடன் சென்றடைவதற்கும் சங்கத்தினை முழுமையாக நிலை நிறுத்துவதற்கும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஈடுபாட்டுடன் செயல்பட்டு வரும்போது கூட்டுறவு இயக்கம் மேலும் வலுவடையும்.



1997 மார்ச் 26]

## இணைப்பு-II

[204-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க]

## உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

## அத்தியாயம்-1

**முன்னுரை:-**

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.*

—திருவள்ளுவர்.

வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவைப் போதுமான அளவுக்குத் தடையின்றிப் பெறுவது என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள பிறப்புரிமை ஆகும். ஒரு சமுதாயத்தில் உள்ள அனைத்து மக்களும் சுறுசுறுப்பாகவும், உடல் நலத்துடனும் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான அளவிற்கு உணவுப் பொருளைத் தடையின்றிப் பெறமுடியும்போதுதான் அச்சமுதாயம் உணவுக்கு உத்திரவாதம் பெற்றுள்ளது என்று கூறமுடியும். இவ்வாறு தடையின்றிப் பெறும் வழி என்பது, நேரடியாக உணவுப் பொருளாகப் பெறுதல் அல்லது பொருளாதார வளர்ச்சியால் பெறுதல் அல்லது இவ்விரண்டு வழிகளிலும் பெறுதல் எனலாம். முறையாக உணவுப் பொருட்களைத் தடையின்றி வழங்குவதன் வாயிலாக நேரடியாக உணவுப் பொருள் கிடைக்க வகை செய்யலாம். மக்களின் வாங்கும் திறனை அதிகரிப்பதன் மூலமே, பொருளாதார வகையில் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய முடியும். அனைவருக்கும் மானிய விலையில் உணவுப் பொருள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு முன்னணியில் உள்ளது. பொதுவிநியோக முறை, கீழ்க்காணும் நோக்கத்துடன் அரசின் உறுதியான சமுதாயக் கொள்கையாகத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது:-

(1) சமுதாயத்தில் ஏழை எளிய பிரிவினருக்கு உணவு தானியங்கள் மற்றும் பிற இன்றியமையாப் பொருட்களை நியாயமான (மானிய) விலைகளில் வழங்குதல்;

(2) வெளி அங்காடியில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்; மற்றும்

(3) இன்றியமையாப் பொருட்களின் விநியோக முறையைச் சமுதாயமயமாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

பொது விநியோக முறையில் பயனீட்டாளர்களுக்கு மாநிலத்தின் முக்கிய உணவுப் பொருளான அரிசி, உப உணவுப் பொருளான கோதுமை, ஆகிய இரண்டு உணவு தானியங்களையும், சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகிய மூன்று இன்றியமையாப் பொருட்களையும் வழங்க அரசு முற்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முக்கியமான உணவு தானியம் அரிசி ஆகும். நம் மாநிலமானது அரிசி உற்பத்தியில் உபரியாகவோ அல்லது பற்றாக்குறைவாகவோ தொடர்ந்து இருந்ததில்லை. பருவ நிலை சாதகமாக இருக்கும் காலங்களில் இம்மாநிலம் அதன் சொந்தத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும். பருவ நிலை மோசமாக இருக்கும் காலங்களில் இம்மாநிலத்தின் தன்னிறைவு நிலை ஓரளவு பாதிக்கப்படுகிறது. நம் மாநிலத்தில் 1996ஆம் ஆண்டின் முன்பகுதியில் நிலவிய வறட்சியின் காரணமாகவும், மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து தாமதமாகத் தண்ணீர் திறந்து விடப்பட்ட காரணத்தினாலும் குறுவை மற்றும் சம்பா பருவங்களில் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவிரி பாசனப் பகுதியில் சாகுபடி பரப்பளவு மிகவும் குறைந்ததால் நெல் விளைச்சல் மிகவும் குறைந்தது.

காவிரி நீர் மறுக்கப்பட்ட போதிலும், 1996-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நல்ல பருவ மழை பெய்ததால், நெல் விளைச்சலில் சாதகமான நிலை காணப்பட்டது. எனவே, சம்பா பருவத்தில் சுமார் 12 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்யலாம் என எதிர்பார்க்கப்பட்டது. இதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அறுவடை ஆரம்பிக்கப்படும் நிலையில் ஆயத்தமாக இருந்தபோது எதிர்பாராமல் தாக்கிய புயல், அதனைத் தொடர்ந்து பெய்த பெரும் மழை ஆகியவற்றால்



அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் கடுமையான சேதத்திற்கு உள்ளாயின. அரசிடம் உள்ள புள்ளி விவரங்களின்படி, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில், சுமார் 58,000 ஹெக்டேர் பரப்பளவில் (1.43 இலட்சம் ஏக்கர்) பயிர் செய்யப்பட்ட சம்பா பயிர் முழுமையாகச் சேதமடைந்தது; தஞ்சாவூர் மாவட்டத்தில் 23,000 ஹெக்டேர் பரப்பளவில் (56,830 ஏக்கர்) பயிர் சேதமடைந்தது. மேலும், நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டிருந்த மிகப் பெரும் பரப்பளவு ஒருவார காலத்திற்கும் மேலாக நீரில் மூழ்கியே இருந்ததால் அறுவடைப் பயனும் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இதனால் அரசு, சம்பா பருவத்தில் தனது கொள்முதல் இலக்கை 9 இலட்சம் டன்களாகத் திருத்தி நிர்ணயிக்க வேண்டியதாயிற்று.

இதற்கிடையில், மத்திய அரசு ஏழைகளின் நலனை முதன்மையாகக் கொண்டு "வறியோர்க்கு வழங்குதல்" எனும் இலக்குடைய பொது விநியோக முறை (Targeted Public Distribution System) என்ற புதியதொரு திட்டத்தை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 கிலோ அரிசி மட்டுமே வழங்கும். மாநில அரசானது, ஏழை மக்களின் நலனை எப்பாடுபட்டேனும் காப்பது என்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ள நிலையில், குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதமொன்றுக்கு உயரளவாக 20 கிலோ என்ற அளவில் அரிசி வழங்கி வருகிறது.

1996-ஆம் ஆண்டின் முதல் சில மாதங்களுக்கு, நம் மாநிலம் 1.45 இலட்சம் டன்கள் அரிசியும் 25,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கீடாகப் பெற்று வந்தது. இந்த அளவில், நமக்கு ஆண்டு ஒன்றுக்கு கிடைக்கக் கூடிய அரிசி மற்றும் கோதுமையின் ஒதுக்கீடு 20.40 இலட்சம் டன்களாகும். ஆனால், பொது விநியோக முறையின் கீழ் நுகர்வு படிப்படியாக அதிகரித்ததால், மாதமொன்றுக்கு 2.25 இலட்சம் டன்கள் அரிசி என்ற அளவில் ஒதுக்கீட்டளவை உயர்த்தித் தருமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பாரத பிரதமருடன் இது குறித்து பேசி மேற்கொண்ட நடவடிக்கையாலும், மாநில அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகவும், கடந்த ஆறுமாத காலமாக அரிசியின் ஒதுக்கீடு 1.65 இலட்சம் டன்களாக உயர்த்தப்பட்டது. ஆனால், கோதுமை ஒதுக்கீடு 22,300 டன்களாகக் குறைக்கப்பட்டு விட்டது. ஆகையால், மாநில அரசு, பொது விநியோக முறையின் தேவையைச் சமாளிக்க தனது

[1997 மார்ச் 26

உள்ளூர் கொள்முதலைத் தீவிரப்படுத்தவும் பிற மாநிலங்களில் வெளி அங்காடிகளில் இருந்து அரிசி வாங்கவும் வேண்டியதாயிற்று.

கடந்த, 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் சராசரி உணவுதானிய நுகர்வு 10.11 இலட்சம் டன்கள் என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட வறியோர்க்கு வழங்குதல் எனும் இலக்குடைய பொது விநியோக முறைத் திட்டத்தின்படி, நம் மாநிலத்திற்குச் செய்யப்படும் ஒதுக்கீடு வரும் காலங்களில் ஆண்டு சராசரி நுகர்வின் அடிப்படையிலேயே அமையும் என்பதால், மத்திய அரசு நம் மாநிலத்திற்குச் செய்யும் ஒதுக்கீடு பெரிய அளவிற்கு (சுமார் 50 விழுக்காடு) குறையும். பேராசிரியர் இலக்டாவாலாவின் வழிமுறையின்படி மத்திய அரசு நம் மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கும் கீழே உள்ள மக்கள் தொகை 35.03 சதவீதமாகும் என அறிவித்துள்ளது. அதன் காரணமாக, மத்திய அரசு மாநிலத்திற்குரிய மானிய விலை அரிசியின் ஒதுக்கீட்டு அளவை குறைத்துவிடும்.

தேவைக்கும், வழங்கலுக்கும் இடையே உள்ள இடைவெளியை ஈடுகட்டவும், பொது விநியோக முறையை வெற்றிகரமாக நிர்வகிக்கவும் இவ்வரசு உள்ளூர்க் கொள்முதலை அதிகரிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், இந்திய உணவுக் கழகத்திடமிருந்து அல்லது பிற மாநிலங்களைச் சேர்ந்த வெளி அங்காடிகளில் இருந்து அரிசி வாங்கவும் வேண்டியதாயிற்று. எனவே, 1993-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட "இணைக் கொள்முதல் திட்டம்," அதாவது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மட்டுமின்றி வணிகர்களும் சேர்ந்து கொள்முதல் செய்யும் திட்டம் கைவிடப்பட்டு, 1996-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ஆம் நாளிலிருந்து காவிரி வடிநிலப் பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல் முறை மீண்டும் கொண்டுவரப்பட்டது. ஆனாலும், 1996 குறுவைப் பருவத்தில் 1,11,366 டன்கள் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. எனவே நம் கையிருப்பை வசதியானதோர் அளவிற்கு உயர்த்தும் நோக்கத்துடன் சம்பா '97 பருவத்திலும், ஏகபோகக் கொள்முதல் திட்டத்தை நீட்டிக்க அரசு முடிவு செய்தது.

இரயில்வே சரக்குப் பெட்டிகளின் பற்றாக்குறை, இந்திய உணவுக் கழகம் நமக்குத் தேவையான அளவிற்கு அரிசி அனுப்ப இயலாமை போன்ற பல்வேறு காரணங்களால் வட மாநிலங்களிலிருந்து தென்



1997 மார்ச் 26 ]

மாநிலங்களுக்கு குறிப்பாகத் தமிழ் நாட்டிற்கு அரிசி வரத்தில் காணப்படும் மந்தமான நிலைமை மாநில அரசுக்கு மிகுந்த கவலையைத் தரும் மற்றொரு அம்சமாகும்.

மேற்கண்ட சூழ்நிலையில், பொது விநியோக முறையில் தற்போது இருந்து வரும் குறைபாடுகளான, பொதுப் பங்கீட்டுக்குரிய பண்டங்களை வெளிச்சந்தைக்குத் திருப்பி விடுதல், கள்ளச் சந்தை, கடத்தல் போன்றவைகளை களைதல் மற்றும் புழக்கத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளை ஒழித்தல் ஆகிய நடவடிக்கைகளில் மாநில அரசு முனைப்பு காட்டுவதன் மூலமே மாநில பொது விநியோக முறையைச் சீரமைக்க வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. பொது விநியோக முறையின் பயன்கள் உண்மையிலேயே தேவையானவர்களுக்கும் மற்றும் ஏழை மக்களுக்கும் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, மாநில அரசானது கணினிமயமாக்கப்பட்ட தகவல் ஆதார அமைப்பின் துணையுடன், மூன்று வகையான குடும்ப அட்டைகளை வழங்க முடிவு செய்துள்ளது.

மேற்கூறிய தகவல்கள், இந்த இக்கட்டான சூழ்நிலையைச் சமாளிக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியத்தையும், பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதன் தேவையையும் புலப்படுத்தும். இத்தகைய சாதகமற்ற சூழ்நிலைகள் காணப்பட்ட போதிலும், பொது மக்களுக்கு, குறிப்பாக சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு, வலுவான பொது விநியோக முறையைச் செயல்படுத்தி, போதுமான அளவிற்கு உணவு தானியங்கள் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் ஏற்புடைய தரத்துடனும், நியாயமான விலையிலும் கிடைப்பதை உறுதி செய்வதே இவ்வரசின் கொள்கையாகும். இக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு சில இன்றியமையாப் பொருட்களின் விலைகளைத் தொடர்ந்து கண்காணித்தல், 1955 ஆம் ஆண்டின் இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தல், மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வலுப்படுத்துதல் ஆகியவை குறித்துத் தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது. இந்நோக்கத்தை எய்த வேண்டி இவ்வரசு, போதுமான அளவிற்கு அனைத்து சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

பின்வரும் அத்தியாயங்கள் மேற்சொன்ன கொள்கையை எய்த உதவும் பல்வேறு கூறுகளைப் பற்றி விவரிக்கின்றன.

[1997 மார்ச் 26

## அத்தியாயம்-2

### பொது விநியோக முறை

பொது விநியோக முறை என்பது, இன்றியமையாப் பொருட்கள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்வதான அரசின் கொள்கையை எய்த உதவும் மிக முக்கியமான அமைப்பு ஆகும். பொது விநியோக முறையின் வெற்றிகரமான செயலாக்கம், நான்கு அடிப்படைகளை அதாவது தேவையான அளவு கிடைத்தல், எளிதில் பெறமுடிதல், ஏற்புடையதாக இருத்தல், வாங்க முடிகிற விலைவரம்பிற்குள் இருத்தல் ஆகிய காரணிகளைப் பொறுத்தமைகிறது. இம்முறை, இன்றியமையாப் பொருட்களின் விலை ஏற்றத்தால் ஏற்படும் மோசமான விளைவுகளிலிருந்து பயனீட்டாளர்களை மிகப் பெருமளவு பாதுகாக்கிறது. ஆகவே, பொதுவிநியோக முறை என்பது, சாதாரண மனிதனின் ஆவல் மற்றும் எதிர்பார்ப்புகளைக் கட்டாயம் நிறைவுசெய்வதாக இருத்தல் அவசியம். இன்றியமையாப் பொருட்கள் எளிதில் கிடைக்கச் செய்வதற்கும் வாங்கத் தக்க விலைகளில் கிடைக்கும் அத்தகைய பொருட்களை வாங்குவதில் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு ஏற்படும் இடர்களைப் போக்குவதற்கும் உறுதியளிக்கும் வகையில் பொதுவிநியோக முறையைத் திறம்படவும், செம்மையாகவும் செயல்படச் செய்வதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கிறது. தேசிய செயல்முறை பொருளாதார ஆய்வுக்குழு வெளியிட்டுள்ள விவரங்களிலிருந்து, தமிழ்நாட்டு கிராமப்புறங்களிலுள்ள மக்களில் 83 சதவிகிதம் பேர் பொதுவிநியோகத் திட்டத்தின் பலனை அடைகிறார்கள் என்றும், ஆனால் தேசிய அளவில் 36 சதவிகிதம் பேர்தான் இதன் பயனை அனுபவிக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது. இம் மாநிலத்தில் பொது விநியோகமுறை செவ்வனே செயல்பட்டு வருகிறது என்பதற்கு இதுவே சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும்.

மாநிலம் முழுவதும் பரந்துபட்டு அமைந்துள்ள பயனுள்ள நியாய விலைக்கடைகளே இம் மாநிலத்தில் பொது விநியோக முறையின் சிறப்பு அம்சமாகும். நமது மாநிலம் முழுவதிலும், 23,125 நியாய விலைக்கடைகள் பரந்து விரிந்து இயங்கி வருகின்றன. இவற்றில், 18,242 கடைகள் கிராமப் பகுதிகளிலும் 4,883 கடைகள் நகர்ப்புறங்களிலும் உள்ளன. இவற்றுள், 21,927 நியாய விலைக் கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களும் 1,102 கடைகளைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் மீதமுள்ள 96 கடைகளைப் பிற நிறுவனங்களும் நடத்தி வருகின்றன. ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் குறைந்தது ஒரு



1997 மார்ச் 26 ]

நியாயவிலைக்கடை செயல்படுகிறது. தற்போது அனுமதிக்கப்படும் இலாப அளவில், ஒரு நியாய விலைக்கடை தனித்தியங்க வல்லதாகச் செயல்பட வேண்டுமெனில், அக்கடை குறைந்தது 800 குடும்ப அட்டைகளுக்காவது பொருள் வழங்கவேண்டும். இருப்பினும், நெடும் தொலைவிலுள்ள மற்றும் எளிதில் சென்றடையாத பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு, 15,000-க்கு மேற்பட்ட கடைகள் 800 க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் செயல்படுகின்றன. இதனால் ஏற்படும் இழப்பினை அரசும் தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

சென்ற ஆண்டு, உணவு மானியத்தின் மீதான விவாதத்தின் போது அறிவித்ததற்கிணங்க, நியாயவிலைக்கடைகள் தொடங்குவதற்கான திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டிக் குறிப்புகள் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றின் சிறப்பியல்புகள் வருமாறு:—

1. தற்போதுள்ள நியாயவிலைக் கடைகள் எவையும் மூடப்படக்கூடாது.
2. மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போதுள்ள நியாய விலைக்கடைகள் ஒவ்வொன்றும் 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் 800 அட்டைகளுக்குக் குறையாமலும் இருக்கும் வண்ணம் திருத்தி அமைக்கப்படும். இவ்வாறு திருத்தி அமைக்கும்போது தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடைகள் மூடப்படக்கூடாது. மேலும், ஒவ்வொரு வார்டிலும் குறைந்தது ஒரு நியாய விலைக்கடையாவது இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. ஊரகப் பகுதிகளில், 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடைகள், அவற்றில் 500-க்குக் குறையாமலும் 800 க்கு மிகாமலும் குடும்ப அட்டைகள் இருக்குமாறு திருத்தி அமைக்கப்படும். இவ்வாறு திருத்தி அமைக்கும்போது, தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் கடைகள் மூடப்படக்கூடாது.
4. மேற்கண்டவாறு கடைகளைத் திருத்தி அமைக்கும்போது எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் நியாயவிலைக் கடையை அடைய 2 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டியிராமல் பார்த்துக் கொள்ளப்படவேண்டும்.

[1997 மார்ச் 26

5. மேலே கண்ட வழிகாட்டிக் குறிப்புகளின்படி, புதிய நியாயவிலைக் கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் புதியதாக திறக்கப்பட்ட கடைகள் குறித்த தகவலை அவர்கள் (உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை) ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

6. மேலே கூறப்பட்டுள்ள வழிகாட்டிக் குறிப்புகள் நிறைவு செய்ய முடியாமலும், ஆனால், நியாயவிலைக் கடை திறப்பது அவசியம் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருதும் பட்சத்தில், திறக்கவிருக்கும் கடைகளைப் பொறுத்து கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரையோ அல்லது உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்புத்துறை ஆணையாளரையோ அணுகி அவர்களின் முன் அனுமதியைப் பெற்றபின் கடைகளை திறக்கலாம்.

7. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் மற்றும் இனக்கலவரங்களால் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் ஏற்படும் சட்டம்-ஒழுங்கு நிலைமையையொட்டி, புதிய கடைகள் திறப்பதற்கு அவசியம் ஏற்படுமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்குள்ள நிலைமைகளைப் பொறுத்து தமக்குள்ள விருப்பதிகாரங்களைப் பயன்படுத்தி புதிய நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம்.

**பகுதி நேரக் கடைகள்:**

மேற்கூறிய கடைகளைத் தவிர, இரு கடைகளுக்கிடையே உள்ள தொலைவு இரண்டு கிலோ மீட்டருக்கும் கூடுதலாக இருக்குமானால், அவ்விடத்தில் ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடை திறக்க மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒரு பகுதி நேர கடை திறப்பதற்கு அக்கடை நடத்துவதற்கான கட்டிடத்தை வாடகையின்றிப் பெறவேண்டும்.

இக்கடைக்காக தனியாக விற்பனையாளர் எவரையும் நியமிக்கக் கூடாது. அருகிலுள்ள தாய்க் கடையின் விற்பனையாளரே இப்பகுதிநேரக் கடையையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இன்றைய நிலவரப்படி இம்மாநிலத்தில் இத்தகைய 1,872 பகுதிநேர நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. இனக்கலவரங்கள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும், பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும்,



1997 மார்ச் 26]

பகுதி நேரக் கடைகள் தொடங்குவதைப் பொறுத்தமட்டில் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட கோட்பாட்டைப் பின்பற்றுவதில் கண்டிப்புக்காட்டாமல் நீக்குப் போக்குடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

**நடமாடும் நியாயவிலைக் கடைகள்:**

எளிதில் அணுக முடியாத மலைப்பகுதிகள் மற்றும் தொலைதூரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கும் பொருட்டு 30 நடமாடும் நியாய விலைக் கடைகள் கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல்படுகின்றன:—

| வ.எண் 1 | மாவட்டம் 2 | நடமாடும் நியாயவிலைக் கடைகள் ஊர்திகளின் எண்ணிக்கை 3 |
|---|---|---|
| 1. | திருநெல்வேலி-கட்டபொம்மன் | 2 |
| 2. | திண்டுக்கல் மன்னர் திருமலை | 2 |
| 3. | வடார்க்காடு-அம்பேத்கார் | 3 |
| 4. | பெரியார் | 2 |
| 5. | நீலகிரி | 6 |
| 6. | திருச்சிராப்பள்ளி (பிரிவினையாகாதது) | 1 |
| 7. | சேலம் (பிரிவினையாகாதது) | 5 |
| 8. | தர்மபுரி | 1 |
| 9. | கோயமுத்தூர் | 5 |
| 10. | திருவண்ணாமலை-சம்புவராயர் | 1 |
| 11. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் | 2 |
| | மொத்தம் | **30** |

**மகளிரால் நடத்தப்படும் சில்லறை விலை--துணை விற்பனைக் கடைகள்:**

இன்றியமையாப் பொருட்களைப் பெறுவதற்காக நியாயவிலைக் கடைகளுக்குச் செல்ல இரண்டு கிலோமீட்டருக்கு மேல் நடக்கவும்,

பொருட்கள் உள்ளனவா என உறுதி செய்வதற்காக ஓரிரு முறை கடைகளுக்குச் சென்று பார்ப்பதற்காகவும் ஊரகப் பொது மக்கள் பலவேளைகளில் தங்களது பொன்னான நேரத்தை வீணடிக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் ஊரகப் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்ப் பணியாற்றும் மகளிர் அமைப்புகள் அல்லது ஊரகப் பகுதி மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் மகளிர் குழுக்கள் சில்லறைவிலைத் துணை விற்பனைக் கடைகளைத் திறந்து நடத்துகின்றன. தற்போது, இம்மாநிலத்தில் இத்தகைய 179 சில்லறை விலை துணைவிற்பனைக் கடைகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்களை அட்டவணை 8-ல் காணலாம்.

## பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பண்டங்களின் அளவு மற்றும் விலை ஆகியவை:

அரிசி, கோதுமை, மைதா, ரவை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்கள், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் முறையாக வழங்கப்படுகின்றன. மத்திய அரசு, மாநில அரசுக்கு பாமாயில் ஒதுக்கீடு செய்யும்போதெல்லாம் பொதுமக்களுக்கு பாமாயில் வழங்கப்படுகிறது. பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் அளவு, விலை முதலியன அட்டவணை 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## கணினி மயமாக்குதலும், போலி அட்டைகளை ஒழித்தலும் :

அரசின் நிதி ஆதாரத்தைப் பெருமளவு பாதிக்கும் போலி குடும்ப அட்டைகளை களைவதற்கான ஒரு தலையாய முயற்சியாக, மாநிலத்தில் பொது விநியோக முறையினைக் கணினி மயமாக்க அரசு உத்தேசித்துள்ளது. தற்போது புழக்கத்திலுள்ள 1.50 கோடி குடும்ப அட்டைகளில், 20 இலட்சத்திற்கும் மேற்பட்டவை போலி குடும்ப அட்டைகளென மதிப்பிடப்பட்டுள்ளது. போலி குடும்ப அட்டைகளைக் களைவதன் முதற்படியாக, வீட்டுக்குவீடு கணக்கெடுக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களின் விவரங்களைக் கொண்டு 'எல்காட்' நிறுவனம் உருவாக்கியுள்ள கணினி மயமாக்கப்பட்ட விவரங்களின் உதவியுடன் புதிய குடும்ப அட்டைகள் வழங்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது.



போலி குடும்ப அட்டைகளைக் களைவதுடன் பொது விநியோக முறையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுவதை கண்காணிக்கவும் இக் கணினிமயமாக்கல் பெரிதும் உதவும்.

## பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் பொருட்கள்:

### 1. அரிசி:

தமிழ்நாட்டின் முக்கிய உணவு அரிசி ஆகும். எனவே, பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் பொருட்களில் முக்கியமானது அரிசி ஆகும். இத்திட்டத்திற்குத் தேவையான அரிசியை கீழ்க்கண்ட முறைகளில் பெறமுடியும்:-

(அ) அரிசி ஆலைதாரர்கள் மற்றும் மொத்த வணிகர்களிடமிருந்து லெவி மூலம் கொள்முதல் செய்தல்;

(ஆ) காவிரி பாசனப் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக ஏகபோகக் கொள்முதல் செய்தல்;

(இ) மைய அரசால் மாதந்தோறும் மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசியைப் பெறுதல்; மற்றும்

(ஈ) வெளிச்சந்தையில் வாங்குதல்.

## பொது விநியோக முறைக்காக அரிசியினைப் பெறும் வழிகள்:

### அ. வணிகர் லெவித் திட்டம் மூலம் கொள்முதல்:

1974-ஆம் ஆண்டிலிருந்து வணிகர் லெவித் திட்டம் நடைமுறையில் இருந்தது. இத்திட்டத்தின்படி, வணிகர்கள் வியாபாரம் செய்வதற்காக வாங்கும் நெல்/அரிசியை அவ்வப்போது அரசு நிர்ணயிக்கும் அளவுகளில் லெவி செலுத்திய பிறகே வாணிபம் செய்யும் இடத்திற்குக் கொண்டுசெல்ல இயலும். 1981-ஆம் ஆண்டிலிருந்து 1996-ஆம் ஆண்டு வரை நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்முதல் முறை பற்றிய தகவல்கள் அட்டவணை 2-இல் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால், அரிசியை எடுத்துச் செல்ல போக்குவரத்து கட்டுப்பாடுகள், விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் அதிகாரிகளினால் தொல்லைகள், பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு விலைகள் நிலவுதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்பட்டன. 1991-ஆம் ஆண்டில் அரிசியின் கையிருப்பு மற்றும் நெல் உற்பத்தி பெருகியதைக் கருத்தில்கொண்டு, இந்த அரசு,

இந்த வணிகர் லெவியை 1992 ஜனவரி 29 முதல் நிறுத்தி வைத்து ஆணை பிறப்பித்தது. இதன் மூலம் மாநிலம் முழுவதும் நெல் மற்றும் அரிசி தடையின்றி கொண்டு செல்ல வழி ஏற்பட்டதுடன், பல்வேறு மாவட்டங்களிலும் ஒரே மாதிரியான விலைகள் நிலவின.

**ஆ. மாநிலத்தை விட்டு வெளியே நெல்/அரிசி கொண்டு செல்ல லெவி:**

29-1-1992-லிருந்து வர்த்தகர் லெவி நிறுத்திவைக்கப்பட்டதால் மாநிலத்திற்குள்ளும் மாநிலத்திற்கு வெளியேயும் நெல்/அரிசியை கொண்டு செல்வதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் இல்லாமல் போயிற்று. இதனால், வியாபாரிகள் அண்டையிலுள்ள பற்றாக்குறை மாநிலங்களில் நிலவும் அதிக விலையை கருத்தில்கொண்டு இம்மாநிலத்திலிருந்து நெல்/அரிசியைப் பெருமளவில் அங்கு எடுத்துச் சென்று அதன் காரணமாக இம்மாநிலத்தில் வெளிச் சந்தையில் நெல்/அரிசி பற்றாக்குறை ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் நிலவியது. எனவேதான் வெளிமாநிலத்திற்கு நெல்/அரிசியைப் பெருமளவில் கள்ளக்கடத்தல் செய்வதைத் தடுப்பதற்காக, 1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் 4-ஏ பகுதியின் கீழ், அரசு, இந்த லெவி முறையை அறிமுகப்படுத்தியது. அதன்படி, வெளிமாநிலத்திற்கு நெல்/அரிசி கொண்டுபோக விரும்பும் வியாபாரிகள், அரிசி கொள்முதல் விலைகளில், அவர்கள் கொண்டு செல்லும் அளவிற்கு ஈடாக 100 சதவீதம் நெல்/அரிசியை லெவியாக அரசுக்கு கொடுக்கவேண்டும்.

**இ. காவிரி பாசனப் பகுதியில் ஏகபோகக் கொள்முதல்:**

காவிரி பாசனப் பகுதி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்பது அனைவரும் அறிந்ததாகும். 1983-ஆம் ஆண்டு மாநிலத்தில் கடும் வறட்சி நிலவிய காரணத்தால் பொது விநியோக முறைக்குத் தேவையான நெல்லைப் பெறும்பொருட்டு, ஏற்கனவே அமலிலிருந்த வணிகர் லெவியுடன், அரசு காவிரி பாசனப் பகுதியில் ஏகபோக கொள்முதல் திட்டத்தை செயலுக்குக் கொண்டுவந்தது. இத்திட்டம் 1993-ஆம் ஆண்டுவரை நடைமுறையில் இருந்தது.

இத்திட்டத்தின் கீழ் தனியார் வர்த்தகர்கள் காவிரிப் பாசனப் பகுதியில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதியிலுள்ள விவசாயிகள் தங்கள் நெல்லை அரசு நிறுவனமான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கே அரசு நிர்ணயித்த விலைகளில் விற்கவேண்டும். இத்திட்டத்தின்கீழ் விற்பனை செய்யத்தக்க உபரி நெல்





முழுவதையும் கொள்முதல் செய்யக்கூடிய நிலையில் அரசு இருந்தபோதிலும் விவசாயிகள், தங்கள் நெல்லை தங்கள் விருப்பப்படி தனியார் வர்த்தகர்களிடம் விற்கும் சுதந்திரம் இல்லாமற் போயிற்று. இதனை ஈடுசெய்ய அரசு, மத்திய அரசு அறிவித்த மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்குமேல் ஒரு ஊக்கத்தொகையை வழங்குகிறது. அரசு இவ்வூக்கத் தொகையை முதலில் உரங்களாகவும், பூச்சி மருந்துகளாகவும் வழங்கி வந்தது. 1988-ஆம் ஆண்டு முதல், அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலைகளுக்கு மேல் குவிண்டால் ஒன்றுக்கு, ரூ.35/-ஊக்கத்தொகை ரொக்கமாக வழங்கப்பட்டது.

தமிழக அரசின் சிறப்பு உணவு தானிய உற்பத்தித் திட்டத்தினால் தமிழகத்தில் நெல் உற்பத்தி கணிசமாக அதிகரித்தது. இதனைக் கருத்தில்கொண்டு, 1993 மே 1 முதல் ஏகபோகக் கொள்முதல் திட்டம் கைவிடப்பட்டு காவிரி பாசனப் பகுதிகளில் "இணைக் கொள்முதல் திட்டம்'' என்னும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகள் தங்களுடைய நெல்லை யாருக்கு எந்த இடத்தில் எந்த விலைக்கு விற்கலாம் என்ற முடிவு செய்யும் முழு உரிமையை முதன்முதலாகப் பெற்றனர். அதே நேரத்தில் கடன்பட்டுத் தவிக்கும் விவசாயிகள் தங்கள் நெல்லைக் குறைந்த விலைக்கு விற்பதைத் தடுக்கும்பொருட்டு, அரசு நிர்ணயிக்கும் விலைகளில் கொள்முதல் செய்வதற்காகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்தது. இவ்வாறாக, விவசாயிகள், தங்கள் நெல்லைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கோ அல்லது தனியார் வர்த்தகர்களுக்கோ எது இலாபகரமாக உள்ளதோ அவர்களுக்கு விற்கலாம். எனவே, இதற்கு மேலும் ஊக்கத்தொகை வழங்குவதில் நியாயம் இல்லாததால் இந்த ஊக்கத்தொகை வழங்குவது, ஏகபோகக் கொள்முதல் முறை ரத்து செய்யப்பட்டவுடன் கைவிடப்பட்டது.

1985 முதல் சம்பா மற்றும் குறுவை காலங்களில் ஏகபோக இணைக் கொள்முதல்/லெவி முறைகளின் மூலம் செய்யப்பட்ட கொள்முதல்கள் குறித்த விவரம் அட்டவணை-9-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அட்டவணையிலிருந்து இணைக்கொள்முதல் திட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கொள்முதலானது பொது விநியோக முறையின்கீழ் நமது வளர்ந்துவரும் தேவையை ஈடுசெய்யும் அளவிற்குப்

போதுமானதாக இல்லை என்பது தெளிவாகும். இதற்கிடையில், 1-1-1996-லிருந்து, அரசு, பொது விநியோக முறையின்கீழ் வழங்கிவந்த மாதமொன்றுக்கு உச்ச அளவான 12 கிலோவுடன் கூடுதலாகக் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதமொன்றுக்கு 8 கிலோ அரிசி வழங்கி, அட்டை ஒன்றுக்கு மாதமொன்றுக்கு வழங்கப்படும் உச்ச அளவை 20 கிலோவாக உயர்த்தியது. இவ்வாறு உயர்த்தியதால் பொது விநியோக முறையின் நுகர்வும் அதிகரித்து, மாதமொன்றுக்கு 1.40 இலட்சம் டன்களாக இருந்த நமது தேவை 2.25 இலட்சம் டன்களாக அதிகரித்தது. இதனால், உணவுப்பொருள் தேவையில் இம்மாநிலம் ஓர் இக்கட்டான சூழ்நிலையைச் சந்திக்க வேண்டியிருந்ததால், இவ்வரசு, மத்திய அரசை அவர்களது மையத் தொகுப்பிலிருந்து செய்துவந்த ஒதுக்கீட்டை, மாதமொன்றுக்கு 1,45,000 டன்கள் என்ற அளவிலிருந்து 2,25,000 டன்கள் என்ற அளவிற்கு உயர்த்துமாறு கேட்டுக்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் மாண்புமிகு பாரதப் பிரதமரிடம் எடுத்துரைத்து மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, மத்திய அரசு நமது மாநிலத்தை எதிர்நோக்கிய உணவு நெருக்கடியைப் புரிந்துகொண்டு, அதே நேரத்தில் 1996 ஆகஸ்ட் மாதத்திற்கு மட்டும் 20,000 டன்கள் அரிசியைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்தது. இக்கூடுதல் ஒதுக்கீடு அடுத்துவந்த மாதங்களுக்கும் (நவம்பர் மற்றும் டிசம்பர் '96-ஐ தவிர) நீட்டிக்கப்பட்ட போதும், தேவை மற்றும் வழங்கலுக்கு இடையே காணப்பட்ட பெரிய இடைவெளியானது அரசு மீண்டும் ஏகபோகக் கொள்முதல் திட்டத்தை அறிமுகப்படுத்துவதைப் பற்றி பரிசீலிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாக்கியது. எனவே, இத்திட்டம் குறுவைப் பருவத்திற்கு 15-9-1996 முதல் அமுல்படுத்தப்பட்டது.

ஏகபோக கொள்முதல் திட்டத்தை மீண்டும் அறிமுகப் படுத்தியபோது, மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு நல்ல விலை பெறவேண்டும் என்ற காரணத்தால், கூடுதலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40/- உற்பத்தி ஊக்கத்தொகையாக அளித்து அரசு ஆணையிட்டது. இவ்வாறு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட ஏகபோகக் கொள்முதல் திட்டத்தினால், குறுவை'96 பருவத்தில் இவ்வரசு 1,11,366 டன்கள் நெல்லை கொள்முதல் செய்ய முடிந்தது. ஆனால், குறுவை '95 பருவத்தில் இணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் மிகக்குறைந்த அளவான 8,730 டன்கள் நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. பொது விநியோக முறையின்கீழ் அதிகரித்து வரும் தேவையை ஈடுசெய்யுமுகத்தான், நமது





உள்ளூர் கொள்முதலை தீவிரப்படுத்த, ஏகபோகக் கொள்முதல் திட்டமானது சம்பா'97 பருவத்திற்கும் நீட்டிக்கப்பட்டது. அதே நேரத்தில், விவசாயிகள் முறையீடு செய்துகொண்டதன்பேரில், இவ்வரசானது உற்பத்தி ஊக்கத்தொகையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40/-லிருந்து ரூ.50/- ஆக உயர்த்தியும், குறுவை'96 பருவத்தில் விதித்திருந்த தரவெட்டிற்கான பணத்தை, குவிண்டால் ஒன்றுக்கு ரூ.15/-லிருந்து சம்பா '97 பருவத்திற்கு ரூ.5/-ஆகவும் குறைத்தது. சம்பா '97 பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1-3-1997-ன் நிலவரப்படி 7.77 இலட்சம் டன்கள் நெல் கொள்முதல் செய்தது.

ஏகபோகக் கொள்முதல் திட்டம் அறிமுகப்படுத்தியதிலிருந்து தஞ்சாவூர், திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் மற்றும் நாகை காயிதே மில்லத் மாவட்டங்களிலுள்ள சில்லறை வியாபாரிகள், தங்கள் வாழ்க்கைக்கு ஆதாரமானத் தொழிலை செய்து பிழைத்துக்கொள்ள தாங்களும் ஏகபோகக் கொள்முதல் பகுதிகளில் உள்ள விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய அனுமதி அளிக்கப்பட வேண்டுமென மீண்டும் மீண்டும் கோரிக்கை வைத்து வருகின்றனர். அவர்களது உண்மையான இன்னல்களை உணர்ந்த இவ்வரசு, சம்பந்தப்பட்ட கோட்டாட்சியாளர்களால் அளிக்கப்படும் அனுமதிச் சீட்டின்பேரில் அவர்கள் 75 குவிண்டால் அரிசிக்கு சமமான நெல்லிற்கு மிகாமல் கொள்முதல் செய்வதற்கு அனுமதித்து, அவ்வாறு வாங்கிய நெல்லை அவர்களது சம்பந்தப்பட்ட வட்டங்களிலேயே அரைத்து விற்பனை செய்யவேண்டும் என்ற நிபந்தனையும் விதித்தது.

இந்நடவடிக்கைகளினால் சில்லறை வியாபாரிகள் தங்களுக்கான பகுதிகளில் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து தங்கள் வணிகத்தை நடத்த வழிகோலும்.

## நெல்லுக்கான ஆதரவு விலைகள்:

ஒவ்வொரு ஆண்டும், விவசாய விளைபொருள் உற்பத்தி செலவுகள் மற்றும் விலைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மைய அரசு, நெல் கொள்முதலுக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்கிறது. மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் கருத்துக்களும், இவ்விலை நிர்ணயத்துக்குத் தொடர்புடைய வேளாண் இடுபொருட்களான விதைகள், உரங்கள் ஆகியவற்றின் விலைகள் போன்றவையும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. இந்த விலையையே மாநில அரசும் கடைப்பிடிக்கிறது. சென்ற பல ஆண்டுகளில் மைய அரசு நெல்லுக்கு

நிர்ணயித்த கொள்முதல் விலைகள் அட்டவணை 3-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

**கொள்முதல் சம்பந்தப்பட்ட விவரங்கள்:**

1976-77 முதல் 1996-97 வரை உள்ள கால அளவில், நெல் கொள்முதல் விலை, மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலை, பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலை ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை அட்டவணை 3-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசி:**

பொது விநியோக முறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்குவதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு மாதந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை ஒதுக்குகிறது.

1995 ஜனவரி முதல் 1995 மார்ச் வரை மாதம் ஒன்றுக்கு 1,00,000 டன்கள் அரிசியை மத்திய அரசு ஒதுக்கியது. 1995 ஏப்ரல் முதல் அந்த அளவை 1,25,000 டன்களாக அதிகரித்தது. 1995 நவம்பர் 1995 டிசம்பர் மாதங்களில் 1,40,000 டன்களாக இது மேலும் அதிகரிக்கப்பட்டது. 1996 ஜனவரி முதல் மத்திய தொகுப்பிலிருந்து மத்திய அரசு 1,45,000 டன்கள் அரிசியை இம்மாநிலத்திற்கு ஒதுக்கியது. 1996 ஆகஸ்ட் மாதத்திலிருந்து இது 1,65,000 டன்களாக (நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் முறையே 1,55,800 மற்றும் 1,47,700 தவிர) அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறாக 1996 ஆம் ஆண்டில் மத்திய அரசு மத்தியத் தொகுப்பிலிருந்து இம்மாநிலத்திற்கு 18,13,500 டன் அரிசியை வழங்கியுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கப்பட்ட அரிசியின் அளவு வருமாறு:

| ஆண்டு | ஒதுக்கீடு (டன்களில்) |
|---|---|
| 1982 | 70,000 |
| 1983 | 3,55,000 |
| 1984 | 3,00,000 |
| 1985 | 5,25,000 |
| 1986 | 7,05,000 |
| 1987 | 6,30,000 |
| 1988 | 7,30,000 |
| 1989 | 6,00,000 |
| 1990 | 7,36,800 |
| 1991 | 9,20,000 |
| 1992 | 8,28,810 |
| 1993 | 8,49,660 |
| 1994 | 11,41,600 |
| 1995 | 14,55,000 |
| 1996 | 18,13,500 |



வறியோர்க்கு வழங்குதல் எனும் இலக்குடைய பொது விநியோக முறை அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து மத்திய அரசின் வருங்கால ஒதுக்கீடு மத்திய தொகுப்பிலிருந்து எடுத்துச் செல்லப்படும் ஆண்டு சராசரி அரிசியளவைப் பொறுத்தே அமையும். கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு எடுத்த உணவு தானியங்களின் சராசரி அளவு 10.11 இலட்சம் டன்கள் என மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது. ஆகையால், நம் மாநிலத்திற்கு மத்திய அரசால் செய்யப்படும் ஒதுக்கீடு பெரும் அளவில் குறையும் (சுமார் 50%). இருப்பினும், இவ்வரசு மத்திய அரசை தற்போது இருந்துவரும் மாத அளவான 1.65 இலட்சம் டன்கள் என்ற அளவையே புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்பும் தொடர வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளது.

**அரிசி வழங்கல் அளவு:**

பொது விநியோக முறையின் கீழ் தேவைப்படும் அரிசியின் அளவு மாதமொன்றுக்குக் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும் அரிசியின் அளவைப் பொறுத்தே உள்ளது. இந்த அளவுகள் அவ்வப்போது வேறுபட்டு வந்துள்ளன. 1976-77 முதல் வழங்கப்பட்ட அரிசியின் அளவுகள் அட்டவணை 3-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

1995 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததோடன்றி, மேட்டூர் அணையிலிருந்து காலதாமதமாகத் தண்ணீர் திறந்துவிடப்பட்டதாலும், குறுவை மற்றும் சம்பா பருவங்களில் நெல்

சாகுபடி பரப்பு குறைந்ததால் நெல்லின் உற்பத்தியும், இவ்விரு பருவங்களிலும் குறைந்தது. ஆகவே, வெளிச்சந்தையில் அரிசியின் விலை ஏறிற்று. அதனால் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசிக்கு கிராக்கி அதிகமாயிற்று. இதன் பொருட்டு, 1-1-1996 முதல், அரசு, குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்பட்ட அரிசியின் உயரளவை 12 கிலோ என்பதிலிருந்து 20 கிலோ எனக் கூட்டியது. தற்பொழுது, மாதமொன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு பெரியவருக்கு தலா 4 கிலோ, சிறியவர்களுக்கு தலா 2 கிலோ என்ற அடிப்படையில் 20 கிலோவிற்கு மிகாமல் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இந்த 20 கிலோ அரிசியில், இருப்பைப் பொறுத்து, 3 கிலோ சாதாரண ரக அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 2 வீதமும் எஞ்சிய 17 கிலோ சன்னம் மற்றும் மிக சன்ன ரகங்களுக்கு கிலோ ரூ. 3.75 என்ற அடிப்படையிலும் வழங்கப்படுகிறது. இதைப் போலவே குடும்ப அட்டை ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த அரிசியில் கையிருப்பைப் பொறுத்து ஒரு பகுதி புழுங்கல் அரிசியாகவும், எஞ்சிய பகுதி பச்சரிசியாகவும் வழங்கப்படுகிறது. பொது விநியோகத்தில் குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படும் அரிசி தவிர, சுமார் 15,000 டன்கள் அரிசி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கென மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

இவை தவிர, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆகியவை நடத்தும் மாணவர் இல்லங்களுக்குத் தேவைப்படும் சன்னம் மற்றும் மிகச் சன்னரக அரிசி பொது விநியோக முறை விலைகளில் வழங்கப்படுகிறது.

**பொது விநியோக முறையில் வழங்கப்பட்டு வரும் அரிசியின் விற்பனை விலை:**

தற்பொழுது பொது விநியோக முறைக்குத் தேவையான அரிசி (1) காவிரிப் பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் முறையிலும், (2) மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் ஒதுக்கீடுகள் மூலமும் (3) பிற மாநிலங்களிலிருந்து வாங்குதல் மற்றும் இந்திய உணவுக் கழகத்தின் வெளிச்சந்தை விற்பனை மூலமும் பெறப்படுகின்றது. இம்மூன்று வழிகளிலும் பெறப்படும் அரிசியின் விலைகள் வேறுபடுகின்றன. இருப்பினும், எந்த வழிகளில் பெறப்பட்டாலும் பொது விநியோகத்தின் அரிசி ஒரே விலையில் தான் விற்கப்படுகின்றது. 1-9-1996 முதல்





மாநிலத்தில் நெல்லின் நடப்புக் கொள்முதல் விலை சாதாரண ரகம், குவிண்டாலுக்கு ரூ. 380-ம், சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ. 395-ம், மிகச் சன்ன ரகம் குவிண்டாலுக்கு ரூ. 415-ம் ஆகும். காவிரிப் பாசனப் பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து சம்பா '97-ல் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு மேற்கூறிய விலைகளுக்கு மேலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 50 ஊக்கத்தொகை கூடுதலாக வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்பட்ட நெல், இக்கழகத்தின் அரிசி ஆலைகளிலும் தனியார், முகவர்கள் அரிசி ஆலைகளிலும் அரைக்கப்படுகிறது. பிறகு அரைக்கப்பட்ட அரிசி கழகத்தின் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து நியாயவிலைக் கடைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படுகிறது. போக்குவரத்து, ஆலை, சேமிப்பு மற்றும் வட்டிக்கான செலவுகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமே ஏற்றுக்கொள்கிறது. இவையனைத்தையும் கணக்கில் கொண்டால், கழகத்திற்காகும் அரிசியின் அடக்க விலை சாதாரண ரகத்திற்குக் குவிண்டாலுக்கு ரூ. 816 என்றும் சன்ன ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ. 840 என்றும், மிகச் சன்ன ரகத்திற்கு ரூ. 874 என்றும் ஆகிறது.

மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியை பொறுத்தவரை, மத்திய அரசு குறித்த காலத்திற்கொரு முறை வழங்கல் விலைகளை அறிவிக்கிறது. 1-2-1994 முதல், மத்திய அரசு சாதாரண ரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 537 என்றும், சன்னரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 617 என்றும் மிகச் சன்னரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 648 என்றும் நிர்ணயித்தது. மத்தியத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசி மாநிலத்தில் உள்ள இந்திய உணவுக் கழகத்தின் ஒரு சில கிடங்குகளிலிருந்து வழங்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உணவுக் கழக கிடங்குகளிலிருந்து அரிசியைப் பெற்றுக்கொண்டு சேமித்து வைத்து, பின்னர் பொது விநியோகத்திற்கு அளிக்கிறது. போக்குவரத்து, சேமிப்பு மற்றும் வட்டிக்கான செலவினத்தை கணக்கில் கொண்டால், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் விற்பனை விலை, சாதாரண ரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 596 என்றும், சன்னரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 682 என்றும் மிகச் சன்னரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 715 என்றும் அமையும்.

சில்லறை விற்பனையாளர்களுக்கு குவிண்டாலுக்கு ரூ. 20 ஆதாயம் அனுமதிக்கப்படுகிறது. இதற்காகும் செலவை அரசே ஏற்றுக்கொள்வதால் பொது விநியோக விற்பனை மூலம் அரசுக்கு கிடைக்கும் தொகை பின்வருமாறு:

| | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
|---|---|---|---|
| | (ரூபாய் குவிண்டாலுக்கு) | | |
| பொது விநியோக முறையில் கிடைக்கும் நிகர மதிப்பு (31-3-95 வரை) | 330 | 455 | 455 |
| 1-4-95 முதல் | 230 | 355 | 355 |
| 1-7-95 முதல் | 180 | 355 | 355 |

மத்திய அரசு வறியோர்க்கு வழங்குதல் என்னும் இலக்குடைய புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், 1-6-97 முதல், "வறுமைக் கோட்டிற்குக் கீழே" உள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்கப்படும் சன்ன ரக அரிசி குவிண்டாலுக்கு ரூ. 350 என்றும், கோதுமை குவிண்டாலுக்கு ரூ. 250 என்றும் ஆகும். ஆனால், அதேசமயம் "வறுமைக் கோட்டிற்கு மேல்" உள்ள குடும்பங்களுக்காக வழங்கப்படும் அரிசிக்கான மத்திய அரசின் விற்பனை விலை சன்ன ரகத்திற்கு தற்போதுள்ள விலையான குவிண்டாலுக்கு ரூ. 617-லிருந்து ரூ. 650 ஆகவும், மிகச சன்ன ரகத்திற்குக் குவிண்டாலுக்கு ரூ. 648-லிருந்து ரூ. 750 எனவும் கோதுமையைப் பொறுத்தவரை குவிண்டாலுக்கு ரூ. 402-லிருந்து ரூ. 450 ஆகவும் உயர்த்தியுள்ளது.

**அரிசி விநியோகத்திற்கான மானியம்:**

மேற்கூறியவைகளிலிருந்து பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் அரிசிக்குக் கணிசமான மானியம் வழங்கப்படுகிறது என்பது தெளிவாகும். மானியத்தின் அளவு, அரிசியின் ரகத்தைப் பொறுத்தும் அதைப் பெறும் முறையைப் பொறுத்தும் அமையும். மேலும் பொது விநியோக முறையின் நுகர்வைப் பொறுத்தும் கூட அது அமையும்.

உதாரணமாக, ஆண்டு சராசரி நுகர்வு 1978 முதல் 80 வரை 1.25 இலட்சம் டன்களாக இருந்தது. ஆனால், 1991-இல் மாத நுகர்வு 1.44 இலட்சம் டன்கள் என்ற அளவை எட்டியது. 1992 ஆம் ஆண்டு முதல் மாதம் ஒன்றுக்கு சுமார் 1.22 இலட்சம் டன்களும், 1993-இல் 1.19





இலட்சம் டன்களும், 1994-இல் 1.06 இலட்சம் டன்களும், 1995-இல் 1.25 இலட்சம் டன்களும், 1996-இல் 2.01 இலட்சம் டன்களும் நுகர்வு இருந்து வந்துள்ளது. 1978 முதல் ஆண்டு வாரியாக அரிசியின் நுகர்வு விவரம் வருமாறு:

| ஆண்டு (1) | நுகர்வு (2) | மாத சராசரி நுகர்வு (3) |
|---|---|---|
| 1978 | 93,000 | 7,750 |
| 1979 | 1,49,173 | 12,431 |
| 1980 | 1,35,231 | 11,252 |
| 1981 | 6,71,320 | 55,941 |
| 1982 | 6,29,002 | 52,416 |
| 1983 | 6,75,027 | 56,252 |
| 1984 | 6,98,655 | 58,221 |
| 1985 | 11,04,777 | 92,064 |
| 1986 | 9,24,336 | 75,361 |
| 1987 | 11,87,276 | 98,939 |
| 1988 | 13,03,540 | 1,08,711 |
| 1989 | 14,56,849 | 1,21,404 |
| 1990 | 12,33,261 | 1,02,771 |
| 1991 | 17,31,657 | 1,44,304 |
| 1992 | 14,70,319 | 1,22,526 |
| 1993 | 14,30,075 | 1,19,173 |
| 1994 | 12,80,492 | 1,06,707 |
| 1995 | 15,03,944 | 1,25,329 |
| 1996 | 24,12,966 | 2,01,080 |

அரசு நிர்ணயித்த மானிய விலையில் அரிசி வழங்கியதால் ஏற்பட்ட நட்டத்தை ஈடுகட்ட தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு வழங்கும் உதவித்தொகை மான்யம் கடந்த பல ஆண்டுகளாக உயர்ந்து கொண்டே வந்துள்ளது. 1980-81இல் வழங்கப்பட்ட மொத்த உதவித்தொகை ரூ. 1.81 கோடி மட்டுமே ஆகும். ஆனால் 1991-92-ல்

இது ரூ. 332.24 கோடியாகவும் 1992-93ல் ரூ. 351.68 கோடியாகவும் உயர்ந்தது. இந்த உதவித்தொகை அளவு 1993-94-ல் ரூ. 400 கோடியாகவும் மீண்டும் 1994-95-ல் ரூ. 440 கோடியாகவும் உயர்ந்தது. 1-4-95 முதல் அனைத்து ரக அரிசியின் விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய் குறைக்கப்பட்டதாலும் மேலும் 1-7-95 முதல் சாதாரண ரக அரிசியின் விலை கிலோ ரூ. 2.50-லிருந்து கிலோ ரூ. 2.00 ஆகக் குறைக்கப்பட்டதாலும் 1-1-96 முதல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்ட அதிகபட்ச அரிசியின் அளவு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிலிருந்து 20 கிலோ ஆக உயர்த்தப்பட்டதாலும் 1995-96 ஆம் ஆண்டில் இந்த உதவித் தொகை ரூ. 800 கோடியாக உயர்ந்தது. இந்நிலையில், 1996-97-ல் ரூ. 1,000 கோடி என்ற அளவில் இருந்த உதவித்தொகை 1997-98-ல் ரூ. 1,200 கோடியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பொது விநியோக முறையில் குறைந்த விலையில் வழங்கப்படும் அரிசியின் பின்னணியில் உள்ள பொருளாதாரம்:**

பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசிக்கான மானியம் விற்பனை விலையையும் மற்றும் அதன் நுகர்வின் அளவையும் (வழங்கப்படும் அரிசியின் ரகம் மற்றும் அதை கொள்முதல் செய்யும் முறை) பொறுத்தே அமைந்துள்ளது என ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் அரிசியின் சராசரி நுகர்வு அளவு 2.05 இலட்சம் டன்களாகும்.

நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முறையான விவசாய இடுபொருட்களான உரம், பூச்சிக்கொல்லி மருந்து, விதை போன்ற பல்வேறு வேளாண்மை இடுபொருட்களின் விலை உயர்வை ஈடுகட்டி ஆண்டுதோறும் நியாயமான கொள்முதல் விலையை நிர்ணயித்து விவசாயிகளை ஊக்குவிக்கலாம். மத்திய அரசு நெல்லுக்கான கொள்முதல் விலையை 1976-77 ஆம் ஆண்டு முதல் 1987-88 வரை சிறிய அளவிலேயே உயர்த்தி வந்தது. ஆனால், 1988-89 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அதிக அளவில் விலை உயர்த்தப்பட்டது. 1978-79 முதல் 1987-88 வரையிலான பத்தாண்டுக்கால அளவில் சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை உயர்வு குவிண்டாலுக்கு ரூ. 65 மட்டுமே ஆகும். இதற்கு மாறாக, 1990-91 முதல் 1992-93 ஆம் வரையிலான ஆண்டுகளுக்குள் சாதாரண ரக நெல்லுக்கு கொள்முதல்





விலை குவிண்டாலுக்கு ரூ. 65 என்ற அளவில் உயர்ந்தது. இதே ரகத்திற்கு, 1993-94இல் குவிண்டாலுக்கு ரூ. 40, 1994-95இல் குவிண்டாலுக்கு ரூ. 30, 1995-96 மற்றும் 1996-97இல் குவிண்டாலுக்கு ரூ. 20 என்று கொள்முதல் விலை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்தது.

மையத் தொகுப்பிலிருந்து எடுக்கப்படும் அரிசியின் விலையும் கடந்த பல ஆண்டுகளில் அட்டவணை 3-இல் குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்தே வந்துள்ளது. 1977 முதல் 1987 வரையிலான 10 ஆண்டு காலத்தில் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் சாதாரண ரக அரிசியின் விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு 89 காசுகள் தான் உயர்ந்தது. ஆனால் 1991 ஆம் ஆண்டில் மட்டும் இந்த அரிசியின் விற்பனை கிலோ ஒன்று 88 காசுகள் உயர்ந்தது. மீண்டும், 1993 ஆம் ஆண்டில் 11-1-1993 முதல் இதன் விலை கிலோ ஒன்றுக்கு 60 காசுகள் அதிகமாக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டு மேலும் அதிகரிக்கப்பட்டு 1-2-1994 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 1 முதல் ரூ. 1.30 வரை உயர்த்தப்பட்டது.

இத்தகைய கொள்முதல் மற்றும் மத்திய விற்பனை விலைகளில் ஏற்பட்ட கடும் விலை உயர்வு, பொது விநியோக முறையில் அதற்கு ஈடான விலை உயர்வுக்கு வழி வகுத்தது. 1976-77 ஆம் ஆண்டு முதல் 1989-90 வரையிலான கால அளவில், பொது விநியோக முறையில் அரிசியின் விற்பனை விலை இரு முறைகள் தான் அதிகரிக்கப்பட்டன. இக்கால அளவில் கொள்முதல் விலை மற்றும் மத்திய விற்பனை விலையில் ஏற்பட்ட உயர்வு சிறிதளவே இருந்ததால், இந்த உயர்வினை மாநில அரசே ஏற்றுக்கொள்ள முடிந்தது. 1990 ஆம் ஆண்டு முதல் இவ்விரு விலைகளிலும் ஏற்பட்ட உயர்வு கணிசமாக இருந்ததால் 1990-க்குப் பின்னர் மாநில அரசினால் இந்த உயர்வினை ஏற்க முடியவில்லை. 1990 ஆம் ஆண்டு முதல் 1994 வரை பொது விநியோக முறையில் அரிசியின் விலையை ஆண்டு தோறும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்பதை அட்டவணை 3-இல் காணலாம்.

பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விலைக்கும் வெளிச்சந்தையில் விற்கப்படும் அரிசியின் விலைக்கும் இடையே உள்ள வேறுபாடு அதிகம் இல்லாதபோது, பொது விநியோக முறையின் கீழ் ஆண்டு நுகர்வின் அளவு குறைவாக இருந்து வந்துள்ளது என்பதைக் கீழ்க்காணும் அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

[1997 மார்ச் 26

| ஆண்டு | வெளிச்சந்தை விலை (புழுங்கல் அரிசி/ சாதாரண ரகம்) | பொது விநியோக முறையில் விலை | வேறுபாடு | மொத்த நுகர்வு (இலட்சம் டன்களில்) |
|---|---|---|---|---|
| | (ஒரு கிலோவுக்கு ரூபாய்) | | | |
| 1978 | 1.60 | 1.60 | .. | 0.93 |
| 1979 | 1.65 | 1.60 | 0.05 | 1.49 |
| 1980 | 2.00 | 1.60 | 0.40 | 1.35 |
| 1981 | 2.90 | 1.75 | 1.15 | 6.71 |
| 1982 | 2.71 | 1.75 | 0.96 | 6.29 |
| 1983 | 3.71 | 1.75 | 1.96 | 6.75 |
| 1984 | 3.12 | 1.75 | 1.37 | 6.98 |
| 1985 | 3.38 | 1.75 | 1.63 | 11.04 |
| 1986 | 3.52 | 1.75 | 1.77 | 9.24 |
| 1987 | 3.75 | 1.75 | 2.00 | 11.87 |
| 1988 | 4.17 | 1.75 | 2.42 | 13.03 |
| 1989 | 4.54 | 2.00 | 2.54 | 14.57 |
| 1990 | 4.37 | 2.00 | 2.37 | 12.33 |
| 1991 | 4.90 | 2.00 | 2.90 | 17.31 |
| 1992 | 5.67 | 2.00 | 3.67 | 14.70 |
| 1993 | 6.81 | 2.50 | 4.31 | 14.30 |
| 1994 | 6.84 | 3.50 | 3.34 | 12.80 |
| 1995 | 8.35 | 2.00 | 6.35 | 15.04 |
| 1996 | 9.15 | 2.00 | 7.15 | 24.13 |

இப்பொழுதும் கூட, இம்மாநிலத்தில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலைகள் இதர மாநிலங்களில் நிலவிவரும் விலைகளுடன் ஒப்பிட்டால் மிகக் குறைவாகவே இருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. கீழ்க்காணும் விவரங்கள் இதற்குச் சான்று:



1997 மார்ச் 26]

இந்திய உணவுக் கழகத்தினால் விலை உயர்த்தப்பட்ட பின்னர் அண்டை மாநிலங்களில் உள்ள அரிசியின் விலை விவரம்:

| மாநிலத்தின் பெயர் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
|---|---|---|---|
| | (கிலோவுக்கு ரூபாய்) | | |
| தமிழ்நாடு (31-3-1995 வரை) | 3.50 | 4.75 | 4.75 |
| 1-4-1995 முதல் | 2.50 | 3.75 | 3.75 |
| 1-7-1995 முதல் | **2.00** | **3.75** | **3.75** |
| கர்நாடகம் | 5.95 | 6.75 | 7.05 |
| கேரளம் | 5.75 | 6.56 | 6.87 |
| ஆந்திர மாநிலம் | | | |
| (அ) வெள்ளை அட்டைதாரர்கள் (அதாவது வறுமை நிலையில் உள்ளவர்கள்) | 3.50 | .. | .. |
| (ஆ) இளஞ்சிவப்பு வண்ண அட்டை | .. | 6.50 | 6.80 |
| பாண்டிச்சேரி | 5.55 | 6.35 | 6.65 |
| மகாராஷ்டிராம் | 6.60 | 7.50 | 7.90 |
| மேற்கு வங்காளம் | 5.90 | 6.80 | 7.15 |

1-4-1995 முதல் அரசு அனைத்து ரக அரிசியின் விற்பனை விலையை கிலோவுக்கு ரூ. 1 குறைத்தது. 1-7-95 முதல் சாதாரண ரக அரிசியின் விலை மீண்டும் கிலோ ஒன்றுக்கு ரூ. 2 என குறைக்கப்பட்டது.

இம்மாநிலத்தில் பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விலை இதர மாநிலங்களில் நிலவும் விலைகளைவிடக் குறைவே என்பது மேற்கூறிய விவரங்களிலிருந்து தெளிவாகும். மேலும், இம்மாநிலத்தில் இதுவரையிலும் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ஒரே விலையில் ஒரே அளவில்தான் அரிசி விநியோகிக்கப்பட்டு வருகிறது.

## உணவுப் பொருள் கடன்:

மைய அரசு நிர்ணயிக்கும் விலையில், ஒவ்வொரு பருவத்திலும் நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்து, பொது விநியோக முறையின்

கீழ் வழங்க சென்னையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் ரொக்கப்பற்று வைத்துக் கொள்ள மாநில அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக இவ்வரசு பாரத ஸ்டேட் வங்கியுடன் ஒப்பந்தமும் செய்து கொண்டுள்ளது.

மேற்கண்ட உணவுப்பொருள் கடன். தமிழ்நாடு அரசின் முகவராக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது. உணவுப் பொருள் கடனுக்கும் பொருந்தக்கூடிய வட்டி வீதம் 8-10-92 முதல் 28-2-93 வரை 18.75 சதவீதமாக இருந்தது. இது 1-3-93 முதல் 23-6-93 வரை 17.75 சதவீதமாக குறைக்கப்பட்டது. இது 24-6-93 முதல் 1-9-93 வரை 16.5 சதவீதமாக மேலும் குறைக்கப்பட்டது. 2-9-93 முதல் உணவுப்பொருள் கடனுக்கான வட்டி வீதம் 15.5 சதவீதமாகும். இது 18-10-94 முதல் 14.5 சதவீதமாக மேலும் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது உணவுப்பொருள் கடன் மூன்று கணக்குத் தலைப்புகளின் கீழ் இயக்கப்பட்டு வருகிறது. உணவு தானியக்கணக்கு எண் 1 என்பது மத்தியத் தொகுப்பிலிருந்து மத்திய அரசு ஒதுக்கீடு செய்த அரிசியை எடுத்து செல்ல உதவுவது. உணவு தானியக்கணக்கு எண் 2 என்பது. பொதுச் சந்தையில் அரிசியைக் கொள்முதல் செய்வதாகும். உணவு தானியக்கணக்கு எண் 3 ஏகபோகக் கொள்முதல் பகுதிகளில் நெல் வாங்குவது பற்றியது. 1-11-96 முதல் கணக்கு எண் 1 மற்றும் 3 ஆகியவற்றிற்கான வட்டிவீதம். 15.5%. கணக்கு எண் 2-க்கான வட்டிவீதம் 20.25%.

**2. கோதுமை:-**

பொது விநியோக முறையின் கீழ். குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் உணவு தானியங்களில் கோதுமையும் ஒன்றாகும். பொது விநியோகத்தின் கீழ் வழங்குவதற்காக மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசியைப் பெற்று வருவதில் ஏற்படும் சுமையைத் தளர்த்தும் பொருட்டு கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை பயன்படுத்துமாறு பொது மக்கள் தூண்டப்படுகின்றனர். தற்போது பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் கோதுமையின் அளவு பின்வருமாறு:-

| | |
|---|---|
| (அ) சென்னை நகரம் அதன் புறநகர்ப்பகுதி மற்றும் மாவட்ட தலைமையிடங்கள் | மாதம் ஒன்றுக்கு- குடும்ப அட்டை ஒன்றுக்கு - 10 கிலோ |
| (ஆ) மற்ற இடங்கள் | மாதம் ஒன்றுக்கு- குடும்ப அட்டை ஒன்றுக்கு 5 கிலோ. |



கோதுமை இம்மாநிலத்தில் விளையாததால் கோதுமை குறித்த தேவை அனைத்தும் மைய அரசின் ஒதுக்கீட்டிலிருந்து நிறைவு செய்யப்படுகிறது. 1996ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், அக்டோபர் மாதம் வரை மாதமொன்றுக்கு மைய அரசு 25,000 டன் கோதுமையை ஒதுக்கீடு செய்தது. ஆனால் இவ்வொதுக்கீடு 1996 நவம்பரில் 23,000 டன்களாகவும் 1996 டிசம்பர் முதல் 22,300 டன்களாகவும் குறைக்கப்பட்டது.

ஒரு குவிண்டால் கோதுமையின் மைய அரசின் விற்பனை விலை ரூ. 402, 1-2-1994 முதல் சில்லறை விற்பனை விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 4.50, இதில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆதாயத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 30-ம் சில்லறை விற்பனையாளருக்கு ரூ. 18-ம் அனுமதிக்கப்படுகிறது.

கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களை மக்களிடையே பிரபலப்படுத்துவதற்கு அரசு செவ்வையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உருளை மாவு ஆலைகளின் ஒத்துழைப்போடு, கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் ஊட்டச்சத்துத் திறன் பற்றியும், அரிசியைவிட குறைவான விலைகளில் அவை கிடைப்பது பற்றியும் தொலைகாட்சி மூலமும், அகில இந்திய வானொலி மூலமும் வழக்கமாக அறிவிக்கப்படுகிறது. மேலும், கோதுமையின் சிறப்புத்தன்மைகள் குறித்து நாளிதழ் மற்றும் வார, மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. இதன் விளைவாக, கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்களின் பயன்பாடு அதிகரிக்கும் நிலைமையுள்ளது. தற்போது இது மாதம் ஒன்றுக்கு 10,000 டன்கள் அளவைக் கடந்து விட்டது.

மைய அரசால் அனுமதிக்கப்பட்ட கூலி அரைவைத் திட்டத்தின் கீழ் (Scheme of custom milling) பொது விநியோக முறையில் ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையில் 50% மிகாமல் உருளை மாவு ஆலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அவை, ரவை, மைதா மற்றும் ஆட்டாவாக மாற்றப்பட்டு நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டம், முதலில் சென்னையில் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அரசு, வெளிச்சந்தை விற்பனையில் பங்கு கொள்ளும் இந்த நடவடிக்கை மூலம் கோதுமைப் பொருட்கள் வெளிச்சந்தையில் நியாயமான விலையில் விற்கப்படுமாறு செய்வதற்கு இயலுகிறது. இப்பொருட்களின் சில்லறை விற்பனை

[1997 மார்ச் 26

...லைகள் வெளிச்சந்தை விற்பனை விலையை விட குறைவானவையாகும். அவற்றின் விவரங்கள்:

| | |
|---|---|
| ரவை | ரூ.6.60 (கிலோ ஒன்றுக்கு) |
| மைதா | ரூ.6.50 (கிலோ ஒன்றுக்கு) |
| ஆட்டா | ரூ.5.50 (கிலோ ஒன்றுக்கு) |

பொது விநியோக முறையின் மூலம் வழங்கப்படும் ரவை. மைதா மற்றும் ஆட்டா ஆகியவற்றின் அளவுகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| ரவை, மைதா | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 5 கிலோ |
| ஆட்டா (சென்னையில் மட்டும்) | குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 1 கிலோ |

**3. சர்க்கரை:-**

பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களில் சர்க்கரையும் ஒன்றாகும். மாநில அரசு, ஒரு நபருக்கு 500 கிராம் என்ற வீதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு உயரளவு 2 கிலோ சர்க்கரை வழங்கிவருகிறது. நடைமுறையில் சுமார் 150 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் இருப்பதால், மொத்தம் தேவைப்படும் சர்க்கரையின் அளவு 30,000 டன்களாகும். மாதந்தோறும் வழங்கப்படுகிற சர்க்கரை அல்லாமல், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளுக்கு கூடுதல் சர்க்கரை தேவைப்படுகிறது. எனவே மாதாந்திர மொத்த தேவை 31,000 டன்கள் என்று கணக்கிடப்படுகிறது.

1986 ஆம் ஆண்டு மக்கள்தொகை அடிப்படையில் ஒருவருக்கு 425 கிராம் என்ற விகிதத்தில் மத்திய அரசு சர்க்கரை ஒதுக்கீடு செய்து வருகிறது. மாநில அரசு, ஒதுக்கீட்டின் அளவை உயர்த்துமாறு மத்திய அரசை தொடர்ந்து வற்புறுத்தியதின் அடிப்படையில், 1995 ஆகஸ்ட் வரையில் 22,547 டன் சர்க்கரை ஒதுக்கீடு செய்து வந்தது. 1995 செப்டம்பர் முதல் இவ்வொதுக்கீடு 23,674 டன்களாக உயர்த்தப்பட்டது. 1995 டிசம்பர் வரை இவ்வொதுக்கீடு தொடர்ந்து வழங்கப்பட்டது. தற்போது மத்திய அரசு 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்கு அடிப்படையில் 1996 ஜனவரி முதல், மாதம் ஒன்றுக்கு 23,741 டன்கள் வழங்கி வருகிறது.

தேவைக்கும் ஒதுக்கீட்டிற்கும் இடையில் உள்ள பெரும் வேறுபாடு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமுள்ள சிறிய அளவிலான



1997 மார்ச் 26 ]

முடை இருப்பைக் கொண்டும், அவ்வப்போது மைய அரசால் வழங்கப்படும் தற்காலிகக் கூடுதல் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தியும் சமாளிக்கப்படுகிறது இவ்வாறு சர்க்கரை விநியோகம் திறம்படச் செய்யப்படுகிறது.. பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் சர்க்கரையின் சில்லறை விற்பனை விலை 10-2-97 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ. 10.50 ஆகும்.

**4. மண்ணெண்ணெய்:**

பொது விநியோக முறையின் கீழ் 150 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களில் மண்ணெண்ணெயும் ஒன்றாகும். சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதி, மாவட்டத் தலைமையகங்களுக்கு 10 லிட்டரும், நகராட்சிப் பகுதிகளுக்கு 6 லிட்டரும், நகரியம் மற்றும் பேரூராட்சிகளுக்கு 5 லிட்டரும், கிராமப்புறங்களுக்கு 3 லிட்டரும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இது தவிர, குடும்ப அட்டைகள் இல்லாமல் பொதுமக்களுக்குத் தேவைப்படும் கூடுதல் தேவையைச் சமாளிக்க 2,972 கைவண்டிக்காரர்களும் வெளிச்சந்தையில் மண்ணெண்ணெய் விற்கிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட தனியார் மொத்த வியாபாரிகள் மூலமாக மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெயிலிருந்து பொது விநியோக முறையின் முழுத்தேவையும் முன்பு நிறைவு செய்யப்பட்டது.

தற்போது குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை அதிகரித்த காரணத்தால், மைய அரசின் ஒதுக்கீடு பொது விநியோக முறையின் கீழ்க் குடும்ப அட்டைதாரர்களின் முழுத்தேவையை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை. மாதமொன்றுக்கு சுமார் 10,000 கிலோ லிட்டர் பற்றாக்குறை ஏற்படுகிறது. சமையல் எரிவாயு 2 வைத்திருக்கும் அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் மண்ணெண்ணெயின் அளவை, மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 3 லிட்டராகவும், ஒன்று மட்டும் வைத்திருக்கும் அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, அட்டை ஒன்றுக்கு 5 லிட்டராகவும் ஏற்கெனவே குறைக்கப்பட்டுள்ளது. இணை விற்பனை முறையில் வெளிச்சந்தையில் மண்ணெண்ணெய் கிடைப்பதை முன்னிட்டு, தொழில் நோக்கங்களுக்கு அனுமதி வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறம் பொருத்தப்பட்ட என்ஜின்களுக்கு லெவி வீதத்தில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும் முறையும் நிறுத்தப்பட்டுவிட்டது. இவ்வாறு மண்ணெண்ணெய் விநியோகத்தைக் குறைப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள்

[1997 மார்ச் 26

எடுக்கப்பட்டுள்ளன. மண்ணெண்ணெயை நேரடியாக வழங்கும் முறை இம்மாநிலத்தில் பின்பற்றாத போதும், பொது விநியோக முறையின் நலனைக் கருத்திற்கொண்டு, உணவுப்பொருள் வழங்கல் பணியாளர்கள் உன்னிப்பாக மேற்பார்வை செய்ததால், மண்ணெண்ணெய் வெளிச்சந்தைக்குச் சென்றுவிடாமல் பொது விநியோக முறை விற்பனை மையங்களில் விற்பனை செய்ய முடிந்தது.

இதற்கிடையில் கைவண்டி விற்பனையாளர்களிடமிருந்து மண்ணெண்ணெயை வாங்கி, குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக அரசு சில வழிகாட்டிக் குறிப்புகளைப் பிறப்பித்துள்ளது. இதனை எதிர்த்து கைவண்டிக்காரர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தடையாணைகளைப் பெற்றனர். அதனால் அம்முறை பின்பற்றப்படவில்லை.

பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் வழங்குவதற்குச் சிறந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், மாதம் ஒன்றுக்கும் 10,000 கிலோ லிட்டர் அளவுக்கு மண்ணெண்ணெய் பற்றாக்குறையை அரசு நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது.

இணை விற்பனை முறையின்கீழ் வெளிச்சந்தையில் மண்ணெண்ணெய் கிடைப்பதை அரசு கருத்தில் கொண்டுள்ளது. இணை விற்பனை முறையின்கீழ், அரசு வெளிச்சந்தை விற்பனைக்காக 690 மொத்த விற்பனை உரிமங்களையும், 9,038 சில்லறை விற்பனை உரிமங்களையும் வழங்கியுள்ளது. இதுவரை 24 நிறுவனங்கள், மண்ணெண்ணெய் தனியாக இறக்குமதி செய்ததின் மூலம் அங்காடியில் நுழைந்துள்ளன. மேலும், தனியார் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்து, விற்பனை செய்யவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மண்ணெண்ணெய் அதிக அளவில் கிடைப்பதை உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1996-ம் ஆண்டு நவம்பரில் மழைக்காலத் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு, மத்திய அரசு கூடுதலாக 3,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்தது. இம்மாநிலத்தில் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட தேவையை ஈடு செய்யும்பொருட்டு கூடுதலாக 7000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யுமாறு கோரப்பட்டது. மைய அரசு சிறப்பு இனமாகக் கூடுதல் தற்காலிக ஒதுக்கீடாக 5000 மெட்ரிக் டன்கள் (6425 கிலோ லிட்டர்) மண்ணெண்ணெயை இம்மாநிலத்திற்கு 1997 பிப்ரவரியில் ஒதுக்கீடு செய்தது. இது தவிர, 1996 ஏப்ரல்-மே



1997 மார்ச் 26]

மாதங்களில் பொதுத்தேர்தலின்போது, எதிர்பாராத சூழ்நிலையைச் சமாளிப்பதற்காக மத்திய அரசு இம்மாநிலத்திற்கு 4800 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்துள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஏற்படும் குறைபாடுகளைக் களைவதற்காக இவ்வரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், அளவு குறைவாக வழங்கப்படுவதாக நிறையப் புகார்கள் வந்துள்ளன. சோதனை முறையில் அண்ணாநகர் மற்றும் கோபாலபுரம் ஆகிய இடங்களில் இரு மண்ணெண்ணெய் நிலையங்கள் திறக்கப்பட்டு, இப்பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இவ்விரு நிலையங்களும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன. 1997-98ல் மேலும் 20 மண்ணெண்ணெய் நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்மண்ணெண்ணெய் நிலையங்களை சென்னை மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைக்க மண்ணெண்ணெய் நிலையம் ஒன்றுக்கு ரூ. 2.6 இலட்சம் செலவில் மொத்த மதிப்பு ரூ. 52 இலட்சத்தில் 50 சதவீத இணை மானியமாக ரூ.26 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கவும் கருதப்பட்டுள்ளது.

**5. பாமாயில்:**

இது, இறக்குமதி செய்யப்படும் ஒரு சமையல் எண்ணெயாகும். கிடைக்கும் அளவுக்கு உட்பட்டு, இந்த எண்ணெய் மாதமொன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 1 கிலோ வீதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. சமையல் எண்ணெயின் வெளிச்சந்தை விலைகளுடன் ஒப்பிடுகையில், இது மலிவான சமையல் எண்ணெய் ஆகும். மேலும், இது சமையல் எண்ணெயாக பொது மக்களால் தற்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, நகரப்பகுதிகளில் நியாயவிலைக் கடைகளில் இந்த எண்ணெய்க்குத் தேவை உள்ளது. ஆனால், மத்திய அரசின் ஒதுக்கீடு நிலையாக இல்லை.

மத்திய அரசு பொது விநியோக முறை மூலம் நுகர்வோருக்கு வழங்குவதற்காக 1996 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை மாதமொன்றுக்கு 1000 டன் ஒதுக்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட, மாதமொன்றுக்கு 1000 டன் ஒதுக்கீட்டில், 500 டன் மொத்தமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வ்ழங்கப்படும். சிறு பைகளில் அடைத்து விற்பதற்காக மத்திய அரசு எஞ்சிய 500 டன்

அளவை நேரடியாக சென்னை இந்துஸ்தான் தாவர எண்ணெய் கழகத்திற்கு வழங்கும். நகர மக்கள் பைகளில் அடைத்து விற்கப்படும் எண்ணெயை விரும்புகின்றனர். வெளியூர்களைப் பொறுத்தமட்டில். பைகளில் அடைத்து விற்கப்படும் எண்ணெயைவிட அளந்து தரப்படும் எண்ணெயின் விலை மலிவாக இருப்பதால் மக்கள் அதனையே விரும்புகின்றனர்.

உதிரி எண்ணெயின் விலை 1 கிலோ ரூ.29/- ஆகும். பைகளில் அடைத்து விற்கப்படும் எண்ணெயின் விலை ஒரு கிலோ ரூ. 32/- ஆகும். சென்னை மாநகரிலும், நகர்ப்பகுதிகளிலும் இந்த எண்ணெயை அதிகம்பேர் வாங்குகின்றனர். ஆனால் கிராமங்களில் அவ்வளவு வரவேற்பில்லை.

இனிவரும் காலங்களில் பண்டிகை காலங்களில் மட்டுமே பாமாயில் எண்ணெயை மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம் என மைய அரசு முடிவு எடுத்துள்ளது.

## பொது விநியோக முறையில் காணும் முறைகேடுகளைக் களைதல்-சீரமைப்புக் குழு அமைப்பு :

குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் உணவு தானியங்கள் முறையாக வழங்கப்படுவதில்லை என்றும், குறிப்பிட்ட நாட்களில் பொருட்கள் வாங்கப்படவில்லையெனில், சமூக விரோத சக்திகள் தங்கள் சொந்த சுயநலத்திற்காக அவற்றைக் கையாடல் செய்கின்றனர் என்றும் அடிக்கடி முறையீடு செய்யப்படுகிறது. இதனைத் தடுப்பதற்காக, ஒவ்வொரு மாதமும், பொது மக்களுக்கு வசதியான யாதொரு நாளிலும் அவர்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. இன்றியமையாப் பொருட்களை எடை குறைவாக வழங்குதல், வெளி அங்காடியில் விற்பனை செய்தல் போன்ற முறைகேடுகள் தடை செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்சொன்ன கோரிக்கைகளை ஏற்றுக் கொண்ட இவ்வரசு, தற்போதுள்ள கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயற்படுத்துவதற்கும், அவசியமாயின் 1980-ஆம் ஆண்டு கள்ளச் சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்குதல் பராமரிப்புச் சட்டத்தின் மூலம் பிரபல பதுக்கல்காரர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், நுகர்பொருள்





வழங்கல் (குற்றப் புலனாய்வுத் துறை) காவல்துறைத் தலைவருக்கு உத்திரவிட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் பொதுமக்களுக்கு வசதியான யாதொரு நாளிலும் அனைத்து நியாய விலைக் கடைகளிலும், உணவு தானியங்கள் பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு இயலும் வகையில் பொது விநியோக முறையைத் தக்க வகையில் மாற்றியமைக்குமாறு அரசு நுகர் பொருள் வழங்கல் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

தற்போது வடிவமைக்கப்பட்டுள்ள பொது விநியோக முறை முழுமையாக ஏழை மக்களை சென்றடைவதில் சிறு திருட்டுக்கள், பண்டங்களை வேறு வழிகளில் பயன்படுத்துதல், சேதாரம், எடைக்குறைவு ஆகிய குறைபாடுகள் இடையூறாக உள்ளன என்று கண்டறியப்பட்டுள்ளது. மேற்காணும் குறைபாடுகள் காரணமாக உண்மையிலேயே அவதியுறும் மக்கள் இந்த பொது விநியோக முறையில் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு பயனடைவதில்லை எனக் கருதப்படுகிறது. ஏழை மக்கள், அதிலும் குறிப்பாக கிராமப்புறத்திலுள்ள ஏழை மக்கள் நலன்மீது பெரும் அக்கறை கொண்டுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பொது விநியோக முறை சீரமைக்கப்பட்டு, இதிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென கருதியுள்ளார். எனவே, பொது விநியோக முறையினைச் சீரமைத்து அது ஏழைகளையும், உண்மையிலேயே தேவைப்படுபவர்களையும் சென்றடைய வேண்டும் எனக் கருதி, இதற்காக உணவுத்துறை செயலாளரை தலைவராகவும். சட்டமன்ற உறுப்பினர்கள், நுகர்வோர் அமைப்புகளின் ஒரு பிரதிநிதி மற்றும் மாநிலத்தில் பொது விநியோக முறையை நடத்தும் உயர் அதிகாரிகள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு, தனது பரிந்துரைகளை அளிப்பதற்காக, உயர்நிலைக்குழு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்கள்.

இக்குழு, கேரளம், ஆந்திரப்பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பொது விநியோக முறை செயல்படும் விதத்தை ஆராய்ந்து தனது பரிந்துரைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தது.

இக்குழுவின் பரிந்துரைகளை இரண்டு பகுதிகளாக (அ) கொள்கை அளவிலான மற்றும் (ஆ) நியாய விலைக் கடையளவில் செயல்படுத்தக் கூடியவை என பிரிக்கலாம்.

**(அ) கொள்கை அளவிலான பரிந்துரைகள்:-**

1. ஏழை மக்களைக் கருத்தில் கொண்டு பொது விநியோக முறையை மாற்றியமைக்க வேண்டும் என்ற மத்திய அரசின் கருத்தை இக்குழு வரவேற்கும் அதே சமயத்தில், இந்த முடிவினை செயலாக்கும்போது நடுத்தர வகுப்பினரின் நலனும் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென பரிந்துரைக்கிறது.

2. வருமான வரி செலுத்துபவர்கள், விற்பனை வரி செலுத்துபவர்கள், மாதமொன்றுக்கு 10,000 ரூபாய்க்கும் மேல் வருமானமுள்ள குடும்பங்கள் மற்றும் 5 ஏக்கர் நஞ்சை அல்லது 10 ஏக்கர் புஞ்சை நிலம் வைத்துள்ள நிலச்சுவான்தாரர்கள் போன்ற வசதி மிக்க மக்களுக்கு அரிசி வழங்குவது நீக்கப்பெற வேண்டும்.

3. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுக்கு மாதமொன்றுக்கு மான்ய விலையில் குறைந்தது 20 கிலோ உணவுத் தானியமாவது வழங்க வேண்டும். எளிதில் அடையாளம் காணும் வகையில், அவர்களுக்கு தனியான வண்ணத்தில் குடும்ப அட்டை வழங்கலாம்.

4. வறுமைக் கோட்டிற்கு மேல் இருந்தாலும் வசதி படைத்தோராக இல்லாத நடுத்தர குடும்பங்களுக்கு 12 கிலோ உணவு தானியங்கள் மானிய விலையில் வழங்கலாம்.

5. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள் அதிக அளவில் சர்க்கரையைப் பயன்படுத்தமாட்டார்கள் என்பதால், இந்த பிரிவைச் சார்ந்த அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு 1 கிலோவும், நடுத்தர குடும்பங்களைச் சார்ந்த அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோவும், வசதி படைத்த குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதமொன்றுக்கு 3 கிலோவும் பொது விநியோகத்தில் சர்க்கரை வழங்கலாம்.

6. ஊரகப் பகுதிகளுக்கு இயன்ற அளவுக்கு அதிக அளவில் மண்ணெண்ணெய் ஒதுக்கப்பட வேண்டும். 2 சமையல் எரிவாயு உருளைகள் உள்ளவர்களின் ஒதுக்கீட்டை மாதமொன்றுக்கு 1 லிட்டராக குறைப்பதன் மூலம், இதனைச் செய்யலாம்.

7. கையிருப்பைப் பொறுத்து அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் கோதுமை, கோதுமைப் பொருட்கள் மற்றும் பாமாயில் எண்ணெய் ஆகியவற்றை வழங்கலாம்.



8. பணியில் ஈடுபாடு கொண்ட, திறன் படைத்த, தகுதியான பணியாளர்கள் இல்லாததால் தற்போதுள்ள நுகர்பொருள் வழங்கல்துறை எதிர்பார்க்கும் திறனுடன் இயங்கவில்லை. பொது விநியோக முறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சட்டச் சிக்கல்கள் காரணமாக இதில் ஈடுபடுவர்கள் அனுபவசாலிகளாக இருப்பது அவசியம் என்பதால் சில ஆண்டுகளுக்கு முன் கேரள மாநிலத்தில் செய்தது போல நுகர்பொருள் வழங்கல் துறையின் கட்டமைப்பைத் திருத்தி அமைகக வேண்டுமென குழு பரிந்துரைக்கிறது.

9. பொது விநியோக முறை உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள நியாயவிலைக் கடைகளில் 1000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் நகராட்சிப் பகுதிகளில் 900 அட்டைகளுக்கு மிகாமலும் பிற பகுதிகளில் 800 அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். கடைகளுக்கு கட்டிடங்கள் கிடைப்பது கடினமாதலால் இதனை படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம். புதிய கடைகளைத் திறக்கும்போது குறைந்தபட்ச இடவசதி வரையறுக்கப்பட வேண்டும்.

10. தற்போது ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடையாவது அமைந்துள்ளது. ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு கடையாவது இருக்க வேண்டுமெனக் குழு பரிந்துரைக்கிறது.

11. சில்லறை தட்டுப்பாட்டைப் போக்கவும், கணவரத்தை சுலபமாகக் கணக்கிடவும், அத்தியாவசியப் பண்டங்களின் விலை சில்லறையாக இல்லாமல் உதாரணமாக கிலோ ரூ. 3.50, ரூ.4.00, ரூ.4.50 என்று இருக்குமாறு நிர்ணயிக்க வேண்டும்.

12. பொதுவிநியோக முறை செயல்படுவதை ஆய்வு செய்வதற்காக மாநில, மாவட்ட, நகராட்சி மற்றும் வட்ட அளவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

(அ) சில சட்டமன்ற உறுப்பினர்கள், நுகர்வோர் பாதுகாப்பு முனைவர்கள் மற்றும் அதிகாரிகளைக் கொண்ட மாநில அளவிலான ஆலோசனை நிலைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

[1997 மார்ச் 26

ஆ) மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் இக்குழுவிற்குத் தலைவராக இருக்க வேண்டும். இந்தக் குழுவில் மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மற்றும் நுகர்வோர் அமைப்புகளைச் சேர்ந்த மூன்று அல்லது நான்கு பிரதிநிதிகள் உறுப்பினர்களாக இருக்கலாம்.

இ) நகராட்சி அளவிலான குழுவிற்கு மாவட்ட உதவி ஆட்சியாளர் அல்லது கோட்டாட்சியர் தலைவராகவும், நகராட்சித் தலைவர், வட்ட நுகர்பொருள் வழங்கல் அலுவலர், நகராட்சி மன்றத்தின் சில பெண் உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர் குழுக்களின் ஒன்று அல்லது இரண்டு முக்கியப் பிரதிநிதிகள், உறுப்பினர்களாகவும் இருக்கலாம்.

ஈ) வட்ட அளவிலான குழுக்களில் மாவட்ட உதவி ஆட்சியாளர் அல்லது கோட்டாட்சியர் தலைவராகவும், ஊராட்சி ஒன்றியத் தலைவர், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், நுகர்வோர் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த ஒருவர் மற்றும் அதிகாரிகள் உறுப்பினர்களாக இருக்கலாம்.

இந்தக் குழுக்களுக்கு அளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்து ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறையினை கலந்தாலோசிக்கலாம்.

13. மாநிலத்திலுள்ள பல நியாய விலைக் கடைக் கட்டிடங்கள் பாழடைந்த நிலையில் உள்ளன. இவை சீர் செய்யப்பட வேண்டும். இவற்றைச் சீரமைக்கவும், புதுப்பிக்கவும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட வேண்டும்.

14. போலி குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 1000 ரூபாய்க்குக் குறையாமல் அபராதமோ அல்லது மூன்று மாத சிறைத் தண்டனையோ அவர்களுக்கு விதிக்கப்பட வேண்டும். முறையாக சரிபார்க்காமல் குடும்ப அட்டைகளை வழங்கும் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.



1997 மார்ச் 26]

15. பொது விநியோக முறையில் ஏழை மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இன்றியமையாப் பொருட்களைக் கடத்துபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**(ஆ) நியாய விலைக் கடையளவில் செயல்படுத்துவதற்குரிய பரிந்துரைகள்:**

1) மாநிலத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கீழ்க்கண்ட தகவல்கள் பொது மக்களுக்கு எளிதில் தெரியும் வண்ணம் காட்டி வைக்கப்பட வேண்டும்:—

அ) நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்ட மொத்த குடும்ப அட்டைகள் வகைவாரியாக.

ஆ) கடையின் வேலை நேரம்.

இ) வழங்கப்படும் பொருட்களின் அளவு.

ஈ) மாதத்திற்கான ஒதுக்கீடு.

உ) பண்டங்கள்-வாரியாக எடுக்கப்பட்ட அளவு.

ஊ) பண்டங்கள்-வாரியான கையிருப்பு (விலையுடன்).

எ) மண்ணெண்ணெய் வழங்கும் மொத்த வணிகரின் பெயர்.

ஏ) மாவட்ட வழங்கல் அலுவலர்/வட்ட வழங்கல்

2) இவை தவிர மாவட்ட வழங்கல் துணைப்பதிவாளர் (பொது அலுவலர் மற்றும் கூட்டுறவு விநியோகத் திட்டம்) ஆகியோரின் தொலைபேசி எண்கள் அனைவருக்கும் தெரியுமாறு ஒரு முக்கிய இடத்தில் எழுதி வைக்கப்பட வேண்டும். ஏனெனில் கடைகளில் நுகர்வோர் தங்களுடைய புகார்களை எழுதி வைக்க முன்வராததால் புகார் பெட்டிகள் காலியாகவே இருக்கின்றன.

3) தற்போது இருப்பு சரிபார்த்தலுக்கும் கணக்குகளை முடிக்கவும் மாதத்தின் கடைசி நாளில் நியாய விலைக்கடை மூடப்படுவதால் செயல்முறை இடர்ப்பாடுகளின் விளைவாக மாதத்தின் கடைசி வாரத்தில் எடுக்கப்படும் சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற பொருள்களை விநியோகிக்க முடிவதில்லை. எனவே, மாதத்தின் முதல் வேலை நாளை இருப்பு சரிபார்ப்பதற்காக ஒதுக்கலாமென குழு பரிந்துரைக்கிறது. இந்த நாளை "விற்பனையற்ற நாள்" என அறிவிக்கலாம்.

4) நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் எடை குறைவதைத் தவிர்ப்பதற்காக விநியோகத்திற்கு முன் அவற்றைப் பொட்டலங்களாக்கியோ அல்லது பிளாஸ்டிக் டின்களில் அடைத்தோ விற்பனைக்கு அனுப்புவது விரும்பத்தக்கது. உடனடியாக அரிசியையும், மண்ணெண்ணெயையும் இவ்வாறு செய்ய இயலாது. ஆனால், சர்க்கரையைப் பொட்டலமாகக் கட்டி விற்கலாம். இவ்வாறு பொட்டலம் கட்டுவதனால், சர்க்கரையின் விலை சிறிது உயர்ந்தாலும், நுகர்வோர் அதனைப் பொருட்படுத்த மாட்டார்கள்.

5) திறம்பட்ட பொது விநியோக முறையின் பயன்களை மக்கள் நன்கு அறிந்து கொள்ளும் வகையில் நுகர்பொருள் வழங்கல் துறையும், தமிழ்நாடு கூட்டுறவு குழுமமும் ஒன்று சேர்ந்து ஒரு செய்திப்படத்தைத் தயாரித்து. அதனைத் தொலைக்காட்சியிலும் அனைத்து திரையரங்குகளிலும் காண்பிக்கலாம்.

6) திட்டத்தின் செயல்பாடுகள் ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக மக்களுக்குத் தெரியும் வண்ணம், மாவட்ட ஆட்சித் தலைவர், ஒவ்வொரு மாதமும், மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் இன்றியமையாப் பொருட்களின் அளவு குறித்து பத்திரிகைச் செய்தி வெளியிடலாம். ஒவ்வொரு மண்ணெண்ணெய் மொத்த வணிகரின் பெயரையும், அவருக்கு வழங்கப்பட்ட மண்ணெண்ணெயின் அளவையும் வெளியிட வேண்டும். இந்தத் தகவலை, அனைத்து மாவட்ட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட வழங்கல் அலுவலர் தெரிவிக்க வேண்டும்.

இந்தக் குழுவின் முக்கியமான பரிந்துரை பொது விநியோக முறையைச் சீரமைத்து, படிப்படியாக வசதி படைத்த குடும்பங்களை இதிலிருந்து நீக்குவதாகும். இதனைக் கருத்தில் கொண்டு, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு ஒரு வகை குடும்ப அட்டையும், நடுத்தர குடும்பங்களுக்கு ஒரு வகை குடும்ப அட்டையும், பொது விநியோகத்தில் அரிசி தேவைப்படாத வசதி படைத்த குடும்பங்களுக்கு ஒரு வகை குடும்ப அட்டையுமாக மூன்று வகையான குடும்ப அட்டைகள் வழங்கலாமெனக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்தப்



பரிந்துரைகளை அரசு ஏற்று, புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு வழங்குவதற்காக எடுக்கப்படும் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக எடுக்கப்படும் கணக்கெடுப்பில், கூடியவரையில் போலி குடும்ப அட்டைகளைக் களைவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குழு பரிந்துரைத்தவாறு, இந்த மூன்றுவகை குடும்பங்களுக்கு வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் அளவினைத் திருத்தி அமைப்பது குறித்து, ஒவ்வொரு வகையிலும் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை, மத்தியத் தொகுப்பிலிருந்து, வறியோர் நலன் காக்கும் பொது விநியோக முறைக்கு வழங்கப்படும் அளவு, மாநிலத்தில் செய்யப்படும் கொள்முதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு விரைவில் முடிவெடுக்கும்.

நியாய விலைக்கடை அளவில் செயலாக்கத்திற்கான பரிந்துரைகளில் பொது மக்களுக்கு எளிதில் வெளிப்படையாகத் தெரியும் வண்ணம் பொது விநியோக முறை இருக்க வேண்டும் என்பதையும், இதில் பல்வேறு பணியாளர்கள் தங்களது பணிகளைத் திறம்பட ஆற்றுவதில் பல்வேறு கடமைகளை முனைப்புடன் செயலாற்ற வேண்டும் என்பதையும் குழு வலியுறுத்தியுள்ளது. மக்கள் பொது விநியோக முறையின் செயல்பாடுகளை வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளும் வண்ணம், நியாய விலைக் கடைகள் செயல்பட வேண்டும் என்னும் பொருட்டு. பின்பற்றவேண்டுமென, வெளியிடப்பட்டுள்ள அறிவுரைகளைத் தவறாமல் பின்பற்றவேண்டுமென, நுகர்பொருள் வழங்கல்துறை ஆணையாளரும் (மாநகர் மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகள்) மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் பரிந்துரைகள் அனைத்தும், அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளன. இவை செயல்படுத்தப்படும்போது. அவை பொது விநியோக முறையைச் சீரமைக்கப் பெரிதும் உதவியாயிருக்கும்.

## வறியோர் நலன் காக்கும் பொது விநியோக முறை:

நாட்டில் வறுமையைப் போக்க, இலக்குடைய செம்மையாக நடைபெறுகின்ற பொது விநியோகமுறை ஒரு முக்கிய வழியாகும். குழந்தைகள் உயிரிழப்பு, தாய்மார்கள் உயிரிழப்பு, பிறக்கும் சிசுக்களின் குறைவான எடை மற்றும் ஏனைய அனைத்துவகை இழப்புகள் போன்ற

கொடுமைகளை எதிர்ப்பதற்கு, உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு மிகவும் அவசியம். எனவே, ஏழைகள் தங்களால் வாங்கக்கூடிய விலைகளில் உணவுப் பொருட்களைப் பெற உறுதி செய்வது சிறந்த பொதுவிநியோக முறைக்கு மிகவும் அவசியம் என்பதை வலியுறுத்திக் கூற வேண்டியதில்லை. எனினும், தற்போதுள்ள பொது விநியோக முறை வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு பயன் தருவதில்லை என்றும், நகரத்தில் வாழுகின்றவர்களுக்கே அனுகூலம் அளிப்பதாக உள்ளது என்றும், ஏழை மக்கள் அதிகமுள்ள கிராமங்களைக் கொண்ட மாநிலங்களில் மிகக் குறைவான அளவிலேயே ஏழை மக்கள் பயன் அடைகின்றனர் என்றும், வழங்கல் முறை வெளிப்படையானதாக இல்லை என்றும், விநியோகமுறை கேட்பாரற்று உள்ளது என்றும், பெருமளவில் விமர்சிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே, மத்திய அரசு தற்போது வறியோர் நலன் காக்கும் பொது விநியோக முறையை நடைமுறைப்படுத்தவுள்ளது. அதன்படி வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்குத் தனியாகக் குடும்ப அட்டைகள் வழங்குவதன் மூலமும், இன்றியமையாப் பொருட்களை அவர்களுக்குச் சிறப்பு மானியவிலையில் வழங்குவதன் மூலமும், விநியோக முறையைச் சிறப்பாக கண்காணிப்பதன் மூலமும், பொது விநியோகமுறையைச் சீரமைக்க வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளளது.

**மத்திய அரசால் தற்போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள வறியோர் நலன் காக்கும் பொது விநியோகமுறை கீழ்க்காணும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது:—**

1. வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ அரிசி அல்லது கோதுமை பாதி விலையில் வழங்கப்படும்.

2. அரிசியாக இருந்தால், இந்த 10 கிலோ சாதாரண ரக அல்லது சன்ன ரகமாக வழங்கப்படும். மிகச் சன்னரகம் குறைந்த விலையில் வழங்கப்படமாட்டாது.

3. வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு அளிக்கப்பட இருக்கின்ற அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றின் விலை விவரம் வருமாறு:—





| | அரிசி | | | கோதுமை |
|---|---|---|---|---|
| | சாதாரண ரகம் | சன்ன ரகம் | மிகச் சன்னரகம் | |
| | (கிலோவுக்கு ரூபாய்) | | | |
| தற்போதைய விலை | 5.37 | 6.17 | 6.48 | 4.02 |
| புதிய விலை (வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு) | - | 6.50 | 7.50 | 4.50 |
| புதிய விலை (வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு) | 3.50 | 3.50 | - | 2.50 |

4. மாநிலங்கள், ஒரு கிலோவிற்கு 50 காசு வரை விநியோகம் சம்பந்தமான நிருவாகச் செலவுகளுக்காக வசூலிப்பதை அனுமதிக்கலாம். ஆகவே, மாநிலங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு சாதாரண ரக/சன்ன ரக அரிசியைக் கிலோவிற்கு ரூ.4/-என்ற விலையிலும், கோதுமையைக் கிலோவிற்கு ரூ.3/-என்ற விலையிலும் விற்கலாம்.

5. வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்குச் சன்ன ரக அரிசியும், மிகச் சன்ன ரக அரிசியும் மட்டுமே வழங்கப்படும். இவற்றின் விலை விவரம் வருமாறு:—

| | சன்ன ரகம் | மிகச் சன்ன ரகம் |
|---|---|---|
| | (கிலோவுக்கு ரூபாய்) | |
| தற்போதைய விலை | 6.17 | 6.48 |
| புதிய விலை | 6.50 | 7.50 |

வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ.4.50 என்ற விலையில் வழங்கப்படும். தற்போது கோதுமை கிலோ ஒன்றுக்கு ரூ.4.02-க்கு விநியோகம் வழங்கப்படுகிறது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலையில் அளிக்கப்பட்டால், அது தொடர்பான செலவுகள் அடங்காது. அந்தச் செலவுத் தொகையை மாநில அரசே நிர்ணயிக்கலாம்.

[1997 மார்ச் 26

6. தமிழ் நாட்டிலுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை 1991ன் கணக்கெடுப்புப்படி 125.43 இலட்சம் ஆகும். 1995-ல் இது 130.72 இலட்சமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

7. தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்கள் 35.03% என்று கணக்கிடப்பட்டுள்ளது. (4579,000 குடும்பங்கள்)

8. மேற்படி குடும்பங்களுக்கு மாதாந்திரத் தேவை ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ வீதம் 45,790 டன்கள் ஆகும். ஓர் ஆண்டுக்கான தேவை 5,49,490 அதாவது சுமார் 5.5 இலட்சம் டன்கள் ஆகும்.

9. ஒரு மாநிலத்திற்கான ஆண்டு ஒதுக்கீடு, அம்மாநிலம் கடந்த 10 ஆண்டுகளில் மத்தியத் தொகுப்பிலிருந்து எடுத்த உணவுப் பொருட்கள் அளவின் சராசரி என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டிற்கு ஆண்டு ஒதுக்கீடு 10.11 இலட்சம் டன்னாக இருக்கும். (மாதம் 84,250 டன்).

10. வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு 5.5 இலட்சம் டன்னும், வறுமைக் கோட்டிற்கு மேலேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டொன்றுக்கு 4.61 இலட்சம் டன்னும் ஒதுக்கீடு செய்யப்படும்.

11. மேலும் வேலை உத்தரவாதத் திட்டம் (EAS) மற்றும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் (JVVT) ஆகியவற்றில் பயன்பெறும் நபர்களுக்கு அவர்கள் வேலை செய்யும் அனைத்து நாட்களுக்கும் நாள் ஒன்றுக்கு கூடுதலாக 1 கிலோ கொடுக்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ், மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கும் கூட, குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 கிலோ அரிசி மட்டுமே வழங்குமென்றாலும், மாநில அரசு, மாநிலத்திலுள்ள நலிந்தோர் நலம் காப்பதற்காக ஏற்றுக் கொண்ட பொறுப்பைக் கருத்தில் கொண்டு, தற்போது குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் 20 கிலோ அரிசியைத் தொடர்ந்து வழங்க வேண்டியிருக்கும்.

தற்போது கொண்டுவரப்பட்டுள்ள வறியோர் நலன்காக்கும் பொது விநியோக முறையின்படி, மாநில அரசுகள், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு 10 கிலோ சாதாரண ரக அரிசி மற்றும் சன்னரக அரிசியை கிலோ 4 ரூபாய்க்கும் குறைவாகவே விற்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டில் தற்போது குடும்ப



1997 மார்ச் 26]

அட்டைதாரர்களுக்கு அவர்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களாக இருந்தாலும், வசதி படைத்தவர்களாக இருந்தாலும், சாதாரண ரக அரிசி கிலோ 2 ரூபாய்க்கும், சன்ன ரக அரிசி கிலோ 3.75 ரூபாய்க்கும் வழங்கப்பட்டு வருகிறது. இது தற்போது மத்திய அரசு கிலோ ஒன்றுக்கு அறிவித்துள்ள மானிய விலையை விடக் குறைவாகும்.

மாநிலங்கள் கடந்த 10 ஆண்டுகளில் மையத் தொகுப்பிலிருந்து பெற்ற அரிசியின் சராசரி அளவைக் கொண்டு ஆண்டு ஒதுக்கீட்டைக் கணக்கிடும்போது, இம் மாநிலத்திற்கு மையத் தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் அளவு வெகுவாகக் குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அரிசி ஒதுக்கீட்டளவை மைய அரசு, அது எடுக்கும் முடிவின்படி குறைக்கலாகாது என தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடம் தெரிவித்துள்ளது.

வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த நிலையை அரசு, புதிய குடும்ப அட்டை கோரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து அவர்களை வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடுமபங்கள் (நடுத்தர குடும்பங்கள்) மற்றும் வசதி படைத்த குடும்பங்கள் என வருமான நிலையைக் கொண்டு மூன்றாகப் பிரித்த பின்னர்தான், தெளிவாக அறிய இயலும்.

[1997 மார்ச் 26

## அத்தியாயம் - 3

### அரிசி அரைவை ஆலைத் தொழில்

இம் மாநிலத்தில் புதிய அரிசி அரைவை ஆலை நிறுவ அனுமதி வழங்குதல் அரிசி ஆலையை இயக்க உரிமம் வழங்குதல் ஆகியவை மத்திய அரசால் இயற்றப்பட்ட 1958 ஆம் ஆண்டு அரிசி அரைவை ஆலைத் தொழில் (முறைப்படுத்துதல்) சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்டுள்ள அரிசி அரைவை ஆலைத் தொழில் (முறைப்படுத்துதலும், உரிமம் வழங்குதலும்) விதிகள் மூலமாக முறைப்படுத்தப்படுகின்றன. இதன்பொருட்டு அனுமதிகள், உரிமங்கள் வழங்கும் அதிகாரங்களை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கியுள்ளது.

புதிய அரிசி அரைவை ஆலையை ஏற்படுத்த, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் அனுமதி பெறப்பட வேண்டும். மேற்சொன்ன சட்டப் பிரிவு, கோரப்பட்ட அனுமதி குறித்து பரிசீலிப்பதற்கும் அனுமதி வழங்குவதற்கும் முன்னர் கீழ்க்கண்டவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று ஏனையவற்றுக்கிடையே வரையறுக்கிறது:—

(அ) அந்தப் பகுதியில் இயங்குகின்ற அரிசி அரைவை ஆலைகளின் எண்ணிக்கை.

(ஆ) அந்தப் பகுதியில் நெல் கிடைக்கும் அளவு

(இ) அனுமதி கோரப்பட்ட அரிசி அரைவை ஆலையைப் பொறுத்த வரையில், அந்த ஆலைக்குக் கிடைக்கின்ற மின்சாரம் குடிநீர் அளவு.

(ஈ) அனுமதி கோருகின்ற அரிசி அரைவை ஆலையைப் பொறுத்த வரையில், அது அரைக்கின்ற வகை அல்லது உமி நீக்குகின்ற வகையைச் சேர்ந்ததாக இருக்குமா அல்லது அரைக்கின்றவகை உமி நீக்குகின்ற வகை ஆகிய இரண்டு வகைகளும் ஒன்றாகச் சேர்ந்ததாக இருக்குமா?

(உ) அனுமதி கோருகின்ற அரிசி அரைவை ஆலையைப் பொறுத்த வரையில், அது இயங்குவதால், அந்தப் பகுதியில் கணிசமான அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமா?

(ஊ) அனுமதியைப் பெறுவதற்கு முன், அமைக்கக் கருதிய அரிசி அரைவை ஆலைக்காக நிலம், கட்டிடம் அல்லது எந்திரம் முதலியவற்றை வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அனுமதியைப் பெற்றபின் கட்டிடம் கட்டலாம்; எந்திரங்களை நிறுவலாம். கட்டிடத்தைக் கட்டி முடித்து எந்திரத்தை நிறுவிய பின்னர், அரிசி அரைவை ஆலையை இயக்க உரிமம் வழங்கும் அதிகாரிகளிடமிருந்து உரிமம் பெறவேண்டும்.



1997 மார்ச் 26 ]

நம் மாநிலத்தில், அரிசி அரைவை ஆலையை ஏற்படுத்த, தமிழ்நாடு அரசின் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அனுமதி வழங்குகிறது. மாவட்டங்களில், மாவட்ட வழங்கல் அதிகாரிகளும் சென்னையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் உதவி ஆணையர்களும் (நுகர்பொருள் வழங்கல்) அரிசி அரைவை ஆலையை இயக்க உரிமம் வழங்குகின்றனர். I ஆம் வகையைச் சேர்ந்த அரிசி அரைவை ஆலை ஏற்படுத்தப்பட்டால், நாளொன்றுக்கு 8 மணி நேரம் இயக்கத்திற்கு அதன் அரைவைத்திறன் 75 கிலோ கொண்ட 50 மூட்டைகளாகவும், ஆண்டொன்றுக்கு 250 வேலை நாட்களின் இயக்கத்திற்கு அதன் அரைவைத்திறன் 12,500 மூட்டைகளாகவும் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அமைக்கக் கருதிய அரவை ஆலை VII ஆம் வகை அரிசி அரைவை ஆலையாக இருந்தால் அதன் அரைவைத்திறன் நாளொன்றுக்கு 30 மூட்டைகளாகவும், ஆண்டொன்றுக்கு 7,500 மூட்டைகளாகவும் இருக்கும். I ஆம் வகை அரிசி அரைவை ஆலையைப் பொறுத்தவரையில் அரிசி அரைவை ஆலை அமைவிடம் உத்தேச ஆலை மனையிடத்திலிருந்து 5 கிலோ மீட்டர் சுற்றளவாகவும், VII ஆம் வகையைச் சேர்ந்த அரிசி அரைவை ஆலையைப் பொறுத்தவரையில் அரிசி அரைவை ஆலை அமைவிடம் உத்தேச ஆலை மனையிடத்திலிருந்து 3 கிலோ மீட்டர் சுற்றளவாகவும் கணக்கிடப்படுகிறது. நிலத்தில் விளைகின்ற நெல்லின் உற்பத்தி ஒரே சீராக இருக்க வேண்டும் என்பதற்காக பின்வரும் வரையறை பின்பற்றப்படுகிறது. புன்செய் நிலத்தைப் பொறுத்தவரையில் அதன் உற்பத்தி ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 11 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 75 கிலோ கொண்டவை) என்றும் நன்செய் நிலத்தில் ஒரு போகப் பயிராக இருந்தால் அதன் உற்பத்தி ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 22 மூட்டைகள் (ஒவ்வொன்றும் 75 கிலோ கொண்டவை) என்றும் நன்செய் நில இருபோகப் பயிருக்கு ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 42 மூட்டைகள் (ஒவ்வொனறும் 75 கிலோ கொண்டவை) என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. அரிசி அரைவை ஆலையில் தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு அரைவை பணி நடைபெறாமல் இருந்தால் அந்த ஆலை இயங்காததாகக்

கருதப்படும். அதனை மீண்டும் இயக்க அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமாகும். அரிசி அரைவை ஆலை ஒன்றில் அரைவைப் பணி நிறுத்தப்பட்ட நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் அதனை மீண்டும் இயக்குவதற்காக அனுமதி கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டால் அந்தப் பகுதியில் நெல் கிடைக்கிறதா என்பதை பரிசீலிக்காமலேயே, ஆலையை இயக்க அனுமதி வழங்கலாம். அரிசி அரைவை ஆலையை ஏற்படுத்துவதற்கு வழங்கப்படும் அனுமதி ஓராண்டிற்குச் செல்திறனுடையதாகும். இயங்காத அரிசி அரைவை ஆலையை மீண்டும் இயக்குவதற்காக வழங்கப்படும் அனுமதி 6 மாதங்களுக்குச் செல்திறன் உடையதாகும்.

மேற்சொன்னவாறு அனுமதி வழங்கும் முறை இம்மாநிலத்தில் 1970 ஆகஸ்டிலிருந்து 1979 ஏப்ரல் வரையிலான இடைப்பட்ட காலத்தில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேற்படி காலத்தில் அரிசி அரைவை ஆலைகளை அனுமதி பெறாமல் நேரடியாக அமைக்கலாம். ஆலை அமைக்கும் பணி முடிந்தவுடன் ஆலையை இயக்குவதற்கான உரிமத்தினை உரிமம் வழங்கும் அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இருந்தபோதிலும், மத்திய அரசு கேட்டுக் கொண்டதின் பேரில், 16-5-1979 முதல் அனுமதி வழங்கும் முறை மீண்டும் கொண்டு வரப்பட்டது. 1958 ஆம் ஆண்டு அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல்) சட்டத்தின் விதிமுறைகளின்படி தற்போது இருக்கும் அரிசி அரைவை ஆலையை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கும், அரிசி அரைவை ஆலையின் அரைவைத்திறனை அதிகரிக்கவும், இயந்திரங்களை நிறுவுவதற்கும்கூட அரசிடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமாயிற்று.

1996-97 ஆம் ஆண்டில் பின்வருமாறு பல்வேறு மாவட்டங்களில் 341 அரிசி அரைவை ஆலைகளைப் புதிதாக ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. (1-6-1996 முதல் 15-3-1997 வரை) :



| | | |
|---|---|---|
| 1. | எம்.ஜி.ஆர். } | |
| 2. | அண்ணா } | 31 |
| 3. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் | 34 |
| 4. | தருமபுரி | 10 |
| 5. | பெரியார் | 13 |
| 6. | புதுக்கோட்டை | 13 |
| 7. | திருவண்ணாமலை சம்புவராயர் | 51 |
| 8. | சேலம் } | 47 |
| 9. | இராஜாஜி } | |
| 10. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 18 |
| 11. | மதுரை } | 14 |
| 12. | வைகை வீரன் அழகுமுத்து } | |
| 13. | திண்டுக்கல் மன்னர் திருமலை | 16 |
| 14. | காமராஜர் | 9 |
| 15. | கன்னியாகுமரி | 3 |
| 16. | சிதம்பரனார் | 3 |
| 17. | தென்னாற்காடு வள்ளலார் | 7 |
| 18. | வடாற்காடு-அம்பேத்கர் | 13 |
| 19. | இராமநாதபுரம் | 3 |
| 20. | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் | 5 |
| 21. | தஞ்சாவூர் | 12 |
| 22. | நாகை காயிதே மில்லத் } | 12 |
| 23. | திருவாரூர் ஏ.டி. பன்னீர்செல்வம் } | |
| 24. | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் } | |
| 25. | பெரம்பலூர் திருவள்ளுவர் } | 27 |
| 26. | கரூர் தீரன் சின்னமலை } | |

வேளாண்மைத் துறையில் பல நவீன தொழில் நுட்ப உத்திகள் பின்பற்றப்படுவதன் பயனாக, அண்மை ஆண்டுகளில், ஏக்கர் ஒன்றுக்கு கிடைக்கும் நெல் விளைச்சல் கணிசமாக உயர்ந்து, அதன் காரணமாக உழவர்களின் அரைவைத் தேவைகளை

நிறைவு செய்ய, அரிசி ஆலைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அரிசி ஆலைகள் அமைப்பதற்கான செயற்குறிப்புகள் தொடர்பான நடைமுறைகளைப் பின்பற்றவும், பரிசீலிக்கவும் ஏற்படுகின்ற கால அவகாசத்தையும், தாராளமயமாக்கப்பட்ட புதிய தொழிற் கொள்கையையும் கருத்திற்கொண்டு 60 குதிரை திறனுக்கும் குறைவான திறன் கொண்ட இயந்திரங்களைக் கொண்ட புதிய அரிசி அரைவை ஆலைகளை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் கொள்கையை தாராளமயமாக்க வேண்டும் என்றும், அவற்றுக்கு அரிசி அரைவை ஆலைத் தொழில் சட்டத்தின் சில விதிமுறைகளிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

ஆனால், நம்நாட்டில் தற்போது இயங்கிவரும் பெரும்பாலான அரைவை ஆலைகள் நவீனப்படுத்தப்பட்டதைக் கருத்திற்கொண்டு இச் சட்டத்தின் நோக்கம் ஏற்கெனவே எய்தப்பட்டுள்ளதால், இச்சட்டத்தையே ரத்து செய்ய வேண்டியதன் அவசியத்தை மைய அரசு உணர்ந்துள்ளது. தாராளமயமாக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை நிலவிவரும் இன்றைய நிலையில் இந்தச் சட்டமே தேவையில்லை என அவர்கள் கருதுகிறார்கள். இதன் விளைவாக இம் மாநிலத்தில் தற்போது புதிய அரிசி ஆலை அமைக்க விரும்புபவர்கள் முன் இருந்தது போல தடையின்மை சான்றிதழ் கோரி அரசை அணுகத் தேவையில்லை. இதற்கான சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் 20-2-1997 அன்று நிறைவேற்றப்பட்ட போதிலும், இதனைச் செயல்படுத்துவதற்கான அறிவிக்கை மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.



## அத்தியாயம்-4

## கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துதல்

பொது மக்களுக்கு இன்றியமையாப் பொருட்களை நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் பொறுப்பினை இவ்வரசு நன்கு உணர்ந்துள்ளது. உணவு நிலைமை மிக திருப்திகரமாக இருக்கும் பொழுது, வர்த்தக கட்டுப்பாடுகளையும், உணவு தானியங்களின் நடமாட்டக் கட்டுப்பாடுகளையும் அரசு செயல்படுத்தத் தேவையில்லை. ஆனால் இயற்கை இடர்பாடுகளாலும், வர்த்தகர்களால் செயற்கையாக உருவாக்கப்படும் பற்றாக்குறைகளாலும். கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துதல் அரசுக்கு இன்றியமையாததாகிறது. இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் இதர சில சட்டங்களான 1954 ஆம் ஆண்டு உணவு கலப்பட தடுப்புச் சட்டம், 1976 ஆம் ஆண்டு எடைகள், அளவைகள் சட்டம், 1980 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்களின் கள்ளச் சந்தைத் தடுத்தல் மற்றும் இன்றியமையாப் பொருட்களின் வழங்கலைப் பராமரித்தல் சட்டம் போன்றவற்றின் கீழ் பிறப்பிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகள் மூலம் அரசு கட்டுப்பாடுகளை செயல்படுத்துகிறது.

இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்புடைய கட்டுப்பாடு ஆணைகள் வருமாறு:-

(1) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்துதல்) ஆணை.

(2) 1977 ஆம் ஆண்டு பருப்புகள், சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் (சேமிப்புக் கட்டுப்பாடு) ஆணை.

(3) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக் காட்டி வைத்தலும் மற்றும் கணக்குகளைப் பராமரித்தலும்) ஆணை.

(4) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை.

(5) 1980 ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட், அதிவேக டீசல் (வழங்குதல் விநியோகத்தில் முறைகேடுகளைத் தவிர்த்தல்) ஆணை.

(6) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சர்க்கரை (வாணிபத்தை முறைப்படுத்தல்) ஆணை.

(7) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நெல் (எடுத்து செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.

(8) தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டையின் மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

(9) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நெல், அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.

(10) தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் (வர்த்தகத்தை முறைப்படுத்துதல்) ஆணை.

(11) 1993 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்குதல் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

(12) 1993-ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு உச்ச விலை நிர்ணயம்) ஆணை.

நுகர்பொருள் வழங்கல் துறைப் பணியாளர்கள், காவல் துறை குற்றப் புலனாய்வுத் துறையினர் (நுகர்பொருள் வழங்கல்) உதவியோடு இந்த ஆணைகளை செயல்படுத்துகின்றனர். இவர்கள் உணவுக் கலப்படம், கள்ளக்கடத்தல், பதுக்கல், கள்ளச்சந்தை முதலியவற்றைக் கண்டுபிடித்துத் தடுக்கின்றனர். மேற்காணும் முறைகேடுகளைக் களையவும், கட்டுப்பாட்டு ஆணைகளை தீவிரமாக செயல்படுத்தவும், மூன்று சிறப்புப் பிரிவு, இரண்டு கூடுதல் பிரிவு மற்றும் ஒரு நுண்ணறிவுப் பிரிவு மற்றும் ஈப்பு போன்ற தேவையான அடிப்படை வசதிகளுடன் ரூ. 25.58 இலட்சம் தொடர் மற்றும் ரூ. 21.95 இலட்சம் தொடரா செலவினத்தில் நுகர்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

1996-ம் ஆண்டில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டைச் செயல்படுத்தும் ஆணைகளின்கீழ் கைப்பற்றியப் பொருட்கள் குறித்த விவர அறிக்கையை அட்டவணை 4-ல் காணலாம்.





# அத்தியாயம்-5

## நுகர்வோர் பாதுகாப்பு

1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (1986-ஆம் ஆண்டு மத்தியச் சட்டம் 68) இயற்றப்பட்டதிலிருந்து நுகர்வோர் தங்கள் குறைகளை எளிதாகவும், விரைவாகவும் செலவின்றியும் தீர்த்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நுகர்வோர் நீதிமன்றங்களின் மூலமாக, அவர்களுக்குத் தக்க நிவாரணம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிவாரணங்கள் விரைவாகவும், செலவில்லாமலும் கிடைக்கப்பெறுகிறது. ஏனெனில், இம்மன்றங்களில் புகார் செய்வதற்கான வழிமுறை எளிமையாகவுள்ளது; கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை; மற்றும் தமது வழக்குகளை வாதிட வழக்குரைஞர்கள் நியமிக்க வேண்டியதில்லை. நுகர்வோர் நீதிமன்றத்தின் முன் ஓர் வழக்கைத் தொடுப்பதும் மிகவும் எளிதானதாகும். மேலும், குறைபாடுடைய பொருட்கள் பற்றியோ அல்லது தரமற்ற பணிகளைப் பற்றியோ தொடுக்கப்படும் நியாயமான புகாரானது சில செயல்முறை குறைபாடுகளினால் தள்ளுபடி செய்யப்படமாட்டாது என்பதோடு, அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறு, துன்புறுத்தல், மன உளைச்சல், வியாபார இழப்பு, இன்ன பிற நட்டங்களுக்குத் தகுந்த இழப்பீடு பெறும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது. இந்நீதிமன்றங்கள், சிவில் நீதிமன்றங்களைப் போன்று கடுமையான தொழில் நுட்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை. கீழ்வரும் மூன்று கட்டு அமைப்பு முறையானது (Three tier system) சாதாரண நுகர்வோரும், அவர்களுடைய குறைகள் தீர்க்கப்படுவதை உறுதி செய்ய வழிவகை செய்கிறது:-

1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுடில்லி.
2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், சென்னை.
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகள்

**1. தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், புதுடில்லி:-**

தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் என்கிற ஒரு தலைமை நீதித் துறை அமைப்பு, புதுடில்லியில் செயல்பட்டு வருகின்றது. ரூ. 20 இலட்சத்திற்கு மேற்பட்ட வழக்குகளில் மட்டுமே இதற்கு நேரடி அதிகார வரம்பு உள்ளது. இவ்வாணையம் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையங்களின் தீர்ப்புகளின் பேரில் மேல்முறையீடு அதிகாரமும் மறு ஆய்வு செய்யும் அதிகாரமும் உடையதாகும்.

## 2. மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்:

1989-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு நீதித் துறையைச் சேர்ந்த அமைப்பாகும். எந்த ஒரு நுகர்வோரும் இந்த ஆணையத்தின் முன் புகார் தாக்கல் செய்யலாம். ஆனால், பொருட்களின் விலை மதிப்பு அல்லது கோரப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 5 இலட்சத்திற்கு மேற்பட்டும், ரூ. 20 இலட்சத்திற்குக் குறைவாகவும் இருக்க வேண்டும். மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டு இயங்குகிறது. தவிரவும், இதில் இரு உறுப்பினர்களும் இருப்பர். அதில் ஒருவர் பெண் உறுப்பினர் ஆவார். நிருவாக தரப்பில், பதிவாளர் ஒருவர் உள்ளார். அவர் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் மற்றும் மாவட்ட அமைப்புகளின் நிருவாக விவகாரங்களைக் கவனிக்கின்ற துறைத் தலைவர் ஆவார். 1996-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு, முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் அட்டவணை 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 3. மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புக்கள்:

மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புக்கள் மாவட்ட அளவிலான நீதித்துறையைச் சார்ந்த மன்றங்கள் ஆகும். பொருட்களின் மதிப்பு அல்லது கோரப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ. 5 இலட்சத்திற்கு மேற்படாதிருந்தால், நுகர்வோர் இந்த அமைப்புகளில் புகார்கள் தாக்கல் செய்யலாம். ஒவ்வொரு மாவட்ட அமைப்புக்கும், ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் தலைவராக இருப்பார். மேலும், இரண்டு உறுப்பினர்கள் அதில் இருப்பர். அவர்களில் ஒருவர் பெண் உறுப்பினர் ஆவார்.

இம் மாநிலத்தில், 25 மாவட்ட நுகர்வோர் அமைப்புக்கள் இயங்கி வருகின்றன. புவியியலின் இயற்கை அமைப்பு முறையைக் கருத்திற்கொண்டும் நுகர்வோர்களின் குறைகளை உடனடியாகவும் எளிதாகவும் களையும் நோக்கத்துடனும், நீலகிரி மாவட்டத்திற்கென்றே தனியாகச் செயல்படக்கூடிய ஒரு தனி நுகர்வோர் அமைப்பினை ஏற்படுத்தும் செயற்குறிப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வமைப்பு 1997-98-ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும். 1996 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டு முடிக்கப்பட்ட வழக்குகளின் விவரங்கள் அட்டவணை 7-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



## நிதி உதவி:

நுகர்வோர் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல், அறைக்கலன்கள், சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்காக, மத்திய அரசு ஒருமுறை நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இந்த உதவித் தொகை, நான்கு சமத் தவணைகளில் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ், மாநில குறைதீர் ஆணையத்திற்கு ரூ. 50 இலட்சமும், ஒவ்வொரு மாவட்ட அமைப்புகளுக்கும் ரூ. 10 இலட்சமும் அளிக்கப்படுகிறது.

இதன்படி, மத்திய அரசு இதுவரையில், மேற்சொன்ன நிதியுதவி வகையில் இரண்டு தவணைகள் வழங்கியுள்ளது. இந்நிதி உதவியை, அரசு, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையப் பதிவாளருக்கு அனுப்பி, மாநில ஆணையம்/மாவட்ட அமைப்புகளுக்குத் தொகைகளைப் பிரித்து வழங்கும்படி கேட்டுக் கொண்டது. இத்தொகை, அடிப்படைத் தேவைகளான தட்டச்சுப்பொறி, நகல் எடுக்கும் எந்திரம் மற்றும் சட்டப்புத்தகங்கள் முதலானவற்றை ஒவ்வொரு மாவட்ட அமைப்புகளுக்கும் வழங்குவதற்குப் பயன்படுத்தியுள்ளது. மேலும் மத்திய அரசு ஒதுக்கப்பட உள்ள எஞ்சிய தவணைத் தொகை மாவட்ட அமைப்புக்களுக்கு நிரந்தரக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

## ஏனைய நடவடிக்கைகள்:

அரசு, நுகர்வோர் அமைப்புக்களின் செயற்பாடுகளைச் சரியான முறையில், முறைப்படுத்தவும் மற்றும் நுகர்வோர்களின் குறைகளைத் தீர்க்கவும் நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உகந்த அளவில் திருப்தி ஏற்படுத்தக்கூடிய வகையில், ஒருங்கிணைக்கப்படவும், தன்னார்வு நுகர்வோர் அமைப்புகளுடன் கலந்தாலோசித்து வருகிறது. மேற் சொன்னதற்கிணங்க, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவரான மாண்புமிகு நீதிபதி திரு. வி. பாலகிருஷ்ண இராடி அவர்கள் தலைமையில், அனைத்து மாவட்ட அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் 3-1-1997 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பல்வேறு கூறுகள் பற்றிய கருத்துக்கள் தெளிவுபடுத்தப்பட்டன. மேலும், நுகர்வோர் இயக்கங்களுக்கு ஊக்கமளிப்பதற்காக, பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன:—

[1997 மார்ச் 26

(அ) ஒவ்வோர் ஆண்டும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் சீரிய பணியாற்றும் நபர்களுக்கு மாநில அளவில் மூன்று பரிசுகள் (ரூ. 3,000, ரூ. 2,000. ரூ. 1,000) வழங்குதல்.

(ஆ) பள்ளிப் பாடத் திட்டத்தில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த பாடத்தைச் சேர்த்தல்.

(இ) தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் நுகர்வோர் கல்வி குறித்த திரைப்படங்கள், வீடியோ கேசட்டுகள் ஆகியவை தயாரித்தல்.

(ஈ) ஒவ்வோர் ஆண்டும் உலக நுகர்வோர் தினம் கொண்டாடுதல்.

(உ) அதிகாரிகள் மற்றும் அலுவலர் சார்பற்றவர்களைக் கொண்டு மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தல்.

**மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு:**

நுகர்வோரின் நன்மைகளையும் உரிமைகளையும் மேம்படுத்தவும் பாதுகாக்கவும். மாநில அரசு, 1987-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு என்ற ஆலோசனை அமைப்பை ஏற்படுத்தியது. இக்குழு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தி அமைக்கப்படுகிறது. உணவு அமைச்சர் இக்குழுவின் தலைவராவார். அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் வணிகம், தொழில், தன்னார்வ நுகர்வோர் நிறுவனங்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக சேவையில் ஈடுபட்டுள்ள மகளிர் போன்ற வாழ்வின் பல்வேறு துறைகளில் உள்ள அலுவல் சாரா உறுப்பினர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளனர்.



1997 மார்ச் 26]

## அத்தியாயம்-6

## தமிழ் நாட்டில் விலைவாசி நிலவரம்

கடந்த சில மாதங்களில் இன்றியமையாப் பொருட்களின் விலை ஏற்றம் அரசிற்குக் கவலை அளித்து வருகிறது. பருப்பு. எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் வறட்சி அல்லது புயலினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, வணிகப் பயிர்களுக்குப் பெருத்த அளவில் ஏற்பட்ட சேதம், குறைந்த அளவு இரயில்வே சரக்குப் பெட்டிகள் ஒதுக்கீடு மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்பட்ட பழுதுகள் காரணமாக தடைபட்ட போக்குவரத்து ஆகியவையே, இந்த நிலைமைக்கான முக்கிய காரணங்களாகக் குறிப்பிடலாம். இதைத் தவிர்த்து. இன்று நாம் காணும் விலையேற்றமானது பொதுவான பணவீக்கத்தைப் பொறுத்தே இருப்பதை அறியலாம். 1995-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து 1996-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் இடையில் ஏற்பட்ட விலை உயர்வு விழுக்காட்டை, 1996-ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் 1997-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கும் இடையில் ஏற்பட்ட விலை உயர்வின் விழுக்காட்டுடன் ஒப்பு நோக்கும்போது, பருப்பு வகைகள், கடலை எண்ணெய் மற்றும் நல்லெண்ணெய் ஆகியவைகளின் விலைகளின் உயர்வு 1996-ஆம் ஆண்டு மற்றும் 1997-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் குறைவாகவும் சில நேர்வுகளில் விலை குறைந்தும்தான் உள்ளது எனத் தெரிய வந்துள்ளது. புளி, தனியா, தேங்காய் எண்ணெய் போன்றவைகளைப் பொறுத்தவரையில், அவை உற்பத்தியாகும் இடங்களிலேயே விலை உயர்ந்திருப்பதால் அவற்றின் விலை உயர்வு தவிர்க்க முடியாததாயிற்று.

அரிசியைப் பொறுத்தவரையில், அண்மையில் தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஆந்திர மாநிலத்திலும் ஏற்பட்ட புயல், வெள்ளம் காரணமாக உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால். வழக்கமாக ஆந்திர மாநிலத்திலிருந்து நம் மாநிலத்தின் வெளிச் சந்தைக்கு முக்கியமாக நாம் காவிரி பாசன பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ள நிலையில், வெளி அங்காடியில் அரிசி விலையை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக எதிர்பார்த்த அளவிற்கு அரிசியின்வரத்து இல்லை. இருப்பினும், அரிசியின் விலை ஏற்றம் பற்றி அரசுக்கு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன், மொத்த வியாபாரிகளையும், அரிசி ஆலை

[1997 மார்ச் 26

உரிமையாளர்களையும் அரசு அழைத்து அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோசனைகளைக் கேட்டது. அதன் விளைவாக. வியாபாரிகள் அனைத்து ரக அரிசியின் விலையிலும் கிலோ ஒன்றிற்கு ரூ 2 குறைப்பதாக உறுதி அளித்தனர். அண்மையில் சம்பா அரிசி வரத் துவங்கியுள்ளதால். அரிசியின் விலை குறைந்து வருகிறது.

வெளிச் சந்தையில் இன்றியமையாப் பொருட்களின் விலைகளை மாநில அரசு. தொடர்ந்து கண்காணித்து வருகின்றது. அப்போதுதான் அப்பொருட்களின் விலைகளின் போக்கு அச்சுறுத்தும் அளவிற்கு அதிகரிக்கும் போது. தக்க நடவடிக்கை எடுக்க இயலும். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து, இன்றியமையாப் பொருட்களின் வெளிச்சந்தை விலைகளைப்பற்றிய வாராந்திர அறிக்கை பெறப்பட்டு, கணினியில் பதியப் பெற்று, மிக அதிக அளவில் விலை ஏற்றங்கள் காணும் போது. தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இன்றியமையாப் பொருட்கள், பொது விநியோக முறையின் மூலமாக வழங்கப்படுவதோடு. கூட்டுறவுச் சில்லறை விற்பனைக் கடைகளிலும் நியாயமான விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இது வெளிச்சந்தைகளில் விலைவாசி நிலவரங்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது.

இம்மாநிலத்தில், இன்றியமையாப் பொருட்களின் விலைகள் கணினி கட்டமைப்பு மூலமாகப் பதிவு செய்யப்படுகின்றன. அரசு ஒவ்வொரு வாரமும் 139 இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் கண்காணித்து விலைவாரி நிலைமையை மதிப்பீடு செய்கிறது. தேவையான போது. தேவையான இடங்களில் தீர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்றியமையாப் பொருட்களின் விலைகளை முறையாகக் கண்காணிக்கவும். பொருத்தமான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் அரசு. தலைமைச் செயலாளரைத் தலைவராகவும் கூட்டுறவு. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், நிதித் துறைச் செயலாளர் மற்றும் வேளாண்மைத் துறை செயலாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்துள்ளது.



1997 மார்ச் 26]

இன்றியமையாப் பொருட்களின் ஒட்டு மொத்த விலை உயர்வு என்பது தமிழ் நாட்டில் மட்டுமே காணப்படுகின்ற நிலைமை அல்ல. நாடு முழுவதும் கடினமானதொரு சூழ்நிலை நிலவுவதால். நாட்டின் ஒட்டுமொத்த நலனைக் கருத்திற்கொண்டு பருப்பு வகைகள். சமையல் எண்ணெய்கள் போன்ற கட்டுப்பாட்டில் உள்ள பொருட்களின் பயன்பாட்டில் சில ஒழுங்குமுறை இருக்க வேண்டும். வெளிச் சந்தை விலைகளைக் கட்டுப்படுத்த மாநில அரசிடம் சட்டபூர்வமான நிர்வாக அமைப்பு எதுவும் இல்லை. இன்றியமையாப் பொருட்களின் வெளிச் சந்தை விலைகள், அப்பொருட்களின் தேவை. வழங்கல் தொடர்பான அங்காடி நிலவரங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன. தேவை, பொது மக்களின் வாங்கும் சக்தியைப் பொறுத்து அமைகிறது. வழங்கல் நிலைமை, அங்காடிக்குப் பொருட்களின் வரத்து குறித்த பருவ நிலைகளைப் பொறுத்து அமைகிறது. விலைகளைக் கட்டுப்படுத்துவதானது ஏற்கனவே. மோசமான விளைச்சல், பயிர்கள் இழப்பு முதலிய காரணங்களால் ஓரளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்களை மேலும் பாதிக்கும் ஒரு சில பொருட்கள் மீது தற்காலிகக் கட்டுப்பாடு விதிப்பது பல்வேறு பிரிவுகளை வெவ்வேறு அளவுகளில் பாதிக்கும். இது வெவ்வேறு பகுதிகளில் ஒரு மனநிறைவின்மையை ஏற்படுத்தக்கூடும்.

இத்தகைய இன்றியமையாப் பொருட்களின் கொள்முதல் மற்றும் பற்றாக்குறைக் காலங்களில் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து பற்றாக்குறையாக உள்ள பகுதிகளுக்கு மாநிலம் விட்டு மாநிலம் கொண்டு செல்லுதல் ஆகியவை தொடர்பாக நாடு முழுவதற்குமென ஒரு கொள்கை இருக்க வேண்டும். தொடர்ந்து வரும் விலை உயர்வு பிரச்சினைக்கு, நாடு முழுமைக்குமென ஒரு நிலையான கொள்கை வகுப்பது தான் நிரந்தரத் தீர்வாக அமையும்.

[1997 மார்ச் 26

# அத்தியாயம் - 7

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், முழுவதும் மாநில அரசுக்கு சொந்தமான ஒரு நிறுவனமாகும். இக் கழகம், இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், செய்முறைப்படுத்தல், சேமித்து வைத்தல், விநியோகம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.30 கோடி ஆகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.27.85 கோடி ஆகும். 1972-73-ஆம் ஆண்டில் ரூ.12 கோடியாக இருந்த இக் கழகத்தின் சிறிய அளவிலான விற்றுமுதல் 1995-96 ஆம் ஆண்டில் ரூபாய் 1872 கோடியாக உயர்ந்தது.

அரசால் நியமிக்கப்பட்ட முதுநிலை அதிகாரிகளைக் கொண்ட ஓர் இயக்குநர்கள் குழு, இக்கழகத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பு வகிக்கிறது. தலைவர்-மேலாண்மை இயக்குநர் ஒருவர் இக்கழகத்திற்குத் தலைமை நிர்வாகியாக உள்ளார். நிர்வாக வசதிக்காகவும் அதிகாரத்தைப் பரவலாக்கவும் மாநிலம் முழுவதும் இக்கழகத்திற்கு 25 மண்டல அலுவலகங்கள் உள்ளன. 1-4-1997 முதல் ஒவ்வொரு வருவாய் மாவட்டத்துக்கும் ஒரு மண்டல அலுவலகம் என்ற வகையில், 29 மண்டலங்கள் ஏற்பட உள்ளன. ஒவ்வொரு மண்டல அலுவலகமும் ஒரு முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளரின் தலைமையின் கீழ் இயங்குகிறது. 1-4-1996 அன்றைய நிலவரப்படி, இக்கழகத்தில் 12,377 நிரந்தரப் பணியாளர்கள் இருந்தனர்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், காவிரி வடிநிலப் பகுதியில் நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக, அக்கழகத்தாலும், கூட்டுறவுத்துறையாலும் நடத்தப்படுகின்ற சில்லறை விற்பனைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறைக்கு இன்றியமையாப் பொருட்களை மொத்த விநியோகம் செய்வதற்கு, தமிழ்நாடு அரசின் தனி முகவரமைப்பாக செயல்படுகிறது. இக்கழகம் இனிவரும் காலங்களில் மொத்த விநியோகம் செய்யும் பணிகளில் மட்டுமே தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும். மேலும், இக்கழகம், மத்தியத் தொகுப்பிலிருந்து மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை, சர்க்கரை, சில வேளைகளில் பாமாயில் ஆகியவற்றையும் பெறுகிறது. மேலும், வெளிச்சந்தையில் அரிசி கொள்முதல் பணியினை அரசின் ஆணைகளுக்கேற்ப செயல்படுத்துகிறது.



1997 மார்ச் 26 ]

இக்கழகம், மாநிலம் முழுவதிலும் அமைந்துள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றையும் வழங்குகிறது. 1997-98 ஆம் நடப்பு நிதி ஆண்டில், இம்மையங்களுக்குக் கீழ்க்கண்ட அளவில் பொருட்கள் தேவைப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவையாவன:-

| | |
|---|---|
| அரிசி | 1,75,000 மெ.டன் |
| பருப்பு | 12,000 மெ.டன் |
| பாமாயில் | 2,000 மெ.டன் |
| சோயாமாவு | 12,000 மெ.டன் |
| மக்காச்சோள ரவை | 4,500 மெ.டன் |
| அயோடின் ஊட்டப்பட்ட உப்பு | 2,750 மெ.டன் |

இக்கழகம், காவல்துறை, சிறைத்துறை மற்றும் தீயணைப்புத் துறையைச் சேர்ந்த காவல்துறை ஆய்வாளர் பதவித் தரம் வரையுள்ள பணியாளர்களுக்குப் பொதுவிநியோக முறையின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையில் 50 சதவீத விலைக்கு அரிசி, சர்க்கரை, கோதுமை, கோதுமை தயாரிப்புப் பொருட்கள், சமையல் எண்ணெய், ஆகியவற்றையும் வழங்குகிறது. மேலும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறைகள் மற்றும் இதர அரசு நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற மாணவர் இல்லங்களுக்குக் கடன் அடிப்படையில் இன்றியமையாப் பொருட்களையும் வழங்குகிறது.

தேசிய சத்துணவுத் திட்டத்தின் கீழ், மத்திய அரசு ஆரம்பக் கல்வி நிலையிலான (1 முதல் 5 வரையிலான வகுப்புகள்) மதிய உணவுத்திட்டத்தை 1995-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாளிலிருந்து அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம், இம்மாநிலத்தில் 15 மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் ஒன்றுக்கு 3 கிலோ அரிசி/கோதுமை இலவசமாக, மத்திய அரசால், வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக, குவிண்டால் ஒன்றிற்கு ரூ.25 வீதம் போக்குவரத்து மற்றும் கையாளுகைச் செலவிற்காக இக் கழகத்திற்குச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் வழங்கப்படுகிறது.

[1997 மார்ச் 26

## வணிக நடவடிக்கைகள்

மளிகைச்சாமான்கள், ஒப்பனைப் பொருட்கள், சோடாபானங்கள். வெளிச்சந்தை அரிசி, சர்க்கரை ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், இக்கழகம் இம்மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் 48 அமுதம் பல்பொருள் அங்காடிகளை தற்போது நடத்தி வருகிறது. இந்த அமுதம் பல்பொருள் அங்காடிகளின் விற்பனை, 1996-97-ஆம் ஆண்டு (டிசம்பர் '96 வரை) ரூ.10.26 கோடியாகும். 1997-98-ஆம் ஆண்டில் மேற்சொன்ன பல்பொருள் அங்காடிகளின் ஆண்டுவிற்பனை ரூ. 15 கோடியாக இருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## கொள்முதல்

காவிரி வடிநிலப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் திட்டத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளதால் ஏற்கெனவே இங்கு இருந்த நேரடிக் கொள்முதல் மையங்களின் எண்ணிக்கை, 1996 குறுவையில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு, தற்போது உள்ள நேரடிக் கொள்முதல் மையங்களின் எண்ணிக்கை, மற்றும் 1-3-1997-ஆம் நாளன்றுள்ளபடி 1997-சம்பா கால அளவில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :-

| தொ. எண். | மாவட்டத்தின் பெயர் | குறுவை'96 | | சம்பா'97 | |
|---|---|---|---|---|---|
| | | நேரடிக் கொள்முதல் மையங்கள் | கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு (மெ.டன்) | 1.3.97-ஆம் நாள் நிலவரப் படி செயல் படும் நேரடிக் கொள் முதல் நிலையங் களின் எண்ணிக் கை | 1.3.97-ஆம் நாள் நிலவரப் படி கொள் முதல் செய்யப் பட்ட நெல்லின் அளவு (மெ.டன்) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | தஞ்சாவூர் | 68 | 43,250 | 302 | 2,33,087 |
| 2. | நாகை காயிதே மில்லத் | 84 | 59,525 | 175 | 2,15,650 |
| 3. | தென்னாற்காடு வள்ளலார் | 23 | 6,664 | 90 | 31,230 |
| 4. | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் | 10 | 724 | 34 | 801 |



1997 மார்ச் 26 ]

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 5. | புதுக்கோட்டை | 5 | 451 | 37 | 18,838 |
| 6. | கரூர் தீரன் சின்னமலை | 1 | 3 | 11 | 565 |
| 7. | பெரம்பலூர் திருவள்ளுவர் | 7 | 749 | 17 | 1,716 |
| 8. | திருவாரூர் ஏ.டி.பன்னீர் செல்வம் | - | - | 237 | 2,75,754 |
| | மொத்தம் | **198** | **1,11,366** | **903** | **7,77,641** |

ஒவ்வோராண்டும் நெல் கொள்முதல் செய்யப்படும் காலங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களில் பட்டியல் எழுத்தர், உதவியாளர் மற்றும் காவலர் ஆகியோர் தற்காலிகமாகப் பணியமர்த்தப்படுகின்றனர். இவர்களது ஊதியம், தொழிற்தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன்படி கழக நிர்வாகம் மற்றும் ஊழியர் சங்கங்களுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டின்படி நிர்ணயிக்கப்படுகிறது. இவ்வாண்டு சம்பா பருவத்தில் சுமார் 3466 பேர் இவ்வாறு பணியமர்த்தப்பட்டுள்ளனர். கழக நிர்வாகத்திற்கும் ஊழியர் சங்கங்களுக்கும் 19-11-1996 அன்று நடந்த பேச்சு வார்த்தையின் அடிப்படையில் இவர்களது ஊதியம் கீழ்க்கண்டவாறு திருத்தியமைக்கப்பட்டது:—

| | உடன்பாட்டிற்கு முன்பு பெற்ற தொகுப்பூதியம் | தற்போதைய ஊதியம் |
|---|---|---|
| 1. பட்டியல் எழுத்தர் | ரூ. 750 | ரூ. 750 + அகவிலைப்படி |
| 2. உதவியாளர் | ரூ. 650 | ரூ. 730 + அகவிலைப்படி |
| 3. காவலர் | ரூ. 550 | ரூ. 710 + அகவிலைப்படி |

நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆரம்பித்த காலத்திலிருந்து தொகுப்பூதிய அடிப்படையில் குறைந்தபட்ச ஊதியத்தைவிடக் குறைவாக ஊதியம் பெற்றுக்கொண்டிருந்த இப்பணியாளர்கள் முதன்முறையாக குறைந்தபட்ச ஊதியத்திற்கு அதிகமாக ஊதியம் பெறுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திருத்திய ஊதியம் செப்டம்பர் 1994 முதல் பின்தேதியிட்டு வழங்கப்பட்டது. சுமை தூக்கும் தொழிலாளர்களின் கூலியும் தக்க அளவில் உயர்த்தப்பட்டது.

## சேமிப்பு வசதிகளை அதிகரித்தல்

இன்றியமையா மற்றும் ஏனைய பொருட்களைச் சேமித்து விநியோகிப்பதற்காக, இக்கழகம் 118 இடங்களில் 6,05,470 மெட்ரிக் டன் சேமிப்புத் திறன் கொண்ட கிடங்குகளை உருவாக்கியுள்ளது. 11,500 மெட்ரிக் டன் கொள்ளளவு திறன் கொண்ட 8 கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன. 1996-97-ஆம் ஆண்டில், ஊத்துக்கோட்டை, மணப்பாறை, வி.கே.புதூர் மற்றும் கடலாடி ஆகிய இடங்களில் 4 கிடங்குகளை, ரூ.100 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்ட அரசு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இதைப் போன்றே 1997-98 ஆம் ஆண்டில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் 3 கிடங்குகளைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இக்கழகம், தனது பொருட்களைச் சேமித்துவைப்பதற்காக, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகள் மற்றும் மத்திய சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகளையும், தேவைப்படும்போது வாடகைக்கு எடுத்துக் கொள்கிறது. ஒவ்வொரு வட்டத்திலும் தனது சொந்தக் கிடங்கை நிறுவுவதே இக்கழகத்தின் குறிக்கோளாகும். இதற்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு விரைவில் செயல்படுத்தப்படும்.

## நவீன அரிசி ஆலைகள்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆண்டு ஒன்றுக்கு, மொத்தம் 4.36 இலட்சம் டன் அரைவைத்திறனுடன் கூடிய 23 நவீன அரிசி ஆலைகளை நடத்தி வருகிறது.மேலும், சுமார் ரூ.2.78 கோடி மதிப்பீட்டுச் செலவில் கள்ளக்குறிச்சி, ஆக்கூர், திருவாரூர் மற்றும் சிதம்பரத்தில் உள்ள நவீன அரிசி ஆலைகளை மேலும் நவீனப்படுத்துதல் தொடர்பான செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது. இதன் மூலம், அவற்றின் அரைவைத்திறனை அதிகரிப்பதுடன் மாசுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## நிதிநிலை

இககழகத்தின் வணிக நடவடிக்கைகள் பாரத ஸ்டேட் வங்கி மூலமாக பாரத ரிசர்வ் வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் நிதியுதவி பெறும் அடிப்படையில் நடைபெற்று வருகின்றன. அரசின் கொள்கையினை நிறைவேற்றுமுகமாக பொது விநியோகத் திட்டத்திற்கும் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்திற்கும் வழங்கப்படும் அரிசியின் விலை, அடக்க விலையை விடக் குறைவாக இருப்பதால், இக்கழகத்திற்கு ஏற்படும் இழப்பை அரசு முறையாக



ஈடுசெய்கிறது. 1994-95-ஆம் ஆண்டில் ரூ.440.00 கோடியாக இருந்த அரசின் உதவித்தொகை 1996-97-ஆம் ஆண்டில் ரூ.1000 கோடியாக உயர்ந்துள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் அரசு உதவித் தொகை சுமார் ரூ.1200 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## போனஸ்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் 'சி' மற்றும் 'டி' வகை பணியாளர்களுக்கு 1995-96-ஆம் ஆண்டுக்கு போனஸாக 8.33 சதவீதமும், கருணைத் தொகையாக 9.67 சதவீதமும் அனுமதிக்கப்பட்டது. மேலும் 'ஏ' மற்றும் 'பி' வகை பணியாளர்களுக்குச் சிறப்பு தற்காலிக போனஸாக ரூ. 725-ம் தற்காலிக பண்டிகை முன்பணமாக ரூ.1,775-ம் வழங்கப்பட்டது.

[1997 மார்ச் 26

# அத்தியாயம் - 8

## தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்

மத்திய அரசின் சட்டத்தின் கீழ் 1957-ல் அமைக்கப்பட்டு, இம்மாநிலத்தில் இயங்கி வருகின்ற இரண்டு சட்டப்படிக்கான நிறுவனங்களுள் ஒன்றான, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம், 1958-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மாநில அரசு மற்றும் புதுடில்லியில் உள்ள மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் இரண்டிற்கும் சொந்தமான இந்நிறுவனத்தின் பங்கு மூலதனம் 50:50 என்ற விகிதத்தின் அடிப்படையில் முதலீடு செய்யப்படுகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.800 இலட்சமாகும். இதில் இம்மாநில அரசும், புதுடில்லியிலுள்ள மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனமும் இதுவரை தலா ரூ.380.50 இலட்சம் செலுத்தியுள்ளது. தற்போதைய செலுத்தப்பட்ட மொத்த பங்கு மூலதனம் ரூ.761.00 இலட்சமாகும்.

வேளாண்மை உற்பத்திப் பொருட்களுக்கு அறிவியல் முறையிலான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும், இந்நிறுவனத்தின் கிடங்குகளில் உற்பத்திப் பொருட்களைச் சேமித்து வைப்பவர்களுக்குக் குறிப்பாக தொடக்க உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் சேமித்து வைக்கும் பொருட்களின் பேரில் வங்கிகளிலிருந்து கடன் வசதிகள் பெற்றுத் தருவதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்காக இந்நிறுவனம், இம்மாநிலத்தில் பொருத்தமான இடங்களில் மனைகளை வாங்கி, கிடங்குகளையும், சேமிப்புக் கிடங்குகளையும் கட்டுகிறது. பொதுநலனைக் கருத்தில் கொண்டு, வியாபார நோக்கத்தில், இந்நிறுவனம் நடைபெறவேண்டும் என மத்தியச் சட்டத்தில், அதாவது 1962-ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு நிறுவன சட்டம் (மத்திய சட்டம் 58/1962-ல்) கூறப்பட்டுள்ளதால், தனது வருவாயை அதிகரிக்கவும், கிடங்குகளின் பயனீட்டளவை அதிகரிக்கவும் அண்மைக் காலங்களில் அது தன் நடவடிக்கைகளைப் பல்திறப்படுத்தியுள்ளது.

இந்நிறுவனம், தற்போது 62 இடங்களில் மொத்தம் 6,21,583 மெட்ரிக் டன் கொள்ளளவுள்ள சேமிப்பு கிடங்குகளை நடத்தி வருகிறது. இதில் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 23,373 மெ.டன் கொள்ளளவுள்ள கிடங்குகளும் அடங்கும். 1995-96-ஆம் ஆண்டில் சராசரி கிடங்கு



1997 மார்ச் 26 ]

பயனீட்டளவு 78 சதவீதமாகும். இந்நிறுவனம் தனது பல்வேறுபட்ட வாடிக்கையாளர்களான அரசு முகவரமைப்புகள், உர உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்கள் போன்ற உற்பத்திப் பொருளைச் சேமித்து வைக்கின்ற பல்வேறு தரப்பினருக்குத் தனது பணிகளை ஆற்றி வருகிறது. புதிய வாடிக்கையாளர்களான தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் அச்சுக் காகித நிறுவனம், ஹிந்துஸ்தான் காகித கழகம், இந்திய ரேயான் மற்றும் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் மற்றும் இந்தியா சிமெண்ட் கம்பெனி ஆகியவையும் இந்நிறுவனத்தின் சேமிப்புக் கிடங்குகளை சரக்குகளைச் சேமித்து வைப்பதற்காக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

1994-95-ஆம் ஆண்டில், ரூ.678.83 இலட்சமாக இருந்த இந்நிறுவனத்தின் மொத்த வருவாய், 1995-96-ஆம் ஆண்டில் ரூ.771.94 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதே கால அளவில் ரூ.187.94 இலட்சமாக இருந்த ஆதாயம் ரூ.204.27 இலட்சமாக உயர்ந்துள்ளது. ஆயினும், முந்தைய ஆண்டுகளுக்கான தேய்மானம், ஊதியக்கொடை மற்றும் சொத்துவரி முதலியவற்றிற்கு ஒதுக்கீடு செய்ததால், 1994-95-ஆம் ஆண்டில் ரூ.165.53 இலட்சமாக இருந்த நிகர லாபம் 1995-96-ல் ரூ. 102.56 ஆகக் குறைந்துள்ளது. எனவே, இந்நிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு முந்தைய ஆண்டில் வழங்கியதைவிட 0.5 விழுக்காடு குறைத்து, 3 விழுக்காடு ஆதாயப்பங்கினை அறிவித்துள்ளது.

1994-ஆம் ஆண்டிற்கும். 1999-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட கால அளவில் 16 மையங்களில் மொத்தம் ரூபாய் 650 இலட்சம் செலவில், கூடுதலாக 50,000 மெட்ரிக் டன் சேமிப்பு கொள்ளளவு திறன் வசதியை ஏற்படுத்துவதற்காக அரசின் அனுமதி பெற்ற கட்டுமான பணியினை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதுவரை மொத்தம் 34,000 மெ.டன் கொள்ளளவு திறன் கொண்ட சேமிப்பு கிடங்குகளை மீளவிட்டான் (13,600 மெ.டன்) கோபிச்செட்டிபாளையம் (6,800 மெ.டன்) தூத்துக்குடி (6,800 மெ.டன்), திருமங்கலம் (3,400 மெ.டன்) மற்றும் சேலம் சந்திப்பு (3,400 மெ.டன்) ஆகிய இடங்களில் கட்டி முடித்துள்ளது. 1997-98-ஆம் ஆண்டுகளில் இந்நிறுவனம் மேலும் 6,800 மெ.டன் கொள்ளளவு திறன் கொண்ட சேமிப்பு கிடங்குகளைக் கட்ட உத்தேசித்துள்ளது.

இந்நிறுவனம் சேமிப்பு கிடங்கு வசதிகளை அளிப்பதோடு பலதரப்பட்ட வாடிக்கையாளர்களுக்குக் கரையான் மற்றும் பூச்சிகளை அழிப்பதற்காக மருந்து அடிக்கும் பணிகளையும் ஆற்றி வருகிறது.

[1997 மார்ச் 26

## அத்தியாயம் - 9

## பொது

உணவு தானியங்களின் உற்பத்தி பெருகும்போதும், அவை தாராளமாக கிடைக்கும்போதும், அரிசி மற்றும் பிற உணவுத் தானியங்கள் நியாயமான விலையில் எளிதாக அனைவருக்கும் கிடைக்கும்போதும், உணவு தானியங்கள் மீது கட்டுப்பாடுகள் தேவையில்லை என்பதே அரசின் கொள்கையாகும். ஆனால், அத்தகைய ஒரு வாய்ப்பான நிலையினை எட்டும் வரையில், விலை உயர்வையும் நியாயமான விலையில் உணவு தானியங்கள் கிடைப்பதற்கு ஏற்படும் தடைகளையும் அரசால் மௌனமாக பார்த்துக் கொண்டு இருக்க முடியாது. இந்தக் காரணத்தினால்தான், காவிரி பாசன பகுதிகளில் 1996 குறுவையிலும், 1997 சம்பாவிலும் ஏகபோகக் கொள்முதல் மீண்டும் கொண்டு வரப்பட்டது. இந்தக் கட்டுப்பாடுகள் மக்களுக்கு எந்தவிதத் தொல்லையுமின்றி, அதே நேரத்தில் திறமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதற்காக உணவுத் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. மேலும் மத்திய அரசின் வறியோர் நலன் காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்படி, ஏழை எளிய மக்கள் மற்றும் பொது விநியோகத் திட்டத்தை நம்பி இருக்கும் மக்கள் ஆகியோருக்கு நலன் பயக்கும் வண்ணம், மூன்று விதமான குடும்ப அட்டைகள் வழங்கலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. அறிவு சார்ந்த பொதுமக்கள் இந்த நிலையினை நன்கறிந்து கொள்முதலை முடிந்தவரை உயர்த்துவதற்கும் மற்றும் பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பாக நடத்துவதற்கும் இந்த அரசு எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளை முழுமனதுடன் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எந்தவித ஐயப்பாடுமில்லை.



1997 மார்ச் 26]

### அட்டவணை - 1

### இன்றியமையாப் பொருட்களின் தற்போதைய விநியோக அளவுகள்

| பண்டங்களின் பெயர் (1) | விலை கிலோ/ லிட்டருக்கு (2) | விநியோக அளவுகள் (3) | கால அளவு (4) |
|---|---|---|---|
| 1. அரிசி<br>மிக சன்னரகம்<br>சன்னரகம்<br>சாதாரண ரகம் | ரூ.<br>3.75<br>3.75<br>2.00<br>(1-3-97 லிருந்து) | மாதம் ஒன்றுக்கு பெரியவர் ஒருவருக்கு தலா 4 கிலோ மற்றும் சிறுவருக்கு தலா 2 கிலோ என்ற அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 20 கிலோ அரிசி | ஒரே தவணையில் அல்லது குடும்ப அட்டைதாரர் விருப்பப்படி |
| 2. கோதுமை | ரூ. 4.50 | குடும்ப அட்டை மாதம் ஒன்றுக்கு சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் 10 கிலோ இதர பகுதிகளில் 5 கிலோ | ஒரே தவணையில் அல்லது குடும்ப அட்டை தாரர் விருப்பப்படி |
| 3. சர்க்கரை | ரூ. 10.50 (10.2.97 முதல்) | தலா 500 கிராம் என்ற விகிதத்தில் குடும்ப அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 2 கிலோவுக்கு மிகாமல் | ஒரே தவணையில் |
| 4. பாமாலின் எண்ணெய் | ரூ. 29/-(உதிரி)<br>ரூ. 32/-(பையில் அடைக்கப்பட்டது) | மத்திய அரசின் ஒதுக்கீடு மாதா மாதம் பெரிதும் வேறுபடுவதால் விநியோக அலகுகள் இருப்பு அளவைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றன. | ஒரே தவணையில் |
| 5. மண்ணெண்ணெய் (எண்ணெய் எடுக்கப்பட வேண்டிய இடத்திலிருந்து உள்ள தூரத்தை பொறுத்து) | லிட்டர் ஒன்றுக்கு விலை ரூ.2.80 லிருந்து ரூ.3.10 வரை | சமையல் எரிவாயு இணைப்பின் அடிப்படையில் | இரு தவணைகளில் வழங்கப்படுகிறது (15 நாட்களுக்கு ஒருமுறை) |

[1997 மார்ச் 26

## 1-10-1993 முதல் அமுலில் உள்ள மாற்றியமைக்கப்பட்ட மண்ணெண்ணெய் விநியோக அளவுகள் சமையல் எரிவாயு உள்ளவர்களுக்கு

| | சமையல் எரிவாயு வைத்திருக்காத குடும்ப அட்டைதாரர்கள் (1) | ஒரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டைதாரர்கள் (2) | இரு சமையல் எரிவாயு உருளை வைத்திருக்கும் குடும்ப அட்டைதாரர்கள் (3) |
|---|---|---|---|
| | | (லிட்டர்கள்) | |
| சென்னை மாநகரம் மற்றும் மாவட்ட தலைநகரங்கள் | 10 | 5 | 3 |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 5 | 3 |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 5 | 3 |
| கிராமப்புறங்கள் | 3 | 3 | 3 |
| நீலகிரி மாவட்டம் | | | |
| தலைநகரம்/நகராட்சிகள் | 15 | 10 | 8 |
| பேரூராட்சிகள் | 10 | 5 | 5 |
| கிராமப் பஞ்சாயத்துக்கள் | 5 | 5 | 5 |
| கொடைக்கானல் மற்றும் ஏற்காடு வட்டங்கள் பேரூராட்சிகள் மற்றும் நகரியங்கள் | 10 | 5 | 3 |
| கிராம பஞ்சாயத்துகள் | 5 | 5 | 5 |
| சிறப்பு நகராட்சி பகுதிகள் | 10 | 5 | 3 |



1997 மார்ச் 26 ]

## அட்டவணை 2

### 1981 முதல் கடைப்பிடிக்கப்பட்ட கொள்முதல் முறை பற்றிய விவரங்கள்

| வ.எண். (1) | காலம் (2) | நெல்/அரிசி கொள்முதல் முறை (3) |
|---|---|---|
| 1. | 20-1-81 முதல் 30-9-81 வரை | 40% வர்த்தக லெவி மாநிலம் முழுவதும். |
| 2. | 1-10-81 முதல் 21-1-83 வரை | 50% வர்த்தக லெவி மாநிலம் முழுவதும். |
| 3. | 22-1-83 முதல் 31-3-84 வரை | (1) தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் மற்றும் தென் ஆற்காடு, திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சில வட்டங்களில் ஏகபோகக் கொள்முதல்.<br>(2) ஏகபோக கொள்முதல் பகுதி தவிர பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| 4. | 1-4-84 முதல் 31-10-85 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 5. | 1-11-85 முதல் 30-4-87 வரை | (1) தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும் மற்றும் திருச்சி மாவட்டத்தில் 6 வட்டங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் 3 வட்டங்கள் மற்றும் தென் ஆற்காடு மாவட்டத்தில் 2 வட்டங்களில் ஏகபோக கொள்முதல்.<br>(2) மாநிலத்தின் பிற பகுதிகள்/வட்டங்களில் 50% வர்த்தக லெவி. |
| 6. | 1-5-87 முதல் 15-9-87 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 7. | 16-9-87 முதல் 31-7-88 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல்.<br>(2) மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| 8. | 1-8-88 முதல் 14-9-88 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. | 15-9-88 முதல் 30-6-89 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| | | (2) மாநிலத்தில் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| 10. | 1-7-89 முதல் 31-8-89 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 11. | 1-9-89 முதல் 15-12-89 வரை) | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல். |
| | | (2) மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| | | (3)30% வர்த்தக லெவி (8-10-89 முதல் 7-2-90 வரை |
| 12. | 16-12-89 முதல் 30-6-91 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல |
| | | (2) மாநிலத்தில் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| 13. | 1-7-91 முதல் 14-9-91 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 14. | 15-9-91 முதல் 30-4-93 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் |
| | | (2) மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| | | (3) 29-1-93 முதல் 50% வர்த்தக லெவி நிறுத்தி வைக்கப்பட்டது. |
| | | (4) 1-5-93 முதல் ஏகபோக கொள் முதல் முறை கைவிடப்பட்டது. |
| | | (5) 18-8-92 முதல் தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை 1984-ன் 4ஏ பகுதியின்படி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் நெல்/அரிசிக்கு 100% லெவி அமுல் படுத்தப்பட்டது. |
| | | (6) குறுவை 93 (1-9-93) முதல் இணைக் கொள்முதல் முறை. |
| 15. | 15-9-96 முதல் | காவிரி பாசன பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல். |



**அ**

**னை விலை, வருடாந்தர அரிசி எடுப்பு மற்றும் வழங்கப்பட்ட மான்யம்.**

| திட்டத்தில் ன விலை. (கிகச்சன் | குடும்ப ட்டைகளின் ண்ணிக்கை இலட்சத்தில்.) | 1976 முதல் தொடங்கி காலண்டர் வருடத்திற்கு பொது விநியோகத் திட்டத்தில் அரிசியின் எடுப்பு (இலட்சம் டன்னில்.) | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப்பட்ட மொத்த மானியத் தொகை (கோடி ரூபாயில்.) |
|---|---|---|---|
| 2. (11-3- முத அமுல் உள்ளா | .. | 6.23 | மான்யம் வழங்கப்படவில்லை (வழிவகை முன்பணம் மட்டுமே வழங்கப்பட்டது) |
| 2. | .. | 4.28 | .. |
| 2. | .. | 0.93 | 4.20 |
| 2. | 6.00 | 1.49 | 3.95 |
| | 8.98 | 1.35 | 1.81 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. | 15-9-88 முதல் 30-6-89 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் (2) மாநிலத்தில் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி |
| 10. | 1-7-89 முதல் 31-8-89 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 11. | 1-9-89 முதல் 15-12-89 வரை) | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல். (2) மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. (3) 30% வர்த்தக லெவி (8-10-89 முதல் 7-2-90 வரை |
| 12. | 16-12-89 முதல் 30-6-91 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல (2) மாநிலத்தில் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. |
| 13. | 1-7-91 முதல் 14-9-91 வரை | மாநிலம் முழுவதும் 50% வர்த்தக லெவி. |
| 14. | 15-9-91 முதல் 30-4-93 வரை | (1) காவிரி பாசனப் பகுதிகளில் ஏகபோக கொள்முதல் (2) மாநிலத்தின் பிற பகுதிகளில் 50% வர்த்தக லெவி. (3) 29-1-93 முதல் 50% வர்த்தக லெவி நிறுத்தி வைக்கப்பட்டது. (4) 1-5-93 முதல் ஏகபோக கொள் முதல் முறை கைவிடப்பட்டது. (5) 18-8-92 முதல் தமிழ்நாடு நெல் மற்றும் அரிசி கொள்முதல் (லெவி) ஆணை 1984-ன் 4ஏ பகுதியின்படி வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லும் நெல்/அரிசிக்கு 100% லெவி அமுல் படுத்தப்பட்டது. (6) குறுவை 93 (1-9-93) முதல் இணைக் கொள்முதல் முறை. |
| 15. | 15-9-96 முதல் | காவிரி பாசன பகுதிகளில் ஏகபோகக் கொள்முதல். |





1996 ஆம் ஆண்டின்கீழ் நுகர் பொருள் வழங்கல் குற்றப்

| 1996 மாதம் | ...பு | மற்றவை மதிப்பு ரூ. | மொத்தம் மதிப்பு ரூ | கைது செய்யப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 2 | 8,240 | 15,90,511 | 26 |
| பிப்ரவரி | 5 | 28,646 | 9,72,119 | 25 |
| மார்ச் | 6 | 72,645 | 18,83,663 | 39 |
| ஏப்ரல் | 4 | 68,905 | 17,55,950 | 23 |
| மே | 0 | 51,080 | 19,84,564 | 42 |
| ஜூன் | 8 | 48,415 | 27,12,314 | 66 |
| ஜூலை | 0 | 2,36,745 | 32,64,535 | 100 |
| ஆகஸ்ட் | 1 | 5,01,355 | 34,07,973 | 105 |
| செப்டம்பர் | 7 | 8,77,015 | 41,14,828 | 100 |
| அக்டோபர் | 7 | 4,87,497 | 31,54,486 | 81 |
| நவம்பர் | 0 | 6,82,060 | 39,82,042 | 78 |
| டிசம்பர் | 7 | 4,66,694 | 36,56,344 | 146 |
| மொத்தம் | 7 | 35,29,297 | 3,24,79,329 | 831 |

அ

னை விலை, வருடாந்தர அரிசி எடுப்பு மற்றும் வழங்கப்பட்ட மான்யம்.

| திட்டத்தில் ன விலை. (கிகச்சன்) | குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) | 1976 முதல் தொடங்கி காலண்டர் வருடத்திற்கு பொது விநியோகத் திட்டத்தில் அரிசியின் எடுப்பு (இலட்சம் டன்னில்.) | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப்பட்ட மொத்த மானியத் தொகை (கோடி ரூபாயில்.) |
|---|---|---|---|
| 2 (11-3- முத அமுல் உள்ளது | .. | 6.23 | மான்யம் வழங்கப்படவில்லை (வழிவகை முன்பணம் மட்டுமே வழங்கப்பட்டது) |
| 2 | .. | 4.28 | .. |
| 2 | .. | 0.93 | 4.20 |
| 2 | 6.00 | 1.49 | 3.95 |
| | 8.98 | 1.35 | 1.81 |



**1996 ஆம் ஆண்டின்கீழ் நுகர் பொருள் வழங்கல் குற்றப்**

| 1996 மாதம் | ப்பு | மற்றவை மதிப்பு ரூ. | மொத்தம் மதிப்பு ரூ | கைது செய்யப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 2 | 8,240 | 15,90,511 | 26 |
| பிப்ரவரி | 5 | 28,646 | 9,72,119 | 25 |
| மார்ச் | 6 | 72,645 | 18,83,663 | 39 |
| ஏப்ரல் | 4 | 68,905 | 17,55,950 | 23 |
| மே | 0 | 51,080 | 19,84,564 | 42 |
| ஜூன் | 8 | 48,415 | 27,12,314 | 66 |
| ஜூலை | 0 | 2,36,745 | 32,64,535 | 100 |
| ஆகஸ்ட் | 1 | 5,01,355 | 34,07,973 | 105 |
| செப்டம்பர் | 7 | 8,77,015 | 41,14,828 | 100 |
| அக்டோபர் | 7 | 4,87,497 | 31,54,486 | 81 |
| நவம்பர் | 0 | 6,82,060 | 39,82,042 | 78 |
| டிசம்பர் | 7 | 4,66,694 | 36,56,344 | 146 |
| மொத்தம் | 7 | 35,29,297 | 3,24,79,329 | 831 |

## அட்டவணை 5

1995-96-ஆம் ஆண்டுகளில் நுகர்வு செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் விவரங்கள் (டன்களில்)

| மாதம் | அரிசி | | கோதுமை | | சர்க்கரை | | பாமாலின் | | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 |
| ஜனவரி | 124839 | 198050 | 7661 | 9604 | 22762 | 23585 | 1766 | 246 | 70394 | 71391 |
| பிப்ரவரி | 108981 | 187020 | 8241 | 10079 | 22395 | 22857 | 583 | 246 | 70359 | 69907 |
| மார்ச் | 96316 | 192201 | 8292 | 9938 | 22173 | 23721 | 72 | .. | 68550 | 70834 |
| ஏப்ரல் | 111851 | 195059 | 7916 | 8882 | 22384 | 23894 | .. | 596 | 68644 | 71973 |
| மே | 122278 | 195194 | 8157 | 8741 | 22558 | 23404 | 1 | 530 | 69296 | 71030 |
| ஜூன் | 128153 | 186334 | 8217 | 10163 | 22565 | 23793 | .. | 1009 | 70052 | 72471 |
| ஜூலை | 135090 | 201523 | 9748 | 11227 | 22643 | 23873 | .. | 1027 | 70664 | 71589 |
| ஆகஸ்ட் | 137773 | 208063 | 10197 | 11174 | 22443 | 23937 | 941 | 517 | 68759 | 71895 |
| செப்டம்பர் | 137179 | 205994 | 9954 | 11418 | 23337 | 23904 | 875 | 321 | 70636 | 71895 |
| அக்டோபர் | 134209 | 218659 | 9120 | 11101 | 32924 | 29676 | 753 | 441 | 70994 | 72685 |
| நவம்பர் | 135215 | 210971 | 10389 | 10315 | 22571 | 29436 | 81 | 563 | 70113 | 72814 |
| டிசம்பர் | 132060 | 213898 | 10507 | 11688 | 21818 | 23041 | 414 | 314 | 69870 | 73185 |
| மொத்தம் | 1503944 | 2412966 | 108399 | 124330 | 28063 | 295121 | 5486 | 5783 | 838331 | 860890 |

## அட்டவணை 6

**சென்னை மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையத்தில் 1996 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைத் தெரிவிக்கிற விவர அறிக்கை**

| மாதம் | | மேல்முறையீடு மனு | | | அசல் மனு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தாக்கல் செயயப் பட்டவை | முந்தைய ஆண்டு நிலுவை உட்பட தீர்ப்பு வழங்கப் பட்டவை | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு எதிராக | தாக்கல் செய்யப் பட்டவை | முந்தைய ஆண்டு நிலுவை உட்பட தீர்ப்பு வழங்கப் பட்டவை | நுகர்வோருக்கு சாதகமாக | நுகர்வோருக்கு எதிராக |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| ஜனவரி | 143 | 55 | 23 | 32 | 35 | 17 | 10 | 7 |
| பிப்ரவரி | 127 | 81 | 54 | 27 | 14 | 12 | 5 | 7 |
| மார்ச் | 110 | 49 | 16 | 33 | 17 | 7 | 2 | 5 |
| ஏப்ரல் | 101 | 57 | 32 | 25 | 21 | 8 | 4 | 4 |
| மே | 95 | 55 | 36 | 19 | 15 | 10 | 1 | 9 |
| ஜுன் | 82 | 49 | 9 | 40 | 18 | 4 | 1 | 3 |
| ஜுலை | 278 | 161 | 77 | 84 | 54 | 22 | 6 | 16 |
| ஆகஸ்ட் | 110 | 46 | 17 | 29 | 18 | 8 | 1 | 7 |
| செப்டம்பர் | 90 | 38 | 11 | 17 | 17 | 16 | 4 | 8 |
| அக்டோபர் | 90 | 73 | 11 | 53 | 25 | 11 | 1 | 10 |
| நவம்பர் | 100 | 46 | 3 | 38 | 18 | 6 | .. | 1 |
| டிசம்பர் | 136 | 60 | 15 | 45 | 11 | 13 | 1 | 3 |
| **மொத்தம்** | **1462** | **770*** | **304** | **442** | **263** | **134** | **36** | **80** |

*சட்டக் குறைபாடுகள் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளும் இதில் அடங்கும்.



## அட்டவணை 7

**மாநில நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் 1996ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைத் தெரிவிக்கின்ற விவர அறிக்கை**

| மாதம் | தொடக்கத்தில் இருந்த நிலுவை | தாக்கல் செய்யப் பட்ட நிலைவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்ட வழக்குகள் | எஞ்சியுள்ள வழக்குகள் | நுகர் வோருக்குச் சாதகமாக முடிவானவை | நுகர் வோருக்கு எதிராக முடிவானவை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| ஜனவரி | 6732 | 315 | 7047 | 352 | 6695 | 154 | 109 |
| பிப்ரவரி | 6695 | 384 | 7079 | 527 | 6552 | 271 | 144 |
| மார்ச் | 6552 | 359 | 6911 | 568 | 6343 | 259 | 172 |
| ஏப்ரல் | 6300 | 390 | 6690 | 509 | 6181 | 228 | 165 |
| மே | 6181 | 270 | 6451 | 478 | 5973 | 200 | 177 |
| ஜுன் | 5973 | 398 | 6371 | 553 | 5818 | 248 | 163 |
| ஜுலை | 5808 | 497 | 6305 | 893 | 5412 | 420 | 262 |
| ஆகஸ்ட் | 5412 | 325 | 5737 | 640 | 5097 | 3141 | 29 |
| செப்டம்பர் | 5097 | 381 | 5478 | 470 | 5008 | 253 | 135 |
| அக்டோபர் | 5008 | 301 | 5309 | 464 | 4845 | 198 | 153 |
| நவம்பர் | 4845 | 361 | 5206 | 405 | 4801 | 211 | 116 |
| டிசம்பர் | 4801 | 505 | 5306 | 480 | 4826 | 220 | 135 |
| **மொத்தம்** | **69404** | **4486** | **73890** | **6339*** | **67551** | **2976** | **1860** |

*வழக்குகளுக்கு 'வாராதிருத்தல் மற்றும் சட்டக் குறைபாடுகள் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளும் இதில் அடங்கும்.

## அட்டவணை 8

**மாநிலத்தில் உள்ள சில்லறை விலை துணை விற்பனைக் கடைகள்**

| வரிசை எண். | மண்டலத்தின் பெயர் | துணை சில்லறை விற்பனை கடைகள் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். | 7 |
| 2. | சிதம்பரனார் | 4 |
| 3. | கோயமுத்தூர் | 8 |
| 4. | தர்மபுரி | 13 |
| 5. | காமராஜர் | 3 |
| 6. | கன்னியாகுமரி | 20 |
| 7. | கரூர் தீரன் சின்னமலை | 2 |
| 8. | மதுரை | 21 |
| 9. | நாகை காயிதே மில்லத் | 13 |
| 10. | நீலகிரி | 4 |
| 11. | வடாற்காடு அம்பேத்கார் | 14 |
| 12. | பசும்பொன் முத்துராமலிங்க தேவர் | 4 |
| 13. | பெரம்பலூர் திருவள்ளுவர் | 1 |
| 14. | பெரியார் | 1 |
| 15. | புதுக்கோட்டை | 4 |
| 16. | இராமநாதபுரம் | 7 |
| 17. | சேலம் | 8 |
| 18. | தென்னாற்காடு வள்ளலார் | 5 |
| 19. | திருவண்ணாமலை | 10 |
| 20. | திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் | 5 |
| 21. | திருநெல்வேலி கட்டபொம்மன் | 16 |
| 22. | விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் | 9 |
| | மொத்தம் | 179 |



## அட்டவணை 9

**1985 முதல் சம்பா மற்றும் குறுவை காலங்களில் ஏகபோக/இணைக் கொள்முதல்/லெவி முறைகளின் மூலம் செய்யப்பட்ட கொள்முதல்கள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

(கொள்முதல் செய்த அளவு டன்களில்)

| ஆண்டு | சம்பா | | | குறுவை | | | பெருமொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | நேரடி கொள்முதல் நிலையம் | லெவி | மொத்தம் | நேரடி கொள்முதல் நிலையம் | லெவி | மொத்தம் | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1985 | 330026 | 280631 | 610657 | 339669 | 85454 | 425123 | 1035780 |
| 1986 | 668428 | 327112 | 995540 | 119953 | 26237 | 146190 | 1141730 |
| 1987 | 927979 | 158685 | 1086664 | 75884 | 8288 | 84172 | 1170836 |
| 1988 | 607735 | 150890 | 758625 | 164756 | 26644 | 191400 | 950025 |
| 1989 | 853470 | 65415 | 918885 | 120328 | 29913 | 150241 | 1069126 |
| 1990 | 1114786 | 102478 | 1217264 | 101051 | 67756 | 168807 | 1386071 |
| 1991 | 1050117 | 105198 | 1155315 | 199019 | 17791 | 216810 | 1372125 |
| 1992 | 1245000 | 5000 | 1250000 | 585010 | .. | 585010 | 1835010 |
| 1993 | 1226572 | .. | 1226572 | 321820 | .. | 321820 | 1548392 |
| 1994 | 541691 | .. | 541691 | 97132 | .. | 97132 | 638823 |
| 1995 | 330658 | .. | 330658 | 8730 | .. | 8730 | 339388 |
| 1996 | 134000 | .. | 134000 | 111366 | .. | 111366 | 245366 |

216824.
D
V211,31N77
N77.252

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.